


# தமிழரசு

1.4.1994 & 16.4.1994 ரூ.6




பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR No.678/DIS/93/247
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

எனக்கு என்று ஒரு கணிப்பு உள்ளது. அதுதான் நான் மாவட்டங்களுக்குச் செல்லும்பொழுது, காண்கின்ற மக்களின் முகங்கள். அவற்றில் காணப்படும் ஆர்வம், அன்பு, மகிழ்ச்சி, ஆகிய உணர்வுகளே, எனக்கு உள்ள ஆதரவு என்ன என்பதைத் தெளிவாக எடுத்து உணர்த்துவதாக நான் கருதுகின்றேன். நான் ஒவ்வொரு முறை சுற்றுப் பயணம் செல்லும் பொழுதும், சந்திக்கின்ற மக்களின் கண்களில் வீசுகின்ற ஒளியினைக் கொண்டே, அவர்களின் நெஞ்சங்களை என்னால் எடைபோட முடிகிறது. நாளுக்கு நாள், நான் செல்லும் இடங்களில் எல்லாம், மக்களின் எழுச்சி கூடிக்கொண்டே வருவதை நான் காண்கின்றேன். நாங்கள் வளர்ந்துகொண்டு வருவதையும் நான் உணர்கின்றேன்.

'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.



# இந்த இதழில்...


மேதகு தமிழ்நாட்டு ஆளுநர் டாக்டர் எம்.சென்னாரெட்டி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை ... 2

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து ஆற்றிய உரை ... 16

தஞ்சை மாவட்டம்: நலத்திட்ட உதவிகள் வழங்கி மாண்புமிகு முதல்வர் உரை... 53

நிதி நிலை அறிக்கை: 1994-95 — மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை .. 59

அரசு மனநலக் காப்பகம் 200-ஆம் ஆண்டு விழா: —மாண்புமிகு முதல்வர் உரை ... 109



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025
பங்குனி: 18 மற்றும் சித்திரை—3
மலர்:24 இதழ்:19, 20
1-4-1994 மற்றும் 16-4-1994
விலை: ரூபாய் ஆறு


## நிதிநிலை அறிக்கை:1994-95
## -சிறப்பிதழ்-



# ஏழை எளியோர்க்கு முழுமையான பாதுகாப்பளிக்கும் அரசு

### *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 16.3.1994 அன்று, மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் ஆற்றிய உரை*

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,

1994 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என்னுடைய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாடு, 1993 ஆம் ஆண்டில் அனைத்துத் துறைகளிலும் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது. ஏழை எளியோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க அளவுக்கு ஏற்றம் காண இம்முன்னேற்றம் உறுதுணை புரிந்துள்ளது. மேலும் பல வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம், தமிழ்நாடு அனைத்து வகையிலும் தொடர்ந்து சீராக முன்னேற்றம் அடையும் என்று நான் நம்புகிறேன்.

3. 1993 ஆம் ஆண்டில், சட்டம்–ஒழுங்கைப் பராமரிப்பதற்கு உயரிய முன்னுரிமை அளிக்கப்பட்டது. இவ்வரசு, ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னர், இங்கு நிலவிய சட்டம்–ஒழுங்கு நிலைமையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கண்டிப்பான விழிப்புப் பணி, உறுதியான மற்றும் கடுமையான நடவடிக்கை, இடைவிடாத கண்காணிப்பு,

பல்வேறு அமைப்புகளுடன் ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றின் பயனாக, வெளிநாட்டுப் போராளிகளினாலும், தீவிரவாதிகளினாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல் வேருடன் களையப்பட்டது. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், நேரடியாக, நிலைமை குறித்து அடிக்கடி ஆய்வு செய்து வந்தார். முதலமைச்சர் அவர்களும், மத்திய உள்விவகார இணை அமைச்சர் அவர்களும் 1994ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் நடத்திய கூட்டு ஆய்வு, மத்திய, மாநில அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பயனுள்ள நடவடிக்கையாக அமைந்தது. தமிழ்நாடு, அமைதியும் நல்லிணக்கமும் நிலவுகின்ற மாநிலம் என்ற பெருமைக்குரிய நற்பெயரைக் கட்டிகாத்து, மேலும் பெருமை சேர்ப்பதே அரசின் இடையறா முயற்சியாக இருக்க வேண்டும்.

4. இம்மாநிலத்தில் எழுந்த ஒவ்வொரு நிலைமையையும், தொடர்ந்து தன் கட்டுக்குள் கொண்டு வந்த மாநில காவல்துறையினர், சிறு சிறு நிலைமைகளைத் திறம்படக் கையாண்டனர். மாநில காவல் படையினர் புதிய கண்ணோட்டத்துடனும், குறிக்கோளுடனும் திறம்படச் செயல்படும் வகையில் இப்படையை முற்றிலும் நவீனமாக்கும் மாபெரும் பணியில் இவ்வரசு ஈடுபட்டுள்ளது. ரூ.80.45 கோடி செலவில், தமிழ்நாடு காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான விரிவானதொரு திட்டம் தயாரிக்கப்பட்டு, நிதியுதவி வேண்டி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. 1991–92 ஆம் ஆண்டில், மத்திய அரசு, ரூ.10 கோடி அளித்தபோதிலும், மேற்கொண்டும் நிதியுதவி எதுவும் கிடைக்கப் பெறவில்லை. ரூ.12 கோடி செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய கடலோரப் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காக இவ்வரசு மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளது. இதற்கிடையில், ரூ.10 கோடி செலவில் காவல் படையை நவீனப்படுத்தும் மாநிலத் திட்டம் ஒன்று இவ்வாண்டில் தொடங்கப்பட்டுள்ளது. பரந்தமைந்த தகவல் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், ஆயுதங்கள், பயிற்சி வசதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்யும் இப் பல்நோக்குத் திட்டம் காவல் படையின் செயல் திறனைப் பெரிதும் மேம்படுத்தியுள்ளது. 29 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில், 16 காவல் நிலையங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. எஞ்சிய காவல் நிலையங்கள் 1994 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களுக்குள் செயல்படத் தொடங்கிவிடும். முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் கருத்தில் உதித்த புதியதொரு கோட்பாட்டின்படி அமைந்த அனைத்து மகளிர் காவல் நிலையம் மிகவும் வெற்றிகரமான முயற்சி என்பது மெய்ப்பிக்கப் பட்டுள்ளதுடன், பரவலான பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. இவ்வரசு, காவல் படையின் திறமையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும். அதே வேளையில், மனிதாபிமானத்துடனும், கருணையுடனும் பிரச்சினைகளை அணுகுவதற்கான பயிற்சிகளையும் அவர்களுக்கு அளிக்கும்.

5. இவ்வரசு நீதித்துறைப் பணி நிலைமைகளை மேம்படுத்துவதில் மிகவும் உறுதியாக உள்ளது. ரூ.7 கோடி மொத்த செலவில், சேலத்திலும், இராமநாதபுரத்திலும் புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீதித் துறைக்கு வேண்டிய இன்றியமையாத வசதிகளை செய்து கொடுப்பதற்கான ஒரு திட்டத்தை மாநிலத் திட்டத்தில் சேர்ப்பது குறித்த முயற்சிகளை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். இத்திட்டப் பணிக்கு தற்போது ஒப்புதல் கிடைத்துள்ளது என்பதையும், ரூ.3.66 கோடி செலவில் நீதித் துறைக்குத் தேவையான பல்வேறு வசதிகளை செய்து கொடுப்பதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் அறிவதில் அவை உறுப்பினர்கள் அனைவரும் பெருமகிழ்ச்சி அடைவர். மத்திய அரசு, 1994–95 ஆம் ஆண்டில், இதுபோன்றதொரு திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் என்று நான் நம்புகிறேன். நீதித் துறை அதிகாரிகளுக்காக சென்னையில் ரூ.6.68 கோடி செலவில் பெரும் வீட்டுவசதி திட்டம் ஒன்று இவ்வாண்டில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நடப்பாண்டில் ரூ.1.5 கோடி செலவில் சென்னை உயர்நீதி மன்றத்தில் குளிர்சாதன வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. ஸ்ரீலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து, முதலமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களுக்கு குறைந்தது ஐந்து முறை கடிதம் எழுதியுள்ளார். இது மிகவும் கவலைஅளித்து வருகின்ற ஒரு பிரச்சினை ஆகும். அண்மையில் 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாளன்று நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மத்திய அரசு உடனடியாக ஸ்ரீலங்கா அரசுடன் தொடர்பு கொண்டு, அச்சம்பவத்தில் மரணமடைந்த, மீனவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க வகை செய்ய வேண்டுமென, அவர் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து, மத்திய அரசு, ஸ்ரீலங்கா அரசுக்கு தன்னுடைய கவலையைத் தெரிவித்ததுடன், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள். நிதானத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளதாகவும் 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாளன்று பாரதப் பிரதமர் பதிலளித்துள்ளார். முதலமைச்சர் அவர்கள் நேரடியாக நிலைமையைக் கண்காணித்து வருகிறார். மீனவர்கள்பால் எங்களுக்கு முழு பரிவு உண்டு. இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்குமாறு இவ்வரசு மத்திய அரசை தொடர்ந்து கேட்டுக் கொள்ளும்.

7. சமூக நீதி மேம்பாட்டுக்கு பெரிதும் தொடர்புடைய சமூகக் கொள்கையின் மற்றுமொரு முக்கிய அம்சம், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்காக வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் இட ஒதுக்கீடு செய்யும் திட்டமாகும். தற்போதைய இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இவ்வரசு தொடர்ந்து செயல்படுத்த இயலும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வருமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இம்மாமன்றம் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற சிறப்புக் கூட்டத் தொடரில் ஒருமனதான தீர்மானம் நிறைவேற்றியதை அவை உறுப்பினர்கள் நினைவு கூரலாம். 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26 ஆம் நாளன்று முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்து கட்சிக் கூட்டத்தில், 31 B அல்லது 31 C பிரிவின்கீழ் சட்டம் இயற்றுவது உட்பட, தற்போதைய இட ஒதுக்கீடு திட்டத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த அவை, மாநில அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர் ஆகியோருக்கு மொத்தம் 69 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் புதிய வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. இச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

8. தமிழ்நாட்டு மக்கள் மீது இந்தி ஒருபோதும் திணிக்கப்பட மாட்டாது என்று மறைந்த பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் உறுதி மொழி அளித்தார். நமது மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த இருமொழிக் கொள்கையை, இவ்வரசு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களும், 1981 ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் இந்த உறுதிமொழியை மீண்டும் உறுதிப்படுத்தினார். மத்திய அரசு இந்த உறுதி மொழியைக் கட்டிக் காக்கும் என நாம் நம்புகிறோம்.

9. தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில், ஆயிரக்கணக் கானவர்களுக்கு, வேலைவாய்ப்பு அளிக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். திரைப்பட விநியோகஸ்தர்கள், திரையீட்டாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஆகியோர்களுக்கிடையே 1993 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிக்கலான பிரச்சினை, திரைப்படத் தொழில் முழுவதையுமே ஸ்தம்பிக்கச் செய்ததுடன், தொழிலாளர்களின் பிழைப்புக்கும் பேரிடர் ஏற்படுத்தியது. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளுடன் 1993 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாளன்று ஆறு

மணி நேரத்திற்குத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, பல உதவித் திட்டங்களை அறிவித்து, சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைத்து திரைப்படத் தொழிலை மீண்டும் தொடங்குவதற்கு அவர் உறுதுணையாகத் திகழ்ந்தார்.

10. தமிழ்நாட்டின் கோயில்களின் புனரமைப்பு, பராமரிப்பு, நிருவாகம் ஆகியவற்றில் ஒரு புதிய மறுமலர்ச்சி காணப்படுகிறது. 1991 ஆம் ஆண்டில். முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடங்கிய முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி, கோயில்களைப் புனரமைத்து, பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 48 கோயில்களுக்கு, புனரமைப்புப் பணியை மேற்கொள்வதற்கும் 512 கோயில்களில் நாள் ஒன்றுக்கு குறைந்தது ஒருகால பூஜை நடத்துவதற்காக சிறப்பு நிதி ஏற்படுத்துவதற்கும் இந்நிதியிலிருந்து மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில். மேலும் 2500 கோயில்களில் அன்றாட பூஜை நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் இத்திட்டம் நீட்டிக்கப்படும். இம்மாநிலத்தின் தென்மாவட்டங்களில் தொடர்ந்து ஏற்பட்ட கோயில் திருட்டை ஒழிப்பதில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 227 கோயில்களில் திருட்டு நடந்ததற்குப் பொறுப்பான கும்பலை, மாநில காவல் துறை வெற்றிகரமாகக் கைது செய்துள்ளது. ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் பொருட்டு, இஸ்லாமியர் இடுகாட்டைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டுவதற்கும், முள்கம்பி வேலி போடுவதற்கும் மானியமாக ரூ.5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கடந்த காலத்தில், இந்நோக்கத்திற்காக அளிக்கப்பட்ட கடன்கள், மானியமாக மாற்றப்பட்டுள்ளன. மாநில வக்ஃபு வாரியத்திற்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11. காவிரி ஆறு, தமிழ்நாட்டு மக்களின் உயிர்நாடியாகும். தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் அடிப்படைப் பாசனத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, கருநாடக அரசு குறிப்பிட்ட அளவு நீரைத் திறந்து விடுவதற்கு காவிரி நீர்த்தகராறு நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு வகை செய்கிறது. நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி, தன் பொறுப்புகளை நிறைவேற்ற கருநாடக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருந்ததால், இப்பிரச்சினை குறித்து, மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கவும், நடுவர் மன்றத் தீர்ப்பை நிறைவேற்றுமாறு கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க வலியுறுத்தியும், முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 1993 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18 ஆம் நாளிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டார். நெருக்கடியான இக்கால கட்டத்தில் தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அளித்த பேராதரவை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். மத்திய நீர் வளத்துறை அமைச்சர் அவர்கள் உண்ணாவிரதமிருந்த முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார். இடைக்காலத் தீர்ப்பைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு, மத்திய அரசு இரு குழுக்களை, அதாவது, செயற்பாட்டுக் குழு, கண்காணிப்புக் குழு ஆகியவற்றை அமைக்கும் என்று அவர் அறிவித்தார். இது தொடர்பாக மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. காவிரியாற்றில் போதுமான நீர் இருப்பது, மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு, குறிப்பாக வேளாண்மைத் துறைக்கு மிக இன்றியமையாததாகும். வரும் பருவத்தில் கருநாடக அரசு இடைக்காலத் தீர்ப்பின் விதி முறைகளைச் செயற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம்.

12. கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து, தமிழ்நாடு, புயல், வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தைத் தொடர்ந்து, ரூ.390.53 கோடி நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. எனினும், மத்திய அரசு, இடர் நிவாரண நிதியின் கீழ், உதவியாக ரூ.29.25 கோடி மட்டுமே அளித்தது. ஆனால், மாநில அரசுக்கு, ரூ.77.26 கோடி செலவு ஏற்பட்டது. மீண்டும். 1992 இல் ஏற்பட்ட கடுமையான புயல், வெள்ளத்தைத் தொடர்ந்து ரூ.530.40 கோடி நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. இடர் நிவாரண நிதியின்கீழ், முன் பணமாக வழங்கப்பட்ட ரூ.14.63 கோடி

உட்பட, ரூ.43.88 கோடி நிதியுதவி மட்டுமே வரப் பெற்றபோதிலும், மாநில அரசுக்கு மீண்டும் ரூ.94.97 கோடி செலவு ஏற்பட்டது. 1993 ஆம் ஆண்டில் நவம்பரிலும், டிசம்பரிலும் ஏற்பட்ட இரு கடும் புயலினால் இம் மாநிலம் பாதிக்கப்பட்டது: 277 பேர் உயிரிழந்தனர். 2.30 இலட்சம் ஹெக்டேரிலிருந்த வேளாண்மைப் பயிர்கள் சேதமடைந்தன. 5.32 இலட்சம் குடிசைகள் நாசமடைந்தன. சாலைகள், பாலங்கள், கட்டிடங்கள், பாசனப் பணிகள் ஆகியவற்றிற்குக் கடுமையான சேதங்கள் ஏற்பட்டன. முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரண, மறுவாழ்வுப் பணிகளை நேரடியாக மேற்பார்வை செய்தார். ரூ.666 கோடி நிதியுதவி கோரி மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டது. மாநில அரசு, நிவாரணப் பணிகளுக்காக ரூ.75.37 கோடி அனுமதித்தது. இடர் நிவாரண நிதியின்கீழ் மத்திய அரசிடமிருந்து வரப் பெற்ற உதவித் தொகை, 1994–95 ஆம் ஆண்டிற்குரிய தொகையிலிருந்து முன்னதாக வழங்கப்பட்ட ரூ.14.63 கோடி உட்பட ரூ.29.25 கோடியாகும். கடுமையான நிதி நெருக்கடியும், நிதி ஆதாரப் பற்றாக்குறையும் இருந்த போதிலும், அரசு, போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. குன்னூருக்குச் செல்லும் முக்கிய நெடுஞ்சாலையை எல்லைச் சாலைகள் நிறுவனம் பழுது பார்த்து சீரமைத்ததும், தேசிய நெடுஞ்சாலை 5 ல் குசத்தலை ஆற்றின் குறுக்கே உள்ள தற்காலிக இணைப்புப் (Bailey Bridge) பாலப் பணிகளை விரைவாக முடித்ததும், வெள்ள நிவாரணப் பணிகளை மிக விரைவாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் மேற் கொண்டதற்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதியுதவி ஏதும் நமக்கு வரப் பெறாத போதிலும், வெள்ள சீரமைப்புப் பணிகளைப் பெருமளவில் நாம் மேற்கொண்டுள்ளோம். இடர் நிவாரண நிதி ஏற்பாடு நிறைவளிப்பதாய் இல்லை என்பது குறித்து இவ்வரசு பத்தாம் நிதிக்குழுவிற்கு விரிவான அறிக்கை அனுப்பியுள்ளது. 1995–96 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும் முறை மேலும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறோம்.

13. தொண்ணூறாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இம் மாநிலத்தில் திட்ட ஒதுக்கீட்டில் தேக்க நிலை நிலவியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தமிழ் நாட்டை உயரியதொரு வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல இவ்வரசு சிறப்பு முயற்சிகளை மேற் கொண்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடியாக இருக்க, திட்ட சாதனையின் அளவு, அதைவிட ரூ.120 கோடி அதிகமாக, அதாவது ரூ.1725 கோடியாக இருந்தது; 1992–93 ஆண்டில் ஆன திட்டச் செலவு, ரூ.1935 கோடி ஆகும்; இது ஏற்பளிக்கப்பட்ட ரூ.1766 கோடி ஒதுக்கீட்டைவிட ரூ.169 கோடி அதிகமாகும். 1993–94 ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ரூ.2101 கோடி ஒதுக்கீட்டு அளவினை எய்தி முடிக்கும் நிலையில் இம் மாநிலம் உள்ளது. 1994–95 ஆம் ஆண்டிற்காக, மிகவும் அதிகமான, அதாவது, ரூ.2750 கோடி திட்ட ஒதுக்கீட்டைப் பெறுவதில் முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வெற்றி பெற்றுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது, 1993–94 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டைவிட 30.89 சதவீதம் அதிகமாகும். 1994–95 ஆம் ஆண்டிற்கான இந்த ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் காரணமாக, தமிழ் நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டு அளவு, தேசிய நபர்வாரி சராசரி திட்ட ஒதுக்கீட்டு அளவைவிட கணிசமாக அதிகரிக்கும் என்பது மேலும் நிறைவு அளிப்பதாக இருக்கிறது. தமிழ் நாட்டின் நபர்வாரி திட்ட ஒதுக்கீட்டு அளவு, தேசிய சராசரி அளவிற்கும் குறைவாக இருந்த நிலையிலிருந்து மீண்டு, தேசிய சராசரி அளவையும் விஞ்சி, 3 ஆண்டு காலத்திற்குள் உயர் வளர்ச்சிப் பாதையில் கொண்டுவரப்பட்டிருப்பது உள்ளபடியே மிகச் சிறந்த சாதனை ஆகும். மிகப் பெரிய அளவில் நிதி நெருக்கடி நிலவிய சூழ்நிலையில் , பல மாநிலங்கள், ஏற்கெனவே அவை ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவுகளைக் குறைக்க வேண்டியிருந்த நிலையில் இருந்தபோது, தமிழ் நாடு, தொடர்ந்து ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டு அளவினை மிஞ்சி, மற்ற மாநிலங்களுக் கெல்லாம் ஓர் ஒளிரும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. நமது மாநிலத்திற்குரிய 1994–95 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு பற்றி, மத்திய திட்டக் குழு துணைத் தலைவர் முதலமைச்சருடன் விவாதிக்கையில், இச்சாதனை சிறப்பான

பாராட்டுதலைப் பெற்றுத்தந்தது.

14. 1993 ஆம் ஆண்டில் புயலாலும், வெள்ளத்தாலும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டபோதிலும், இவ்வரசின் முழு ஆதரவுடன் உழவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, உணவு தானிய உற்பத்தி, முன் எப்போதுமில்லாத அளவாக 100 இலட்சம் டன்னை எட்டும் என்று நம்புகிறோம். 84.50 இலட்சம் டன் என்ற அரிசி உற்பத்தி அளவு இன்னொரு புதிய சாதனையாக இருக்கும். கரும்பு உற்பத்தி 251.10 இலட்சம் டன் ஆக இருக்குமென மதிப்பிடப்படுகிறது. பருத்தி உற்பத்தி அளவு , 6 இலட்சம் பொதிகளாக இருக்கும் . எண்ணெய் வித்துக்களின் உற்பத்திகூட, 17 இலட்சம் டன் என்ற புதிய சாதனை அளவை எட்டும். மேலும், 2000 ஹெக்டேர் பரப்பில் எண்ணெய்ப் பனைகளை நடவு செய்திருப்பது, ஒரு புதிய சாதனை ஆகும். உயர் மதிப்புள்ள பயிர்களையும், தோட்டக்கலைப் பயிர்களையும் சாகுபடி செய்வதன் மூலம், வேளாண்மைப் பணியைப் பலதிறப்படுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே நேரத்தில், தரிசு நிலங்கள் பயனடையும் வகையில், ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று பெரிய அளவில் தொடங்கப்பட்டுள்ளது. நெல் மற்றும் கரும்பு போன்ற விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலைகள் கிடைத்ததனால், உழவர்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

15. மின்சக்தித் துறையின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. தமிழ்நாட்டில் மின் வெட்டுகள் இல்லை; மகிழ்ச்சியான இந்த சூழ்நிலை தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்க தொழிலதிபர்களுக்கு ஊக்கம் அளித்துள்ளது. இந்த நிலை எதிர்காலத்திலும் தொடர்ந்து நிலவுமாறு பார்த்துக் கொள்வதே இவ்வரசின் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும். தமிழ்நாட்டின் மின் கட்டமைப்புத் திறனைக் கணிசமாகப் பெருக்க, பல புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஜெயம்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்க மின் உற்பத்தித் திட்டத்தை, இணைத் துறையில் செயல்படுத்துவதற்குரிய ஒப்பந்தம் ஒன்று, 1993 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் முடிவாகியது. இது, 1500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட, ரூ.7500 கோடிக்கும் அதிகமான முதலீட்டுடன் கூடிய ஒரு மாபெரும் திட்டமாகும். விரிவான தொழில் நுட்ப சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்குரிய நிதி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. 120 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட வாயுவை அடிப்படையாக கொண்ட பேசின் பாலம் மின் உற்பத்தித் திட்டம், 1994ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம், ஜப்பான் நாட்டின் 'வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதி' (OECF) நிறுவனத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால், மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் பெருகுவதோடு, சென்னைப் பகுதியில் மின் வழங்கலின் தரம் மேலும் சீரடையும். உலகிலேயே முதன் முதலாக, கடல் நீர் வெப்பத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுவதற்கான உடன்படிக்கை முடிவாகியிருப்பது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாகும். ரூ.800 கோடி மதிப்பீட்டு செலவில், 100 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டம் வெற்றிபெறுமாயின், இது நம்மிடத்திலுள்ள பெரும் கடல்வளத்தைப் பயன்படுத்துவதில் குறிப்பிடத் தக்க சாதனையாக அமையும். மத்திய அரசின் ஒப்புதலின் அடிப்படையில், நெய்வேலியில், தனியார் துறையில், 250 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்று நிறுவப்பட உள்ளது. இம் மின்நிலையத்திற்கு, ஏறத்தாழ ரூ.1200 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 1997–ல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த பத்தாண்டில், மின்சக்தித் துறையில் தமிழ்நாடு தொடர்ந்து கணிசமான முன்னேற்றம் காணும் வகையில் முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பல நடவடிக்கைகளை, அவை உறுப்பினர்கள் வரவேற்பர் என நான் உறுதியாக நம்புகிறேன். கூடங்குளம் அணுமின் திட்டத்திற்கு நிதியுதவி செய்வதில் பங்கேற்க இவ்வரசு ஏற்கெனவே ஒப்புக் கொண்டுள்ளது. இத் திட்டம் தொடர்பான பணிகளை தொடங்குவதைப் பற்றி, விரைவிலேயே ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டுமென இவ்வரசு வலியுறுத்தும்.

16. சிங்கப்பூருடனான வர்த்தக ஏற்பாடு குறித்த கோட்பாட்டுக்கு தூண்டுகோலாக அமையக்கூடிய "சென்னை தொழில் பூங்காத் திட்டம்" இவ்வரசால் கவனமாகத் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு பெரும் செயல் திட்டமாகும். இப்பூங்காத் திட்டம், பன்னாட்டு முதலீட்டாளர்களைக் கவர்கின்ற வகையில், மாநில அரசு, சிறப்பு நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டது. மத்திய அரசுடன் விவாதித்த பிறகு, புதிய தொழில் பூங்காத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய சில அம்சங்கள், திருத்தப்பட்டுள்ளன. திருத்தியமைக்கப்பட்ட அணுகுமுறையின் அடிப்படையில், சென்னை தொழில் பூங்காத் திட்டம் தொடங்கி வைக்கப்பட தற்போது தயார் நிலையில் உள்ளது. இத்திட்டத்தை விரைவில் தொடங்கி செயற்படுத்த இவ்வரசு முயற்சிக்கும். சர்க்கரைத் தொழிலைப் பொறுத்த மட்டில், கன்னியாகுமரி, திருநெல்வேலி–கட்டபொம்மன், தஞ்சாவூர், திருவண்ணாமலை–சம்புவராயர், செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் 5 புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதன் மூலம், தமிழ்நாட்டின் சாதனைக்கு மேலும் வலுவூட்ட முடியும். இப்புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள், மத்திய அரசுக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டு விட்டன. மத்திய அரசு அறிவித்த புதிய திட்டத்தின்கீழ், கும்மிடிப்பூண்டியில் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்கா ஒன்றினை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரைவுப்படுத்தப்பட்ட தொழில் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்துவதற்காக, மாநில அளவில் எடுக்கப்படவேண்டிய சீர்திருத்தப் பணிகளின் அவசியத்தை உணர்ந்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், மாநிலஅளவில் தேவைப்படும் பல்வேறு ஒப்புதல்களை விரைவிலேயேஅளிப்பது, சிறந்த தொழில் உறவு நிலை, போதிய அடிப்படை வசதிகள் ஆகியவை அடங்கும். தமிழ்நாட்டில் தொழில் உறவுகள் மிகச் சிறப்பாக உள்ளன. வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலிய காரணங்களினால் ஏற்படக்கூடிய மனித உழைப்பு நாட்களின் இழப்பு, 1992 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1993–ல் 15.56 சதவீதம் குறைந்துள்ளது. தொழில் உறவு நிலைமைகளில் தெளிவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிதியுதவி நிறுவனங்கள் கடன் கொடுக்கும்போது, வட்டாரத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் வகையில், அனைத்திந்திய நிதியுதவி நிறுவனங்கள் வட்டார அடிப்படையில் சீரமைக்கப் பட வேண்டுமென தேசிய வளர்ச்சிக் குழுவில் முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார். தென்னகத்தில், இதுபோன்ற நிதியுதவி நிறுவனம் ஒன்றை நிறுவ, சென்னை மிகப் பொருத்தமானதோர் இடமாகும். மத்திய அரசு இக்கருத்தினை ஏற்றுக் கொள்ளுமென நம்பப்படுகிறது. தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து முதலமைச்சர் அவர்கள், திரும்பத் திரும்ப வலியுறுத்தியுள்ளார். தென் மாநிலங்கள் இத்திட்டத்திற்கு கூட்டாக நிதியுதவி செய்யலாமென்றுகூட அவர் யோசனை தெரிவித்துள்ளார். இதற்குக் கொள்கையளவில் ஒப்புதலளிக்கப்பட்டதைத் தவிர, வேறு குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இத்திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டியதன் அவசியத்தை இவ்வரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

17. 1993 ஆம் ஆண்டின் பெரும்பகுதி, சென்னை மாநகரில் நிலவிய கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை பற்றி அவை உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ஒவ்வொரு வாரமும் நிலைமையை நேரடியாக ஆய்வு செய்து , ஒருங்கிணைந்த செயல் திட்டங்களை செயற்படுத்த புதிய முயற்சிகளை மேற்கொண்டார். தண்ணீர்ப் பற்றாக்குறையின் கடுமையைத் தணிக்க, நடவடிக்கைகள் பெருமளவில் எடுக்கப்பட்டன. வழங்கப்படும் தண்ணீர் அளவினைப் பெருக்குவதற்கும், கிடைக்கின்ற தண்ணீரைக் கவனமாகத் திட்டமிட்ட முறையில் விநியோகிப்பதற்கும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான முழுத் திட்டமும் ரூ.64 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக ஒரு கட்டத்தில் சென்னையை விட்டே வெளியேற வேண்டிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருந்த சென்னைவாழ் மக்கள், கடுமையான தண்ணீர்

பிரச்சினையை மிகச் சிறந்த முறையில் சமாளித்த இவ்வரசை, குறிப்பாக, முதலமைச்சர் அவர்களை ஏகோபித்த குரலில் பாராட்டியுள்ளனர். முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு நிலவிய இதுபோன்ற தண்ணீர்ப் பற்றாக்குறை சென்னையில் இனிமேலும் ஏற்படாதிருக்கவும், இத்தகைய தண்ணீர்ப் பற்றாக்குறையின்போது, போதிய மாற்று ஆதாரத்திற்கு வகைசெய்யவும் வேண்டி, இவ்வரசு, புதிய வீராணம் திட்டத்தைத் தீட்டி, நிதியுதவிக்காக உலக வங்கிக்கு அனுப்பியுள்ளது. இத்திட்டம் தொடர்பான மதிப்பீட்டை, உலக வங்கி, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் அயராத முயற்சிகளின் பயனாக, சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதிநீரைக் கொண்டுவரும் தெலுங்கு–கங்கை திட்டத்தைச் செயல்படுத்தும் பணியானது, ஆந்திரப் பிரதேச அரசால் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது. தெலுங்கு–கங்கை திட்டம், 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவடையுமென ஆந்திரப் பிரதேச மாநில முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். இத் திட்டத்தோடு இணைந்ததும் ரூ.751 கோடி செலவாகக் கூடியதுமான குடிநீர் வழங்கல், விநியோகம் மற்றும் கழிவு நீரகற்றுதல் திட்டத்தையும் செயல்படுத்த உலக வங்கியின் உதவி கோரப்பட்டுள்ளது.

18. புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக, மத்திய அரசால் தொடங்கப்பட்ட பெரும் பொருளாதார மாற்றங்கள் பற்றி அவை உறுப்பினர்கள் அறிவர். நிலைப்படுத்தல் அமைப்பு ரீதியிலான சரிக்கட்டல் நடவடிக்கைகள், விலைவாசி வீதங்களில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. வழங்கல் விலைகளை அதிலும் குறிப்பாக, பொது விநியோக ஏற்பாட்டு முறையில் வழங்கப்படும் அரிசியின் வழங்கல் விலையையும், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையையும், நிலக்கரி சரக்குக் கட்டணவீதங்களையும் மத்திய அரசு அடிக்கடி அதிகரித்ததானது, மாநிலங்களுக்கு இக்கட்டானதொரு நிலையை உருவாக்கியுள்ளது. ஏழை எளிய மக்களை/காப்பதே எப்போதும் இவ்வரசின் தலையாய கடமையாக இருந்து வந்துள்ளது. மத்திய அரசு, அரிசியின் வழங்கல் விலையை அதிகரித்தபோது, அரிசியின் விலை வீதங்களைத் திருத்துவதைத் தவிர மாநில அரசிற்கு வேறு வழியில்லாமற் போயிற்று. பொது விநியோக ஏற்பாட்டு முறையில் வழங்கப்படும் அரிசியின் விலை வீதங்களைத் திருத்தியமைத்த பிறகும், நாட்டிலேயே தமிழ் நாட்டில் தான் அரிசி விலை மிகவும் குறைவாக உள்ளது. பொது விநியோக ஏற்பாட்டு முறையானது, விரிவாக்கப்பட்டு இத்திட்டத்தின் பயன் தமிழ் நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் 27 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இலட்சக் கணக்கான மக்களின் நீண்ட காலக் குறைகள், இத் திட்டத்தினால் களையப்பட்டுள்ளன. விலையை நிலைப்படுத்துவதற்கான இன்னொரு நடவடிக்கையாக, இவ்வரசு, 1993 ஆம் ஆண்டு மே திங்கள் 1 ஆம் நாளிலிருந்து ஏகபோகக் கொள்முதலை நீக்கி, நெல் மற்றும் அரிசியை தடையின்றி எடுத்துச் செல்வதற்கு அனுமதித்துள்ளது. அதே சமயத்தில், உறுதி செய்யப்பட்ட ஆதரவு விலை உழவர்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில், இணைக் கொள்முதல் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் சீரான விலையில் அரிசி கிடைக்க இவை பெரிதும் உதவியுள்ளன.

19. புதிய பொருளாதாரக் கொள்கை கொண்டு வரப்பட்ட நிலையில், ஏழை எளியோர் மற்றும் ஒடுக்கப்பட்டோரைப் பாதுகாப்பதற்காக, விரிவான முனைப்புத் திட்டம் ஒன்றை/செயல்படுத்திய மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாகும். ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தலை அறிந்துள்ள இவ்வரசு, இதனைப் போக்க விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த விரிவான திட்ட ஏற்பாட்டின் கீழ், உணவுக்கு உத்தரவாதம், சத்துணவு, தொடக்கச் சுகாதார வசதி, மருந்துப் பொருள்கள், பொதுவான தொடக்கக் கல்வியைப் பெற சிறப்பான அடிப்படை வசதிகள், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், ஏழை எளியோருக்கு வேலைவாய்ப்பு உருவாக்குதல், அடிப்படைக் குடிநீர் வசதி, வீடு வசதியற்றோருக்கு வீட்டு வசதி மற்றும் இருப்பிட வசதி செய்து கொடுத்தல், தெரிந்தெடுக்கப்பட்ட நலிந்த பிரிவினர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டின்

சமூக நலப் பிரிவின் செலவினம், தேசிய சராசரி அளவிற்கும் மேல் கணிசமாக உயர்ந்துள்ளது. ஏழை எளியோருக்கு குறைந்தளவு வாழ்க்கைத் தரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்பது தமிழக அரசின் முக்கிய நோக்கமாகும், நிதி இடர்ப்பாடுகள் நிலவி வந்துள்ளபோதிலும், ஏழை எளியோர் நலனுக்காக ஒதுக்கப்படும் தொகைகள், குறைக்காமல் அதிகரிக்கப்படுவதை இவ்வரசு உறுதிப்படுத்தியுள்ளது. பெருமளவிலான பொருளாதார மாற்றங்களினால் ஏற்படக்கூடிய மோசமான பாதிப்புகளிலிருந்து ஏழை எளியோர் பெரும்பாலானோரின் வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் இவ்வரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

20. குழந்தை நலனுக்காக விரிவான திட்டம் வகுத்த முதல் மாநிலம் தமிழ் நாடாகும். முதலமைச்சர் அவர்கள், 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கி வைத்த, "டாக்டர் ஜெ. ஜெயலலிதா குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத் திட்டம்", குழந்தைகளின் ஒட்டு மொத்த நலனைக் கருத்திற்கொண்டு, ஆழ்ந்தாராய்ந்து வகுக்கப்பட்ட ஒரு முழுமையான திட்டமாகும். பல்வேறு திட்டங்களின் கீழ் பல துறைகளின் கூட்டு இடையீடுகள் ஒருங்கிணைந்த ஒரு திட்டமாகும். குறிப்பிட்ட இலக்கைச் சுட்டிக்காட்டி இவ்விலக்குகளை எய்த, மக்களை ஒருங்கு திரட்டுவதே இதன் நோக்கமாகும். குழந்தைகளின் உய்வு என்ற நிலையைக் கடந்து அவர்களின் திடகாத்திரமான வளர்ச்சி, மேம்பாட்டை நோக்கி தமிழ்நாடு பீடுநடை போடுகிறது. புதிய குழந்தை மேம்பாட்டுத் திட்டம், யூனிசெஃப், உலக வங்கி போன்ற பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து பாராட்டுதலைப் பெற்றுள்ளது. அமைதியின் தூதுவர் அன்னை தெரசா அவர்கள், பெண் குழந்தை, மகளிர், ஆதரவற்றோர், முதியோர் ஆகியோரின் நலனுக்காக இம் மாநில அரசு ஆற்றியுள்ள திறமையான பணிக்காக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைப் பாராட்டியுள்ளார். மேலும், அவர்கள் இருவருமே ஒரே நோக்கத்திற்காகப் பாடுபடுவதாகவும், ஒரே உன்னத இலட்சியத்தை எய்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். "தொட்டில் குழந்தை" திட்டத்திற்கு தன் மகிழ்ச்சியைத் தெரிவித்த அவர் இம்மாநிலத்தின் பெண் குழந்தைகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்று பாராட்டியுள்ளார். புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம் பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கி நிதியுதவியுடன் 6 மாதம் முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இம்மாநிலம் முழுவதற்கும் 1994 ஆம் ஆண்டில் நீட்டிக்கப்படும்.

21. தமிழ்நாடு, குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் சிறப்பாக முன்னேறியுள்ளது. பிறப்பு வீதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு 21, இறப்பு வீதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு 9 என்னும் தேசிய இலக்கை கி.பி.2000 ஆம் ஆண்டுக்குள் அடையவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்க, இம்மாநிலத்தில் 1992 ஆம் ஆண்டிலேயே பிறப்புவீதம் ஆயிரத்திற்கு 20 ஆகவும் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 6.8 ஆகவும் குறைந்திருப்பது மன நிறைவளிப்பதாக உள்ளது. மீண்டும், குழந்தை இறப்பு வீதம் கி.பி. 2000 க்குள் ஆயிரம் பிறப்புகளுக்கு 60 ஆக குறைக்கப்படவேண்டும் என்று தேசிய இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருக்க, தமிழ் நாடு 1992 ஆம் ஆண்டிலேயே இவ்வீதத்தை ஆயிரத்திற்கு 48 ஆக குறைத்துள்ளது. சுருக்கமாக சொல்வதனால், கி.பி..2000 ஆம் ஆண்டு வாக்கில் எய்தப்படவேண்டிய தேசிய இலக்கை தமிழ்நாடு ஏற்கனவே மிஞ்சிவிட்டது. நிகர பிறப்பு விகிதம் ஒன்றாக குறைக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் கிடைத்த வெற்றியும் சுகாதார தரங்களில் ஏற்பட்ட முன்னேற்றமும் உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும். இத்தகைய குறிப்பிடத் தக்க சாதனையை எய்தியதன் மூலம் தமிழ் நாடு, மற்ற மாநிலங்களுக்குச் சிறந்ததொரு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. மகளிர், குழந்தைகளுக்காக சுகாதார முகாம் நடத்தும் புதிய திட்டத்தின் கீழ், இதுவரை 1315 சுகாதார முகாம்கள் நடத்தப் பட்டுள்ளன. இம் முகாம்கள் குறிப்பாக கிராமப்பகுதிகளில் மகளிர், குழந்தைகளின் நோய்க்கான காரணங்களை அறிவதிலும், சிகிச்சையளிப்பதிலும்

குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களுக்குத் தேவையான அனைத்து துணைப் பணிகளுக்கும் வகை செய்ததன்மூலம் அவை தரமுள்ளவையாக மேம்படுத்தப் பட்டுள்ளன. தொடக்க சுகாதார நிலையங்களில் மருத்துவ அலுவலர்கள் இருப்பதை உறுதி செய்வதற்கு தனி முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளன.

22. தேசிய இலக்கிற்கான காலக்கெடுவிற்கு முன்னதாக, 1998 ஆம் ஆண்டிற்குள்ளாகவே "அனைவருக்கும் கல்வி" என்ற இலக்கை எய்துவதற்கான திட்டத்தை இவ்வரசு வகுத்துள்ளது. இத்திட்டம் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதையும், இடையில் படிப்பை விட்டுவிடாமல் எட்டாம் வகுப்பு வரை அனைவரும் கல்வியைத் தொடர வேண்டும் என்பதையும் உறுதி செய்ய விழைவதால், இது ஒரு பெரும் பொறுப்பான பணியாகும். இளம் குழந்தைகளின் நலன், அனைவருக்கும் தொடக்கக் கல்வி, படிப்பறிவின்மையைக் குறைத்தல், கல்வியைத் தொடருவதற்கு வகைசெய்தல் போன்ற பணிகளை விரிவு படுத்தி மேம்படுத்தும் விரிவான திட்டமொன்று வகுக்கப் பட்டுள்ளது. இம் மகத்தான சமூக நலத்திட்டத்தில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் வேலையற்ற இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்விளைஞர்கள், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தி விட்ட குழந்தைகளுக்கு வகுப்புகளை நடத்தும் முக்கியப் பணியில் ஈடுபடுவர். மேலும், குடியினால் விளையும் கேடுகளை மக்களிடையே பரப்பும் பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னையில், அறிவியல் நகரம் ஒன்று அமைக்கும் புதிய திட்டமொன்றும் தொடங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், சென்னை மாநகரில் செயல்படுகிற பல்வேறு அறிவியல் நிறுவனங்கள், பல பொதுவான திட்டங்களைச் செயற்படுத்தும் பணியில் ஒன்றாக ஈடுபடுத்தப் படும். அறிவியல் கருத்துக்களை கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை ஊக்குவிக்கவும், அறிவியல் துறையில் ஆராய்ச்சிப் பணியைப் பெருக்கவும் முயற்சி மேற்கொள்ளப் படும். அறிவியல் நகர அதிகாரி ஒருவர். இத்திட்டத்தை மேற்கொள்வார். உயர்கல்வியில் சிறந்த ஒருங்கிணைப்பு செயல்பாட்டுக்கு உறுதி செய்ய, முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களினால், 1993 மார்ச் திங்களில், மாநில உயர்கல்வி மன்றம் தொடங்கப்பட்டது.

23. ஏழை மக்களுக்கு இலவச சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டம், ஏழைகளின் நலனைக் காப்பதுடன் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆதரவாகவும் செயல்பட்டு, இரு நோக்கங்களையும் எய்தியுள்ளது. நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டு, 62.99 இலட்சம் மகளிருக்கு இலவச சேலைகளும், 62.67 இலட்சம் ஆடவருக்கு இலவச வேட்டிகளும் வழங்கப் பட்டுள்ளன.

24. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சம், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சியேயாகும். ஆதி திராவிடர்–பழங்குடியினருக்கான சிறப்புத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் தமிழ் நாடு முன்னணியில் உள்ளது. சமூக நீதிக்காகப் பாடுபட்ட அஞ்சா நெஞ்சம் கொண்ட டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களின் நினைவாக சென்னையில், பொருத்தமான நினைவகம் ஒன்று கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. தொடக்கத்தில், இவ்வரங்கம் கட்ட ரூ. 1 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த நினைவகத்திற்கான விரிவான திட்ட வரைபடங்கள், வடிவமைப்புகள் முதலியன தற்போது ரூ. 5 கோடி செலவிற்கு தயாரிக்கப் பட்டுள்ளன. டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் . பெயரில் புதிய பேருந்து போக்கு வரத்துக் கழகமொன்று தொடங்கப் பட்டுள்ளது. கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில், ஆதி திராவிட வகுப்பினரிடையே தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு, இருபெரும் தொழிற் பேட்டைகளை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பின்னலாடைகள் தயாரிப்பதற்காக மேற்சொன்ன தொழிற்பேட்டைகளில் 200 பிரிவுகள் அமைக்கப்படும். இப்பெருந்திட்டம், ஆதி திராவிடர்–பழங்குடியினரிடையே, தற்சார்புடைய தொழில் முனைவோரின் புதிய தலைமுறையினரை உருவாக்கும்.

25. பண்டைய தமிழ்ப் பண்பாட்டுக்கும், கல்வி வளர்ச்சிக்கும் புகழ்பெற்ற தஞ்சை மாநகரில், 1995 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டினை நடத்த முடிவு செய்துள்ளதாக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இம்மாநாடு, தமிழ் நாட்டில் 1981 ஆம் ஆண்டில் கடைசியாக நடைபெற்றது. வரலாற்றுச் சிறப்பும், கலை முக்கியத்துவமும் வாய்ந்த தஞ்சை மாநகர், தற்போது தெரிந்தெடுக்கப் பட்டுள்ளது. மிகச் சிறப்பாகவும், நினைவு கூரத்தக்க வகையிலும் இம்மாநாட்டினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

26. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் முயற்சியாலும், உறுதியாலும் சென்னையில் புதிய ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் ரூ.40 கோடி செலவில், மிகக் குறுகிய கால அளவில் அதாவது ஏழரைத் திங்கள் கால அளவில் கட்டி முடிக்கப்பட்டது என்பதை அவை உறுப்பினர்கள் அறிவர். ஒளிர்கிற பிரம்மாண்டமான இவ்விளையாட்டரங்கம், 1994 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் பன்னாட்டு அழைப்பு தடகளப் போட்டிகளும், 33 ஆம் திறந்த வெளி தேசிய தடகளப் போட்டி விளையாட்டுகளும் நடைபெறும் களமாக அமைந்தது. இத்தடகளப் போட்டியில் 31 நாடுகள் பங்கேற்றன. இப்போட்டியில் பங்கேற்க, 91 பன்னாட்டு தடகள வீரர்களும், 900 ஏனைய விளையாட்டு வீரர்களும் வருகை புரிந்தனர். விளையாட்டுகளுக்கு, இவ்வரசு அளித்தது போன்று முன் எப்போதுமே இத்துணை முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அண்மையில் புனேயில் நடைபெற்ற தேசிய விளையாட்டுகளில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகித்துள்ளது என்பது வருங்காலத்திற்கு ஒரு நற்சகுனமாக அமைந்துள்ளது. 1995 டிசம்பர் திங்களில் சென்னையில், தெற்கு ஆசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப் பட்டு வருகின்றன. விளையாட்டுகள் நடத்துவதற்கு இயலும் வகையில், போட்டி விளையாட்டு வசதிகளையும்; ஏனைய அடிப்படை வசதிகளையும் மேம்படுத்துவதற்கான விரிவான திட்டமொன்று வகுக்கப் பட்டுள்ளது. பெருமைக்குரிய தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக இத்திட்டம், தக்க சமயத்தில் செயற் படுத்தப்படும்.

27. மிகச் சிறந்த நிருவாகச் செயல்பாட்டிற்கு இவ்வரசு, அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடு அநேக பரிசுகளை ஈட்டித்தந்துள்ளது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பாராட்டத் தக்க பணியை, நான் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன். அவை, 1992–93 ஆம் ஆண்டிலும், 1993–94 ஆம் ஆண்டிலும் பரிசுகளை வென்றுள்ளன. அவை, பல்வேறு சாதனைகளுக்கான தேசிய அளவிலான 7 பரிசுகளில் 5 பரிசுகளைப் பெற்றுள்ளன. சமூக நலத்திட்டத்தின் கீழ், உடல் ஊனமுற்றோருக்கும், மகளிருக்கும் வேலை வாய்ப்பளித்ததற்காகவும், குழந்தைகள் நலப்பணிகளை மேற்கொண்டதற்காகவும், தமிழ்நாடு 22 பரிசுகளை வென்றுள்ளது. வேளாண்மை விரிவாக்கப் பணியிலும், உயிரினக் கழிவு உரங்கள் தயாரிப்புப் பணியிலும் மிகச் சிறந்த சாதனை புரிந்ததற்காக, மத்திய அரசும், தேசிய உற்பத்திப் பணிக்குழுவும் அளித்த தகுதிச் சான்றிதழ்களை வேளாண்மைத் துறை பெற்றுள்ளது. கிரானைட் கற்கள் ஏற்றுமதிக்காக தமிழ்நாடு கனிம நிறுவனம், சிறப்பு ஏற்றுமதிப் பரிசு ஒன்றைப் பெற்றுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் சாதனைகள் அனைத்து வகையிலும் சிறந்து விளங்கச் செய்வதும், அவை தேசிய அளவில், மேன்மேலும் பல வெற்றி வாகைகளைச் சூடும் வகையிலும் அவற்றை ஊக்குவிப்பதுமே இவ்வரசின் குறிக்கோளாக இருக்கும்.

28. இவ்வரசு, ஏழை எளியோருக்கு பல்வேறு நன்மைகளைச் செய்துள்ளது. இவை, உரியவர்களைச் சென்றடைய வேண்டுமென்பதை உறுதி செய்வதே மிகமுக்கியமானதாகும். மக்களாட்சியில், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகள் இயன்ற விரைவில் பரிசீலிக்கப்பட்டு, சாத்தியமான இடங்களில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்வதும் அவசியமானதாகும். 1992 ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்தே, முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னையில் பொதுமக்களிடமிருந்து நேரடியாகவே மனுக்களைப் பெற்று அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு

திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட தேதிகளில் எண்ணற்ற மக்களுக்கு உதவிகள் வழங்கினார். இரண்டாம் நிலையில், முதலமைச்சர் அவர்கள் மாவட்டத் தலைமையிடங்களுக்குச் சென்று, ஏழை எளியோருக்கு நேரடியாகவே உதவிகளை நல்க முடிவு செய்தார். முதலமைச்சர் அவர்கள் இதுவரை, 13 மாவட்டங்களுக்குச் சென்றுள்ளார். ரூ.201 கோடி மதிப்புள்ள பல்வேறு உதவிகள் 3,00,377 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்த இத் திட்டம், இவ்வரசின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். பொதுமக்களின் குறைகளை தக்க நேரத்தில் களைவதோடு, பயன்கள் உரியவர்களைச் சென்றடைவதை இந்த ஏற்பாடு உறுதிசெய்துள்ளது.

29. அடிப்படை நிலையிலுள்ள ஜனநாயக அமைப்புகள் சரிவர இயங்க வேண்டுமென்பது அரசியலமைப்புச் சட்ட வழிகாட்டிக் கோட்பாடுகளில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிலைகளில், சிறந்த, திறமையான உள்ளாட்சி அமைப்புகளின் நீண்ட வரலாறு உள்ளது. நாட்டின் பல்வேறு மாநிலங்களிலுள்ள உள்ளாட்சி அமைப்பு குறித்து வழிகாட்ட நீக்கு போக்கான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டியது அவசியமென்று மாநில அரசு எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 73 மற்றும் 74 ஆம் திருத்தங்கள் மாநிலங்களில் பல்வேறு நிலைகளிலுள்ள ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டினை ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை அமைப்பு முறைக்குத் தற்போது வகைசெய்துள்ளன. 73 மற்றும் 74 ஆம் திருத்தங்களின் முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய தேவையான சட்டம், சட்டப்பேரவையின் இந்த வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படுமென்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

30. இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் குறித்து 1992 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11 ஆம் நாளன்று அறிவித்தது. எனினும், 1992 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், தேர்தல்கள் நடத்துவதற்கு உயர்நீதி மன்றம் தடை விதித்தது. இவ்வழக்குகள் உயர்நீதிமன்றத்தின் ஈராயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த உடனேயே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்துவதற்கு இவ்வரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

31. தமிழ்நாடு, பொருளாதார வளர்ச்சியில் முக்கியமானதொரு நிலையை எட்டியுள்ளது. மத்திய அரசு அறிவித்த தாராளமயமான கொள்கை, நடவடிக்கைகள் ஆகியவற்றின் தாக்கம் மாநிலங்களில் தென்படத் தொடங்கியுள்ளது. இத்தாராளமயமாக்கலின் பயன்கள், மாநிலத்தை சென்றடைவதை உறுதி செய்வதுடன், மக்களின் வாழ்க்கைத்தரம் உயருவதற்கும் தமிழக அரசு உதவி செய்யும். மாநிலத்தின் அமைதியான, சீரான வளர்ச்சிக்கு சட்டம்–ஒழுங்கைத் தொடர்ந்து பராமரிப்பது மிக முக்கியம் என்பதால், இவ்வரசு மிகவும் மன நிறைவளிக்கும் முறையில், சட்டம்–ஒழுங்கைத் தொடர்ந்து பராமரிக்கும்.

32. புதிய வளர்ந்துவரும் பெரும் பொருளாதாரக் கூறுகளோடு, இத்தனை ஆண்டுகளாக, எதிர்நோக்கி வந்த மிகவும் கடுமையான நிதி நெருக்கடி நிலையிலும் இவ்வரசு, ஏழை எளிய மக்களுக்கும், உதவி தேவைப்படுகின்ற நிலையில் உள்ளவர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு அளித்து வந்துள்ளது. ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கு மிகையாக செலவழித்தது, தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான நிதி நிலையை சாமர்த்தியமாகச் சமாளித்தது, சட்டம்–ஒழுங்கு நிலைமையை மனநிறைவளிக்கத் தக்கவகையில் பேணிக் காத்தது ஆகியவற்றுடன், பெரும் பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட முக்கிய பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் அரசு துணிவுடன் சமாளித்துள்ளது. தமிழ்நாடு புதிய திட்டங்கள், திட்டப்பணிகள் ஆகியவற்றை வெற்றிகரமாகச் செயற்படுத்தியதற்காக உலக வங்கி, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், யூனிசெப் போன்ற பல பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து சிறந்த பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

33. இம் மாநிலத்தில் அமைதியும் நல்லிணக்கமும் வழுவின்றி பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய இவ்வரசு மிக உன்னிப்பான கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும். தேசிய முதலீடுகளில், தனக்குரிய உரிமையான பங்கையும், மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதி ஆதாரங்களைப் பெறுவதிலும், அதே நேரத்தில் தேசியத் திட்டப் பணிகளில் முழு அளவில் பங்கேற்பதிலும் இவ்வரசு உயரிய முக்கியத்துவம் அளிக்கும்.

34. பல துறைகளில், துணிவுடனும், மிகுந்த கற்பனைத் திறனுடனும் இவ்வரசு எடுத்த நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். வளர்ச்சிக்கும் , ஏழை மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் வகைசெய்யும், விரைவான பொருளாதார மேம்பாட்டிற்கு தமிழ்நாடு ஒரு முன் மாதிரியாகத் திகழ்வதை உறுதி செய்ய, நாம் அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்வோம். இம் மாமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள், எதிர்காலத்தில் மாநிலத்தை வளமடையச் செய்வதற்குப் பெரிதும் உதவுமென்று நான் முற்றிலுமாக நம்புகிறேன். இம்மாமன்றத்தில் நீங்கள் முன் வைக்கும் விவாதங்கள் சமநிலையுடையனவாகவும், ஆக்க பூர்வமானவையாகவும், சீரிய நோக்கமுடையனவாகவும் அமையும் என்பதிலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

வணக்கம்.

# பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலம் பழங்குடியினர் மேம்பாட்டிற் காகத் தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் பழங்குடியினர் மேம்பாட்டு துணைத் திட்டமும் அடங்கும்.


மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இத்திட்டத்தின் வனப் பிரிவின் கீழ் 1993-94-ஆம் ஆண்டில் கொல்லிமலை, ஜவ்வாது மலை, சித்தேரி மலை, கல்ராயன் மலை மற்றும் பச்சைமலை ஆகிய பகுதிகளில் சந்தனமரம், புளியமரம், பலாமரம், மூங்கில் மரம், கடுக்காய் மரம், தேக்கு மரம் போன்ற மரவகைக் கன்றுகளை நட்டு காடு வளர்க்கவும் சாலையோர மரங்களை ஏற்படுத்த வும் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும், மண்வளப் பாதுகாப்பு மற்றும் நிர்வாகச் செலவு ஆகியவற்றுக்காகவும் மொத்தம் ரூ.149.25 இலட்சம் தொகை ஆதி திராவிட நலத்துறை மூலம் ஒதுக்கி ஆணையிட்டு உள்ளார்.

இதன்படி சுமார் 317 எக்டேர் நிலப்பரப்பில், மேலே குறிப்பிட்ட மரக்கன்றுகள் புதியதாக நடப்படும், 45 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலையோர மரங்கள் நடப்படும், இதற்கு ரூ.35 இலட்சம் செலவிடப்படும்.

சேலம் மாவட்டம் கொல்லி மலை, பச்சை மலை, கல்வராயன் மலை, அருனூத்து மலை ஆகிய பகுதிகளில் ஓடையின் குறுக்கே 4 சிறிய நீர்த் தேக்கங்களும், 2 கசிவுநீர்க் குட்டைகளும் ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.2 இலட்சம் செலவிடப்படும். வடஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம், ஏலகிரி மலையில் வனவிலங்குகளின் குடிநீர்த் தேவைக்காக ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு குளம் அமைக்கப்படும், மீதமுள்ள தொகை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காகவும், நிர்வாகச் செலவுக் காகவும் பயன்படுத்தப்படும்.

## சிறுசேமிப்பு - குடும்பத்தின் முதல் செலவாக இருக்கட்டும்

# சிறுசேமிப்புத்துறையின் மகத்தான பரிசுத்திட்டம்




இன்றே ரூ.500/-ம் அதற்கு மேலும் தமிழ்நாட்டில் முதலீடு செய்து இலவச பரிசுக் கூப்பன் பெறுங்கள்.

## உங்கள் முதலீடுகளுக்கு 619 கவர்ச்சிகரமான பரிசுகள்

*1 சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் (அல்லது) 25 h.p.H.M.T. டிராக்டர்(இயந்திரக்கலப்பையுடன்)*
*1 இரண்டாவது பரிசு - அஞ்சலக மாதாந்திர வருவாய்த்திட்டத்தில் ரூ.24,000/-க்கான முதலீடு*
*2 மூன்றாவது பரிசுகள் - கலர் டெலிவிஷன்*
*2 நான்காவது பரிசுகள் - உலர்த்தும் வசதியுள்ள செமிஆட்டோமேடிக் வாஷிங்மெஷின்*
*3 ஐந்தாவது பரிசுகள் - 2 நபர்களுக்கு சென்னையிலிருந்து புறப்படும் 6 நாள் தென்னிந்திய சுற்றுலா*
*10 ஆறாவது பரிசுகள் - 1 சவரன் (22 காரட்) தங்கநாணயம்*
*600 ஏழாவது பரிசுகள் - ரூ.100/- மதிப்புள்ள இந்திராவிகாஸ் பத்திரம்*

## பரிசுக் கூப்பன் பெற முதலீடு செய்ய வேண்டிய திட்டங்கள்

- **இந்திரா விகாஸ் பத்திரம் (IVP)**
- **கிசான் விகாஸ் பத்திரம் (KVP)**
- **தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு (NSCVIII ISSUE )**
- **தேசிய சேமிப்புத்திட்டம் 1992 (NSS '92)**
- **15 ஆண்டு பொது சேமநல நிதித்திட்டம் (PPF)**
- **மாதாந்திர வருவாய்த் திட்டம் (MIS)**
- **ஓய்வு பெறும் அரசு/பொது நிறுவன ஊழியர்களுக்கான சேமிப்புத் திட்டம்**
  **1 மற்றும் 2 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)** **1% ஊக்கத்தொகை**
- **3 மற்றும் 5 ஆண்டு அஞ்சலக குறித்தகால முதலீடு (T.D)**
  **அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் / வளரும் மாத சேமிப்புத் திட்டம் (R.D./C.T.D.)**

**மேலும் 2% ஊக்கத்தொகை (குறிப்பிட்ட திட்டத்திற்கு)**

## சேமிப்புப்பத்திரம் அனைத்து அஞ்சலகங்களிலும் கிடைக்கும்

மேலும் விவரங்களுக்கு:
ஆணையர், சென்னை மாநகராட்சி, (சி. சே. பிரிவு) சென்னை - 600 003.
தொலைபேசி: 584440
மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், 92, அண்ணா சாலை, சென்னை 600 002. தொலைபேசி: 849962.
மாவட்ட ஆட்சியர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

---

வெளியீடு: இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை, 621, அண்ணா சாலை,
சென்னை - 600 006. தொலைபேசி : 8251784/8251685

DIPR/664/DIS/93

## இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



சட்டப்பேரவையில் மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்குப் பதில் அளித்து

## மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி

# டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

ஆற்றிய உரை (22.3.1994)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மக்கள் நலன் போற்றும் எங்களது அரசின் சார்பாக, பாரம்பரியம் மிக்க இந்தப் பேரவையில், மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது, கடந்த 4 நாட்களாக விவாதம் நடைபெற்றுள்ளது. இந்த விவாதத்தில் பங்கேற்று, சீரிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், எனது உளமார்ந்த நன்றியினை முதற்கண் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

5 1/2 கோடி அன்புள்ளங்களின் அமோக ஆதரவோடு, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற எங்களது அரசு, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை, விரைந்து நிறைவேற்றி வருகின்ற இவ்வேளையில், மக்களின் ஆதரவு இந்த அரசுக்குப் பல்கிப் பெருகி வருகின்ற இவ்வேளையில், நிகழ்த்தப்பட்டுள்ள மேதகு ஆளுநர் அவர்களின் உரை, தமிழகத்துப் பெருமக்களுக்கு, எங்களது அரசின் இலட்சியங்களையும், கொள்கைகளையும், மற்றுமோர் முறை, எழுச்சியோடு எடுத்தியம்பும் நல்வாய்ப்பினைப் பெற்று விளங்குவதை எண்ணி, நான் அகமகிழ்கிறேன்.

'மக்கள் சக்தி' என்ற ஒன்றினை மட்டுமே, உந்து சக்தியாகக் கொண்டு, கடந்த 2 3/4 ஆண்டுகளாக இயங்கிவருகின்ற, எங்களது அரசின் போற்றத்தக்க செயல்பாடுகளையும், சாதனைகளையும் மேற்கொள்ள இருக்கும் பணிகளையும், கோடிட்டுக் காட்டும் வண்ணம், இந்த ஆண்டு மேதகு ஆளுநர் அவர்களின் உரை அமைந்துள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிமை என்றென்றும்

போற்றப்படும் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தமிழகம், நல்லவைகளை எப்போதும் போற்றி மகிழும்; அல்லவைகளை விரைந்து அகற்றும் என்பதை, சரித்திரம் நமக்குப் பலமுறை எடுத்துக் கூறியுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், ஆளுநர் உரையின் மீது, தங்களுடைய அறிவார்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நடுநிலையாளர்களை எப்போதுமே, அதிக அளவில் பெற்று விளங்கும், பெருமையைக் கொண்ட இந்தப் பேரவையில், எங்களது கொள்கைகள் வரவேற்புகளையும் பெற்றன; வசை மொழிகளையும் பெற்றன! எங்களது அரசின் செயல்பாடுகளுக்குப் பாராட்டுக்களும் வழங்கப்பட்டன; வெற்று ஏச்சுக்களும் அளிக்கப்பட்டன; கனிவோடு பூக்கள் மழையும் பெய்தன; கண்டனக் கணைகளும் தொடுக்கப்பட்டன; நல்ல செயல்களை நாடு என்றென்றும் போற்றும், என்பதை நாங்கள் அறிவோம். பாராட்டுகளும், புகழுரைகளும், எங்களை எந்த அளவிற்கு நிலைகுலைய வைக்காதோ அதேபோல, நிந்தனைகளும், ஏச்சுக்களும், எங்கள் மனவுறுதியை மாற்றி விடாது. மாறாக, மேலும் திண்மையைத் தருகின்ற உரமாக அமையும். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று, அனுதினமும், அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களின் நல்வாழ்வுக்காக, உழைத்து வரும் எங்களது அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி மகிழ்ந்தவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது பணி இன்னும் சிறக்கவேண்டும் என்பதற்காக, எங்களது நிறைகளைப் புகழ்ந்து குறைகளைச் சுட்டிக் காட்டிய நடுநிலையாளர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநரின் உரையில், புதியதாக ஒன்றுமே இல்லையே, என்று அங்கலாய்ப்பவர்களுக்கும் எங்கள் அரசின் செயல்பாடுகளை குறை கூறுவதையே, தங்களது முழு நேரத் தொழிலாக்கிக் கொண்டு பணியாற்றுபவர்களுக்கும், நன்மை செய்யும் வண்ணம் தான், மேதகு ஆளுநரின் உரையில், எடுத்துரைக்கப்பட்ட எங்கள் கொள்கை அமைந்துள்ளது என்பதை, ஆணித்தரமாக எங்களால் கூற முடியும்.

இங்கிலாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் **Edward Stanley** என்பவர் சொல்லியிருக்கிறார்.

"The Duty of an Opposition is very simple...
to oppose everything, and propose nothing."

அதாவது, எதிர்க்கட்சியினர் கடமை என்பது மிக மிக எளிதானது; எளிமையானது. என்ன அந்தக் கடமை? எல்லாவற்றையும் எதிர்ப்பது. அரசு எதைச் செய்தாலும் கண்மூடித்தனமாக எதிர்ப்பது; அதே சமயத்தில் ஆக்கபூர்வமான எதையும் சொல்லாதிருப்பது.

இப்படிச் சொன்னவர் 1852 லும், பின்னர், 1858 முதல் 1859 வரையிலும், மீண்டும் 1866 முதல் 1868 வரையிலும் மூன்று முறை இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர். இது நமக்கு எதைக் காட்டுகிறது? உலகத்தில் உள்ள எந்த நாடாக இருந்தாலும் சரித்திரத்தில் எந்தக் காலகட்டமாக இருந்தாலும், அரசியல் ஒன்றுதான்; அரசியல் வாதிகளும் ஒன்றுதான்.

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னால் இங்கிலாந்து நாட்டு அரசியலில் என்ன சூழ்நிலை நிலவியதோ, அதே சூழ்நிலைதான் இன்று நம் நாட்டிலும், குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசியலிலும் நிலவுகின்றது. எனவே நாம் எதைச் செய்தாலும், எத்தனைத் திறமையாகச் செயல்பட்டாலும், நம்மைப் பாராட்டாமல் எதிர்க்கட்சியினர் குறை கூறுகிறார்களே என்று ஆளும் கட்சியினர் எவரும் வருத்தமோ, வேதனையோ கொள்ளத்தேவையில்லை. எதிர்க்கட்சியின்பணி எதிர்ப்பது தான் என்ற உலகளாவிய அளவில் காலம் காலமாக இருந்து வந்துள்ள கொள்கையின் அடிப்படையில்தான் இவர்களும் செயல் படுகிறார்கள் என்றுதான் நாம் இதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார், 'சிந்தனையின் சிகரம்' பேரறிஞர் பெருந்தகை அண்ணா, 'மனித நேயப் புனிதர்' புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோர் வகுத்துச் சென்ற நல்ல பாதையில், நாளும் வெற்றி நடை போடும் எங்களது அரசு, அவர்கள் காட்டிச் சென்ற வழியை என்றென்றும் கடைப்பிடித்துத் தமிழகத்தின் புகழ், தரணி எங்கும், என்றென்றும், ஒளி வீசிடும் வண்ணம் செயல்படும், என்ற உறுதிமொழியை, என் அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களுக்கு, இந்த மாமன்றத்தின் வாயிலாக வழங்கி, மேதகு ஆளுநருடைய உரையின் மீதான, என்னுடைய பதிலுரையைப் பேரவையின் முன்பு வைக்க விரும்புகின்றேன்.

**காவல்துறை**
**நவீனமயமாக்கல் - மனிதாபிமான இயக்கமாக்கல்**

"உறுபசியும் ஓவாப் பிணியும், செறுபகையும் இல்லாத நாடே சிறந்த நாடு" என்று ஆன்றோர்கள் கூறினார்கள். பசிப் பிணியைப் போக்கி, பல்வளம் பெருக்கி, நாட்டின் வளம் காணும் முன், அந்த நாட்டின் பொது அமைதியும், தனி மனிதப் பாதுகாப்பும் உறுதி செய்யப்படுவது மிகவும் அவசியம் ஆகும். இவைகளைப் பாதுகாத்துப் போற்றிய பின்புதான், ஏனைய சேவைகளைப் பற்றி, எந்த அரசும் கவலைப்பட முடியும். எனவேதான், பொது அமைதியை நிலைநாட்டும் பணிக்கு, நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன், முன்னுரிமை வழங்கினோம். தமிழகம் அப்போது இருந்த சூழ்நிலை, மீண்டும் என் மனக் கண் முன்னே பிரதிபலிக்கின்றது. அமைதி குறைந்து, அச்சம் மிகுந்து, தீவிரவாதிகளின் கொடுஞ்செயல்களாலும், கொலை பாதகங்களாலும், நாடு அமளிக் காடாக இருந்தது. ஒரு ஆயுதக் கலாச்சாரம், நமது பண்பாட்டின் ஆணி வேரையே, தகர்த்துக் கொண்டிருந்தது. பத்மநாபா படுகொலை, பட்டினம்காத்தான் துப்பாக்கிச் சூடு, முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை, போன்ற அடுக்கடுக்கான அடாவடித் தனங்கள், தமிழக மக்களை அச்சமடையச் செய்திருந்தன.

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தால், அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகம், அமளிக் காடாக காட்சியளித்தது. பிரச்சனைகளின் தீவிரத்தையும், நமது பலம், பலவீனம் இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, பயங்கரவாத சக்திகளை அடக்கி ஒடுக்கினால்தான், தமிழகத்தின் பொது அமைதியை, மீட்டுத் தர முடியும் என்பதை உணர்ந்து, அதற்கான திட்டங்களில் தீவிரமாக இறங்கினோம்.

எனது உயிருக்கு ஆயிரம் அச்சுறுத்தல்கள்; தனிப்பட்ட முறையில் நான் தீவிரம் காட்டி, விடுதலைப் புலிகளை ஒடுக்க முற்பட்ட போது, என் மீது அன்பு கொண்டவர்கள், என் உயிருக்குத் தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சினார்கள். மக்கள் நலனே என் உயிரை விட முக்கியம் என்று, அமைதியை நிலைநாட்டும் பணியில், காவல் துறையைத் தலைமை ஏற்று இயக்கினேன். தீயவர்களை அடக்குவதிலும், ஒடுக்குவதிலும், அச்சுறுத்தி விரட்டுவதிலும், பிடித்துச் சிறையில் அடைப்பதிலும், ஒரு புதிய சரித்திரத்தை உண்டாக்கினோம். அப்போதே நம் காவல் துறையை வலுவுள்ள, திறன்மிக்க அமைப்பாக மாற்ற வேண்டுமானால், காவல் துறையினர் உபயோகித்து வந்த, பழங்காலத்து ஆயுதங்கள், கருவிகள், தொழில் நுட்பங்கள், செயல் திறன்கள், செய்முறைகள் ஆகியவற்றை நவீனப்படுத்த வேண்டும், என்று திட்டம் தீட்டினேன்.

வல்லவர்களைத் தேர்ந்து எடுக்க, 'தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்' **Tamil Nadu Uniformed Services Recruitment Board** என்ற அமைப்பினை ஏற்படுத்தினோம். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட காவலர்களை, இத்தேர்வாணையம் தேர்வு செய்து, தற்போது அவர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெருகி வரும் காவல் துறையின் சவால்களைச் சமாளிக்க, சிறப்புப் பாதுகாப்புப் படை **Special**

Security Group; மற்றும் சிறப்புப்பணிப் படை Special Task Force ஆகியவற்றையும் அமைத்தோம். தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில், அயல்நாட்டவர்களின் ஊடுருவல்களைக் கண்காணிக்கவும், தவிர்க்கவும், அவர்களுடன் சேர்ந்து, சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களைக், கண்டறியவும் கடலோரப் பாதுகாப்புப் படை, Coastal Security Force என்ற ஒரு புதிய அமைப்பை உருவாக்கி இருக்கிறோம். காவல் துறை அதிகாரிகளுக்கும் மற்றும் காவலர்களுக்கும், தகுந்த பயிற்சியை அளித்து வருகின்றோம்.

காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும், என்ற தணியாத வேட்கையின் காரணமாக, ஏ.கே. 47 துப்பாக்கிகள் 7.62 தானியங்கித் துப்பாக்கிகள்; 9 எம்.எம். கைத்துப்பாக்கிகள் தேவையான தோட்டாக்கள் இயக்குவதற்குப் பயிற்சிகள், ஆகியவற்றைக் கொடுத்தோம். உடனுக்குடன் செய்தி அனுப்பும் தொடர்புத் துறையில், Analog System என்ற முறையை மாற்றி, Digital System என்ற முறையை, நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நான் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்ற போது, அப்போது இருந்த 1075காவல் நிலையங்களில், 33 காவல் நிலையங்களுக்கு மட்டும்தான் ஜீப்புகள் வழங்கப்பட்டிருந்தன. மற்ற காவல் நிலையங்களுக்கு ஜீப் வழங்கப்படவில்லை. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகள் 9 மாதங்களில் 663 காவல் நிலையங்களுக்கு ஜீப்புகளை வழங்கி இருக்கிறோம் என்றால், எங்கள் செயல் திறனை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன். அது மட்டுமல்ல; 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், தற்பொழுது தமிழகத்திலுள்ள 1117 காவல் நிலையங்களுக்கும் கண்டிப்பாக ஜீப்புகள் வழங்கப்பட்டு விடும். அதற்குரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாய வளர்ச்சியில் சமபங்கு வகிக்கின்ற, பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் இன்னல்கள் இடையூறுகள், ஆண்வர்க்கத்தின் அடக்குமுறை மனப்பான்மையால் எழுந்த, பாலியல் பிரச்சினைகள் ஆகியவற்றில் இருந்து நமது மகளிருக்கு விடுதலை அளிக்கவும் 21-ம் நூற்றாண்டுக்கு, நமது காவல் துறையைத் தயார் செய்வதற்காகவும் மாவட்டத் தலை நகரங்களிலும், மாநகரங்களிலும், 29 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, உருவாக்குவதற்கு ஆணையிட்டேன். இதுவரை 16 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, நானே சென்று திறந்துவைத்திருக்கிறேன் என்றால், அந்தப் பணியில் எனக்குள்ள ஈடுபாட்டை, அது விளக்கும் என்று கருதுகிறேன். சட்டப்படி பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தையும், பாதுகாப்பையும், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வழங்கும்வண்ணம், அவற்றைச் செயல்படுத்தி வருகின்றோம்.

அகில இந்திய அளவில், வேறு யாருக்கும் நமது காவல் துறையினர் இளைத்தவர்கள் அல்ல; செயல் திறனில் சளைத்தவர்கள் அல்ல என்பதை, மீண்டும் நிரூபித்துவருகின்றோம். புதிய பணியிடங்களை ஏற்படுத்தினோம். காவல் துறையினரிடையேயுள்ள பணிச் சோர்வை நீக்க, அவர்களின் நலனுக்காக, பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். விரைவில் காவல் துறையைக் கம்ப்யூட்டர் மயமாக்க, நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். அத்துடன் காவல் துறையை, ஒரு மனிதாபிமானமிக்க இயக்கமாக மாற்றுவதற்கு, நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்ற நிகழ்வுகள் குறைந்துகொண்டு வருகின்றன. குற்றங்களைக் கண்டுபிடிப்பதில், தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கான புள்ளிவிவரங்களை நேற்றுத்தான் இந்த அவையில் வெளியிட்டேன். பாதுகாப்புப் பணியில் ஒரு மாபெரும் வளர்ச்சியைக் கண்டிருக்கிறோம். ஆனால் அவற்றை எல்லாம் மறந்துவிட்டு, ஒரு சில விரும்பத் தகாத நிகழ்ச்சிகளையும், சிலரின் கவனக் குறைவினால் ஏற்பட்ட

சம்பவங்களையும் மிகைப்படுத்தி, இங்கே சில உறுப்பினர்கள் குறைப்பட்டுக் கொண்டது, விவாதத்திற்கு வேண்டுமானால் பயன்படுமே தவிர, உண்மை நிலையை உரைக்கின்ற உரைக்கல்லாக இருக்க முடியாது. ஆளுநரின் உரை, தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு, சிறப்புடன் பராமரிக்கப்படுவதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. ஆனால் அரசியல் உள்நோக்கத்தோடு சிலர், உள்ளேயும் வெளியேயும், மக்கள் மத்தியில், விடுதலைப் புலிகள் ஊடுருவிவந்திருக்கிறார்கள், என்ற விஷ விதையைத் தூவி, கட்டாந்தரையிலே பயிர் விளைவிக்க முயற்சி செய்து வருகிறார்கள். மக்கள் மனதிலே பீதியை உண்டாக்க நினைக்கும் இவர்களின் எண்ணங்கள், எந்தக் காலத்திலும் ஈடேறாது என்பதை, ஆணித்தரமாகக் கூறிக்கொள்கிறேன்.

இதுவரை யாருமே சிந்திக்கமுடியாத அளவிற்கு, காவல் துறையை நவீனப்படுத்த, பல திட்டங்களை நாங்கள் தீட்டி, மத்திய அரசிடம் 80 கோடியே 45 இலட்சம் ரூபாய், நிதியுதவியைக் கேட்டோம். ஆனால் மத்திய அரசு கொடுத்தது என்னவோ, 10 கோடி ரூபாய்தான். திடீரென்று ஒரு நாள், ஊட்டிக்கு வந்த மத்திய உள்துறை அமைச்சர், திரு. சவான், மேலும் 30 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னதாக செய்தித் தாள்களில் செய்திகள் வந்தன. இந்த அறிவிப்பு வந்து ஏறக்குறைய $1\frac{3}{4}$ ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இன்று வரை, அது அறிவிப்போடு இருக்கிறதே தவிர, அந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்குள் சில உள்ளூர்க்காரர்கள், செய்தித் தாள்களைப் பார்த்துவிட்டு, பாராட்டுதல்களையும் நன்றியையும் அள்ளி அள்ளி வீசினார்கள். காவல் துறையை நவீனப்படுத்தும் மாபெரும் பணி, இதனால் தடைப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, நாங்களே மேலும் இதற்காக, 10 கோடி ரூபாயை ஒதுக்கி, இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். மத்திய அரசு இத்திட்டத்திற்கு, முழு நிதியுதவியை வழங்கவேண்டும் என்று, மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் ஊடுருவி இருப்பதாகக் கூறப்படும் செய்தி பற்றிய குறிப்பு**

எங்களது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர், விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தால், தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த சட்ட ஒழுங்கு பிரச்சினைகளைச் சரிப்படுத்தினோம். விடுதலைப் புலிகளைத் தமிழ் மண்ணிலிருந்து வெளியேற்றி, பொது அமைதியை நிலைநாட்ட, நாங்கள் எடுத்த நடவடிக்கைகளை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை, ஒரு சிலர் தங்கள் சுயநலத்திற்கு, தைரியமாக உலவ விட்டதால், நமது நாட்டின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும், ஊறு விளையும் அளவிற்கு, தேச விரோதச் செயல்கள் தமிழகத்தில் நடைபெற்றன. தமிழகக்காவல் துறையைக் கொண்டு, சமூக விரோத சக்திகள், தீவிரமாக அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, கட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

அது மட்டுமின்றி, விடுதலைப் புலிகள் இயக்கம், இந்திய அரசால் தடை செய்யப்பட்ட இயக்கமாகவும், சட்ட விரோதமான இயக்கமாகவும் அறிவிக்கப்பட வேண்டும் என, மத்திய அரசினை வலியுறுத்தியது எங்களது அரசுதான் என்பதை, இந்த மாமன்றம் நன்கு அறியும். தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதிலும், 33 முக்கிய இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு அவை ஆயுதப் படையினரால் கண்காணிக்கப்பட்டு தீவிரவாதிகள் கடல் வழியாகத் தமிழ்நாட்டுக்குள் நுழைவது, கட்டுப்படுத்தப்பட்டது. கடற்கரைப் பகுதிகளில் ஒயர்லெஸ் கருவிகளுடன், அதிரடிப் படையினர் முக்கிய இடங்கள் முழுவதையும் பாதுகாத்துவருகின்றனர். இந்தியக் கப்பற்படையின் 7 பிரிவுகள், நமது மாநிலத்தின் கடலோரப் பகுதியில், தீவிரமாகக் கண்காணித்து வருகின்றன. தீவிரவாதிகள் தமிழகத்திற்குள் நுழைதல் மற்றும் தமிழகத்தில் இருந்து அத்தியாவசியப் பொருட்கள், கடத்தப்படுதல் போன்ற

செயல்கள், தமிழகக் காவல் துறை Central Reserve Police Force - CRPF; இந்தியக் கப்பற்படை; கடற்கரைப் பாதுகாப்புப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, ஆகிய பல்வேறு பாதுகாப்புத் துறைகளின், ஒருங்கிணைந்த முயற்சிகளால், பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளின் காரணமாக, ஏராளமான அளவுக்கு, அத்தியாவசியப் பொருட்களான டீசல், பெட்ரோல், இன்ஜின் ஆயில் போன்றவை; ஜெலட்டின் குச்சிகள் பல்வேறு வகையான துப்பாக்கிகள், தோட்டாக்கள், கையெறி குண்டுகள் செய்தித் தொடர்பு சாதனங்கள் ரசாயனப் பொருட்கள் ராக்கெட்டுகள் பெரும் அளவில் வெடி மருந்துகள், மற்றும் நீர் மூழ்கிக் கப்பல் போன்ற தளவாடங்களும், கருவிகளும், கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி, நாங்கள் பதவியேற்ற காலத்திலிருந்து, 1993 ஆம் ஆண்டு இறுதி வரை, விடுதலைப் புலிகளும், தீவிரவாதிகளின ஆதரவாளர்களும், 36 பேர், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் 101 பேர் TADA சட்டத்தின் கீழும், சிறையில் அடைக்கப்பட்டனர் என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பல்வேறு தருணங்களில், பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகள், உடனுக்குடன் கண்டுபிடிக்கப்பட்டு, மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, இம் மாதம் 11.3.1994 அன்று, துறையூர் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடிய, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான மூன்று பேர் 24 மணி நேரத்திற்குள்ளாகத் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு, தமிழகக்காவல் துறையினரால், மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர் என்பது காவல் துறையும், தமிழக அரசும், எந்த அளவிற்குத் திறம்பட இயங்கிக்கொண்டிருக்கிறது, என்பதைத்தான் காட்டுகிறது. தமிழகக் காவல் துறையினர், தீவிரவாதிகள் விஷயத்தில், எத்தனை விழிப்புணர்வுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சாட்சி.

**தமிழ்நாட்டில், விடுதலைப் புலிகள் உட்பட, அனைத்துத் தீவிரவாதிகளையும் கட்டுப்படுத்துவதைப் பொருத்தவரையில், நான் இந்த நேரத்தில் ஒரு முக்கியமான கருத்தை, இந்த மாமன்றத்தின் வாயிலாக எடுத்துரைக்க விரும்புகின்றேன். புரையோடிக் கிடந்த பயங்கரவாதத்தை, முற்றிலுமாக ஒடுக்கிய பெருமை, தமிழக அரசைச் சாரும் என்று, அனைவராலும் எங்களது அரசு பாராட்டப்பட்டு வந்தாலும் தீவிரவாதத்தை ஒடுக்கும் கடமை, மாநில அரசோடு மட்டும் நின்று விடுவதில்லை என்று, தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். நாட்டின் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் தீவிரவாத இயக்கங்களின் பயங்கரவாத செயல்பாடுகளில் இருந்து, நமது நாட்டைக் காக்கின்ற மாபெரும் கடமை, அந்தந்த மாநிலங்களுக்கு மட்டுமே இருக்கின்றது; மத்திய அரசுக்கும், அதற்கும், எந்தவிதத் தொடர்பும் இல்லை; என்பது போன்ற ஒரு அதிகார மனோபாவத்தை, மத்திய அரசு கொண்டுள்ளதாக நான் கருதுகின்றேன்.**

**ஒரு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கினைக் காப்பது, மாநில அரசின் கடமை என்பதை நாம் ஒப்புக்கொள்ளும் அதே நேரத்தில், அந்தச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, வெளிநாட்டுத் தீவிரவாத இயக்கங்களுடைய ஈடுபாட்டினால், மிகவும் பிரச்சினைக்குரியதாக மாறி, பூதாகரமாக உருவெடுக்கும்போது, அத்தகைய சூழ்நிலையில், மாநில அரசு மட்டுமே அதனைக் களையவேண்டும்; மத்திய அரசு, வெறுமனே ஆணைகளை மட்டும் பிறப்பித்துக்கொண்டு, செயல் அளவில் உதவி ஒன்றும் புரியாமல் வாளாவிருக்கும், என்ற நிலைமை நிலவும் போது, நிச்சயமாக அது நாட்டின் பாதுகாப்புக்குச் சற்றும் உகந்தது அல்ல என்பது, எனது ஆணித்தரமான கருத்து.**

**ஆகவே, தமிழ்நாட்டில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைககளை, மேலும் தீவிரப்படுத்த, மத்திய அரசு, நாங்கள் காவல் துறையை நவீனப்படுத்தக் கோரியுள்ள நிதியினை,**

உடனடியாக வழங்க வேண்டும் என்றும் கடலோரப் பாதுகாப்பிற்காக, அனுப்பி வைக்கப்பட்ட முன்மொழிவை, நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக, வேம்பார் மற்றும் பூம்புகாரில், இரண்டு புதிய கடற்படை முகாம்கள் அமைக்கப்பட வேண்டும்; கடலோரக் காவலுக்குத் தேவையான சாதனங்களுக்காக, 12 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க வேண்டும்; நவீன ஆயுதங்களுக்கு சுங்க வரி விலக்குத் தரப்பட வேண்டும்; மேலும் இலங்கையிலிருந்து வருபவர்களுக்கு விசா அளிப்பதில், தீவிர கட்டுப்பாட்டினைக் கொண்டுவர வேண்டும்; அயல்நாட்டவர்ச் சட்டம் 3(2) (ஜி) -ன் கீழ் சந்தேகத்திற்குரிய அயல்நாட்டவரை சிறைப்படுத்தும் அதிகாரத்தை, மாநில அரசுக்குத் தரவேண்டும். இறுதியாக இவ்வாண்டு மே மாதம், காலாவதி ஆகவுள்ள விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் உத்தரவை, மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும்.

நான் இங்கே எடுத்துக் கூறிய கோரிக்கைகள் அனைத்துமே, புதியவை அல்ல. ஏற்கெனவே பலமுறை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கடிதம் மூலமாகவும் இக் கோரிக்கைகளை, மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறேன். பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் உள்துறைச் செயலாளர் ஆகியோரிடம், நேரிலும் வற்புறுத்தி இருக்கிறேன்.

ஆயினும் இதுவரை மத்திய அரசு இவைகளை நிறைவேற்றித் தரவில்லை. இதன் தொடர்பாகச் சில கருத்துக்களை இப்போது இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். இப்பொழுதுதான் நான் சொன்னேன். சட்டம் ஒழுங்கைக் காப்பது, தீவிரவாதிகளை ஒடுக்குவது, நாட்டின் செக்கியூரிட்டியைப் பாதுகாப்பது என்பது மாநில அரசின் பொறுப்பாக மட்டும் இருக்கமுடியாது. மத்திய அரசின் பங்கும் அதில் இருக்கின்றது என்று குறிப்பிட்டேன். மத்திய அரசின் அதிகார மனோபாவத்தைப் பற்றி, அதிகாரத் தோரணையைப் பற்றி ஏற்கெனவே நான் குறிப்பிட்டுச் சொன்னேன். ஒரு உதாரணத்தை உங்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், அந்தச் சமயத்தில் மத்திய உள்துறை இணை அமைச்சராக இருந்த திரு. ராஜேஷ் பைலட் அவர்கள் திடீரென்று எந்த முன்னறிவிப்பும் இன்றி "நான் சென்னைக்கு வருகிறேன். சட்டம் ஒழுங்கு மிகவும் சீர்கேடு அடைந்துவிட்டது. சட்டம் ஒழுங்கைப் பற்றி நான் முதலமைச்சரோடு விவாதிக்கவேண்டும்." உடனடியாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் அழைத்து, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சில மணி நேர அவகாசம்தான் இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ய எங்களுக்கு அளிக்கப்பட்டது. இருப்பினும் கூட்டத்தைக் கூட்டினோம். அமைச்சரும் நாங்களும் பேச்சுவார்த்தை நடத்தினோம். அப்பொழுது ராஜேஷ் பைலட் அவர்கள் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டார். அப்பொழுது நாங்கள் எடுத்த நடவடிக்கைகள் அனைத்தையும் பட்டியல் போட்டுக் காட்டினோம். மேலும் இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்த வேண்டுமானால், பலப்படுத்த வேண்டுமானால் நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கேட்டார். அதுவும் நான் கேட்டதற்கு இணங்க-நான் கேட்டதற்குப் பதிலாக இந்தப் பதில் கேள்வி வந்தது. சட்டம் ஒழுங்கைக் காப்பது, விடுதலைப் புலிகளை ஒடுக்குவது எங்கள் பொறுப்பு மட்டும்தானா? உங்களுக்கு இதில் பங்கில்லையா என்று கேட்டேன். நாங்கள் என்னென்ன செய்யவேண்டுமென்று கேட்டார். அப்பொழுது சொன்னேன் இப்பொழுது நான் பட்டியல் போட்டுக் காட்டினேனே இந்தக் கோரிக்கைகள் அத்தனையையும் அப்பொழுதே அவரிடம் எடுத்து வைத்தேன். குறிப்பாகச் சொன்னேன். இப்போது 7 நேவல் டிடாச்மென்ட்ஸ் இருக்கின்றன. அவற்றின் பணியைச் சிறப்பாகச் செய்கின்றன. இந்த 7 நேவல் டிடாச்மென்ட் இருக்கின்ற பகுதியில் விடுதலைப் புலிகளால் ஊடுருவ முடியவில்லை. ஆனால் அதற்கு வடக்கேயும், தெற்கேயும் இருக்கிற கடற்கரை பாதுகாப்பற்றுக் கிடக்கிறது.

ஆகவே வேம்பாரில் ஒன்றும், பூம்புகாரில் ஒன்றும் ஆக இரண்டு புதிய நேவல் டிடாச்மென்ட்களை நீங்கள் அமைத்தால்தான் கடலோரப் பாதுகாப்பு பணியைச் சரியாக நிறைவேற்றமுடியும் என்று சொன்னதற்கு இதோ இப்போதே செய்கிறேன், என்று சொல்லி எனக்கு முன்னாலேயே தொலைபேசியை எடுத்து கால் போட்டு கடற்படை அதிகாரியிடம் என் எதிரிலேயே பேசி உடனடியாக இந்த இரண்டு பிரிவுகளை அமையுங்கள் என்று உத்தரவிட்டார். மாதங்கள் பல உருண்டோடிவிட்டன. ஒன்றும் நடக்கவில்லை. பின்னர் இதேபோன்று இந்த ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி திடீரென்று முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் ராஜேஷ் பைலட் அவர்கள் இங்கே தொடர்பு கொண்டு மீண்டும் விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசவேண்டும், சட்டஒழுங்குப் பாதுகாப்பைப் பற்றிப் பேசவேண்டும், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார். எங்களுக்கு இருந்த மற்ற அலுவல்களையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு மீண்டும் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். கூட்டத்தில் என்னென்ன செய்திருக்கிறீர்கள் என்று அவர் கேட்டார்.

திரும்பவும் நான் செய்ததையெல்லாம் பட்டியல் போட்டு விவரமாகச் சொன்னேன். கடந்த கூட்டத்தின்போது உங்களுக்கு நான் இன்ஸ்ட்டிரக்ஷன்ஸ் கொடுத்தேனே அதற்கான 'பாலோ அப்' என்ன என்று கேட்டார். நான் சொன்னேன், எங்கள் பணியை நாங்கள் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் சொன்னீர்களே அதற்குத்தான் 'பாலோ அப்' எதுவும் இல்லை" ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் நாங்கள் எதைச் செய்யவில்லை என்றார். அந்த நேவல் டிடாச்மென்ட் விஷயமே அவருக்கு மறந்துவிட்டது. அவருக்கு நினைவூட்டினேன். அய்யா கடந்த முறை நீங்கள் வந்தபோது 2 புதிய நேவல் டிடாச்மென்ட்ஸ் வேண்டுமென்று கேட்டேன். நீங்கள் எங்கள் முன்னால் டெலிபோன் கால் போட்டு ஒரு கடற்படை அதிகாரியிடம் பேசினீர்கள். ஆனால் ஒன்றுமே நடைபெறவில்லை என்றேன். அதற்கு ராஜேஷ் பைலட் அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? கடந்த முறையாவது ஆகஸ்ட் மாதத்தில் அவர் வந்தபோது இதோ நான் செய்கிறேன். உடனடியாக நிறைவேற்றுகிறேன் என்று பதிலுரை தந்தார். உத்தரவாதத்தினை வழங்கினார். ஆனால் இந்த முறை அவர் 'நீங்கள் சொன்னதை நான் டெல்லிக்குச் சென்று அங்கு தெரிவிக்கிறேன்' என்றுதான் சென்னாரே தவிர, செய்கிறோம் உங்களுக்கு உதவி புரிகிறோம் என்று அவர் சொல்லவில்லை.

மேலும் கேட்டேன், ஏற்கெனவே உள்துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி அறிக்கைகள் எல்லாம் விட்டார். நேரில் வந்தபொழுது ராஜேஷ் பைலட் அவர்களும் கேள்வி கேட்டார். அவ்வப்பொழுது சிறையிலிருந்து சிலபேர் தப்பிவிடுகிறார்களே, இலங்கைத் தமிழர்கள் தப்பிவிடுகிறார்களே இதற்கு நீங்கள் ஏன் செக்யூரிட்டி மெஷர்ஸ் டைட்டன் செய்யவில்லை என்று கேட்டார். அப்பொழுது நான் சொன்னேன். சிறையிலிருந்து அவர்கள் தப்பிச் செல்லவில்லை. சிறப்பு முகாம்களிலிருந்து அவர்கள் தப்பிச் சென்றிருக்கிறார்கள் என்று சொன்னேன். அதற்குக் காரணம் என்ன? இப்போதுள்ள மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார வரம்பின்படி Foreigners Act- ன் 3 (2) E பிரிவின்கீழ் அதிகாரம் மட்டும் தான் மாநில அரசுக்கு வழங்கப்பட்டு உள்ளது. இந்த 3 (2) E பிரிவின்கீழ் நாம் என்ன செய்யமுடியும். இப்படிப்பட்ட 'Suspected militants' or இப்படிப்பட்ட 'Suspected Extremists' களை, தீவிரவாதிகளைச் சிறையில் அடைக்கமுடியாது. பாதுகாப்பான ஒரு இடத்தில் இருங்கள் என்று சொல்லலாம். இதுதான் நமக்குள்ள அதிகாரம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருங்கள் என்று தான் சொல்லலாமேதவிர சிறையில் அடைக்கமுடியாது. "We cannot control their movements otherwise' ' அதனால்தான் திரும்பத்திரும்ப கடந்த $2\frac{1}{2}$ ஆண்டுகளாக ஒவ்வொரு முறையும் 3(2)'G' ன்கீழ் எங்களுக்கு அதிகாரத்தை 'Delegate' செய்து கொடுங்கள் என்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறேன். திரு. ராஜேஷ் பைலட்டோடு நடத்திய இரண்டு கூட்டங்களிலும் நான்

கேட்டேன். இப்போது அண்மையில் டெல்லி சென்றபோது பிரதமரிடத்திலும் இதுபற்றிப் பேசினேன். உள்துறை அமைச்சரிடமும், உள்துறை இணையமைச்சரிடமும், மத்திய உள்துறைச் செயலாளரிடமும் பேசினேன். திரும்பத் திரும்ப அவர்கள் உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள் என்கிறார்கள். மீண்டும் மீண்டும் நான் சொல்கிறேன். விசா அளிப்பதில் கட்டுப்பாடு விதியுங்கள், கண்டவர்களையும், தமிழகத்திற்கு வர அனுமதிக்காதீர்கள். இல்லையென்றாலும் அவர்களைச் சிறையில் அடைக்க எங்களுக்கு அதிகாரத்தைத் தாருங்கள். சிறையில் அடைக்கும் அதிகாரத்தை எங்களுக்குக் கொடுக்காமல் ஏன் இவர்களைச் சிறையில் அடைக்கவில்லை, ஏன் இவர்கள் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்று கேட்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

எல்லாவற்றுக்கும் மேலாக எல்.டி.டி.ஈ.யை - விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்று அறிவிக்க வேண்டுமென்று போராடி அந்தத் தடை உத்தரவைப் பெற்றது நாங்கள் தான். ஆனால் அந்தத் தடை உத்தரவு இந்த ஆண்டு மே மாதத்தில் காலாவதியாக உள்ளது. நான் மீண்டும் மீண்டும் இவர்களைச் சந்திக்கும் போதெல்லாம், பிரதமரிடமும், உள்துறை அமைச்சரிடமும், உள்துறை இணை அமைச்சரிடமும், மத்திய உள்துறைச் செயலாளரிடமும் 'மே மாதத்தில் காலாவதியாகும் இந்த உத்தரவை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துத் தாருங்கள்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறேனே தவிர, இதற்கு மத்திய அரசு இந்த நிமிடம்வரை செவி சாய்க்கவில்லை. எதிர்க்கட்சித்தலைவா் அவர்கள் நேற்றுப் பேசினார்களே, "நீங்கள் விழிப்போடு இருங்கள் மத்திய அரசு தனது பொறுப்பை எப்போதும் செய்யும்" என்று - மத்திய அரசின் பொறுப்பு என்னவாயிற்று? இப்பொழுது நான் பட்டியல் போட்டுக் காட்டினேனே இந்தக் கோரிக்கைகள் எல்லாம் திரும்பத்திரும்ப - திரும்பத்திரும்ப மத்திய அரசிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். பாதுகாப்புக்காக அயல்நாட்டிலிருந்து சில துப்பாக்கிகளை, இயந்திரங்களை, கருவிகளை, ஆயுதங்களை இறக்குமதி செய்ய அனுமதி கொடுத்தார்கள். ஆனால் அதற்கு சுங்கவரி மிகவும் அதிகமாக இருக்கிறது என்று சொன்னோம். இந்தத் துப்பாக்கிகளை எதற்கு வரவழைக்கிறோம்? விளையாடுவதற்காகவா அல்லது 'LUXURY' பொருளா? இந்த ஆயுதங்களுக்கு எல்லாம் சுங்கவரி விலக்கு 'EXEMPTION' கொடுங்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். ஆனால் இதுவரையில் மத்திய அரசு இந்தக் கோரிக்கைகளுக்கு எல்லாம் செவிசாய்க்கவில்லை.

ஆனால் திரும்பத் திரும்ப எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், காங்கிரசில் உள்ளவர்களும் மற்ற எதிர்க்கட்சியினரும் பேசுவார்கள். சட்டம் ஒழுங்கை நீங்கள் சரியாகப் பாதுகாக்கவில்லை. சட்டம் ஒழுங்கை நீங்கள் நிலைநாட்டவில்லை. விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருக்கிறது. உங்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டீர்கள். உங்கள் கடமையை நீங்கள் சரியாகச் செய்யுங்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். நீங்கள் விழிப்புடன் இருங்கள் என்றெல்லாம் கூறுகிறார்கள். மீண்டும் சொல்கிறேன் - நாங்கள் விழிப்போடுதான் இருக்கிறோம். எங்கள் கடமையைச் சரியாகச் செய்துகொண்டுதான் இருக்கிறோம். ஆனால் மத்திய அரசுதான் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டது என்பதை ஆணித்தரமாக இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இக்கோரிக்கைகளை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று, இந்த மாமன்றத்தின் மூலமாக மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதிலும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அடக்குவதிலும், முழுமையான அளவில் வெற்றி கண்ட எங்களது அரசு; தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு, ஊறு விளைவிக்கும் எந்தச் சக்தியையும், எப்போதும் இரும்புக் கரம் கொண்டு அடக்கும், ஒடுக்கும் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தும் விஷயத்தில், தொய்வு ஏற்பட்டுள்ளது என்று, சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரசாரம் செய்து வருவது; குறிப்பாக எதிர்க்கட்சி தலைவர் பிரசாரம் செய்து வருவது எந்த அளவிற்கு ஆதாரமற்றது என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**திருமதி ரங்கம்மாள் காவலர்களால் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படும் புகாரின் மீதான குறிப்பு**

திருக்கோயில்களின் புனரமைப்பிற்கு நடவடிக்கை எடுத்து, கோயில் பாதுகாப்புப் படை ஒன்றையும் ஏற்படுத்திய எங்கள் அரசு, கோயில்களில் சிலைத் திருட்டு நடத்திவந்த கும்பலைப் பிடித்துள்ளது. 227 கோயில்களில், பல குற்றங்களைப் புரிந்த, இந்தப் பயங்கரக் கும்பலை, எங்கள் காவல் துறை பிடித்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடுக்கு அருகில் உள்ள, தென்னமநாடு என்னும் கிராமத்தில் வசிக்கும், திருமதி ரங்கம்மாள், ஒரத்தநாடு காவல் நிலையத்தைச் சேர்ந்த மூன்று காவலர்கள், தன்னைக் கற்பழித்ததாகப் புகார் கொடுத்துள்ளார். புகார் கொடுப்பதற்கு முன்பாக, திருமதி ரங்கம்மாளின் கணவர் திரு. சேகர், 25.2.1994 அன்று மாலை 4 மணியளவில், பூச்சி மருந்து உட்கொண்டு, தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தியின் அடிப்படையில், தென்னமநாட்டைச் சேர்ந்த 150 பேர், சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். திருமதி ரங்கம்மாள் தனது புகாரில், 22.2.1994 அன்று இரவு, தான் ஒரத்தநாடு காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு 3 காவலர்களால், தான் கற்பழிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக தனது கணவர் சேகர், தற்கொலை செய்து கொண்டதாகவும், கூறியுள்ளார். காலம்தாழ்த்திக் கொடுக்கப்பட்ட புகார் என்றாலும், ஒரு பெண்மணி தனது கற்பிற்குப், பங்கம் நேர்ந்து விட்டதாக கொடுத்த மனு, உடனடியாக எடுத்து விசாரிக்கப்பட்டுள்ளது. காவலர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதால், இப்புகார் தஞ்சாவூர் கோட்டாட்சித் தலைவருக்கு, உண்மையைக் கண்டறிவதற்காக, அனுப்பி வைக்கப்பட்டது. அவரும் தற்போது விசாரணை ஒன்றை நடத்தி வருகிறார். இதற்கிடையில், தன்னைக் கற்பழித்ததாக, திருமதி ரங்கம்மாள் அடையாளம் காட்டிய, ஒரத்தநாடு காவல் நிலையக் காவலர்கள் மூன்று பேர், தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று அந்தக் காவல் நிலைய காவல் துறை உதவி ஆய்வாளரும், இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளார். தஞ்சாவூர் கோட்டாட்சித் தலைவர் விரைவில் விசாரணையை முடித்து, அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவரது அறிக்கை கிடைக்கப் பெற்றதும், தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி ரங்கம்மாள் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்றதாக கிடைத்த புகாரின் அடிப்படையில், அவரை காவல் துறையினர் பிடித்து, 23.2.1994 அன்று காலை 6 மணியளவில், காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்ததாகவும், வழக்கு பதிவு செய்யப்பட்டு, பின்னர் 9 மணியளவில், ஒரத்தநாடு குற்றவியல் நீதிமன்ற நடுவரால், ஜாமினில் விடுதலை செய்யப்பட்டதாகவும், தெரிய வருகின்றது. திருமதி ரங்கமாளின் கணவரின் தந்தையான, அதாவது திருமதி ரங்கம்மாளின் மாமனாரான திரு சந்திரன் என்பவர், 25 லிட்டர் சாராயம் வைத்திருந்ததாக, வழக்குத் தொடரப்பட்டு 15.11.1993 அன்று, ஒரத்தநாடு குற்றவியல் நடுவரால், 3 மாத கடுங்காவல் தண்டனை, அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது என்றும் திருமதி ரங்கமாளின் கணவர் சேகர் மீது, கள்ளச் சாராயம் காய்ச்சியதாக வழக்குத் தொடரப்பட்டு, ஒரத்தநாடு குற்றவியல் நீதிமன்றத்தில், 9.2.1994 அன்று, 400 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

எங்கள் அரசைப் பொருத்தவரை, எந்தவொரு பெண்மணிக்கும், ஒரு தீங்குகூட நேரக் கூடாது; பாலியல் ரீதியாகக் குற்றங்கள்

**இழைக்கப்படக் கூடாது என்பதில், உறுதியாக இருக்கிறோம். எனவேதான், திருமதி ரங்கம்மாள் கொடுத்த புகார், தஞ்சாவூர் கோட்டாட்சித் தலைவரால், விசாரிக்கப்பட்டுவருகிறது. தவறு நடந்திருந்தால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, எங்கள் அரசு என்றும் தயங்கியதில்லை இனியும் தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குப் பதில்

நேற்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இந்த மாமன்றத்தில் பேசும்போது, தனக்கே உரித்தான குறைகூறும் பாணியில் சில மர்ம மனிதர்கள் வருகிறார்கள், போகிறார்கள் என்றெல்லாம் கூறிவிட்டு இலங்கையின் தளபதி, அதுவும் தலைமைத் தளபதி, தனது உயிருக்கு ஆபத்து என்று, தமிழ்நாட்டுக்கு ஓடிவந்து ஓராண்டுக் காலம் இங்கே தங்கி இருந்திருக்கிறார் என்றும் - தமிழே தெரியாத, இலங்கை நாட்டினுடைய தளபதி அவர், என்றெல்லாம் கூறினார். ஆனால், அந்தத் தளபதிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகத், தான் கருதவில்லை என்றும் சாதுரியமாகப் பேசியுள்ளார்.

**இந்த அவையின் மாட்சிமை களங்கப்படும் வண்ணம், எதிர்க்கட்சித் தலைவருக்குரிய கடமைகளைக் காற்றிலே பறக்கவிட்டு, அவர் உண்மைக்குப் புறம்பான செய்தியை இந்த அவைக்குச் சொல்லியிருக்கிறார்.** அவர் குறிப்பிட்டதைப் போல, இலங்கை நாட்டின் தளபதி எவரும், இங்கு வந்து தங்கியிருக்கவில்லை. இலங்கை காவல்துறை துணைத் தலைவர், அதாவது Deputy Inspector General of Police, D.I.G. திரு. Premadasa Udugampola, என்ற சிங்களவர் தான், சென்னையில் சில காலமாகத் தங்கியிருந்துவிட்டு, 17.6.1993 அன்று, இலங்கைக்குத் திரும்பச் சென்றுள்ளாரே தவிர, எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதுபோல, இலங்கை நாட்டின் தளபதி வந்து தங்கியிருந்து செல்லவில்லை. ஒரு காவல் துறை அதிகாரிக்கும், படைத்தளபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கு வித்தியாசம் தெரியாதா?

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களின் குறுக்கீட்டுக்கு அளித்த விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு மேலாகப் பேசி என்னுடைய பதிலுரையை நேற்று நான் இந்த அவையில் அளிக்கமுடியாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார். அதனால்தான் விடுமுறை என்று அறிவிக்கப்பட்ட இன்று என்னுடைய பதிலுரையை நான் நிகழ்த்திக்கொண்டிருக்கிறேன். இந்த நேரத்தில்கூட தேவையில்லாமல் அவர் குறுக்கிட்டு, மீண்டும் அவையின் நேரத்தை ஆக்கிரமித்துக் கொள்வதை நான் அனுமதிக்கமுடியாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று தெளிவாக இந்த அவையிலே சொன்னார்கள். இங்கே இருந்த அனைவரும் கேட்டோம். இலங்கை நாட்டின் தளபதி ஒருவர் இங்கே வந்திருந்தார் என்றுதான் அவர் சொன்னார். அவர் குறுக்கிட்டுப் பேசியபோது அவர் ஒரு 'Intelligence Chief' என்று சொன்னார். 'He is not an intelligence Chief. He is not a' 'தளபதி'. He is only a D.I.G. அவர் ஒரு ஸ்பெஷல் டாஸ்க் போர்ஸ்க்குத் தலைமை ஏற்றார் என்று சொல்கிறார். இங்கு சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க நாம் ஒரு 'Special Task Force' அமைத்திருக்கிறோம். அதன் தலைவராகக் காவல்துறையின் கூடுதல் டி.ஜிபி. திரு. தேவாரம் அவர்கள் இருக்கிறார். அதனால் தேவாரம் அவர்களை நாம் தளபதி என்று சொல்லமுடியுமா?

**ஒரு அரசு ஊழியர் இங்கு வந்து செல்வதற்கும், அண்டை நாட்டினுடைய படைத் தளபதி, இங்கு வந்து செல்வதற்கும், வித்தியாசம் இல்லையா? இரண்டுக்கும் வித்தியாசம் புரியாமல்,**

இந்த அவையையே திசை திருப்பும் முயற்சியில் அல்லவா, நேற்று எதிர்கட்சித் தலைவர் ஈடுபட்டு விட்டார்? இப்படி தவறான தகவலைத் தருவதால், இந்த அவையின் மாண்பு பாதிக்கப்படாதா? என்று கேட்க விரும்புகிறேன்.

D.I.G. திரு. Udugampola அவர்கள், இலங்கை நாட்டில், ஜெயவர்த்தனே ஆட்சி நடைபெற்றுக் கொண்டு இருந்தபோது, Jana Vimukti Peramuna - JVP என்ற, சிங்கள ஆதரவு தீவிரவாத இயக்கத்தை ஒடுக்குவதில், மிகுந்த தீவிரம் காட்டியவர், என்று தெரியவருகிறது. இவருக்கும், அந்த அரசாங்கத்திற்கும், என்ன தகராறு ஏற்பட்டது என்பதைப்பற்றி எல்லாம், இங்கே விவாதிப்பது வேறு ஒரு நாட்டின் உள் விவகாரத்தில், தலையிடுவது போல ஆகிவிடும் என்ற காரணத்தினால் மற்ற விவரங்களைப் பற்றி இங்கு விவாதிப்பது, ஏற்புடையதாக இருக்காது என்று கருதுகிறேன். எனவே, நமக்குத் தொடர்புடைய விவரத்தை மட்டும் எடுத்துரைப்பது தான், நியாயமானது ஆகும். இலங்கையில் தொடர்ந்து இருந்தால், தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக அவர் தனது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காகத் தமிழ் நாட்டிற்கு வந்திருக்கிறார். அவர் யாரிடமும் இங்கே தொடர்பு வைத்திருந்ததாகத் தெரியவில்லை. பின்னர் இலங்கை அரசியலில் மாறுதல்கள் ஏற்பட்ட பின்பு இலங்கைக்குத் திரும்பினால், தனது உயிருக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்ற சூழ்நிலையில், அவர் இலங்கைக்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். திரும்பும்போது, சென்னையில் உள்ள இலங்கை நாட்டுத் தூதரகத்தில், Emergency Certificate ஒன்றைப் பெற்று, விமானம் மூலமாகத்தான், 17.6.1993 அன்று இலங்கைக்குச் சென்றுள்ளார். இந்த விவரம் இந்த அரசிற்கு நன்றாகவே தெரியும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக செயல்பட்ட ஒரு காவல் துறை அலுவலர், அதுவும் Deputy Instpector General of Police தகுதியில் உள்ள ஒரு அலுவலர் பயங்கரவாத சக்திகளிடம் இருந்து, தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தமிழ்நாட்டில் வந்து தங்கியிருந்திருக்கிறார் என்பது தீவிரவாத சக்திகளின் நடமாட்டம் தமிழ்நாட்டில் இல்லை என்பதைத்தானே உறுதிபடுத்துகிறது? எனவே எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதெல்லாம், அவரது அதீத கற்பனையில் எழுந்த அச்சம் என்றுதான் பொருள் கொள்ள வேண்டி இருக்கின்றது. சரியான தகவலைத் தரும் பொறுப்பு, ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு உள்ளது என்பதை, மீண்டும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் என்பதெல்லாம் வெறும் கற்பனை! யாரும் தமிழ்நாட்டிற்குள் ஊடுருவி வரமுடியாத வண்ணம், நாங்கள் விழிப்புடன்தான் இருக்கிறோம்! குறைந்த பட்சம் இந்த அவைக்குத் தருகின்ற தகவல்கள் சரியானவைதானா என்று, நீங்கள் விழிப்போடிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### மகாராஷ்டிராவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டோருக்காக நிதி சேர்த்தல்

கடந்த ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில், மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள பல பகுதிகளில், மிகவும் பயங்கரமான நிலநடுக்கம் ஏற்பட்டதை, இந்த மாமன்றம் நன்கு அறியும். குறிப்பாக, லத்தூர் மற்றும் உஸ்மானாபாத், ஆகிய இரு மாவட்டங்களிலும், இந்த நிலநடுக்கத்தால், ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்தும் பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமுற்றும், வீடுகளை இழந்தும், தவிக்கின்ற சோக சூழ்நிலை நிலவியது. இந்தத் துயர சம்பவத்தால், துயருற்று வாடும் மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு, ஆறுதல் கூறும் வகையிலும் மஹாராஷ்டிரா அரசு, உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உதவிடும் வகையிலும் 'தமிழ்நாடு முதலமைச்சரின், மகாராஷ்டிரா நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான, நிவாரண நிதி", என்ற துயர் துடைப்பு நிதி ஒன்றினை, நான் துவக்கினேன்.

முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, 10 இலட்சம் ரூபாயை, மகாராஷ்டிரா மாநில முதலமைச்சருக்கு அனுப்பிவைத்தேன். என்னுடைய சொந்த நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயையும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, 5 இலட்சம் ரூபாயையும் வழங்கி இந்த நிவாரண நிதியினைத் துவக்கி வைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிட, தாராளமாக நிதி உதவி புரிய, என் அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்களுக்கு, வேண்டுகோள் விடுத்தேன்.

இந்தியாவின் எந்த மூலையில் வாழ்ந்தாலும், அவர்கள் நமது சகோதரர்கள் என்ற உணர்வினை, பாரம்பரியமாகக் கொண்டு வாழுகின்ற தமிழ்நாட்டு மக்கள், அதே தேசிய உணர்வுடன் மகாராஷ்டிரா மாநிலத்தில் சற்றும் எதிர்பாராத வகையில், துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளான, சகோதர, சகோதரிகளின் நிலையைக் கண்டு, துடிதுடித்து, அவர்களின் மறு வாழ்விற்கென, என் வேண்டுகோளிற்கிணங்கி, அள்ளி அள்ளி வழங்கினார்கள். ஈகையின் உறைவிடம் அல்லவா தமிழ்நாடு? வேறு எந்த மாநிலமும் அளித்திடாத அளவிற்கு மிகக் குறுகிய காலத்தில், 2 கோடியே 87 இலட்சம் ரூபாயைத் தமிழ்நாடு அளித்தது. தமிழக அரசு சார்பாகவும், எனது சார்பாகவும், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்களும், மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர், திரு சரத்பவார் அவர்களை நேரில் சந்தித்து, நாம் திரட்டிய நிதியை நேரில் வழங்கினார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து திரட்டப்பட்ட நிவாரணத் தொகையை, அன்போடு பெற்றுக்கொண்ட மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர், திரு சரத்பவார் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் தன்னலமற்ற தியாக உணர்வையும், உன்னதமான அன்பினையும், மனமார பாராட்டினார். தமிழ்த் தாயின் பெருமை, தரணி எங்கும் பரவிடவும் தமிழ் மண்ணின் நேச கீதம், நாடு எங்கும் ஒலித்திடவும் தேசிய உணர்வில் நாம் மற்றவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதை உணர்த்தவும் இன்னலுற்ற மகாராஷ்டிரா மாநில மக்களுக்கு வாரி வழங்கிய, என் அன்பிற்குரிய தமிழகத்துப் பெருமக்கள் அனைவருக்கும், இந்த மாமன்றத்தின் வாயிலாக, எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**1993 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளம், புயலால் நிகழ்ந்த பாதிப்புகளுக்கான நிவாரணப் பணிகள்:**

கடந்த 1993 ஆம் ஆண்டில், நவம்பர், டிசம்பர் ஆகிய இரு மாதங்களிலும், பெருமழை மற்றும் புயல் ஆகியவற்றின் காரணமாக, தமிழ்நாட்டின் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் ஏற்பட்டது. 1991 ஆம் ஆண்டு முதல், தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகத் தமிழ்நாடு பாதிக்கப்பட்டதால், பாதிப்பின் தீவிரம் அதிகமாக இருந்தது. 277 பேர் உயிர் இழந்தனர். 3156 கி.மீ. சாலைகள் பாதிக்கப்பட்டன. 2130 பாலங்களிலும், ஏரிகளிலும், உடைப்புகள் ஏற்பட்டன. 1,06,304 குடிசைகள், முழுமையாகப் பாதிக்கப்பட்டன. 4,26,038 குடிசைகளில், பகுதிப் பாதிப்பு ஏற்பட்டது. இவை மட்டுமல்லாமல், 2,30,981 எக்டேர் நிலங்களில் உள்ள பயிர்கள், சேதம் அடைந்தன.

கடந்த ஆண்டுகளில் நிகழ்ந்த புயல், பெருமழை, ஆகியவற்றால், ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், அனைத்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, மாநில நிர்வாகத்தைத் தயார் நிலையில் வைத்திருந்த காரணத்தால்தான் புயலாலும், பெரு மழையாலும் ஏற்படக் கூடிய பொருட் சேதமும், உயிர்ச் சேதமும், வெகுவாகக் குறைக்கப்பட்டது என்பதை, இந்த நேரத்தில், தெரிவிப்பது, எனது கடமை என்று கருதுகிறேன்.

வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளையும், சேதம் அடைந்த பகுதிகளையும், பல மாவட்டங்களில் நானே விரைந்து சென்று, பார்வையிட்டதோடு நிவாரணப் பணிகளையும் துரிதப்படுத்தினேன். திருச்சி, மதுரை, குன்னூர், திண்டுக்கல், பன்றிமலை, நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளை, ஹெலிகாப்டர் விமானம் மூலமும் பார்வையிட்டேன். பல்வேறு இடங்களில், பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்தேன். மதுரை நகரில் செல் லூர் பகுதி, கூடல் நகர், வண்டியூர் கண்மாய், ஆகிய பகுதிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை, நானே நேரில் வழங்கினேன். அவர்களுக்கு, பாதுகாப்பான தங்கும் இடங்களை ஏற்படுத்திக் கொடுத்து, அங்கேயே பல்லாயிரக்கணக்கானோருக்கு, உணவுப் பொட்டலங்கள் தயார் செய்து வழங்கவும், நிவாரண உதவிகளை வழங்கவும், ஏற்பாடு செய்தேன்.

பெருமழை, வெள்ளம் ஆகியவற்றால் ஏற்பட்ட சேதங்கள், 666 கோடி ரூபாய் என்று கணக்கிட்டு, மத்திய அரசின் உதவியை நாடி, விவரங்களை அனுப்பினோம். நானே நேரில் சென்று, மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்து, தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகி வருவதால், தமிழ்நாட்டில் ஏற்பட்ட சேதங்களின் கடுமையை எடுத்துரைத்தேன். ஆனால் எப்போதும் போல, மத்திய அரசு தனது அனுதாபத்தை மட்டும் தெரிவித்துக்கொண்டு, வெறும் 29 கோடியே, 25 இலட்சம் ரூபாயை அளித்தது. அந்தத் தொகையில் 14 கோடியே 63 இலட்சம் ரூபாய், 1994-'95ஆம் ஆண்டுக்கு, இயற்கை இடர்ப்பாடு நிதியின் முன் பணமாக வழங்கியது. ஆக மொத்தம், கிடைத்த நிதி, 14 கோடியே 62 இலட்சம் ரூபாய் மட்டுமே. இருப்பினும், இயற்கை சீற்றத்தால், உயிர் இழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், 10,000 ரூபாயை, நிவாரண உதவியாக வழங்கினோம். பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும், 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணையும், வேட்டி, சேலை ஆகியவற்றையும் இலவசமாக வழங்கினோம். குடிசைகளும், வீடுகளும் பாதிக்கப்பட்டோர்களுக்கு, உதவித் தொகைகள் வழங்கினோம். நிவாரணத் தொகையாக வழங்கப்பட்ட உதவித் தொகை மட்டும், 15 கோடியே 97 இலட்சம் ரூபாய் என்பதை, இந்த மாமன்றத்திறகுத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1480 பாசனக் கிணறுகளும், 675 பம்புசெட்டுகளும், மிகவும் பாதிப்புக்குள்ளாயின. 2 இலட்சத்து 30 ஆயிரம் எக்டேர் நிலங்களிலுள்ள பயிர்கள், பாதிப்புக்குள்ளாயின. பாதிக்கப்பட்ட பயிருக்கு நிவாரணமாக, 12 கோடியே 94 இலட்சம் ரூபாயைத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்து, விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், ஆகியவற்றை வழங்கியது.

கடலோர மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட, 3481 கட்டு மரங்கள், மற்றும் 645 வல்லங்களை, செப்பனிட்டு, மீண்டும் மீனவர்கள் தங்களுடைய தொழிலைத் துவங்குவதற்கு, எங்கள் அரசு, 46 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயை, நிவாரணமாக ஒதுக்கியது. பழுதடைந்த சாலைகள், மற்றும் பாசன வசதிகளைப் பழுது பார்க்க, 25 கோடி ரூபாயைத் தமிழக அரசு வழங்கியது.

நீலகிரி மாவட்டம் குன்னூருக்கு அருகில், பரலியாறு மரப்பாலம் அருகே ஏற்பட்ட, மிகப் பெரிய நிலச்சரிவினையும், நான் 14.11.1993 அன்று, ஹெலிகாப்டர் மூலமாகப் பார்வையிட்டேன். உயிர் இழந்த குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுக்குத் தலா, 10,000 ரூபாயும் வழங்கினேன். நிலச்சரிவினால் அழிந்துபோன, $1\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூர மலைப்பாதையைப் போர்க்கால அடிப்படையில் புதிதாக உருவாக்கித் தர, நானே முன் நின்று கூட்டம் நடத்தி, அதிகாரிகளுக்கு ஆணையிட்டேன். அதன் விளைவாக, **Border Roads Organisation; Central Roads Research Institute; Geological Survey of India**, ஆகிய நிறுவனங்களின் உதவியோடும், தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, $1\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்திற்கு, முற்றிலுமாக அழிக்கப்பட்ட குன்னூர் மலைப் பாதையை இரண்டு மாதங்களிலேயே முழுவதுமாகச் சீர் செய்து,

போக்குவரத்துக்கு உகந்ததாக மாற்றி, சாதனை சரித்திரத்தை, எங்களது அரசு படைத்துள்ளது என்பதை, மிக்க பெருமிதத்தோடு, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மலைக்குச் செல்லும், முக்கியமான இந்தப் பாதையைச் சீர்செய்ய, ஒரு ஆண்டுக்கு மேலாகும் எனப் பலர் நினைத்த போது, போர்க்கால அடிப்படையில், இதனை மிகக் குறுகிய காலத்தில், சீர்செய்து காட்டினோம்.

கன்னியாகுமரி மாவட்டத்திலும், மற்றும் சில கடலோர மாவட்டங்களிலும், வீடு இழந்தவர்கள், புதிதாக வீடு கட்டிக்கொள்ளவும் சேதம் அடைந்த வீட்டைச் சீர்செய்து கொள்ளவும் 9 கோடியே 47 இலட்சம் ரூபாய், தமிழக அரசின் சார்பில், மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு உதவி செய்யாவிட்டாலும், கடுமையான நிதி நெருக்கடியிலும், எங்கள் அரசு, புயல், வெள்ள நிவாரணப் பணிகளுக்கு 75.37 கோடி ரூபாயை ஒதுக்கி, நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது. துயருற்ற மக்களின் இன்னல்களைக் களைவதற்காக, எங்கள் அரசின் உதவிக் கரம், எப்போதும் தயாராக இருக்கின்றது என்பதை, இது எடுத்துக் காட்டுகின்றது.

### வளர்ச்சிப் பணிகள் திட்ட ஒதுக்கீடு

தொய்வடைந்திருந்த வளர்ச்சிப் பணிகளுக்கு, நாங்கள் பதவியேற்ற பின்பு, ஒரு புதிய எழுச்சியைக் கொடுத்துள்ளோம். இங்கே இந்த மாமன்றத்தில் பேசிய, சில மாண்புமிகு உறுப்பினர்கள், வளர்ச்சிப் பணிகள் நல்ல முறையில் நடைபெறவில்லை என்பதைப் போன்ற, ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முனைந்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, அவர்களுக்கு எல்லாம், இந்த அரசு, மக்களின் அரசு, எந்த அளவுக்கு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1989 -90 ம் ஆண்டின் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை, 1360 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் 1994-95 ஆம் நிதியாண்டில், திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகை, 2750 கோடி ரூபாய் ஆகும். கடந்த 4 ஆண்டுகளில் மட்டும், திட்ட ஒதுக்கீடு, இரண்டு மடங்காகி உள்ளது என்பது, ஒரு சாதனை இல்லையென்றால், வேறு எதைத்தான் சாதனை என்று சொல்வது? வளர்ச்சிப் பணிகளுக்கு நாங்கள் கொடுக்கின்ற முன்னுரிமையையும், முக்கியத்துவத்தையும், இது உணர்த்தவில்லையா? தமிழக மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரம், உயர வேண்டும் என்பதில், இந்த அரசு முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது என்பதை, இது கோடிட்டுக் காட்டவில்லையா?

தனி நபர் வாரியான, திட்ட ஒதுக்கீட்டு விவரத்தை, இந்த மாமன்றத்தின் முன் வைப்பது, எனது கடமை எனக் கருதுகிறேன். 1990-91ம் ஆண்டில், தேசிய அளவில் தனி நபர் சராசரி திட்ட ஒதுக்கீட்டுத் தொகை, 326 ரூபாயாக இருந்தபோது, தமிழ்நாட்டில் தனி நபரின் சராசரி அளவு, 300 ரூபாயாக இருந்தது. அதாவது, தேசிய சராசரி அளவைவிட, தமிழ்நாட்டின் சராசரி அளவு குறைவாக இருந்தது. ஆனால் 1994-95ம் ஆண்டில், தனி நபர் திட்ட ஒதுக்கீட்டில், தேசிய சராசரி, 433 ரூபாயாகக் கணக்கிடப்பட்டுள்ள போது, தமிழ்நாட்டின் சராசரி தொகை, 492 ரூபாயாக உயர்ந்துள்ளது. தேசிய சராசரியை விட, நமது மாநில சராசரி இப்போது உயர்ந்துள்ளது என்பதை, மிக்கப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, தமிழ்நாட்டின் நபர் வாரித் திட்ட ஒதுக்கீடு, உயர்ந்து இருப்பது மட்டுமன்றி, தேசிய அளவுடனும், மற்ற மாநிலங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நமது திட்ட ஒதுக்கீடு, எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பது கண்கூடு.

நாட்டில் பெரும்பாலான மாநிலங்கள், தங்களுடைய திட்ட ஒதுக்கீட்டை, நிதி நெருக்கடி காரணமாக, குறைத்துக்கொண்டு வரும் ஒரு சூழ்நிலையில், தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும், தனது

ஒதுக்கீட்டை முழுமையாக நிறைவேற்றுவதோடு, திட்ட ஒதுக்கீட்டையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எத்தகைய நிதி நெருக்கடியிலும், இந்த அரசு, வளர்ச்சிப் பணிகளில் முதலீடு செய்து வருவதை, வெளிப்படையாகப் பாராட்ட மனமில்லாதவர்கள்கூட இது ஒரு சாதனை என்பதை, ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று கருதுகிறேன்.

1991-92 ஆம் ஆண்டு, 1,725 கோடி ரூபாய், திட்டங்களுக்குச் செலவிட்டு, ஒதுக்கீட்டுத் தொகையான 1,605 கோடி ரூபாயை மிஞ்சினோம். 1992-93ஆம் ஆண்டில், ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டத்தொகை, 1,766 கோடி ரூபாய் தான். ஆனால் எங்களுடைய திட்டச் சாதனையோ, 1,935 கோடி ரூபாய். நடப்பு ஆண்டில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுத் தொகை, 2,101 கோடி ரூபாய் ஆகும். இவற்றை முழுமையாகச் செயல்படுத்தி, 2,140 கோடி ரூபாய் அளவிற்கு, திட்ட செலவினங்கள் எட்டும் என்பதை, பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1994-95ம் நிதியாண்டிற்கு ஏற்பளிக்கப்பட்ட தொகை, 2,750 கோடி ரூபாய் ஆகும். சென்ற ஆண்டு திட்ட ஒதுக்கீட்டை விட, இது 30.89 சதவீதம் அதிகம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்ற மாநிலங்கள், 8 வது திட்ட ஒதுக்கீட்டை முடிக்க இயலாமல், தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், நாம் இத்திட்ட ஒதுக்கீட்டை முடிப்பதில், திறம்பட முன்னேறியுள்ளோம் என்பது, தமிழக மக்கள் அனைவரும், மகிழ்ச்சி கொள்ளவேண்டிய ஒரு செய்தி ஆகும்.

தமிழ்நாடு, வளர்ச்சிப் பணிகளில் காட்டிவருகின்ற ஆர்வத்தை, மத்திய திட்டக் குழுவின் துணைத் தலைவர், திரு. பிரணாப் முகர்ஜி. அவர்கள், மனம்திறந்து பெரிதும் பாராட்டியுள்ளார்.

உலக வங்கியின் நிர்வாக இயக்குநர், திரு. Ernest Stern, 1993 -ம் ஆண்டு பிப்ரவரி மாதம், சென்னைக்கு வந்தபோது, தமிழக அரசு, உலக வங்கித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதை, நேரில் கண்டு பாராட்டியுள்ளார்கள். UNDP, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிர்வாகி, Dr. James Gustave Speth அவர்கள், முக்கியமான சமூக நலப் பணிகளில், தமிழ்நாடு ஏற்படுத்தியுள்ள சாதனைகளையும் சமுதாய, பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த, தமிழக அரசு எடுத்துவரும் முயற்சிகளையும், வெகுவாகப் பாராட்டியுள்ளார். உலக வங்கியின் துணைத் தலைவர், திரு. Ismail Serageldin, வளர்ச்சிப் பணிகளுக்கு இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகள் குறித்து, தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார். சர்வதேசக் குழந்தைகள் நிதி நிறுவனம், UNICEF இந்தியப் பிரதிநிதி, Dr. John Rhode அவர்கள், தமிழக அரசு, மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மேற்கொண்டுள்ள, 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டம், மற்றும் மகளிர் நலத் திட்டங்கள் ஆகியவற்றை, முன்னோடித் திட்டங்கள் என்று வெகுவாகப் பாராட்டியுள்ளார். அண்மையில் சென்னைக்கு வருகை புரிந்த, ஜப்பான் நாட்டுப் பொருளாதாரத் தூதுக் குழுவும், இந்த அரசின் பொருளாதார நடவடிக்கைகளையும், தொழில் ஊக்குவிப்பு முயற்சிகளையும், பாராட்டியுள்ளது.

இங்கே வளர்ச்சிப் பணிகளே நடைபெறுவதில்லை என்றெல்லாம் சிலர் பேசினார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நான் தகவல் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே உலக வங்கி தொழில் வளர்ச்சிக்காக எந்த மாநிலத்திற்குக் கடன் கொடுக்க விரும்புகிறதென்றால் அது தமிழ்நாட்டுக்குத்தான். எனக்கு நேரடியாக வந்த தகவல் ஒன்றைக் கூறுகிறேன். அண்மையில் ஒருவர். - அவர் இந்தியர்தான். உலக வங்கியை அணுகி ஆந்திர மாநிலத்தில் தொழில் துவங்கக் கடனுதவி கோரியுள்ளார். அதற்கு உலக வங்கியின் துணைத்தலைவர் அளித்த பதில் "ஆந்திராவில் புதிதாகத் தொழில் தொடங்குவதென்றால் கடன் வழங்க முடியாது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதானால் நாங்கள் கடன்

கொடுக்கிறோம். ஏனென்றால் நாங்கள் வரும்போது தமிழ்நாட்டில் தான் முதலமைச்சரே எங்களுடன் அமர்ந்து விவாதிக்கிறார்கள். தமிழ்நாட்டில் தொழில்வளர்ச்சித் திட்டங்கள், அதன் செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு விவரத்தையும் முதலமைச்சர் அறிந்து வைத்து இருக்கிறார். எனவே தமிழ்நாட்டில் தொழில் துவங்கக் கடன் கொடுத்தால் எந்த விரயமும் இல்லாமல் அந்தத் தொழில் நிறைவேறும். எனவே தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்குவதற்கு நாங்கள் கடன் கொடுக்கிறோம்" என்று கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்தையே, எங்கள் முழு மூச்சாகக் கொண்டு, செயல்பட்டு வரும் நாங்கள், இந்த வளர்ச்சிப் பணிகளில், மேலும் தீவிரம் காட்டி செயல்படுவோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி விலை உயர்வு**

இந்த ஆண்டு 1.2.1994 முதல், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் அரிசியின் விலை, சாதாரண ரகத்திற்கு, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாயும் சன்ன மற்றும் மிகச் சன்ன ரகத்திற்கு, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் 25 காசுகளும், உயர்த்தப்பட வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு, தமிழக அரசு ஆளாகியது. மத்திய அரசு, எல்லா முக்கியமான பண்டங்களின் விலைகளை உயர்த்தும்போது அமைதியாக இருப்பவர்கள் அதன் விளைவாக மாநில அரசு, விலை உயர்த்த வேண்டிய ஒரு நிர்பந்தத்திற்கு உள்ளாகும் போது, மாநில அரசை மட்டும் குறைகூறி வருகின்றனர். இது எந்த விதத்தில் நியாயமானது என்பது எங்களுக்கு இன்னமும் விளங்கவில்லை.

குறிப்பாக, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும், அரிசியின் விலையை உயர்த்தக்கூடாது என்பதில், எங்களுக்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் மத்திய அரசு, 1.2.1994 முதல், இந்த அரிசியின் விலையை, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் முதல், ஒரு ரூபாய் 30 காசுகள் வரை உயர்த்தியது. இந்தியாவிலேயே தமிழக அரசு தான், ஏழை எளிய மக்கள் அனைவரும் பயன்பெறும் வண்ணம், மிகப் பெரிய அளவில், பொது விநியோகத் திட்டத்தை செவ்வனே செயல்படுத்தி, அதன் காரணமாக ஏற்படுகின்ற நஷ்டத்தை ஈடு செய்வதற்காக, ஒரு பெரும் தொகையை மானியமாக வழங்கி வருகின்றது.

மத்திய அரசு, இதற்கு முன்பு, பல முறை கணிசமான அளவிற்கு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும். அரிசியின் விலையை உயர்த்திய போதும் கூட தமிழக அரசு, அந்த அளவிற்கு அரிசியின் விலையை உயர்த்தவில்லை. ஏனென்றால், அந்த விலையேற்ற சுமையை, ஏழை எளிய மக்கள் தாங்க முடியாது என்ற நல்லெண்ணத்துடன், எங்களது மானியத்தின் அளவை அதிகரித்துக்கொண்டே போனோம். ஆனால் 10 அல்லது 15 காசுகள் என்ற அளவில், விலையேற்றம் இருந்த காலம் மலையேறி ஒரு ரூபாய், ஒரு ரூபாய் 25 காசுகள் என்கின்ற அளவிற்கு, மத்திய அரசு விலை உயர்வு செய்த போது, அதனால் ஏற்படுகின்ற இழப்பை, தமிழக அரசு தாங்கிக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில்தான், அரிசி விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானோம்.

தமிழக அரசு, 450 கோடி ரூபாய் அளவில், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்கப்படும் அரிசியின் விலைக்காகக் கொடுத்து வரும் மானியத் தொகையை, தொடர்ந்து தாங்கிக்கொண்டு வருகின்றது. மத்திய அரசு, அரிசி, டீசல், பெட்ரோல், நிலக்கரி போன்றவற்றின் விலைகளை உயர்த்தும்போது, அதனால் ஏற்படுகின்ற சுமை, மாநில அரசுகளின் மீது, முழுமையாக இறக்கி வைக்கப்படுகின்றது. எனவேதான், இது போன்ற முக்கியமான முடிவுகளை, மத்திய அரசு எடுக்கும் முன்பு, மாநில அரசுகளைக் கலந்தாலோசிக்கவேண்டும் என்று, நான் வற்புறுத்தி

வருகின்றேன். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டங்களில் கூட, இந்தக் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தேன்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்களின் விலையேற்றம், அதனால் பயன்பெறும், நலிந்த பிரிவைச் சார்ந்த மக்களின் வாங்கும் சக்தியைப் பொறுத்து அமையவேண்டும் என்பதில், எங்களுக்கு மாற்றுக் கருத்து கிடையாது. இனிமேலாவது மத்திய அரசு, இது போன்ற பொருட்களின் விலையை உயர்த்தும்போது, இன்று எங்களைக் குறை கூறுகின்ற உறுப்பினர்கள், மத்திய அரசின் திசை திரும்பி, அந்த விலையேற்றத்தினைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று, கேட்கின்ற தைரியம் படைத்தவர்களாக உருவாக வேண்டும் என்பதே, எனது தணியாத ஆசை. எனது ஆசை நிறைவேறுமா என்பதை, நான் பொறுத்திருந்து பார்க்கிறேன்.

பல மாநிலங்களில், பொது விநியோக முறையின் கீழ், வழங்கப்படும் அரிசியின் விலை, தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் வழங்கப்படுவது போன்று, மானிய விலையில் வழங்கப்படுவது இல்லை. ஆந்திரப் பிரதேசத்தில் கூட, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு மட்டும்தான், குறைந்த விலையில் அரிசி வழங்கப்படுகின்றது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும்தான், எந்த விதமான பாகுபாடுமின்றி, ஒரு கோடியே 49 இலட்சம், குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு, 15 முதல் 16 இலட்சம் டன்கள் வரை, அரிசி வழங்கப்பட்டு வருகிறது என்பதை எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன். தொடர்ந்து தமிழகத்தில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ், சீரான முறையில், அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படும் என்பதையும் தற்போது இருக்கின்ற மானியச் சுமையைத் தொடர்ந்து ஏற்போம் என்பதையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி

எங்களது அரசு பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே, தமிழ்நாட்டின் விரைந்த வளர்ச்சிக்காக, 'புதிய தொழில் கொள்கை' ஒன்றை உருவாக்கி, அதனை உடன் செயல்படுத்தத் தொடங்கியது. தொழில் முனைவோரின் தேவைகளும், எதிர்பார்ப்புகளும், என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் பதவி ஏற்ற உடனேயே, முக்கியமான தொழில் அதிபர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டி, அவர்களுடைய பல்வேறு கருத்துக்களையும் கேட்டறிந்தேன். அதையொட்டி அமைந்த தமிழகத்தின் 'புதிய தொழில் கொள்கையானது', நமது மாநிலத்தில் விரைந்த தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த, வழி வகை செய்துள்ளது. குறிப்பாக, மின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் பெரிய தொழில்களை நிறுவுதல் புதிய தொழிற் பேட்டைகளை உருவாக்குதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான ஊக்கச்சலுகைகளை வழங்குதல், ஆகிய நடவடிக்கைகளை, எங்களது அரசு முனைந்து செயல்படுத்தியது.

1991 ஆம் வருடத்திற்கு பிறகு, நமது நாட்டில் நிலவி வந்த, தனியார் துறை ஊக்குவிப்புக் கொள்கை, ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, மற்றும் இதர பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஆகியவற்றை ஒட்டி அமைக்கப்பட்ட, தமிழகத்தின் 'புதிய தொழில் கொள்கை', 1992-93 ஆகிய கடந்த இரண்டு ஆண்டுகளில், நாம் எதிர்பார்த்த பயன்களைக் கொடுத்துள்ளது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அதன் விளைவாக, பன்னாட்டு நிறுவனங்கள், நமது நாட்டைச் சேர்ந்த தனியார் தொழில் முதலீட்டாளர்கள் ஆகியோர், தமிழ்நாட்டில் முதலீடு செய்யப் பெரிதும் விரும்புவதை, இந்த மாமன்றம் நன்கு அறியும். அந்த வகையில், வெளிநாட்டுத் தொழில் நிறுவனத்தின் பங்கேற்போடு, 7,500 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்படும் ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் உற்பத்தித் திட்டம், 376 கோடி ரூபாய் மதிப்பில் பேசின் பிரிட்ஜ்

எரிவாயு மின் சுழலி மின் உற்பத்தித் திட்டம், உலக அளவிலேயே முதல் முதலாகத் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட, 800 கோடி ரூபாய் மதிப்பில், கடல் நீர் வெப்பத்திலிருந்து மின் உற்பத்தித் திட்டம் மற்றும் தமிழகத்தின் பல இடங்களில், கடந்த 2½ ஆண்டுகளில் துவக்கப்பட்ட, மின் உற்பத்தித் திட்டங்கள் ஆகிய அனைத்தும், தமிழகத்தில் 5000 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தியை, விரைவில் ஏற்படுத்தித் தரக்கூடிய, பிரகாசமான சூழ்நிலையைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தியுள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய கவனத்திற்கும், கொண்டுவர விரும்புகின்றேன். ஏற்கெனவே, தமிழ்நாட்டில், மின்சார உற்பத்தியில் தட்டுப்பாடு ஏதுமில்லை. மேலும், இந்தப் புதிய திட்டங்களினால், கூடுதல் மின் உற்பத்தி உருவாகும் போது தமிழ்நாடு, மின்சார உற்பத்தியைப் பொருத்த வரை, ஒரு **Surplus** மாநிலமாக, உபரி மாநிலமாக, வெகு விரைவில் உருவாகும் என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எங்களது அரசு பதவியேற்ற 1991 ஆம் ஆண்டிலிருந்து, 1993ஆம் ஆண்டு இறுதி வரை, தமிழ்நாட்டில் மின் திட்டங்கள் நீங்கலாக, மொத்தம், 9,150 கோடி ரூபாய் மதிப்பில், புதிய தொழில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதே காலகட்டத்தில், தனியார், கூட்டு, மற்றும் பொதுத் துறைகளில், புதிய தொழில் திட்டங்களில், 9,900 கோடி ரூபாய் முதலீடு செய்ய, உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி, தமிழக அரசு, தொழில் துறை வளர்ச்சியில், எந்த அளவுக்குத் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கும் என்று நம்புகிறேன்.

'தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் **TIDCO** மட்டும், கடந்த 30 மாத காலத்தில், சுமார் 9,000 கோடி ரூபாய் மதிப்புள்ள, 20 புதிய தொழில் திட்டங்கள் தொடங்க, ஆதரவு அளித்துள்ளது. இது தமிழகத்தின் தொழில் துறை, என்றுமே காணாத ஒரு மிகப் பெரிய சாதனையாகும்! அதுமட்டுமன்றி, மேலும், 4,000 கோடி ரூபாய் முதலீட்டில், 36 புதிய தொழில் திட்டங்களை, இந்த நிறுவனம் கண்டறிந்து அவைகளை 1994-95ஆம் ஆண்டு, இணை மற்றும் கூட்டுத் துறையின் கீழ், தமிழ்நாட்டில் நிறுவ, உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது என்பதை, மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பெருந்துறை, கங்கைகொண்டான், ராணிப்பேட்டை, நிலக்கோட்டை மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில், 'தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்', **TACID** தொழில் வளர்ச்சி மையங்களை நிறுவி வருவதுடன்; திருப்பூர், மணலி ஆகிய இடங்களில், அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருகின்றது என்ற மகிழச்சியான செய்தியையும், இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழகத்தில், மிக விரைந்த தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த, எங்களது அரசு எடுத்துவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் அனைத்தும், தமிழகத்தைத் தொழில் துறையில், ஒரு முன்னோடி மாநிலமாக்கும், என்று உறுதியாக நம்புகிறேன்.

**தடையற்ற தொழில் வளர்ச்சியே இன்றைய தேவை**

தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சியில், முதன்மை வகிக்கும் மாநிலமாக மாற்றுவதற்கு, எங்கள் அரசு எடுத்துவரும் முயற்சிகளைப் பற்றி, நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். நமது முயற்சிகள் அனைத் தும், இப்போது பயன் அளிக்கத் தொடங்கி உள்ளன. 1988-89 ஆம் ஆண்டில், அனைத்து நிதி நிறுவனங்களும் அளித்த, 1,157.5 கோடி ரூபாய் நிதி உதவியை வைத்துப் பார்க்கும் போது, தமிழ்நாடு, ஐந்தாவது இடத்தில் இருந்தது. எங்கள் அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக, 1992-93 ஆம் ஆண்டில், நிதி நிறுவனங்கள் வழங்கியுள்ள, 2,270.5 கோடி ரூபாய் நிதி உதவிகளின் அடிப்படையில், அகில இந்திய அளவில், நாம் மூன்றாவது இடத்தை எட்டியுள்ளோம் என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டை, அகில இந்திய அளவில், முதன்மையான

இடத்தை வகிக்கும் மாநிலமாகக் கொண்டு வர வேண்டும், என்ற உன்னதமான இலக்கை நோக்கி, விரைந்த தொழில் வளர்ச்சிக்கு, முக்கியத்துவம் அளித்துவருகிறோம். அந்த இலக்கை நாங்கள் அடைவதில் இருக்கின்ற சவால்களையும், இங்கே சொல்லியாக வேண்டும்.

உலகப் பொருளாதாரம், எந்த விதமான மாறுபட்ட சூழ்நிலையில், இன்று இயங்கி வருகிறது, என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். இது உலகமயமாக்கல் யுகமாகும். This is a age of Globalisation of Economics. போட்டியில்லாத, பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தைகள், இனி இருக்காது, தொழில்கள் முன்னேற வேண்டுமானால், உலகச் சந்தையில் போட்டியிட வேண்டி இருக்கின்றது. தற்போது உள்ள உள்ளூர் சந்தைகளைத் தக்க வைத்துக் கொள்வதோடு, உலகச் சந்தையில் ஒரு பெரும் பகுதியைக் கைப்பற்றவும் நாம் முயற்சிக்கவேண்டும். அப்போது தான், வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தின், வேலை வாய்ப்புத் தேவைகளை, நாம் நிறைவேற்ற முடியும்.

தொழில்களை விரிவுபடுத்துவதைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் தொழிலதிபர்கள், தொன்றுதொட்டு, மிகுந்த ஒரு எச்சரிக்கை உணர்வுடன், பாதுகாப்பான அணுகுமுறையைப் பின்பற்றி வந்துள்ளனர். தற்போது உள்ள சந்தைகள் Markets மற்றும், அவற்றிலே கிடைக்கின்ற ஆதாயங்கள் Profits ஆகியவற்றில், நிறைவைக் காணுகின்றனர். புதிய வளமான துறைகளைப் பின்பற்ற, அவர்கள் போதிய முயற்சிகளை எடுக்கவில்லை. தொழில் முனைவோரிடம், பிரச்சினைகள் ஏதாவது எழுந்தால், அரசிடம் இருந்து சலுகைகளைப் பெற்று, சமாளிக்க வேண்டும் என்கின்ற போக்கே, காணப்படுகின்றது. உலக அளவில் போட்டியிட வேண்டிய தருணம், நெருங்கிவிட்ட காரணத்தினால் தான், அவற்றைப் பற்றி நாம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தொழில்கள், இனியும் கிணற்றுத் தவளைகளாக இருக்கமுடியாது.

**இவை சிறிய அளவிலும், ஒரு குடும்பத்தின் அடிப்படையிலும், தொடர்ந்து இருக்குமேயானால், உலகெங்கும் வீசி வருகின்ற மாறுதல் என்ற புயலில், அடித்துச் செல்லப்படக் கூடிய அபாயம் உள்ளது, என்பதைத் தெரிவிப்பது, என் கடமை என்று கருதுகிறேன். எந்தப் பிரச்சினைக்கும், அரசுதான் தீர்வு காண வேண்டும், என்கின்ற ஒரு காலம் மலையேறி விட்டது.**

## தொழில் வளர்ச்சி:

### அரசின் அறைகூவல்

**எனவே, தமிழ் நாட்டிலுள்ள தொழில்கள் விழித்தெழுந்து, தங்களுடைய தடைகளை உதறித் தள்ள வேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு வகைகளில், தங்களுடைய தொழில்களை, விரிவுபடுத்த வேண்டிய தருணம் இதுவே. இல்லையென்றால், பெருமளவிலான வெளிநாட்டு முதலீடுகளின் காரணமாக, பொருளாதாரத்தில், அவர்களுக்கு எல்லாம் இடம் இல்லாமல் போய்விடும். எனவே இனியும் காலம் தாழ்த்தாது, தடைகளை கடந்து, தொழில்களை இணைத்து, விரிவுபடுத்தி, உலகளவிலும் உலக தரத்திலும், முன்னேற வேண்டும் என்பதே, நான் அவர்களுக்கு விடுக்கும் அறை கூவல் ஆகும்.**

### 'மின் உற்பத்தியில் புதிய சாதனை'

**தமிழகத்தின் விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், அடிப்படைத்தேவை மின் உற்பத்தியும், சீரான உயர் அழுத்த மின் விநியோகமும், என்பதை அறிந்த நாங்கள் முறை சார்ந்த, மற்றும் முறை சாரா துறைகளில், மின் உற்பத்திக்குப் புதிய ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துவருகின்றோம். அதுமட்டுமின்றி, நாங்கள் ஆட்சிப்**

பொறுப்பேற்ற பின்பு, மின் வெட்டைப் படிப்படியாகக் குறைத்து, பின்னர் 26.3.92 முதல் அடியோடு மின்வெட்டை நீக்கினோம். ஒவ்வொரு மாவட்ட அளவிலும், உயர் அழுத்த மின்சாரத்தை வழங்குவதற்கு, தனித் தனியே திட்டங்கள் தீட்டி, செயல்படுத்தி வருகிறோம் என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய அளவில், 4,317 மெகாவாட் மின்சாரத்தை, மின் வாரியம் தயாரித்து வருகின்றது. நமது அனல் மின் நிலையங்களில், சென்ற நிதியாண்டில், 1,163 கோடி யூனிட்டுகள், உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, 1,286 கோடி யூனிட்டுகள் உற்பத்தி ஆகும், என எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, அனல் மின் நிலையங்களில் மட்டும், கடந்த ஆண்டை விட கூடுதலாக 123 கோடி யூனிட்டுகள், இந்த ஆண்டு உற்பத்தி ஆகும் நல்ல சூழ்நிலைகள் உள்ளன.

1992-93 ஆண்டில் மட்டும், புனல் மின் நிலையங்களில், மின் உற்பத்தி, 27.8 சதவிகிதமும் அனல் மின் நிலையங்களில், 20.2 சதவிகிதமும், அதிகரித்துள்ளன. அதேபோன்று, இந்த நிதியாண்டில் பிப்ரவரி மாதம் முடிய, உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின்சாரம், கடந்த ஆண்டு உற்பத்தியைவிட, 5.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 225 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்கு, 8 புதிய திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளதோடு, தனியார் துறையில், 24 மெகாவாட் திறன் கொண்ட, காற்றாலை பண்ணைகளும் தொடங்கப்பட்டுள்ளன என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கூடுதலாக, 865.5 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, இந்த எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வட சென்னை அனல் மின் திட்டம் பேசின் பாலம் எரிவாயு மின் சுழலி திட்டம் காற்றாலைப் பண்ணைகள் சாத்தனூர் புனல் மின் திட்டம் கீழ்பவானி புனல் மின் திட்டம் ஆகியவற்றின் பணிகள், வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்தியாவிலேயே, காற்றாலைகளை இயக்கி, முறைசாரா மின்சாரம் தயாரிக்கும் துறையில், தமிழகம் இன்று முன்னணியில் இருந்து வருகின்றது. கடல் நீரிலுள்ள வெப்ப நிலைகளின் மாறுதலைப் பயன்படுத்தி, 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும், 'மிதக்கும் மின் நிலையத்தை', Sea Solar Power incorporated என்ற அமெரிக்க நிறுவனம், 800 கோடி ரூபாய் முதலீட்டில், சிதம்பரனார் மாவட்டம் குலசேகரப்பட்டினம் அருகில், அமைக்க உள்ளது. உலகிலேயே இது போன்ற முறை சாரா மின் உற்பத்தியில், இது ஒரு முன்னோடி முயற்சி என்பது, தமிழ்நாட்டினர் அனைவரும், பெருமை கொள்ளக்கூடிய ஒரு செய்தியாகும்.

மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, நாம் முயற்சிகள் எடுத்துக் கொள்ளும் அதே நேரம், மிகப் பெரிய மூலதன முதலீடு, இத்துறைக்குத் தேவைப்படுவதால், தனியார் துறையினரைப் பங்கு பெறச் செய்து வருகின்றோம். தனியார் மற்றும் கூட்டுத் துறையின் மூலம், 3,100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய, 5 திட்டங்கள், 12,600 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள, திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம், கடலூர் அனல் மின் திட்டம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி மின் திட்டம், ஸ்ரீமுஷ்ணம் பழுப்பு நிலக்கரி மின் திட்டம், குலசேகரப்பட்டினத்தில் கடல் அலையில் இருந்து மின் உற்பத்தித் திட்டம் போன்ற திட்டங்கள், நமது மின் தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்யும். நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட, தூத்துக்குடி அனல்மின் திட்டம் நிலை 4, வட சென்னை அனல்மின் திட்டம் நிலை 2, மற்றும் நிலை 3 ஆகிய திட்டங்களைத் தனியார் துறையிடம் ஒப்படைக்க, கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று, காவிரிப் படுகையில் கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி, 'பிள்ளைப்பெருமாள் நல்லூர் எரிவாயு மின்சுழலித் திட்டமும்',

தனியார் துறையிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக அரசு இத்தனை நிதி நெருக்கடியிலும், மின் உற்பத்தித் துறையில், ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கி வருகிறது. அதே நேரத்தில், மத்திய அரசு, தமிழ்நாட்டில் மின் திட்டங்களைச் செயலாக்குவதில், மெத்தனம் காட்டி வருவது, எங்களுக்கு எல்லாம் பெருத்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. நெய்வேலியில் 3வது சுரங்கம் வெட்டும் பணி, மற்றும் அத்துடன் இணைந்த மின் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்க, மத்திய அரசு ஆவன செய்யவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றோம்.

அதேபோன்று, கூடங்குளம் அணுமின் திட்டத்திலும், தனது பங்கிற்கான நிதியைச் செலுத்துவதற்குத் தமிழக அரசு இசைவு தெரிவித்துள்ள நிலையில், மத்திய அரசு, திட்டத்தைச் செயலாக்க, விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தென்னக எரிவாயுத் திட்டத்தை, மத்திய அரசு செயல்படுத்த வேண்டும் என்று, நான் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளேன். எனினும், கொள்கை அளவில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்றதோடு நிற்கிறது. அதற்குத் தேவையான ஆயத்த நடவடிக்கைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை. ஓமன் நாட்டிலிருந்து வரக்கூடிய எரிவாயுவைப் பயன்படுத்தி, தென்னக எரிவாயுத் திட்டம், செயல்படுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. ஓமன் நாட்டிலிருந்து எரிவாயு பெறப்பட்டு, இத்திட்டத்தினைச் செயல்படுத்த இயலுமா என்று, இன்னும் தெளிவுபடுத்தப்படவில்லை.

எனவே தான், Bombay High-ல் தற்போது உபரியாக, வீணாகிக் கொண்டிருக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி, இந்தத் தென்னக எரிவாயு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று, மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீண்டகால அடிப்படையில் வேண்டுமானால், ஓமன் நாட்டிலிருந்து பெறக் கூடிய எரிவாயுவை, இத்துடன் இணைப்பதுபற்றிப் பரிசீலிக்கலாம். ஆனால் இத்திட்டம் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டுமானால், Bombay High-ல் ஒவ்வொரு நாளும் வீணாகிக் கொண்டிருக்கும், 2.2 கோடி கன மீட்டர் எரிவாயுவை, தென் மாநிலங்கள் பயன்படுத்திக்கொள்ள, அனுமதிக்க வேண்டும் என்று, நான் மீண்டும் இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன்.

நிதி ஆதாரம் இல்லையென்று, மத்திய அரசு, இத்திட்டத்தைக் கைவிட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தான், தென் மாநிலங்கள், இத்திட்டத்திற்கு வேண்டிய நிதி பங்கீட்டை, ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளன என்று, உறுதி அளித்துள்ளேன். இனியும் மத்திய அரசு, இத்திட்டத்தினை கிடப்பில் போடுவது, நியாயமாகப்படவில்லை. HBJ இணைப்பு எரிவாயு திட்டம், மிகவும் முனைப்பாக செயல்படுத்தப்பட்டு பல மாநிலங்களுக்குப் பயன் தரக் கூடிய வகையில், அமைக்கப்பட்டுள்ளது. இதே போல, தென் மாநிலங்களுக்கு, இந்த திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். இதைத் தொடர்ந்து மத்திய அரசு தட்டிக் கழித்தால், தென் மாநிலங்களுடைய நலனை, புறக்கணிப்பதாகத் தான் எடுத்துக்கொள்ள முடியும். எனவே மத்திய அரசு, தென் மாநிலங்களின் உணர்வைப் புரிந்துகொண்டு, தென்னக எரிவாயுத் திட்டத்திற்கு, பச்சைக் கொடியைக் காட்ட வேண்டும் என்று, மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

### வேளாண்மைத் துறை

தமிழ்நாடு, உணவுப் பொருட்கள் உற்பத்தியில், செய்துள்ள சாதனைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவது, எனது கடமை என்று *கருதுகிறேன்.* 1990 ஆம் ஆண்டு, 75 லட்சம் டன்னாக இருந்த, உணவுப் பொருட்களின் உற்பத்தி, கடந்த 1993 ஆம் ஆண்டு, 90 இலட்சம் டன்னாக உயர்ந்தது. இந்த ஆண்டின் இறுதியில், உணவுப் பொருட்களின் உற்பத்தி, 100 இலட்சம், அதாவது ஒரு கோடி டன் அளவை அடைந்து, உணவு உற்பத்தியின்

வரலாற்றில், ஒரு சாதனையைப் படைக்கும் நிலையில் நாம் இருக்கிறோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவாகளின், புனிதப் பெயரை தாங்கியுள்ள, "எம்.ஜி.ஆர். நெல்" என்ற, இந்த வீரிய ரக நெல்தான், முதன் முதலாக இந்தியாவிலேயே கண்டுபிடிக்கப்பட்ட, வீரிய ஒட்டு ரக நெல் ஆகும். குறுகிய காலப் பயிரான, இந்த வீரிய ஒட்டு ரக நெல்லைத் தமிழ்நாட்டிலுள்ள 20 இலட்சம் எக்டேரில், நெல் பயிரிடப்படும் பரப்பளவில், ஒரு கணிசமான அளவுக்குப் பயிரிடப்பட்டால், நெல் உற்பத்தி மேலும் பெருகும் என்ற கருத்தை, ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். எனவே, அரிசி உற்பத்தியில், மேலும் புதிய சாதனைகள் படைக்க, சாத்தியக் கூறுகள் உள்ளன என்தைத் தெரிவிப்பதில், பெருமிதம் அடைகின்றேன்.

'டங்கல்' ஒப்பந்தம் என்று கூறப்படும், பன்னாட்டு வர்த்தக ஒப்பந்தம், General Agreement on Tariffs and Trade - GATT கடந்த டிசம்பர் 1993 இல் அறிவிக்கப்பட்டு, 1994 ஏப்ரல் மாதத்தில், கையெழுத்து இடப்படவுள்ளது. இந்த ஒப்பந்தத்தினால், ஏற்படுகின்ற பாதிப்புகள் என்ன என்பது, இன்னும் மாநிலங்களுக்குத் தெளிவாக்கப்படவில்லை. குறிப்பாக, அரசியல் சட்டத்தின்படி, மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள, விவசாயத் துறை, இந்த ஒப்பந்தத்தின் கீழ் கொண்டுவரப்பட உள்ளது. இதனால், விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய விதைகளின் விற்பனையில், ஒரு பாதிப்பு ஏற்படக்கூடும், என்று அஞ்சப்படுகிறது. சுதந்திரமாக ஒரு விவசாயி, மற்றொரு விவசாயிடமிருந்து, விதைகளைப் பெறுவதில், கட்டுப்பாடுகள் ஏற்பட்டு விடுமோ, என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. இதனால், உயரிய விதை ரகங்கள் பெறுவதில், பெரும் சிக்கல்கள் ஏற்படக் கூடும், என்று கருதுவது தவறாகாது.

குறிப்பாக, பன்னாட்டுப் பெரும் நிறுவனங்கள் Multi National Corporations, இந்தப் புதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில், உயர்ந்த ரக விதைகளை, அதிக விலைக்கு விற்கும் வாய்ப்புகள் ஏற்படலாம். இதனால் நமது விவசாயிகள், பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய சூழ்நிலைகள் உள்ளன. இந்த ஒப்பந்தம், விவசாயிகள் பெற்று வருகின்ற மானியங்கள் மீது, கட்டுப்பாட்டையும் கொண்டுவர வாய்ப்புகள் உள்ளன. உரங்களின் மீதான மானியம், இலவச மின்சாரம் போன்ற சலுகைகளுக்கு, ஆபத்து ஏற்படலாம். மொத்தத்தில், மாநில அரசுகளின் வசமுள்ள விவசாயத் துறையில், பல மாறுதல்கள் உருவாகலாம் பல மாற்றங்கள் உருவாகலாம். எனவேதான், மத்திய அரசு மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டி, இவற்றைப்பற்றிக் கலந்தாலோசித்து, முடிவு எடுக்கவேண்டும் என்று, பாரதப் பிரதமருக்கு இரண்டுமுறை கடிதம் எழுதியுள்ளேன்.

மருந்துகள் பெறுவதிலும், புதிய கட்டுப்பாடுகளை, இந்த ஒப்பந்தம் கொண்டுவரக் கூடும். எனவே மருந்துகள், அதிக விலையில் விற்கக் கூடிய ஒரு அபாயம் உள்ளது. நமது நாட்டிலுள்ள தேசிய நிறுவனங்கள், மருந்து உற்பத்தியில் தானாகவே முன்னின்று, குறைந்த விலையில் மருந்துகளை, ஏழை எளிய மக்களுக்கு விற்கின்ற தற்போதைய சூழ்நிலைக்கு, ஒரு குந்தகம் ஏற்படும், என்கின்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஒப்பந்தத்தினால், வளரும் நாடுகளில் உள்ள, தனி மனிதத் திறமை, வளரக் கூடிய வாய்ப்புகள் குறையக் கூடும், என்று எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய நாட்டின் உரிமைகளை, பன்னாட்டு நிறுவனங்கள், ஒரு சர்வாதிகாரப் போக்கில், பயன்படுத்திக் கொள்ளக் கூடிய, ஒரு சூழ்நிலை இருப்பதாலும் நம்முடைய நாட்டிலுள்ள அறிவாற்றலுள்ள விஞ்ஞானிகள், மற்றும் தொழில் நிபுணர்களின் திறமையான பணிகளுக்கு, பாதிப்புகள் ஏற்படக் கூடும் என்று கருதுவதாலும் இந்த 'டங்கல்' ஒப்பந்தத்தில், மத்திய அரசு கையெழுத்து இடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சில மாநில அரசுகள், உச்ச நீதி மன்றத்தில், வழக்குத்

தொடுக்கத் தீர்மானித்துள்ளன. தமிழக அரசும், அந்த வழக்கில் தன்னை இணைத்துக்கொண்டு, வாதாட முடிவு செய்துள்ளது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மகளிர் மேம்பாடு

மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில், தமிழ்நாடு முன்னணியில் இருக்கின்றது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் முதன் முதலாக, குழந்தைகளின் நலன்களைப் பாதுகாக்க குழந்தைப் பருவ காலம் முழுவதையும் கண்காணித்து, மேம்பாடு அடையச் செய்யும் வகையில், 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம், உருவாக்கப்பட்டுள்ளது. It is a blue print for the welfare of the child. குறிப்பாக, இளங் குழந்தைகள் இருதய சிகிச்சைத் திட்டம், இதய நோயினால் துன்புறும் ஏழைக் குடும்பத்துக் குழந்தைகளுக்கு, ஒரு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளதை, நல்ல மனம் படைத்தவர்கள், நாடு முழுவதும் பாராட்டிவருகின்றனர்.

மகளிர் மேம்பாடு, உண்மையிலேயே எத்தகைய முறையில் அமைய வேண்டும் என்பதை வரையறுத்து, 2000 ஆம் ஆண்டில், என்னென்ன இலக்குகளை அடையவேண்டும் என்பதைத் தெளிவாக்கும் வகையில், எங்களது அரசு தயாரித்த, 'தமிழக மகளிர் முன்னேற்றக் கொள்கை'யை, கடந்த 9.3.94 அன்று, அன்னை தெரசா அவர்கள், தனது திருக்கரங்களால் வெளியிட்டார்கள். அகில இந்திய அளவில், யாரும் எண்ணிக் கூட பார்க்காத, ஒரு மாபெரும் திட்டத்தைச் செயலாக்க, நாம் என்ன முயற்சி எடுத்து வருகிறோம் என்பதை, உலகின் பல முனைகளிலிருந்து வந்திருந்த, அறிஞர் பெருமக்கள் பாராட்டினார்கள். இந்தக் கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும், தமிழக அரசாலும், 'மகம்' என்று அழைக்கப்படும், தமிழ்நாடு மகளிர் முன்னேற்றக் கழகத்தாலும், செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கு உரிய சமூக நீதியினையும், பொருளாதார முன்னேற்றத்தையும், விரைந்து வழங்குவதில், இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும், தமிழகம், ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கப்போகிறது என்பதில், எனக்கு ஒரு சிறிதும் ஐயம் இல்லை.

எங்களது அரசு, மகளிர் முன்னேற்றத்திற்காக, பல சமுதாய நலத் திட்டங்களை அமல்படுத்தி வருகின்றது. ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கான, அரசு தொட்டில் திட்டம் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ஆகிய இவை அனைத்தும், தமிழ்நாட்டில் மகளிரிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, பின்தங்கிய மகளிரின் பொருளாதார வாழ்வில், ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கும் காலம், வெகு தூரத்தில் இல்லை.

மாநில அளவிலான 'மகளிர் ஆணையம்', **Women's Commission** ஒன்றை நிறுவி உள்ளோம். அரசுப் பணிகளிலும், இதர வேலை வாய்ப்புகளிலும், மகளிருக்கு 30 சதவிகித இட ஒதுக்கீட்டை, ஏற்படுத்தித் தந்துள்ளோம். மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்கும், நலனுக்கும், புரட்சிகரமான குறிக்கோள்களையும் அறிவித்து, அதற்காக உரிய வழிமுறைகளை வகுத்து, விரைந்து எங்களது அரசு பணியாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதையும், இந்த மாமன்றத்தின் வாயிலாக, என் அன்புக்குரிய, நான் வணங்கும் தெய்வங்களாகிய, தமிழகத்துத் தாய்மார்களுக்கு தெரிவித்துக்கொள்வதில், பெருமிதம் அடைகின்றேன்.

### இலவச சேலை, வேட்டி வழங்கும் திட்டம்

தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம், நான் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது, உடுத்துவதற்கு ஒரு நல்ல ஆடை கூட இல்லாமல், பலர் வறுமையில் வாடுவதைப் பார்த்திருக்கிறேன். அத்தகைய ஏழை எளிய மக்களுக்கு, கடந்த

3 ஆண்டுகளாக, எங்கள் அரசு தொடர்ந்து, இலவச சேலை, வேட்டிகளை வழங்கி வருகிறது. நிலமற்ற ஏழை விவசாயிகள், நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற, நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்கள் ஆகியவர்களில், 60 இலட்சம் பெண்களுக்கும், 60 இலட்சம் ஆண்களுக்கும், மொத்தமாக 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு, இலவச சேலை, வேட்டி, எங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. பண்டிகை நாட்களில், அவர்கள் புத்தாடை அணிந்து, மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும் என்பதற்காக, தமிழக அரசின் அத்தனை நிதி நெருக்கடியிலும், நாங்கள் தொடர்ந்து இந்தத் திட்டத்தைச் செயலாற்றி வருகிறோம்.

இந்த ஆண்டு வழங்கப்பட்ட சேலைகளும், வேட்டிகளும், தமிழ்நாடு கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமாகவும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும். நமது தேவை முழுவதும், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், பெற முடியாத சூழ்நிலையில், ஆந்திர மாநிலத்தின் கைத்தறி நிறுவனமான, 'ஆப்கோ' மற்றும் கர்நாடக மாநிலக் கைத்தறி வளர்ச்சி நிறுவனம் மூலமாகவும், 16 இலட்சம் சேலைகள், மற்றும் 11.5 இலட்சம் வேட்டிகள், மத்திய அரசின் ஒப்புதலுடன், அரசு நிர்ணயித்த விலைக்கு, கொள்முதல் செய்யப்பட்டன. தனியார் துறையில் இந்த முறை, ஒரு சேலை, வேட்டி கூட வாங்கப்படவில்லை. அதேபோல, தர நிர்ணயத்திலும், எந்தவிதமான குறையும், யாராலும் சுட்டிக் காட்டப்படவில்லை. இந்த ஆண்டும், இத்திட்டத்தைச் சிறப்புடன் செயல்படுத்துவோம் என்பதை, மகிழ்ச்சியுடன் இந்த் மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்தில் தனிக்கவனம்

நலிந்த மக்களின் நல் வாழ்க்கையும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்தையுமே, எங்கள் அரசின் தலையாய பணியாக மேற்கொண்டு, கடந்த $2\frac{3}{4}$ ஆண்டுகளுக்கு மேலாகச் செயலாற்றி வருகின்றோம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களின் வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம். இனிவரும் காலங்களில், மேலும் பல புதிய திட்டங்களை தீட்டிச் செயலாக்கி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மக்களின் வாழ்க்கையில், ஒரு புதிய முன்னேற்றத்தை உண்டாக்குவோம்.

சென்ற ஆண்டு, ஆளுநர் உரையின் மீதான என்னுடைய பதிலுரையில், ஆதிதிராவிடர் மக்கள் தொழில் துறையிலும் முன்னேற வேண்டும் என்பதற்காக, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் ஆகிய மாவட்டங்களில், இரண்டு தொழிற்பேட்டைகளை உருவாக்குவோம், என்று தெரிவித்து இருந்தேன். அதன்படி கோயம்புத்தூரிலும், திருப்பூரிலும், 200 தொழிற்கூடங்களைக் கொண்ட 2 தொழிற்பேட்டைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு என்றே வெகு வேகமாக உருவாகிவருகின்றன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று உலகளவில், புகழ் பெற்று விளங்கும், பின்னலாடைத் தொழில், இந்த இரண்டு தொழிற்பேட்டைகளிலும் மேற்கொள்ளப்படும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மக்களிடமிருந்து, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை பரிசீலனையும் செய்யப்பட்டு, தகுதியானவர்கள் பட்டியல் விரைவில் வெளியிடப்படும்.

நிலமுள்ள மற்றும் நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த, 10000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள், பயன்பெறும் வண்ணம், வங்கிகளின் நிதியுதவியோடு, 46 கோடி ரூபாய் செலவில், பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம், 'தாட்கோ' நிறுவனத்தின் மூலமாக, செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இச்சமுதாய மக்களிடையே இத்திட்டம், மகத்தான வரவேற்பைப் பெற்று இருக்கிறது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்தின் நலிவுற்ற பிரிவினராக, பல்லாண்டுக் காலமாக விளங்கி வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்கு, சமூக நீதி கிடைக்கப்பெற வேண்டும் என்பதை, முதற் கொள்கையாகவும் அவர்கள் அனைவரும் கல்வி பயின்று, அதன் மூலமாக, சமுதாய வளர்ச்சியை அடையவேண்டும் என்பதை, 2வது கொள்கையாகவும் அவர்கள் தங்கள் சொந்தக் கால்களில் நிற்கும் வண்ணம், புதிய பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுத் தருவதை, 3வது கொள்கையாகவும் எங்களது அரசு கொண்டு விளங்குகின்றது என்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த மூன்று கொள்கைகளின் அடிப்படையில்தான், இந்த வகுப்பு மக்கள் முன்னேற்றம் அடைய, பிரத்தியேகமாக புதிய 10 அம்சத் திட்டம் ஒன்றை, எங்களது அரசு அறிவித்து, செயல்படுத்தி வருகின்றது. இந்தத் திட்டத்தின் மூலமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின், அடிப்படைத் தேவைகள் அனைத்தும், பூர்த்தி செய்யப்படுகின்ற சீரிய நிலை, விரைந்து எட்டப்பட, வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக, 'குறைந்தபட்சம் ஒரு நீர் ஆதாரமாவது இல்லாத குக்கிராமமோ, அல்லது ஆதிதிராவிடர் குடியிருப்போ, தமிழகத்தில் எங்கும் இருக்கக் கூடாது', என்ற உன்னத நிலையை அடைய, எங்களது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

கல்வித் துறையைப் பொருத்தமட்டில், இந்த வகுப்பு மக்களின் மாணவ மாணவியருக்காக, கல்வி உதவித் தொகை, 91-92ம் ஆண்டு, 14 கோடி ரூபாயாகவும் 92-93ம் ஆண்டு 15.3 கோடி ரூபாயாகவும் 93-94ம் ஆண்டு 18.8 கோடி ரூபாயாகவும், உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், மனமார வரவேற்பீர்கள் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.



இம்மக்கள், ஒளிமயமான வாழ்க்கையைப் பெறவேண்டும், என்கின்ற கண்ணோட்டத்துடன், முன்னேற்றத் திட்டங்களை முழுமையாக வகுத்து, முனைப்புடன் செயல்படுத்துவோம் என்பதையும் இம்மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் கட்டிக் காப்பதில், தயக்கம் காட்ட மாட்டோம் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன்.

### சமூக நீதி காத்த சாதனை

தமிழகத்தின் உயிர் மூச்சான, இட ஒதுக்கீட்டு முறை தொடர, எங்கள் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுத்துரைப்பது, எனது கடமை என்று கருதுகிறேன். இட ஒதுக்கீட்டுக் கொள்கையில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வரும் தமிழ்நாடு, பிற்படுத்தப்பட்டோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும், பல நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியைப் பரிசீலனை செய்யும் போது, இட ஒதுக்கீட்டின் அளவு, பிற்படுத்தப்பட்ட, மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் தேவைக்கு ஏற்ப, மேல் நோக்கி வளர்ந்துள்ளதேயன்றி, எந்த ஒரு நிலையிலும், ஒதுக்கீட்டு அளவு குறைக்கப்படவில்லை என்பது, வரலாற்று உண்மை ஆகும்.

'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோர் கட்டிக் காத்த, சமூக நீதிக் கொள்கைப் பாதையில், சற்றும் தொய்வின்றி நடை போட்டு வரும் நாங்கள் 69 சதவிகித இட ஒதுக்கீட்டு முறை, என்றென்றும் தொடர்ந்திட வேண்டும் என்பதற்காக, இந்திய அரசியல் சட்டத்தில், உரிய திருத்தம் கொண்டு வருவதற்கு, இதே மாமன்றத்தில், தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றினோம்.

1951ல், தந்தை பெரியார் தலைமையில், கிளர்ந்தெழுந்த

தமிழகத்தின் உணர்வுகள், அப்படியே மங்காமலும், மறையாமலும், தமிழக மக்களிடையே இன்னமும் உள்ளன, என்பதை உணர்த்தும் வகையில், 16.11.93 அன்று, பொது வேலை நிறுத்தம் மேற்கொண்டோம். தமிழகம் முழுவதும் ஓரணியில் நின்று, இட ஒதுக்கீட்டு உரிமையைப் பாதுகாக்க, ஒருமித்த குரலில் வாதிடத் துவங்கியது. பின்னர், பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக நீதி காக்கும் இயக்கங்கள், ஆகியவற்றின் பிரதிநிதிகளை அழைத்து, இப்பிரச்சினை தொடர்பாக விவாதித்தோம். பல தரப்பு மக்களின் பேராதரவுடன், பின்னர் இதே சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாட்டில், 69 சதவீத இட ஒதுக்கீட்டு முறை தொடர, ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு இந்தியக் குடியரசுத் தலைவருக்கு, ஆளுநரின் வழியாக அனுப்பிவைக்கப்பட்டது. அரசியல் சட்டத்தில், தகுந்த திருத்தங்களை மேற்கொண்டு, இந்தச் சட்டம் அமல்படுத்தப்படும் போது, தந்தை பெரியார், 1951ல், எந்த உணர்வுகளுக்காகப் போராடினாரோ அந்த உணர்வுகளுக்கு மீண்டும் வடிவம் கொடுத்த பெருமை, நமக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும், சமூக மறுமலர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, ஆதிதிராவிடர், மலை ஜாதியினர், பிற்படுத்தப்பட்ட, மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு, எந்த வகையிலும் ஊறு நேரா வண்ணம், அவர்களது உரிமைகளைக் கட்டிக் காப்பதில் நாங்கள் தொடர்ந்து கண்ணும் கருத்துமாக இருப்போம்.

### மக்கள் நல்வாழ்வுத்துறை
### சுற்றுப்புறச் சுழல் மற்றும் வனத்துறை

எங்கள் அரசு தொடர்ந்து, சுற்றுப்புறச் சூழலில், ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றது. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக, வனத்துறை முன்னேற்றத்திற்கும், முக்கியத்துவத்தை அளித்துவருகின்றோம்.

1993-94ஆம் ஆண்டு, இத்துறைக்கு, 82 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, காடுகளின் வளர்ச்சியிலும், சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பிலும், தனிக் கவனம் செலுத்தினோம்.

வனம் காத்து வளம் சேர்ப்பதை, ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற, சென்ற ஆண்டு தமிழ்நாட்டில், வனச்சோலைத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு, 77 ஆயிரம் எக்டேர் பரப்பளவில், பல்வகையான மரங்கள், 10 கோடி ரூபாய் மதிப்பில் நடப்பட்டன. சென்னை மாநகரில் மட்டும், ஒரு இலட்சம் புதிய மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. சுவீடன் நாட்டின், பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின், Swedish International Development Agency - யின் உதவியோடு, நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு, 77 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த, எங்களது அரசு வழி வகை செய்துள்ளது என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக வங்கியின் நிதி உதவியோடு, 8 கோடி ரூபாய் மதிப்பில், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 42 கோடி ரூபாய் மதிப்பில், 7 ஆண்டுக் கால காடு வளர்ப்புத் திட்டம், DANIDA உதவியுடன், 150 எக்டேர் பரப்பளவில், 71 இலட்சம் ரூபாய் மதிப்பில், 11 அரிய மூலிகைப் பண்ணைகள், 5½ கோடி ரூபாய் செலவில், சென்னையில் அமைய உள்ள, சுற்றுப்புறச் சூழல் பயிற்சி நிலையம், போன்ற திட்டங்கள், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில், நமக்கு ஒரு தனி இடத்தைத் தேடித் தரும், என்பதை உறுதியாக நம்புகிறேன்.

### மக்கள் நல்வாழ்வுத் துறை

வசதி படைத்தோருக்கே மருத்துவ வசதி, என்கின்ற நிலையை மாற்றி, பட்டிதொட்டிகளில் வசிக்கும் பாமர மக்களின் இருப்பிடங்களுக்கே, மருத்துவ வசதிகளைக் கொண்டு

செல்வதே, எங்கள் நோக்கம் ஆகும். மாநகரங்களில் உள்ள உயர் மருத்துவ வசதிகள், கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். இந்த உயரிய கொள்கைகளின் அடிப்படையில், மருத்துவத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து, பல முன்னோடி திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழக அரசு நடத்திய மருத்துவ நல முகாம்களில், லட்சக்கணக்கான மக்கள், மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு, நோய் உள்ளது என்பதைக் கண்டறிந்தவர்களுக்கு, மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. '15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தின்' ஓர் அம்சமாக, இருதய நோயால் பாதிக்கப்பட்ட, நலிந்த பிரிவினைச் சார்ந்த குழந்தைகள் அனைவருக்கும், அறுவை சிகிச்சையும், மருத்துவ வசதியும், இலவசமாக வழங்க, அரசாங்கமே முழுப் பொறுப்பேற்று, இம்முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்பதை மிகுந்த மன நிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உடல் நலம் மட்டுமின்றி, குழந்தைகளின் மன நலமும், பேணிக் காக்கப்படவேண்டும் என்பதற்காக, மனநலப் பரிசோதனை, இலவசமாக எங்களது அரசால் மேற்கொள்ளப்படும் என்றும், அதற்குரிய திட்டம் வெகு விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இது போன்றதொரு தொலைநோக்கு பார்வையுடன், எதிர்காலச் சந்ததியினருக்கு, ஒளிமயமான வாழ்வை, நோயற்ற வாழ்வை, அமைத்துத் தருவதில், எங்கள் அரசு தொடர்ந்து தீவிரம் காட்டும்.

பார்வைக் குறைவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு, 64 கோடி ரூபாய் மதிப்பில், உலக வங்கியின் நிதி உதவியுடன், திட்டம் ஒன்றை விரைவில் செயல்படுத்த உள்ளோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், நோயாளிகள் தங்குமிடங்கள், சிகிச்சைக்குத் தேவையான கருவிகள், மற்றும் தளவாடங்கள், இத்திட்டத்தின் கீழ் அமைத்துத் தரப்படும். 7 ஆண்டுகளில், தமிழகத்தில் உள்ள அனைத்து விதமான பார்வைக் குறைவு நோய்களும், மருத்துவ சிகிச்சை மூலம் தீர்க்கப்படுகின்ற வாய்ப்பு, நமது மாநிலத்திற்குக் கிடைத்துள்ளது. தமிழகத்தில், Cataract னால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும், இத்திட்டத்தின் கீழ், இலவசமாக அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டு Cataract அறுவைச் சிகிச்சை செய்யாத காரணத்தினால் பார்வைக் குறைவு உள்ளவர்கள், நமது மாநிலத்தில் இல்லவே இல்லை என்றதொரு, அருமையான சூழ்நிலையை உருவாக்குவோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்மைக் குறை கூறியோ, வசை பாடியோ செய்தியை வெளியிடும் பத்திரிக்கைகள் இதுபோன்ற சிறப்பான திட்டத்தைச் செய்தியாக வெளியிட்டு ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

## மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள்

1998ஆம் ஆண்டிற்குள், 'அனைவருக்கும் கல்வி' என்பதே, தமிழக அரசின் உயரிய இலக்கு ஆகும். தமிழகத்தின் எதிர்காலத் தலைமுறையைத் தயார் செய்ய வேண்டும் என்பதற்காக, சிறுவர், சிறுமியர் அனைவருக்கும், விடுதலின்றி, தொடக்கக் கல்வியை வழங்க வேண்டும் என்பதற்காக, திட்டங்கள் தீட்டிவருகின்றோம். 15 வயது முதல், 35 வயதிற்கு உட்பட்டவர்களிடையே, எழுத்தறிவின்மையைப் போக்கி, குறைந்தபட்ச எழுத்தறிவுக் கல்வியை, அறிவொளி இயக்கத்தின்' மூலம், போதித்து வருகின்றோம். எழுத்தறிவுக் கல்வியின் மூலமும், தொடக்கக் கல்வியின் மூலமும், நமது சமுதாயத்தில் பெண்கள், சம உரிமையும், சமூக நீதியும் பெறுவார்கள், என்று நம்புகின்றோம்.

தென்னார்க்காடு வள்ளலார், தர்மபுரி, திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய 3 மாவட்டங்களில், அனைவருக்கும் விடுதலின்றி, தொடக்கக் கல்வி வழங்குவதற்காக, 120 கோடி ரூபாய் மதிப்பில், 'தொடக்கக் கல்வி மேம்பாட்டுத் திட்டம்' ஒன்றினை, எங்களது அரசு தயாரித்து, உலக வங்கியின் நிதி உதவிக்காக, அனுப்பிவைத்துள்ளது.

எழுத்தறிவில், அகில இந்திய அளவில், இரண்டாவது இடத்தை பெற்றுள்ள நாம், புதிய சாதனைகளை உருவாக்கும் நாள், வெகுதூரத்தில் இல்லை. பள்ளிக்குச் செல்லாத, மற்றும் பள்ளியில் இருந்து நின்றுவிட்ட குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு அடிப்படைக் கல்வியை வழங்குவதற்கும் மது விலக்குக் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும், 1 இலட்சத்து 50 ஆயிரம், படித்த வேலையற்ற இளைஞர்களைப் பயன்படுத்தி, நாம் செயல்படுத்தி வரும் திட்டம், வெகு விரைவில், மனித வள மேம்பாட்டில், தமிழ்நாட்டிற்கு ஒரு உன்னதமான இடத்தைப் பெற்றுத் தரும், என்று நம்புகிறோம்.

தமிழ் நாட்டில், விளையாட்டுத் துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள். விளையாட்டில் திறமை படைத்த சிறுவர்களையும், சிறுமியர்களையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தத்து எடுத்து, அவர்களின் திறமையை வளர்த்து வருகின்றது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள, தெற்கு ஆசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கு, மேலும் பல விளையாட்டு அரங்கங்கள், தமிழ்நாட்டில் கட்டப்படும். விளையாட்டுத் துறையில், தமிழகத்துக்கு என ஒரு தனி இடத்தை, நிச்சயமாக எங்கள் அரசு பெற்றுத் தரும்.

**காவிரி நதி நீர்ப் பிரச்சனை**

தமிழ்நாட்டின் உயிர் மூச்சுப் பிரச்சனைகளில் ஒன்றான, காவிரி நதி நீர்ப் பிரச்சனையில், இந்த அரசு மேற்கொண்டு வரும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் அனைத்தையும், மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின், இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டியும் இந்த சிக்கலான பிரச்சினைக்கு, ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்று எண்ணியும் நான் உண்ணாவிரத அறப்போராட்டத்தை மேற்கொண்டதன் விளைவாக, மத்திய அரசு, இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதாக, வாக்குறுதி அளித்தது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு, நான் தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தியதன் காரணமாக, நிலை வல்லுநர்கள் குழு, Standing Committee of experts ஒன்று, உருவாக்கப்பட்டுள்ளது.

இது ஒரு தொடக்கமே தவிர, இடைக்கால ஆணையின்படி, நமது மாநிலத்திற்கு வழங்கப்பட வேண்டிய, 205 TMC அடி நீரை, அந்தந்த மாதத்திற்குரிய, கால அளவிற்குள், தமிழகத்திற்கு கிடைத்திட, வழி வகை செய்வதே எங்கள் குறிக்கோள். கர்நாடக நீர்த்தேக்கங்கள், முழுமையாக நிரம்பி, ததும்பி வழிந்தால்தான், மேட்டூருக்கு நீர் விடப்படும் என்கின்ற நிலை, மாறவேண்டும்.

நம்மைப் பொறுத்த வரையில், பாண்டிச்சேரிக்கு நாம் அளிக்க வேண்டிய, 6 TMC நீரை, தங்கு தடையின்றி அளித்து வருகிறோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடுவர் மன்றத் தீர்ப்பு, எல்லோரையும் கட்டுப்படுத்தும். கர்நாடக மாநிலம், வரும் ஆண்டுகளில், நமக்கு உரிய முழு அளவு தண்ணீரை, அந்தந்த மாதங்களில் குறிப்பிட்ட அளவிற்கு, நமக்குத் திறந்து விடும் என்று நம்புகிறேன். நமது உயிர் மூச்சு பிரச்சினையான காவிரி நதி நீர் பிரச்சினையில், தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து ஆக்கப்பூர்வமான முயற்சிகளுக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், உறுதுணையாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

நமது தரப்பில் நியாயம் இருப்பதால்தான், இயற்கை அன்னை நம் மீது, கருணைப் பார்வையை திறந்து இருக்கிறாள். தொடர்ந்து

பெய்த அடை மழையால், வறண்டு கிடந்த நீர்நிலைகள் அனைத்தும், இன்று நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. இயற்கை அன்னையின் அருள், நமக்கு பரிபூரணமாகக் கிடைக்கப் பெற்றிருந்தாலும், இயற்கையிலேயே காவிரியில், நமக்குக் கிடைக்க வேண்டிய நீரைப் பெறுவதற்கு, நாங்கள் தொடர்ந்து தேவையான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை, உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சென்னை மாநகரக் குடிநீர்ப் பிரச்சினை

1993 ஆம் ஆண்டு, சென்னை மாநகரில் நிலவிய, கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க, எங்கள் அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட, பல்வேறு நடவடிக்கைகளையும், பிரச்சினையைத் திறம்பட அணுகிய முறையையும், நான் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொண்ட ஆர்வத்தையும், ஆளுநர் அவர்கள், தனது உரையில் சுட்டிக் காட்டினார்கள். தமிழகத்திலுள்ள மக்கள் அனைவரும், பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பெறவேண்டும், என்கின்ற உயரிய இலக்கினைக் கொண்டு, நாங்கள் பொறுப்பேற்ற நாள் முதல், செயல்பட்டு வருகின்றோம். தமிழகத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும், குறைந்த பட்சம், ஒரு குடிநீர் ஆதாரத்தையாவது ஏற்படுத்தி தரவேண்டும் என்பதில், நாங்கள் காட்டி வரும் தீவிரத்தை, இம்மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், நன்கு அறிவார்கள் என்று நம்புகிறேன்.

சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்ட போது, ரயிலிலும், டேங்கர் லாரிகளிலும், நெய்வேலி, ஈரோடு போன்ற பல இடங்களிலிருந்து, குடிநீரைக் கொண்டு வந்து, சுத்திகரிப்பு செய்த பின்பு, குடிநீர் விநியோகம் செய்தோம். எத்தனைக் கோடி செலவானாலும், சென்னை மாநகரத்து மக்கள், குடிநீர் வசதியைப் பெற வேண்டும் என்கின்ற, எங்களது ஆத்மார்ந்த எண்ணத்தைத் தான், இது காட்டுகின்றது. பரந்த மனத்தோடு, எங்கள் சாதனையைப் பாராட்டிப் பேசியவர்களுக்கு, எங்கள் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

அன்றாடப் பிரச்சினைகள் மட்டும் தீர்த்து வைத்துவிட்டு, நிம்மதியாக உட்கார்ந்து கொள்பவர்கள் அல்ல நாங்கள். தொலைநோக்கு பார்வையுடன், எதிர்காலத்தில் சென்னை மாநகர மக்கள், மீண்டும் இது போன்றதொரு சிக்கலான சூழ்நிலைக்கு, ஆளாகி விடக்கூடாது என்ற எண்ணத்தில் 'புதிய வீராணம் குடிநீர்த் திட்டத்தை', 750 கோடி ரூபாய் செலவில் தீட்டி, நிதி உதவிக்காக, உலக வங்கிக்கு அனுப்பி உள்ளோம். அடுத்த மாதம், திட்ட மதிப்பீட்டு ஆய்வினை, உலக வங்கி மேற்கொள்ள உள்ளது. வீராணம் ஏரியை ஆழப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல், போன்ற மேம்பாட்டுப் பணிகள், மே மாதம் முதல் தொடங்கப்படும். அக்டோபர் மாதம் வீராணம் ஏரியிலிருந்து, குடிநீர்க் குழாய்கள் பதிக்கும் பணி, ஆரம்பிக்கப்படும். 1995 இறுதிக்குள், இத்திட்டத்தினை நிறைவேற்றியே தீருவோம்.

நமது மாநிலத்தின் ஆளுகைக்கு உட்பட்ட, ஒரு நீர் ஆதாரத்தைக் கொண்டு, சென்னை மாநகருக்கு, குடிநீர் ஏற்பாடு செய்து தருவது தான், சாலச் சிறந்தது என்று, நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அதே நேரத்தில், சென்னை மாநகருக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டுவரும், 'தெலுகுகங்கா' திட்டத்தையும், விரைந்து எவ்விதத் தொய்வும் இன்றி, செயல்படுத்தி வருகிறோம். 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள், தெலுகுகங்கா திட்டம், முழுமையாக முடிவடைந்து விடும் என்று, எதிர்பார்க்கின்றோம். இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேற்றப்படும் போது, எத்தகையதொரு சூழ்நிலையிலும், சென்னை மாநகரத்திற்குக் குடிநீர்த் தட்டுப்பாடு, தண்ணீர் பஞ்சம், என்கின்ற பிரச்சினை எழாது என்பதை, நான் அறுதியிட்டு உறுதியாகக் கூற முடியும். சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, எங்களுக்கு முன்பிருந்த அரசுகள், மேற்கொள்ளாத திட்டங்களை, நாங்கள் மேற்கொள்வதை, அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, இந்த

மாமன்றத்திற்கே உரித்தான பாரம்பரியத்துடன், மாண்புமிகு உறுப்பினர்கள், மனம் திறந்து பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

**பொதுமக்கள் குறை தீர்க்கும் பணி**

ஆளுநர் அவர்கள், தனது உரையில் குறிப்பிட்டது போல, பொது மக்கள் குறை தீர்க்கும் பணியில், இந்த அரசு, பல பதிய முறைகளைக் கையாண்டு, பொதுமக்கள் மத்தியில், ஒரு நல்ல கருத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மக்கள் தான் இறுதி எஜமானர்கள்' என்ற மக்களாட்சித் தத்துவத்தில், அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள நாங்கள், மக்கள் குறை தீர்க்கும் பணியை, புனிதப் பணியாகக் கருதுகின்றோம். 1992ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நாள் என்று ஒதுக்கி, நானே அம்மாவட்டத்து மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, மனுக்களைப் பெற்று, விரைவில் அந்த மனுக்களின் மீது, விசாரணை மேற்கொள்ள வழிவகை செய்தேன். அதன் விளைவாக, எண்ணற்ற ஏழை எளியவர்கள், பயன் பெற்றுள்ளார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும் போது, எனக்கு மகிழ்ச்சி கலந்த ஒரு திருப்தியும், மக்களுக்கு நேரடியாகத் தொண்டாற்ற முடிந்த, ஒரு மன நிறைவும் ஏற்படுகின்றது.

பின்னர், இரண்டாவது கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நானே சென்று, திட்டப் பணிகளைத் துவக்கி வைக்கும் அதே விழாவில், பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு, அரசு நலத்திட்ட உதவிகளை, ஒரே நேரத்தில், என் முன்னிலையிலே வழங்குவதற்கு, ஏற்பாடு செய்து வருகின்றேன். அதன் அடிப்படையில் இது வரை, 13 மாவட்டங்களைச் சேர்ந்த, 3,00,377 பயனாளிகளுக்கு, 201 கோடி ரூபாய் மதிப்புள்ள, பல்வேறு நலத்திட்ட உதவிகள், வழங்கப்பட்டுள்ளன என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய முதலீட்டிலான திட்டங்களைச் செயல்படுத்தி, அதன் மூலம் நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்ய, நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் நாங்கள் தனிப்பட்ட முறையில், அரசு நலத்திட்ட உதவிகள், நலிந்த பிரிவினரைச் சேர்ந்த மக்களுக்கு, சென்றடைவதிலும், மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றோம் என்பதைத்தான், இது காட்டுகின்றது. எங்கள் அரசின் மக்கள் பணியின், மகத்தான சாதனை இது என்பதை, இந்த மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சாதாரணமான ஒரு அலுவலகமாக இயங்கி வந்த, முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஒருவரை, தனி அலுவலராக நியமனம் செய்ததோடு கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்தியும் கம்ப்யூட்டரைப் பொருத்தியும் பெறப்படுகின்ற மனுக்கள் மீது, எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைக், கண்காணித்து வருகின்றோம். மாவட்ட அளவில், பொது மக்களின் மனுக்களை விசாரணை செய்து, அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கென்றே, ஒரு துணை ஆட்சியரையும், அவருக்குரிய உதவியாளர்களையும், நியமனம் செய்துள்ளோம்.

மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், பொது மக்களிடமிருந்து பெறுகின்ற மனுக்கள் மீதும், இந்தத் தனிப் பிரிவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், ஒரு புதிய அம்சமாகும். இவ்வாறு பொது மக்களின் குறை தீர்க்கும் பணியில், தமிழக அரசு, எனது நேரடி பார்வையில், ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சாலைகள் பராமரிப்பு மற்றும் மேம்பாடு

சென்ற ஆண்டு இறுதியில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெருமழை மற்றும் வெள்ளத்தால், பரவலாக நெடுஞ்சாலைகளும், சாலைகளும், பாலங்களும், பாதிக்கப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர் திரு தம்புசாமி அவர்களும், வேறு சில உறுப்பினர்களும், நெடுஞ்சாலைகளை விரைவில் செப்பனிட வேண்டும், என்று கேட்டுக் கொண்டார்கள்.

451 நீர்நிலைகளில் உடைப்புகள் ஏற்பட்டன. 30 தரைப் பாலங்கள், 757 சிறிய பாலங்கள், 19 பெரிய பாலங்கள், பழுது அடைந்துள்ளன. 3156 கிலோமீட்டர் அளவுக்கு, சாலைகள் பாதிக்கப்பட்டன. இதன் மராமத்து பணிகளுக்கும், மேம்பாட்டுப் பணிகளுக்கும், தமிழக அரசு உடனடியாக, 15 கோடி ரூபாயை வழங்கியது. மேலும், வெள்ளச் சேதங்கள் ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலைக்கு, சாலைகளையும் நீர்நிலைகளையும் கொண்டு வர வேண்டும் என்றால், அதற்கு 50 கோடி ரூபாய் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டது. அதில் ஒரு கோடியே 77 இலட்சம் ரூபாய், உடனடியாக மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு, மராமத்துப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இருப்பினும், தமிழ்நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள், பாலங்கள், ஆகியவற்றின் தரத்தை, மேம்படுத்த வேண்டும் என்பதற்காக, 850 கோடி ரூபாய் மதிப்பில், புதிய திட்டம் ஒன்றைத் தீட்டினோம். உலக வங்கியின் நிதி உதவி கோரி, அனுப்பப்பட்ட இந்தத் திட்டம், மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, கடந்த பிப்ரவரி மாதம், உலக வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2320 கிலோ மீட்டர் அளவிலான சாலைகளுக்கும் 3438 பாலங்கள் போன்ற கட்டுமானங்களுக்கும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் நிறைவேற்றப்படும்போது, தமிழ்நாட்டில் உள்ள சாலைகள், ஒரு புதிய பொலிவினைப் பெறும் என்பதில், எனக்கு நம்பிக்கை உண்டு.

அது மட்டுமின்றி, தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சாலைகள் மற்றும் நீர்ப்பாசன ஆதாரங்களைச் செப்பனிடுவதற்கும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கும் 31 கோடி ரூபாய் நிதி உதவியை, உலக வங்கியிடமிருந்து கோரியிருந்தோம். அண்மையில், 31 கோடி ரூபாய், உலக வங்கியினால் ஒப்பளிக்கப்பட்டுவிட்டது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், விரைவில் துவங்கும்.

சாலைகள் பராமரிப்பில், எங்கள் அரசு, தனிக் கவனம் செலுத்தி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டில், 4800 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளைப் புதுப்பிக்க, 73.50 கோடி ரூபாய் மட்டுமே, ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் 1993-94 ஆம் ஆண்டு 7,585 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள், 140 கோடி ரூபாய் செலவில், புதுப்பிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, 7912 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள், புதுப்பிக்கப்பட்டு வருகின்றன என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

Central Road Fund எனப்படும், மத்திய சாலை நிதித் தொகுப்பிலிருந்து, மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் நிதி ஒதுக்கீட்டு அளவை, உயர்த்தவேண்டும் என்று, 1988 ஆம் ஆண்டிலேயே, நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை, இங்கே சுட்டிக் காட்டுவது, எனது கடமை என்று கருதுகிறேன். ஆனால் 1988 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், கிணற்றில் போட்ட கல்லாக இருக்கின்றது. மத்திய அரசு இதன் மீது, ஒரு நடவடிக்கையும் எடுக்காதது, பெரும் வியப்பைத் தருகின்றது. இத்தீர்மானத்தைப் புறக்கணிக்காமல்,

நடைமுறைப்படுத்தி, மத்திய அரசு மாநிலங்களுக்கு, அதிக நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று, வற்புறுத்த விரும்புகிறேன்.

**மத்திய அரசின் வரவுசெலவுத் திட்டமும், பண வீக்கமும்**

1994-95 ஆம் நிதி ஆண்டிற்கான, மத்திய அரசின் வரவு செலவு திட்ட அறிக்கை பற்றி, ஏற்கெனவே நான் என்னுடைய விரிவான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். இப்பொழுது எனக்கு எழுந்துள்ள அச்சம், இந்த நிதி நிலை அறிக்கையிலுள்ள பற்றாக்குறை, பண வீக்கத்தை ஏற்படுத்தி, விடுமோ என்பதுதான். ஏனென்றால், மாநில அரசுகளுக்கு, அத்யாவசிய பொருளாதார நிலையைக் கட்டுப்படுத்தக் கூடிய, எந்த வித அதிகாரமும் இல்லை. அதன் முழு பொறுப்பும், மத்திய அரசையே சாரும். எனவே, பொருளாதார நிலையை, கட்டிக் காக்க வேண்டிய முழுப்பொறுப்பு, மத்திய அரசுக்கு முழுமையாக உள்ளது. நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, பொருளாதார நிலைமைகளை மாற்றி அமைக்கும் அதிகாரங்கள், அதாவது, **Macro Economic Indicators,** மத்திய அரசிடம்தான் உள்ளது. ஆனால் பண வீக்கத்தினால், விலைவாசி உயர்வு ஏற்படும் போது மக்கள் படும் இன்னல்களைத் தீர்க்க, நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் மக்கள் மத்தியில் விளக்கம் தர வேண்டிய கட்டாயமும் மாநில அரசுகளுக்கு ஏற்படுகிறது.

பண வீக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விலைவாசி உயர்வைக், கட்டுப்படுத்த வேண்டிய மத்திய அரசு, தனது அதிகாரத்தின் கீழ் உள்ள பல பொருள்களின் விலையை, கணிசமான அளவு உயர்த்துவதால், மாநில அரசுகள், வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக, நலிந்த பிரிவினைச் சேர்ந்த, ஏழை எளிய மக்கள், அன்றாடம் பயன்படுத்தக் கூடிய, உணவு, எரிபொருள், உடை, வீட்டு வசதி, ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும், ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக் கூடிய, அத்தியாவசியப் பொருள்களின் மீதான விலைவாசியை, மத்திய அரசு கட்டுப்படுத்த வேண்டும் என்ற கருத்தினை, நான் வலியுறுத்திப் பேசியுள்ளேன்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவுத் தானியங்களின் விலையை, மத்திய அரசு தொடர்ந்து, பல முறை உயர்த்தியுள்ளது. அதே போல், டீசல், மண்ணெண்ணெய், ஆகியவற்றின் விலையையும் உயர்த்தியுள்ளது. மத்திய அரசின் கொள்கையினால், நூல் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏழை நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு, துணிகளின் விலை அதிகரித்துள்ளது. அனைவருக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருவோம் என்று, மத்திய அரசு பல நேரங்களில், பிரகடனம் செய்து வந்தாலும் தேசிய வீட்டு வசதி வங்கி, **National Housing Bank** என்ன செயலாற்றிக் கொண்டிருக்கின்றது என்று, யாருக்கும் இதுவரையில் புரியவில்லை.

ஆளுநர் உரையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு, தமிழக அரசு ஆதரவு கொடுத்து வருகிறதா, இல்லையா, என்றெல்லாம் கேட்டார்கள். நம்மைப் பொருத்த வரையில், ஏழை எளிய மக்கள், நலிவடைந்த பிரிவினர் பாதிக்கப்படாமல், பொருளாதாரக் கொள்கைகளை, மத்திய அரசு வகுத்துக் கொள்ள வேண்டுமென்று, வலியுறுத்தி வருகிறோம். ஆனால் நமது கோரிக்கையை, மத்திய அரசு ஏற்றுக்கொண்டதாக, அதன் அணுகுமுறையில் தெரியவில்லை.

மக்களின் அடிப்படைத் தேவைகளையும், இன்றியமையாத தேவைகளையும் ஆய்ந்து அறிந்து, அவற்றைப் பூர்த்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபடும் கடமை, மாநில அரசுகளுக்கு உண்டு. எனவே, ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் கொள்கைகளை, மத்திய அரசு செயல்படுத்தி வரும் இந்தக் கட்டத்தில், மாநில அரசு எதுவும் செய்யாமல், வாளா இருக்க முடியாது, கடுமையான நிதி நெருக்கடியிலும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ்

வழங்கப்படும், அரிசியின் விலையை, ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்காக, அதிக அளவில் மானியச் சுமையைத் தாங்கும் ஒரே அரசு, எங்கள் அரசு தான் என்பதை நிச்சயமாக எங்களால் சொல்ல முடியும். அதேபோல, பொது மக்களின் நலன் கருதி, பேருந்துக் கட்டணத்தைக் குறைவாக வசூலிக்கும் மாநிலமும், தமிழ்நாடுதான் என்பதை, என்னால் ஆணித்தரமாகக் கூற முடியும். 45 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து, ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வண்ணம், 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு மேல், இலவசமாக வேட்டி சேலை வழங்கி வருவதும், இந்த அரசு தான். ஏழை எளிய மக்களுக்காக சுமார் ஒரு இலட்சம் வீடுகள் வழங்கும் எண்ணத்தில், பல வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்.

எங்கள் அரசு, ஏழை எளியவர்கள், புதிய பொருளாதாரக் கொள்கையினால் பாதிக்காத வண்ணம், அவர்களது நலனைக் கட்டிக் காத்து வருகிறது. இதனால் அதிக நிதி நெருக்கடியையும், கூடுதல் நிதி பளுவையும், சமாளிக்க முடியாத ஒரு சூழ்நிலை, உருவாகியுள்ளது. மத்திய அரசின் பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டத்தினால், மீண்டும் பணவீக்கம் ஏற்படாமல் தடுக்க, மத்திய அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசின் அளவில், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத அளவுக்கு, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டோம். எனவே, மீண்டும் பொருளாதார சூழ்நிலையில் தொய்வு ஏற்பட்டு, பண வீக்கம் ஏற்படுமானால், அதன் முழுப் பொறுப்பையும், மத்திய அரசே ஏற்க வேண்டும். மத்திய அரசு கவனத்துடன், விலைவாசிக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என்று, மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

முடிவுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! எங்கள் அரசு, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக முன்வைத்து, செயல்பட்டு வருகின்றது. தேர்தல் காலத்தில் நாங்கள் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும், ஒன்றன்பின் ஒன்றாக, நிறைவேற்றி வருகின்றோம். எங்கள் செயல்பாட்டில், சில உறுப்பினர்கள் குறைகளைக் கண்டாலும் குற்றங்களைச் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொண்ட பணியை, எந்தவிதமான தொய்வும் இன்றி, தொடர்ந்து செயலாற்றுவோம் என்பதை, இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். Constructive Criticism, உபயோகமான கருத்துக்கள், எந்த மூலையில் இருந்து வந்தாலும், அதை எங்கள் அரசு வரவேற்கின்றது. நல்ல கருத்துக்களைப் பரிசீலித்து, நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

பாராட்டப்பட வேண்டிய அம்சங்களை, மனம் திறந்து பாராட்டுங்கள். உண்மையிலேயே குறை இருந்தால், அதைத் தாராளமாகச் சுட்டிக்காட்டுங்கள். ஆனால் நாங்கள் செய்ததை எல்லாம், எப்படியாவது குற்றம் கூற வேண்டும் குறை கண்டுபிடிக்க வேண்டும் என்பதையே கொள்கையாகக் கொண்டு செயல்பட்டால் நம்மை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த மக்களுக்கு, என்ன நன்மை செய்கிறோம் என்பதையும் சிந்தியுங்கள், என்று எடுத்துரைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

"The important thing for Government is not to do things which individuals are doing already, and to do them a little better or a little worse; but to do those things which at present are not done at all"- என்று சொல்லியிருக்கிறார். John Maynard Keynes என்ற ஆங்கிலப் பொருளாதார நிபுணர். இவர் 1883 -லிருந்து 1946-வரை வாழ்ந்தவர்.

அவர் என்ன சொல்லியுள்ளார் என்றால் "ஒரு அரசாங்கத்தின்

முக்கியமான கடமை, மற்றவர்கள் ஏற்கெனவே செய்து கொண்டிருக்கின்ற பணியை, அவர்களைவிட சிறப்பாகவோ அல்லது மோசமாகவோ செய்வது அல்ல. ஆனால் இதுவரை யாருமே செய்யாத பணிகளை, மேற்கொண்டு செய்வதுதான், அரசாங்கத்தின் முக்கியக் கடமை" என்ற கருத்தின் அடிப்படையில்தான், என் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

எத்தனையோ உதாரணங்கள் என்னால் சுட்டிக்காட்ட முடியும். என்றாலும், ஒரு சில முக்கியமான விவரங்களை, இந்தப் பேரவையின் முன்பு எடுத்து கூறுவது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆண்டாண்டுக் காலமாகப் பெண் குழந்தைகள், கருவெடுத்து உருவான பின்பு, கொல்லப்படுகின்ற கொடிய பழக்கம், மாநிலத்தின் பல இடங்களில் நிலவி வந்ததை, எங்களுக்கு முன்பிருந்த அரசுகள் அறிந்திருந்தாலும் முதன்முறையாக அரசாங்கமே, தனது உதவிக் கரத்தை நீட்டி, உதவி செய்ய முன் வந்தது, எங்கள் ஆட்சியில் தானே? 'தொட்டில் குழந்தை திட்டத்தைக்' கொண்டு வந்து, அந்தக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு, நாங்கள் எடுத்த நடவடிக்கை, இதுவரை எந்த அரசாங்கமும் எடுக்காத நடவடிக்கை அல்லவா?

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகளும் பாலியல் ரீதியாக இழைக்கப்படுகின்ற அநீதிகளும் வரதட்சணைக் கொடுமைகளும் பல்லாண்டுகளாக இந்தச் சமுதாயத்தில், புரையோடிப்போன விஷயங்கள்தான். ஆனால், பெண்களின் உண்மையான பிரச்சினைகளை ஆராய்ந்து இந்தச் சமுதாயக் கொடுமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கும் சமூக நீதி வழங்க வேண்டும் என்று, நமக்கு முன்பிருந்த அரசுகள் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. எங்களது ஆட்சிக் காலத்தில், எல்லா மாவட்டத் தலைமை இடங்களிலும், மாநகரங்களிலும், 29 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்திட, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அகில உலகத்திற்கே இந்த விஷயத்தில், நாம் முன்னோடியாக இருக்கிறோம் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பாகிஸ்தான் நாட்டுப் பிரதமர் பேநசீர் பூட்டோ, ராவல்பிண்டியில் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்ததாக, ஒரு செய்தியினைச் செய்தித் தாள்களில் பார்த்திருப்பீர்கள். அண்டை மாநிலமான கர்நாடகத்திலும், இரண்டு நாட்களுக்கு முன்பு, அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. ஆக, தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு மட்டுமின்றி, மற்ற நாடுகளுக்கும் முன்னோடியாக இருக்கிறது என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்குவதற்கு, இரண்டு நீர்த்தேக்கங்கள், 1870-ஆம் ஆண்டில், ஆங்கிலேயர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. மூன்றாவது நீர்த்தேக்கம், 1940-ல் ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது சென்னை மாநகரம், மிகச் சிறிய நகரம் அதன் தேவைகள் மிகவும் குறைவு. இன்று கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு, மக்கள் தொகையும் கூடியுள்ளது பிரச்சினையும் பெருகியுள்ளது; குடிநீர்த் தேவையும் அதிகரித்துள்ளது. ஆனால் இன்றும் அதே மூன்று குடிநீர் ஏரிகள் மட்டும் தான், சென்னைக்கு குடிநீர் வழங்கி வருகின்றன. சென்னை குடிநீர்ப் பிரச்சனையை, உறுதியான முறையில் தீர்த்து வைப்பதற்கு, எந்தவொரு நல்ல திட்டமும் செயல்படுத்தப்படவில்லை என்று தான் கூறுவேன். எனவேதான், 'புதிய வீராணம்' திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளோம்.

காவல் துறை எத்தனையோ வருடங்களாகச் செயல்பட்டு வருகின்ற ஒரு துறை. மக்கள் நலனையும், பொது அமைதியையும் பாதுகாக்கும், ஒரு முக்கியமான துறை. ஆனால் ஹைதர் காலத்து ஆயுதங்களையும், செயல்முறைகளையும் கொண்டு, பல காலமாக இயங்கி வந்தது. இதுவரை அந்தக் காவல் துறையை, ஒரு குறுகிய

காலத்திற்குள் நவீனப்படுத்த வேண்டும் என்று, யாருமே சிந்தித்து நடவடிக்கை எடுக்கவில்லை. காவல் துறையை நவீனப்படுத்துவதில், நாம் அகில இந்திய அளவில், மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இருக்கிறோம் என்பதை, ஆணித்தரமாக என்னால் கூறமுடியும்.

அதேபோல, பூமியில் புதைந்து கிடந்த லிக்னைட் டெபாசிட்டுகள் எத்தனையோ காலம் வீணாகிக் கிடந்தது. ஆனால் மத்திய அரசு, நெய்வேலியில் உள்ள இந்தப் பழுப்பு நிலக்கரியை, ஓரளவுக்குத் தான் பயன்படுத்த முடிந்தது. முதன் முறையாக மாநில அரசு, லிக்னைட் நிலக்கரியைப் பூமியில் இருந்து எடுக்கின்ற, சுரங்கப் பணியையும், அத்துடன் மின்சாரம் தயாரிக்கின்ற பணியையும், முதன்முறையாக அகில இந்திய அளவிலே திட்டம் தீட்டி, மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, செயல்படுத்திவருகிறது என்றால், அது தமிழகத்தில் மட்டும் தான்.

மக்கள் குறை தீர்க்கும் பணியில், ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், இத்தனை ஈடுபாடு கொண்டு, மனுக்களை நேரில் பெற்று, நடவடிக்கைகள் எடுப்பதும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஒரே நேரத்தில், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதும் இதுவரை எந்தவொரு அரசாங்கமும் செய்யாத ஒரு பணி என்பதை, நிச்சயமாக என்னால் கூற முடியும்.

அருமையான கலைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்ட, ஆயிரக்கணக்கான புராதனக் கோயில்கள், தமிழகத்தில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கேட்பாரின்றி, எவ்விதமான பராமரிப்பும் இன்றி, சீரற்றுச் சிதிலமடைந்து கிடந்தன. எங்கள் ஆட்சி மலர்ந்த பின்பு, அத்தகைய சரித்திரச் சிறப்பு வாய்ந்த கோயில்கள், சீரமைக்கப்படுகின்றன; பூஜைகள் நடைபெறுகின்றன; புனரமைப்பு பணிகள் நடைபெறுகின்றன. இந்தக் கோயில்களை சீர்திருத்த வேண்டுமென்று, எங்களுக்கு முன்பிருந்த மாநில அரசுகள், நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அதற்கென்று ஒரு நிதியை நாங்கள் ஏற்படுத்தி, அத்திருக்கோயில்களைப் புனரமைத்து, ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறோம். தமிழகத்தில் நடைபெறுகின்ற புனரமைப்புப் பணிகளையும், திருப்பணிகளையும் பார்த்து, மற்ற மாநிலங்களும் புராதன கோவில்களைப் பராமரிப்பதில், தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளன என்றால் நாம் மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடியாக இருக்கிறோம் என்று தானே பொருள்?

எனவே, பொருளாதார மேதை Keynes அவர்கள் கூறியதைப் போல, இதுவரை யாருமே செய்யாத பணிகளை, எங்களது அரசு செய்து வருகிறது என்பதை, நான் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பல சந்தேகங்களுக்கு, எனது பதிலுரையில் தெளிவான விளக்கங்களை அளித்திருந்தாலும் தமிழக அரசின் பல்வேறு செயல்பாடுகளைப் புள்ளி விவரங்களோடு எடுத்து விளக்கியுள்ளேன். தமிழக மக்களின் பேராதரவினைப் பெற்றுள்ள இந்த அரசு, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்பச் செயல்பட்டு, தமிழகத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு வழி வகுக்க, தொடர்ந்து பாடுபடும் என்பதை, மீண்டும் ஒரு முறை, இம்மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர், பல நேரங்களில், தாங்கள் கொண்ட கொள்கை அடிப்படையில், மாறுபட்ட கொள்கை படைத்தோருடன், கருத்துப் போர்களில் ஈடுபட வேண்டி வரலாம். அது இயற்கை. நான் அதை நன்கு அறிவேன். இந்தக் கொள்கைப் போர், கருத்துப் போருக்கு அடிப்படையாக, மக்கள் நலன் மட்டும் தான் இருக்க வேண்டும் என்பது, எனது அசைக்க முடியாத நம்பிக்கை. கொள்கை அடிப்படையைத் தவிர்த்து, மக்கள் நலனைத் தாண்டி, அரசியல் மனமாச்சரியங்கள், பூதாகரமாக உருவெடுக்கும்போது அங்கே நாட்டின் நலன் காற்றிலே

பறக்கவிடப்படுகிறது. மக்களின் முன்னேற்றம் பற்றிய சிந்தனைகள், நமது சிந்தையை விட்டு மறைந்து விடுகின்றன. எனவே, பொதுவாழ்வில் ஈடுபடுவோர், மக்கள் நலன் ஒன்றையே இலக்காக வைத்து, செயலாற்ற வேண்டும் என்பதை, மீண்டும் இந்த மாமன்றத்தின் மூலம், தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நலன் கருதி, தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியே, நமது குறிக்கோள் என்று இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று எனது தனிப்பட்ட முறையிலும், இந்த மாநிலத்தின் முதலமைச்சர் என்ற முறையிலும், அன்பான வேண்டுகோளை, இந்த மாமன்றத்தின் முன் வைக்க விழைகின்றேன்.

"போற்றுவோர் போற்றட்டும்! புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும்! மக்கள் பணி செய்து கிடப்பதே எங்கள் கடமை", என்ற சித்தாந்தத்துடன், தொடர்ந்து மக்கள் நலனுக்காகப் பாடுபடுவோம் செயலாற்றுவோம், என்று மீண்டும் எடுத்துரைத்து இந்த விவாதத்தில் கலந்துகொண்டு, தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

## மக்கள் ஆதரவே மகத்தானது!

**தமிழக மக்கள் என் மீது நம்பிக்கை வைத்து, அவர்களின் பேராதரவைத் தந்து, அவர்களுக்கு உழைக்கும் வாய்ப்பை எனக்கு நல்கி இருக்கிறார்கள். மக்கள் ஆதரவே, மகத்தானது என்பதை உணர்ந்திருப்பவள் நான். மக்கள் பணியே மகேசன் பணி என்று கொண்டிருப்பவள் நான். எனவே எனக்கு உங்கள் ஆதரவு உள்ளவரை எந்தச் சக்தியாலும் எங்களை நெருங்க முடியாது, அசைக்க முடியாது.**

***'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.***



**மாவட்டத் தலைநகர்களில்:**

### அறுவைச் சிகிச்சைக் கருவிகளைத் தூய்மைப்படுத்த நவீன வசதி!


தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகர்களில் இயங்கும் அரசு மருத்துவமனைகளில் நுணுக்கமான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள வசதியாக, நுண்கிருமிகள் பாதிக்காத அளவிற்கு அறுவைச் சிகிச்சைக் கருவிகளைத் தூய்மைப் படுத்த நவீன வசதி Centralised Autoclave Sterilisation System தேவை என்பதை அறிந்த, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்த நவீன வசதியை ஐந்து மாவட்ட மருத்துவமனைகளில் ஏற்படுத்தித் தர ரூபாய் 15 இலட்சம் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்.

தமிழகத்தில் முதன்முறையாக, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இந்த வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது. காஞ்சிபுரம், தருமபுரி, கடலூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடியிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளில் இந்த வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தர மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

# இந்தித் திணிப்பு முயற்சியை முறியடிப்போம்; இருமொழிக் கொள்கையைப் பாதுகாப்போம்!

## தஞ்சாவூர் மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

**தஞ்சாவூரில் 11.3.94 அன்று நடைபெற்ற அரசு விழாவில், 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், அரசின் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், 30,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை.**



'சுழன்றும் ஏர்பின்னது உலகு' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, உலகத்திலுள்ள அனைத்துத் தொழில்களுக்கும், அச்சாணியாக விளங்குகின்ற சிறப்பினைப் பெற்ற, உழவுத் தொழிலை மேற்கொண்டுள்ள, விவசாயப் பெருங்குடி மக்கள் வாழும் தஞ்சைத் தரணிக்கு வந்து, உங்களையெல்லாம் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

தஞ்சை மாவட்டத்தின் தன்னிகரற்ற வளர்ச்சியை, உறுதி செய்கின்ற வகையில், இன்று 133 கோடி ரூபாய் மதிப்புள்ள, திட்டங்களைத் துவக்கி வைத்தும்; அடிக்கல் நாட்டியும்; 30,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தஞ்சைப் பகுதி மக்களது வாழ்க்கையோடு, பின்னிப் பிணைந்த உயிர் மூச்சுப் பிரச்சினை, காவிரி நதி நீர்ப் பிரச்சினை, 'வான் பொய்ப்பிலும் தான் பொய்யா'க் காவிரி என்று, ஆண்டாண்டுக் காலமாக வற்றாமல் ஓடி; தமிழக மக்களின் ஜீவநாடியாகவும்; தமிழகக் கலாச்சாரத்தின் ஆணி வேராகவும்; தமிழ் நாகரிகத்தின் அடையாளச் சின்னமாகவும், விளங்கிவந்த காவிரி நதியில் , 'நீரைத் திறந்து விடுங்கள்' என்று, அண்டை மாநிலத்தைப் பார்த்து, வேண்டுகோள் விடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம், என்பதை எண்ணிப் பார்க்கும்



போது, என் மனம் வேதனைப்படுகின்றது.

தமிழக மக்களின் உரிமைகளைச் சரியான நேரத்தில் காப்பாற்றாமல், சிலர் கோட்டைவிட்ட காரணத்தால், இன்று நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தண்ணீருக்குப் போராடவேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். காலத்தே காப்பாற்றப்படாததால், இழந்துவிடுகின்ற உரிமையை, மீட்டுப்பெறுவது என்பது, எத்தகையதொரு பிரச்சினைக்குரியது என்பதை, காவிரிப் பிரச்சினை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. சரித்திரம் நமக்குக் கற்றுத் தந்த பாடமாகத்தான், இதனை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். நடந்ததைப் பற்றிக் கவலை கொள்வதில், எந்தப் பயனும் இல்லை என்பது, நன்றாகத் தெரியும். நானும் அப்படிக் கவலைப்பட்டு, சோர்ந்துவிட மாட்டேன்! ஆனால் விவசாயத் தேவைக்குப் போதுமான குறைந்தபட்சக் காவிரி நதிநீரைப் பெற, நாம் நடத்திய போராட்டங்கள் தான், எத்தனை, எத்தனை? அனுபவித்த துன்பங்கள்தான் எத்தனை?, எத்தனை?

தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதியால், தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு, ஒரு நல்ல தீர்வு காணவேண்டும் என்று எண்ணி, உண்ணாவிரத அறப் போராட்டத்தை நான் மேற்கொண்ட போது, தன்மானம் மிக்க தமிழக மக்கள் அனைவரும், ஓர் அணியில் திரண்டு, எனது பக்கம் நின்றார்கள். தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினைக்குத் தீர்வு காண, நான் மேற்கொண்ட அறப்போராட்டத்தை, முழுமையாக ஆதரித்த பலதரப்பட்ட மக்களின் பேரன்பையும், பேராதரவையும், இன்று நினைத்தாலும், என் மனம் நெகிழ்ந்துபோகிறது. அன்று உங்கள் பேராதரவுடன் நான் மேற்கொண்ட அறப்போராட்டத்தின் விளைவாக, மத்திய அரசு, காவிரி நதிநீர்ப் பங்கீட்டு நடுவர் மன்றத்தின், இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் முகத்தான், ஒரு குழுவை அமைத்தது. அதன்மூலம், தமிழ்நாட்டுப் பகுதிக்குப் காவிரியில் வரும் நீரின் அளவு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. உங்கள் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும், அக்கறை கொண்டிருக்கும் நாங்கள், எப்போதும் விழிப்போடு இருந்து, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி, நமக்குக் கிடைக்கவேண்டிய பலன்கள் அனைத்தையும், பெற்றுத் தருவதில் தயங்கமாட்டோம்.

நமது தரப்பில் நியாயம் இருப்பதால் தான், இன்று இயற்கை அன்னைகூட, நமது பக்கம் இருக்கிறாள். தொடர்ந்து பெய்த அடைமழையால், வறண்டு கிடந்த எல்லா நீர்நிலைகளும், நிரம்பி வழிந்ததும், ஆறுகள் கரைபுரண்டு ஓடியதும் தான், இதற்கு எடுத்துக்காட்டு. காவிரியில் நமக்குரிய நீர் மறுக்கப்பட்டாலும், இயற்கை அன்னையின் அருளோடு, தஞ்சைப் பகுதியில் வேளாண்மை உற்பத்திக்கு, எந்தவித பாதகமும் இன்றிப் பாதுகாத்து வருகிறோம்.

மழை நமக்கு வரப்பிரசாதமாக இருந்தாலும், இயற்கைச் சீற்றங்களால், இந்தப் பகுதியில் ஏற்பட்ட சேதங்களையும், மக்களின் உடைமைகளுக்கும் உயிருக்கும் ஏற்பட்ட பாதிப்புகளையும், நான் நன்கு அறிந்து இருந்த காரணத்தால்தான்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களையும், உதவிகளையும் வழங்குவதில், நானே நேரிடைக் கவனம் செலுத்தினேன். பல பொதுச் சொத்துக்களுக்குத் தொடர்ந்து, இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட பாதிப்புகளையெல்லாம், நேர் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான், இன்று இந்த மாவட்டத் தின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தொன்மையான வரலாற்றைக் கொண்ட, அருங்கலைகளின் இருப்பிடம்தான், இந்தத் தஞ்சைத் தரணி. இந்த மாவட்டத்தின் மக்கள் தொகையில், அடிப்படை எழுத்தறிவு கூட பெறாமலுள்ள, 4 இலட்சம் மக்களுக்கு, எழுத்தறிவுக் கல்வியை வழங்குவதற்காக, 'அறிவொளி இயக்கத்தை' இந்த மாபெரும் விழாவில் துவக்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எழுத்தறிவு பெறுபவர்களில் பெரும்பாலோர், பெண்கள். இந்த மாவட்டத்தின் பெண்கள் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், இந்த அடிப்படை எழுத்தறிவுக் கல்வி, ஒரு புதிய எழுச்சியை உண்டாக்கும் என்பது, எனது மகிழ்ச்சியை இரட்டிப்பு ஆக்குகின்றது. இந்த அரிய பணியில், சேவை மனப்பான்மையுடன் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, செயலாற்ற இருக்கும், அறிவொளி இயக்கத்தின் தொண்டர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்று தமிழ் நாட்டில், மனிதவள மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும், நாம் எடுத்துவரும் பல்வேறு முயற்சிகள், மிக விரைவில் நல்ல பயன்களைத் தரும் என்று, நான் உறுதியாக நம்புகின்றேன்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகியோர் காட்டிய புனித பாதையில், இலட்சியப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் நாங்கள், அவர்களின் அடியொற்றி, தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் மகிழும் வண்ணம், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, அடுத்த ஆண்டு, தஞ்சை மாநகரில் நடத்த உள்ளோம் என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்

மொழியின் மேன்மையினையும், சிறப்பினையும், பாங்குற எடுத்துரைக்க உலகின் பல பாகங்களிலிருந்து அறிஞர் பெருமக்கள் பெருந்திரளாகத் தஞ்சையில்கூடி, தமிழன்னைக்கு ஆராதனை செய்வார்கள்.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்கள், ஒருபுறம், தமிழ் மொழியின் இலக்கணத்திற்கும், இலக்கியத்திற்கும் சிறப்புச் சேர்க்க; ஆய்வரங்கங்களிலும், கருத்தரங்குகளிலும், பங்கு கொள்வார்கள். மறுபுறம், தமிழ் மக்களின் பண்பாட்டுப் பாரம்பரியமிக்க கலை நிகழ்ச்சிகள், பல இடங்களில் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளை நடத்தவும்; மொழி பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும்; தஞ்சாவூரில் புதிய கலை அரங்கங்கள் நிர்மாணிக்கப்படும். உலகின் பல்வேறு பாகங்களிலிருந்து வரும், அறிஞர் பெருமக்கள் தங்குவதற்கு விடுதிகளும், நட்சத்திர ஓட்டல்களும் உருவாகும் என்பதையும், பெருமகிச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை மாநகருக்கு, இந்த மாநாடு பலவிதத்தில் பொலிவினையும், ஏற்றத்தினையும் தரும் என்பதில், எனக்கு ஐயமில்லை.

'தமிழ் எங்கள் உயிர்' என்று, மூச்சுக்கு முன்னூறு தரம், தேர்தல் காலத்தில் பேசித் திரிபவர்கள், இதுவரை இந்த மாநாட்டை நடத்தவில்லை! பகட்டுத்தனம் ஏதுமின்றி, தமிழ்மொழி நலன்காக்க, மக்களின் பேராதரவுடன் ஆட்சிக் கட்டிலேறிய நாங்கள், உலகத் தமிழ் மாநாடு நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். சொல்லில் நயம் இருப்பது போல், உண்மையும் இருக்கவேண்டும். எங்கள் சொல்லிலும் செயலிலும், உண்மையும் இருக்கிறது; மக்களுக்கு நன்மையும் இருக்கின்றது. தமிழ்த் தாயின் பெருமையை, உலகெங்கும் பரப்ப முற்படும் அதே நேரம், இந்தித் திணிப்பு முயற்சி, எந்த ரூபத்தில் வந்தாலும், எதிர்த்து நிற்போம், முறியடிப்போம், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இரு மொழிக் கொள்கையை, இரண்டு கண் எனப் போற்றிப் பாதுகாப்போம்.

மாறிவரும் உலகப் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப, நமது பொருளாதாரத்தையும், மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதில், எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. அதே நேரத்தில், Dunkel ஒப்பந்தத்திலுள்ள சில ஷரத்துக்கள், நமது விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழை எளிய மக்கள், ஆகியோரின் நலனுக்கு எதிராகவுள்ளதை, எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. குறிப்பாக, விவ்சாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் உர மானியம், நிறுத்தப்படக் கூடாது. விவசாயிகளுக்குப் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் செலவில், இலவச மின்சாரத்தை வழங்கி வரும், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு - உங்கள் அரசு - விவசாயிகளுக்குக் கிடைக்கும் மானியங்களை அடியோடு நிறுத்துவதை, ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

எனவே தான், Dunkel ஒப்பந்தத்தில் நாம் ஏற்கக்கூடிய, மற்றும் ஏற்க இயலாத ஷரத்துக்களை, மத்திய அரசு, மாநில முதலமைச்சர்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டி, விவாதிக்கவேண்டும்; பின்னர் முடிவெடுக்க வேண்டும் என்று, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, இருமுறை கடிதம் எழுதியுள்ளேன். மாநிலங்களின் நிலையையும், கருத்துக்களையும், கேட்டறிந்து, மத்திய அரசு முடிவு செய்தால்தான், விவசாயிகளின் நலன்காக்க முடியுமென்பதை, மீண்டும் இந்தக் கூட்டத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். உர மானியத்தை நிறுத்திவிடக் கூடாது என்று, மத்திய அரசை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு மாநிலத்திற்கும் எனப் பிரத்யேகமாக உள்ள, வேளாண் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளாமல், ஒட்டு மொத்தமாக முடிவெடுப்பது, பல விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைப் பாதிக்கும் என்பதே எனது கருத்து.



வேளாண்மைக்கும், தொழில் வளர்ச்சிக்கும், மின்சாரம் அடிப்படைத் தேவை என்பதை உணர்ந்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரத்யேகமாகத் தேவைப்படுகின்ற, மின்சார வசதிகளைச் செய்து கொடுக்க, நாங்கள் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம். துணை மின் நிலையங்கள் அமைப்பதோடு, உயர் அழுத்தத்தில் மின்சாரம் கிடைக்கச் செய்வதும், சீராக மின்சாரத்தை விநியோகிப்பதும்தான், இத்திட்டங்களின் நோக்கமாகும். இன்று, தஞ்சாவூர், கும்பகோணம், பாபநாசம், மற்றும் அய்யம்பேட்டை ஆகிய இடங்களில், 4 துணை மின் நிலையங்களை 3 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில், துவக்கி வைத்துள்ளேன்.

திருக்கானூர்பட்டியில், 25 கோடியே 38 இலட்சம் ரூபாய் செலவில், திறன் மிகுந்த ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கும்; மதுக்கூர், வீர அமரசன்பேட்டை ஆகிய இடங்களில், 2 சிறிய துணை மின்நிலையங்களை, 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கவும், சற்று முன்பு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

தஞ்சை மாவட்டம், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட மாவட்டமாக இருப்பதால், வேளாண்மை விளை பொருட்களை, விரைந்து கொண்டு செல்ல, சாலைகளைப் பராமரிப்பதும், புதிய சாலைகளை அமைப்பதும், அவசியம் என்பதை உணர்ந்து, 6 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில், பல பாதிக்கப்பட்ட சாலைகளைச் சீர் செய்வதற்கும்; புதிய கிராமச் சாலைகள் அமைப்பதற்கும், ஏற்பாடுகள் செய்துள்

ளோம் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்ட வாழ், ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு, 1,680 தொகுப்பு வீடுகளை, 3 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில், கட்டி முடித்து வழங்கியுள்ளோம். ஆதி திராவிட மக்கள், மற்றும் பழங்குடி மக்கள், நல்ல வீட்டு வசதியினைப் பெறவேண்டும், என்கின்ற ஈடுபாட்டின் காரணத்தால்; எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளா மல், என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடிய, கான்கிரீட் தளம் அமைந்த வீடுகள் மட்டும்தான், கட்டித் தர வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு உறுதியாக ஆணையிட்டுள்ளேன்.

நலிவடைந்த மக்களின் வாழ்க்கை, நிரந்தரமாக முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதில், நான் கண்ணும் கருத்துமாக இருக்கிறேன்.

அதேபோன்று, ஒவ்வொரு கிராமத் திற்கும், குடிநீர் வசதியைச் செய்துதர வேண்டும், என்ற கொள்கை அடிப்படை யில், செயல்பட்டு வருகின்றோம்.

இன்று, 132 குடிநீர்த் திட்டங்கள், 4 கோடியே 65 இலட்சம் ரூபாய் செல வில், இந்த விழாவில் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க, இந்தத் திட்டங்கள் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு, நாம் மேற்கொள்ளும் திட்டங்கள் அனைத்தும், வெகு விரைவில் பலனைத் தந்து, தஞ்சை மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு, வழி வகுக்கும் என்பதை நினைக்கும்போது, மனம் மகிழ்ச்சி அடைகிறது.

ஒரு மாநிலத்தில், தொழில் வளர்ச்சி அடையவும்; வளர்ச்சிப் பணிகள் நல்ல பலன்களைத் தரவும்; பொது அமைதியும், தனி மனிதப் பாதுகாப்பும், அடிப்படைத் தேவைகள் ஆகும். 1991-ஆம் ஆண்டு, உங்கள் பேராதரவுடன், நாங்கள் ஆட்சிக் கட்டிலில் ஏறியபோது நிலவிக்கொண் டிருந்த இருண்ட சூழ்நிலைகளை அகற்றி, தமிழகத்தை மீண்டும், ஒரு அமைதிப் பூங்காவாக உருவாக்கினோம்.

காவல் துறையைச் சமுதாயத்திற்கு அரும் பணிகள். ஆற்றக் கூடிய ஒரு இயக்கமாக உருவாக்குவது எங்கள் கடமை என்பதை உணர்ந்தோம். ஆனால் பெருகி வரும் மக்கள் தொகையாலும் மாறி வருகின்ற பொருளாதாரச் சித் தாந்தங்களாலும், ஏற்படுகின்ற புதிய சவால்களைச் சந்திக்க, காவல் துறை நவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதை யும் உணர்ந்தோம்.

காவலர்களுக்குப் பணிச் சோர்வு ஏற்படாமல், அவர்கள் உற்சாகத்துடன் செயலாற்றவும்; சிறப்பாகப் பணி புரிய, அடிப்படைப் பயிற்சிகளை வழங்கவும்; திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தினோம். அதே நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக் குப் பாதுகாவலர்களாகக் காவல் துறை யினர் விளங்க; காவல் துறையை, ஒரு மனிதாபிமானமிக்க துறையாக, உரு வாக்க வேண்டும் என்று விரும்பினோம். என்னைப் பொருத்தவரை, காவல் துறை, சட்டத்தை மீறுபவர்களுக்குச் சிம்ம சொப் பனமாக இருக்கவேண்டும்; நலிவுற்ற, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உதவும் கரமாகவும் காக்கும் கரமாகவும் விளங்க வேண்டும். அத்தகைய ஒரு காவல் துறையை, உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக் கப்படும் பல்வேறு கொடுமைகளிலிருந்து, அவர்களைக் காப்பாற்றவும்; அவர்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களை, மனம்திறந்து மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கும்; மாவட்டம் தோறும், "அனைத்து மகளிர் காவல் நிலையங்களை" அமைத்து வரு கின்றோம். தமிழக அரசு, பெண்களின் சமுதாய உயர்விற்குத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்திவரும் அதே நேரத் தில்; அவர்களுக்கு உரிய சமூக நீதியையும் வழங்க, இது போன்றதொரு அமைப்பும் தேவை என்பதை, நாங்கள் உணர்ந்துள் ளோம். தஞ்சை மாவட்டத்திற்குரிய, அனைத்து மகளிர் காவல் நிலையத்தை, இன்று பிற்பகலில் திறந்துவைக்க உள்ளேன். நானே நேரடியாகத் திறந்து வைக்கும், 16-வது அனைத்து மகளிர் காவல் நிலையம் இது.

இக் காவல் நிலையத்தில் பணிபுரிய உள்ள பெண் ஆய்வாளரும், மற்ற பெண் காவலர்களும், தங்கள் பிரச்சினைகளை எடுத்துரைக்க வரும் தாய்மார்களை, மனு தாரர்கள் என்று கருதாமல்; அவர்களைத் தங்களது சகோதரிகள் என்று கருதி, மனிதாபிமானத்தோடு, அவர்களுக்கு உதவிபுரிய வேண்டும், என்று எதிர் பார்க்கின்றேன். அவ்வாறு அவர்கள் செயல்படுவார்கள் என்பதிலும் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

இந்த அனைத்து மகளிர் காவல் நிலை யம், தஞ்சாவூர் தரணி வாழ் மகளிரின், வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பாடுபடும் என்கின்ற, எனது நம்பிக்கை யைத் தெரிவித்து; இப்பகுதி வாழ் மக்கள், இந்தக் காவல் நிலையத்தை, முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று, அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சைத் தரணியில் நடைபெறும் இந்த விழாவைப் பிரம்மாண்டமாக, ஒரு மாநாடு போல ஏற்பாடு செய்த, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர் களுள் ஒருவர்; புரட்சித் தலைவர் இயக்கம் ஆரம்பித்த நாளிலிருந்து, அவருக்கு உறுதுணையாக இருந்து; பின் னர் அவரது அமைச்சரவையிலும் இடம் பெற்றுத் திறம்படப் பணியாற்றி; நம் அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்ற வர். புரட்சித் தலைவருக்குப் பின்னால், இயக்கத்தில் பிளவு ஏற்பட்ட, ஒரு. சோதனையான கால கட்டத்தில், இயக் கத்தைக் கட்டிக் காக்க, நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு எல்லாம், உறுதுணையாக உறுதியுடன் இருந்தவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்.

1988-ஆம் ஆண்டு, நாம் சோதனை களுக்கு மேல் சோதனையாகச் சந்திக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப் பட்டோம். அத்தகைய பிரச்சினைகளுக் குரிய நேரங்களில், அசைக்க முடியாத நம்பிக்கையுடன், எனக்குப் பக்கபல மாகவும், ஆதாரமாகவும், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள் இருந்ததால்தான், அந்தச் சோதனைகளினால் ஏற்பட்ட துன் பங்களையெல்லாம், என்னால் தாங்கிக் கொள்ள முடிந்தது என்றால், அது மிகையாகாது. எனவேதான், அவர் ஒரு வரைப் பற்றி பேசும்போது மட்டும், 'அண்ணன்' என்றுதான் என் வாயில் தானாகவே வரும். அந்த அளவிற்கு ஒரு பாசப் பிணைப்போடும், இயக்கப் பற்

**கடமை**

○ கடமை ஒவ்வொன்றும் புனிதமானதே. அதனைப் பயபக்தியுடன் செய்வதே உயர்ந்த தெய்வ வழிபாடு ஆகும்.

—சுவாமி விவேகானந்தர்

றோடும் தலைமைக்குத் தொண்டாற்றும் புனித எண்ணத்துடனும் செயல்படு பவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்.

1988-இல், நான் கிராமம் கிராம மாகச் சுற்றுப் பயணம் மேற்கொண் டேன். ஒரு வாரம் அல்ல; இரண்டு வாரம் அல்ல; ஒரு மாதமும் அல்ல. இடைவெளியில்லாமல், 5½ மாதங்கள் நான் மேற்கொண்ட அந்தச் சுற்றுப் பயணத்தில், கண் துஞ்சாமல், மெய் வருத்தம் பாராமல், தலைமைக்கு எந்த விதமான பிரச்சினையும் ஏற்படக் கூடாது என்பதற்காக, என்னுடனே எல்லா இடங் களுக்கும், என்னுடன் துணையாகப் பயணம் செய்தவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள். அந்தச் சுற்றுப் பயணத்தின் போது, ஒவ்வொரு நாளும், பிற்பகல் 4 மணிக்குப் புறப்பட்டு, கிராமம் கிராம மாகச் சென்று; சாலையின் இருமருங் கிலும், வெள்ளமெனத் திரண்டு நிற்கும் மக்களைச் சந்தித்து; அவர்களின் ஆதர வைத் திரட்டுவேன்.

மாவட்டங்களுக்கும், எந்த வித்தியாசமும் இன்றி, எல்லா நாட்களும், ஆரம்பத்தி லிருந்து கடைசி வரை, 5½ மாதங்களும், என்னுடன் பயணம் செய்தவர்கள், இருவர் மட்டுமே. அவர்களில் ஒருவர் எனது உடன் பிறவா தங்கை, திருமதி சசிகலா அவர்கள். மற்றொருவர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்தான், என்பதைக் குறிப்பிட்டுக் காட்டும் போது, அவர் என்மீது கொண்டுள்ள பாசத்தை நினைத்து, என் நெஞ்சம் நெகிழ்வு அடைகிறது. அவர் அன்று காட்டிய அன் பும், பரிவும், நினைக்கும் போதெல்லாம், என் நெஞ்சத்திற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

புரட்சித் தலைவருடன் வெகு கால மாக உடன் இருந்தவர், என்று பெருமை அடித்துக்கொண்டு, என்னுடன் வந்த ஒருவர், ஒரு முன்னாள் அமைச்சர், ஒரு நாள்கூட, பயணத்தின் கடினத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் தவித்தார்.



இரவு எல்லாம் விடியவிடியப் பய ணம் செய்து, மறு நாள் காலைதான், தங்கும் இடத்திற்குத் திரும்பி வர வேண்டிய சூழ்நிலை இருக்கும். ஒவ் வொரு மாவட்டத்திலும், 5 அல்லது 7 நாட்கள், நான் பயணம் செய்யும் போது, அந்த நாட்களில் மட்டும், மாவட்டத்தின் செயலாளர், உடன் வருவார். அடுத்த மாவட்டத்திற்குச் செல்லும் போது, இந்த மாவட்டத்தினுடைய மாவட்டச் செய லாளர் தங்கிவிடுவார்; அடுத்த மாவட்டத் தின் நிர்வாகிகள் என்னுடன் வரு வார்கள். அது தான் நடைமுறை. நான் சுற்றுப் பயணம் செய்த போது, எல்லா

சுற்றுப் பயணத்தின்போது காரிலேயே வந்தார்; வண்டியை விட்டு இறங்கக்கூட இல்லை. இது முதல் நாள் நடந்தது. பின்னர் இரண்டவாது நாள், அவரால் உட்கார இயலவில்லை என்று, காரிலேயே படுத்துக்கொண்டுவிட்டார். மூன்றாவது நாள், தனக்கு உடல்நிலை சரியில்லை என்று, சாக்குப் போக்குச் சொல்லி, அந்த இடத்தைவிட்டு மொத்தமாக நழுவி விட்டார். சென்னைக்குத் திரும்பிச் சென்று விட்டார். சுற்றுப் பயணம் முழுவதுமாக முடியும் வரை, மறுபடியும் அவரைப் பார்க்கவே முடியவில்லை!

அப்படிப்பட்டவர்கள் மத்தியில், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள், எத்தகைய ஒரு நல்ல பண்புடைய மனிதர் என்பதை, நான் சொல்லாமலேயே நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

இயக்கத்தில் பிரச்சினை ஏற்பட்ட நாள் முதல் - ஏன் அந்த நேரம் முதல் - எனக்குப் பக்கபலமாகத் துணையாக நின்ற ஒரே மூத்த இயக்க நிர்வாகி, அண்ணன் எஸ்.டி.எஸ். தான் என்பதை, என்னால் ஆணித்தரமாகக் கூற முடியும். அவரைவிட வயதில் குறைந்தவர்கள் செய்ய இயலாத, கடுமையான பணிகளையும் மேற்கொள்ளும் திறமையும்; தொடர்ந்து சோர்வின்றி, சலிப்பின்றி, பணியாற்றக்கூடிய சக்தியும், அவருக்கு எங்கிருந்துதான் வந்தது என்பது, எனக்கு இன்றும் விளங்காத புதிராக இருக்கின்றது. எனது நன்மைக்காகவும், இயக்கத்தின் நன்மைக்காகவும், ஏதாவது ஒரு கருத்தை எடுத்துரைக்க வேண்டும் என்றால்; அதனால் எனக்குக் கோபம் ஏற்படும் என்றால் கூட; சற்றும் தயக்கமின்றி எடுத்துரைக்கக் கூடிய, ஒரே ஒரு இயக்க நிர்வாகி, அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்கள்தான். எனவே தான், அவர் துணையாக என்னுடன் வரும்போது, எனக்கு எப்போதும் மனதில், ஒரு தெம்பும் தைரியமும் ஏற்பட்டுவிடும்.

அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களுக்கு, இப்போது 71 வயது ஆகின்றது. இந்த வயதில் கூட, இரவு முழுவதும் தூங்காமல்; ஓடியாடிப் பணியாற்றி; அனைவரிடத்திலும் இன்முகத்துடன் பழகி, வேலை வாங்கும் பாங்கினை, இதுவரை நான் வேறு எவரிடத்திலும் கண்டதில்லை. 1988-இல் மாவட்டப் பொறுப்பில் அன்று இருந்த ஒரு நிர்வாகிக்கு, இவரது வயதில் பாதிதான் இருக்கும். என்னுடன் வேனில் ஏறிச் சுற்றுப்பயணம் செய்ய ஆரம்பித்தார். நள்ளிரவு 12 மணி தாண்டியதும், அப்படியே அசந்து போய் வேனிலேயே தூங்க ஆரம்பித்துவிட்டார். ஒரு நாள் இரண்டு நாள் சுற்றுப் பயணத்தில் துணைவந்த போதே, இத்தகைய நிலைமை ஒரு இளைஞருக்கு ஏற்பட்டதென்றால்; 5½ மாத காலமும், தினமும், எனது சுற்றுப் பயணத்தில், துணையாக வந்த அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களின் கடமை உணர்வை, நான் என்றென்றும் மறக்கமுடியாது.

அந்தச் சோதனையான காலகட்டங்களில் எல்லாம், எனக்கு

உறுதுணையாக, பக்கபலமாக, தளராத மனதுடன் இருந்ததில் இருந்து, எதிர்காலத்தில், எத்தகையதொரு சோதனையான கால கட்டம் வந்தாலும், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள் மட்டும், கண்டிப்பாக எனக்கு உறுதுணையாக , எப்போதும் இருப்பார்கள் என்கிற ஆழமான நம்பிக்கை, என் மனதில் ஏற்பட்டுவிட்டது.

இன்றும் ஒரு இளைஞரைப் போல, இயக்கப் பணிகளிலும், அரசுப் பணிகளிலும், தன்னை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டு; சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும், பம்பரம் போலச் சுழன்று சுழன்று பணியாற்றுபவர், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள். அவரைப் போன்ற நிலையில் உள்ளவர்களுக்கும், இளைஞர்களுக்கும், அவர் ஓர் எடுத்துக்காட்டு, அவர் அதிகநேரம் ஓய்வு எடுத்து நான் பார்த்ததேயில்லை.

ஒரு பணியைத் துவங்கும் போது, உற்சாகமாக இருப்பதும், பின்னர் நேரம் ஆக ஆக, சோர்வடைவதும்தான், பொதுவான மனித இயல்பு. ஆனால், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்களைப் பொறுத்தவரை, நேரம் ஆக ஆகத்தான், அவருக்கு உற்சாகமும், தெம்பும் கூடிவிடும். மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட ஆரம்பித்து விடுவார்.

புரட்சித் தலைவர் காலத்தில் இருந்தே, வருவாய்த் துறையை அவர் நிர்வகித்து வந்தவர். அந்தத் துறையைப் பற்றி, அக்கு வேறு ஆணி வேறாக, அத்தனை விவரங்களையும், நுணுக்கமாகத் தெரிந்து வைத்துள்ளார். அவர் ஒரு நல்ல நிர்வாகி; பண்பாளர்; திறமைசாலி.

அவர் இந்தத் தஞ்சைத் தரணியின் மைந்தர். இந்த மாவட்ட முன்னேற்றத்திற்கு, அயராது பாடுபட்டு வருபவர். இன்று 133 கோடி ரூபாய்க் கான, வளர்ச்சித் திட்டங்களைத் துவக்கி வைத்தும், அடிக்கல் நாட்டியும் இருக்கிறேன் என்பது, அவருக்கு எத்தகைய தொரு மகிழ்ச்சியை அளித்திருக்கும் என்பதை, நான் நன்கு அறிவேன். நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், எந்த நேரத்திலும், தகுந்த ஆலோசனையை வழங்குகின்ற முதிர்ச்சியும், நிதானமும் உடையவர். எனக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கும் போது, என்னிடம் சில முக்கியமான தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைச் சொல்வதற்கு, மற்றவர்கள் தயக்கம் காட்டுவார்கள்.



ஆனால், அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், எந்தச் சூழ்நிலையிலும், நான் கோபமாக இருந்தால் கூட, எந்தத் தகவலையும் தயக்கமின்றி என்னிடம் கூறி விடுவார். அப்படியே நான் அவரிடம் கோபமாகப் பேசினாலும், அதை அவர் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல், நாட்டின் நன்மைக்கும், தலைமையின் நன்மைக்கும், தனது கடமையைச் செய்ததாக, எண்ணி அதைத் தாங்கிக் கொள்வார்.

அத்தகைய குணசீலரான அண்ணன் எஸ்.டி.எஸ் அவர்கள், நீண்ட ஆயுளும், நல்ல நலமும் பெற்று; பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து; நாட்டுக்கும் இயக்கத்திற்கும் தொண்டாற்றவேண்டும் என்று, உள்ளார்ந்த அன்போடு வாழ்த்துகிறேன்.

இந்த விழா இத்தனைச் சிறப்புடன் நடைபெற, உறுதுணையாக இருந்து செயலாற்றிய, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் சகோதரர் எஸ். கண்ணப்பன் அவர்களுக்கும்; மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சகோதரர் கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் சகோதரர் எஸ். ரகுபதி அவர்களுக்கும்; திருவோணம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அன்புச் சகோதரர் தங்கமுத்து அவர்களுக்கும்; அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அரசு அலுவலர்களுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த, 30,015 பேர்களுக்கு, 20 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை, வழங்க உள்ளேன். இந்த உதவிகளை நானே ஒவ்வொருவருக்கும், நேரில் வழங்க வேண்டும் என்று விரும்பினாலும்; அவ்வாறு செய்ய இயலாது என்கின்ற சூழ்நிலையில், சிலருக்கு மட்டும் உதவிகளை என் கைகளால், நானே இந்த மேடையில் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு அலுவலர்களும், பயனாளிகள், இருக்கின்ற இடத்திற்கே வந்து, என் முன்னிலையில், அரசு நலத் திட்ட உதவிகளை வழங்குவார்கள்.

இன்று அரசினுடைய உதவிகளைப் பெறுகின்றவர்கள், இதை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டு, கடுமையாக உழைத்துப் பாடுபட்டால்; ஒரு உன்னதமான எதிர்காலத்தை, அது உண்டாக்கித் தரும் என்று, நான் பூரணமாக நம்புகிறேன். உழைப்பிற்கு ஈடு இந்த உலகத்தில் ஏதும் இல்லை. ''சுறுசுறுப்பாக இயங்குபவர்களுக்குத்தான், இந்த உலகம் சொந்தம்' என்று, ஒரு அறிஞன் கூறியதை, இந்த நேரத்தில் நினைவுகூர்வது, பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். உதவிகளைப் பெறும் நீங்கள், வாழ்க்கையில் எல்லா நலன்களும் வளங்களும் பெற்று, சிறப்புடன் வாழ வேண்டும் என்ற, என் நெஞ்சத்து நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவில் என்னைக் காண்பதற்கும், என்னுடைய பேச்சைக் கேட்பதற்கும், பெருந்திரளாகக் கூடி, உங்களுடைய உள்ளார்ந்த அன்பினை எடுத்துக்காட்டிய, தஞ்சைத் தரணி வாழ் மக்களாகிய நீங்கள் அனைவரும், நீடு வாழவேண்டும் என்ற, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

அட்டை சொல்லும் செய்தி



## தமிழ்நாடு அரசின்

# நிதி நிலை அறிக்கை 1994–95

தமிழ்நாடு அரசு மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1994–95 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் வைத்து 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 23 ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

1993–94 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1994–95 ஆம் ஆண்டிற்குரிய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், இந்த பேரவையின் மேலான ஒப்புதலைப் பெறும் பொருட்டுப் பேரவையின் ஆய்வுக்கு வைப்பதில், நான் பெருமிதமும் பெரு மகிழ்ச்சியும் கொள்கிறேன்.

"கொடை அளிசெங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி"

நன்கொடை வழங்குதல், முகமலர்ச்சியோடு இனியவற்றைக் கூறுதல், செங்கோல் ஆட்சி செலுத்துதல், தளர்வுற்ற குடிமக்களைப் பாதுகாத்தல் ஆகிய நான்கு பண்புகளையும் உடைய ஆட்சியாளர், ஆட்சியாளர்களுக் கெல்லாம் ஒளிதரும் விளக்கு போல் விளங்குபவர் ஆவர் என்பது வான்புகழ் வள்ளுவர் வாக்கு.

வள்ளுவப்பெருந்தகையார் வகுத்தருளிய இலக்கணத்திற்கு ஏற்ப, தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, நல்லாட்சி நடத்திவரும், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஏழை எளிய மக்கள்

இன்புற நன்கொடை நலஉதவிகள் அளித்தல், குறையிரந்து வருவோர்க்கு முகமலர்ச்சியோடு இனியவற்றைக் கூறுதல், செங்கோல் ஆட்சியைச் செவ்வனே நடத்திவருதல், நலிவுற்றுத் தளர்ந்த குடிமக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல் ஆகிய பணிகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றி வருகிறார் என்பதை நடுநிலை கொண்ட நல்லவர் எல்லோரும் நன்கு அறிவார்கள்.

2. இத்தகைய நற்பண்புகளைக் கொண்டு, தமிழ் நாட்டில் நல்லாட்சி நடத்த, அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, தமிழக மக்கள் என்றென்றும் தங்களுடைய முழு, நல்லாதரவை நல்கி வந்துள்ளனர். பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை — கோட்பாடுகள், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனித நேயம் மிகுந்த ஆக்க பூர்வமான திட்டங்கள் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான இவ்வரசு உறுதியாகப் பின்பற்றி வருகிறது.

3. தமிழ் நாடு அமைதி, சட்டம்–ஒழுங்கு, ஒற்றுமை ஆகியவற்றை நிலைநாட்டுவதில் மெச்சத்தகு வெற்றி பெற்றுள்ள மாநிலமாகத் திகழும் அதே வேளையில், பொருளாதாரத் துறையிலும் விரைவான ஒட்டு மொத்த வளர்ச்சி கண்டு தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சட்டம்–ஒழுங்கு முழுமையாகப் பேணிவரப்படுகிறது என்ற அடிப்படை உறுதியின் காரணமாக, இம் மாநிலம் அனைத்துத் துறைகளிலும் வெற்றி பெற்றுத் தன்னம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வது சாத்தியமாகியுள்ளது. வெளிநாட்டுப் போராளிகளினாலும், தீவிரவாதிகளினாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல், வேருடன் களையப்பட்டுவிட்டது. சீர்குலைவு சக்திகள், தலைதூக்க முடியாவண்ணம் தடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு இன்று, அமைதி நல்லிணக்கத்தைப் பொறுத்தவரை, இந்தியாவில் ஒரு பாலைவனப் பூஞ்சோலையாகத் திகழ்கிறது. இந்த முழுமையான நிலைமைதான், தமிழ்நாடு, முன்னேற்றப் பாதையில் பீடுநடை போடுவதற்கு உறுதுணை புரிந்துள்ளது.

4. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்நாட்டைச் சூழ்ந்த தேசிய அளவிலான கடும் பொருளாதார நெருக்கடியைப் பற்றி அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். முன்பு எப்போதும் இருந்திராத அளவுக்கு ஏற்பட்ட இப்பொருளாதார நெருக்கடிக்கிடையில்தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இப்பெரிய நெருக்கடியைத் தொடர்ந்து, மத்திய அரசு வகுத்த புதிய பொருளாதாரக் கொள்கையில், நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் குறித்த சில அடிப்படைக் கொள்கைகளும் இடம் பெற்றுள்ளன. இக் கொள்கையில், பொருளாதார வளர்ச்சி குறித்த புதியதொரு தொலை நோக்குக் கண்ணோட்டமும் காணப்பட்டது. வளமை, விரைவான பொருளாதார வளர்ச்சி குறித்த அதே கண்ணோட்டத்தையே நாமும் கொண்டுள்ளோம். இதனைக் கருத்திற் கொண்டுதான், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருள்ாதாரத்துடன் ஒருங்கிணைத்து, வேலை வாய்ப்பைப் பெருக்கவும், வளர்ச்சிப் பணிகளுக்கு வசதியான, தாராளமயமாக்கப்பட்ட சூழ்நிலையை உருவாக்கவும் கூடுதலான முதலீட்டைப் பெறும் கொள்கைகளுக்கு நாங்கள் ஆதரவு தெரிவித்தோம். அதே நேரத்தில், நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் நடை முறைகளைத் தொடர்ந்து ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை நமக்கு மிகவும் கவலை அளித்துள்ளது. ஏழை மக்களைப் பாதிக்கும் எந்தவொரு கொள்கை நடவடிக்கைகளையும் செயற்படுத்துவதில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தாம் பங்கெடுத்து பேசுகின்ற தேசிய, மண்டல மன்றங்கள் ஒவ்வொன்றிலும் வலியுறுத்தி வந்துள்ளார்கள். பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி போன்ற பல்வேறு பொருள்களின் விலைகளையும், டீசல், சமையல் எரிவாயு முதலியவற்றின் விலைகளையும், நிலக்கரி முதலியவற்றுக்கான இரயில்வே சரக்குக் கட்டணங்களையும் மத்திய அரசு சமீபத்தில் உயர்த்தியிருப்பது, மாநிலங்களுக்கு இக்கட்டானதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய விலைவாசி உயர்வின் விளைவுகளிலிருந்து ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பதே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான இவ்வரசின் முயற்சியாக இருந்துவந்துள்ளது.

5. மிகவும் இடர்ப்பாடான நிதி நிலைமையிலும் இவ்வரசு, அரிசி விநியோக உதவித் தொகைக்கான நிதியொதுக்கத்தை 1990–91 இல் ரூ.105 கோடி என்ற அளவிலிருந்து 1993–94 இல் ரூ.400 கோடியாக அதிகரித்துள்ளது. 1993 செப்டம்பரில் கொள்முதல் விலையையும், 1994 பிப்ரவரி முதல் தேதியிலிருந்து பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் வழங்கல் விலையையும் மத்திய அரசு அதிகரித்ததால், பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலையைத் திருத்துவதைத் தவிர இவ்வரசுக்கு வேறு வழியில்லாமற்போயிற்று. இவ்வாறு திருத்தம் செய்த போதிலும் கூட, உணவுப் பொருள் உதவித் தொகைக்கான நிதியொதுக்கம் 1993–94 இல் ரூ.400 கோடியிலிருந்து 1994–95 இல் ரூ.440 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்துடன், சேர்ந்து விட்ட

நிலுவைகளைக் கொடுப்பதற்காக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.75 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, 1994–95 இல் உணவுப் பொருள் உதவித் தொகைக்கான மொத்த நிதியொதுக்கம் ரூ. 515 கோடியாகும். இதுவரை இதற்காகச் செய்யப்பட்ட நிதியொதுக்கங்களிலேயே இது மிக அதிகமாகும். மத்திய அரசு,அரிசியின் விலையை உயர்த்தியதன் உடனடி விளைவுகளிலிருந்து ஏழை எளியோரைப் பாதுகாப்பதற்கு இவ்வரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

6. விலைவாசிகளை அதிலும் குறிப்பாக, ஏழை எளிய மக்கள் பயன் படுத்தும் இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளை உன்னிப்பாகக் கண்காணித்து வரவேண்டியது மிகவும் அவசியமாகும். பணவீக்க வீதத்தைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். 1993–94 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதிப் பற்றாக் குறையும், 1994–95 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நிலையும், விலைகள் மீண்டும் உயர்ந்து பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்ற கவலையைத் தோற்றுவிக்கின்றன. நாடு தழுவிய பொருளாதார நிருவாகம் முழுவதும் மத்திய அரசிடமுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதே வேளையில், விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென நாங்கள் மத்திய அரசை வற்புறுத்துவோம்.

7. மத்தியிலே வலிமையான கூட்டாட்சி, மாநிலத்தில் வளமான தன்னாட்சி என்ற தத்துவத்திற்கேற்ப தேசத்தின் அரசாண்மை உரிமையை கட்டிக் காப்பதற்கான அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடமும் மக்கள் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் உரிய அதிகாரங்கள் அனைத்தும், மாநில அரசுகளிடமும் அமைய, அரசமைப்புச் சட்டம் பொருத்தமான முறையில் திருத்தப்பட வேண்டும் என்பதே நாங்கள் எப்போதும் வலியுறுத்திவந்துள்ள கொள்கையாகும். இந்த நிலையை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம். அண்மையில் நிலவும் பொருளாதாரப் போக்குகள், மத்திய, மாநில அரசுகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்த நமது எண்ணத்தை உறுதிப்படுத்துகின்றன.

8. மத்திய, மாநில அரசுகளுக்கிடையேயான நிதி உறவு, இணையான நிதி ஆதாரங்கள் மற்றும் கடமைகள் என்ற வலுவான கொள்கைகளின் மீதே நிலை கொண்டுள்ளன என்பது நம்முடைய தெளிவான கருத்தாகும். புதிய பொருளாதாரக் கொள்கை செயற்படுத்தப்பட்டு வருகின்ற இச்சூழ்நிலையில் சமூகத் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அரசின் செயல்பாடுகளில் தீர்மானமானதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. பண்டு தொட்டு, சமூகத் துறைகளில் மாநிலங்களின் பங்கே மேலோங்கி இருந்து வந்திருக்கிறது. தேசிய குறியிலக்குகளை முடிவு செய்வதிலும், அவ்விலக்குகளை எய்துவதற்கான வழி முறைகளை வகுப்பதிலும், மத்திய அரசு எடுக்கும் முயற்சிகளை வரவேற்கிறோம். அதே வேளையில், இத் துறைகளின் தேவைகளை நிறைவு செய்ய மாநிலங்களுக்கென போதிய நிதி ஆதாரம் இருக்க வேண்டியது அவசியம் ஆகிறது. இச்சூழ்நிலையில்தான், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநிலங்கள், இது போன்ற திட்டங்களைத் தாங்களே மேற்கொண்டு நிறைவேற்ற அவற்றுக்குப் போதுமான நிதி ஆதாரங்கள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். வெளி நாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் என்ற போர்வையில், மத்திய அரசு பொறுப்பேற்கும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவது சரியல்ல. மாநிலங்களுக்கு போதிய நிதி ஆதாரம் கிடைப்பதை உறுதி செய்து, இத்துறைகளின் தேவைகளை தாங்களே நிறைவு செய்து கொள்ள அவர்களை அனுமதிப்பதுதான் சிறந்தது.

9. மத்திய, மாநில அரசுகளுக்கிடையே நிதி பங்கீடு செய்யப்படுவதில் அண்மைக் காலத்தில் காணப்படும் போக்குகள், நம்மை வெகுவாகப் பாதித்துள்ளன. நிதிக் குழுக்கள் பரிந்துரைத்தவாறு மத்திய மாநில அரசுகளுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படும் நிதி ஆதாரங்களில் முக்கியமான மத்திய ஆயத்தீர்வையின் வளர்ச்சி வீதம் குறைந்து வருவது பெரிதும் கவலை அளிக்கிறது. வருமான வரியின் கீழ்க் கிடைக்க வேண்டிய வரி வரவுகள் முழுவதுமாகக் கிடைக்கப் பெறாததும் கவலையளிப்பதாக உள்ளது. வருமான வரியிலும், அடிப்படை ஆயத்தீர்வையிலும் மாநிலங்களுக்கான பங்கின்சதவீதத்தில் பத்தாண்டுகளாகத் தேக்கநிலை காணப்படுகின்ற சூழலில்தான் இந் நிலை உருவாகியுள்ளது. உண்மையிலேயே, இது மிகுந்த கவலையளிக்கின்ற ஒரு நிலையாகும். நிறுவன வரியில் மாநிலங்களுக்கு ஒரு பங்கை ஒதுக்குவது பற்றி உடனடியாகக் கலந்தாலோசிப்பதன் அவசியத்தை இது எடுத்துக் காட்டுகிறது. இது மாநிலங்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வருகிறது. மத்திய மாநில உறவுகள் குறித்த சர்க்காரியா கமிஷன், நிறுவன வரியை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வது பற்றித் தெளிவான பரிந்துரை அளித்துள்ளது. அடுத்தடுத்து அமைக்கப்பட்ட நிதிக் குழுக்களும், மாநிலங்களின் இந்த வாதத்தில் உள்ள நியாயத்தை ஒப்புக் கொண்டாலும், அவற்றின் ஆய்வு வரம்பில் இது பற்றிக் குறிப்பாகத் தெரிவிக்கப்படாததால், மேற்கொண்டும் அவற்றால் ஏதும் செய்ய இயலவில்லை. உரிம முறைகளும் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு, தாராளமயமாக்கப்பட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதால், மாநில அரசுகள் உடனடியாகச் செயல்பட்டுத் தொழில்கள்

தொடங்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, அவை மேலும் முன்நோக்கிச் செல்லத் தேவையான ஆதரவுகளை நல்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு வருகின்றன. இச் சந்தர்ப்பத்தில் நிறுவன வரியில் ஒரு பங்கை மாநிலங்களுக்கு அளிப்பது மிகவும் பொருத்த முடையதாக இருக்கும். நிறுவன வரியை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வது குறித்து இப்போதேனும், மத்திய அரசு, பத்தாம் நிதிக்குழுவின் குறிப்பான ஆய்வுக்கு அனுப்பும் என்று நாங்கள் நம்புகிறோம்.

10. சரக்கு ஒப்படை வரி விதிப்பது தொடர்பான நிலை குறித்தும் நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இவ் வரிவிதிக்கப்படாதது கணிசமான அளவுக்கு மத்திய விற்பனை வரி ஏய்ப்பு நடைபெறுவதற்குக் காரணமாக உள்ளது சேவைத் துறைக்கும் வரி விதிக்க 1994–95 ஆம் ஆண்டு மத்திய வரவு–செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முயற்சியை வரவேற்கின்ற அதே வேளையில், இவ் வரி முழுவதையும் மத்திய அரசே, விதித்து, வசூலித்து தானே வைத்துக் கொள்ளும் என்பது கவலையளிப்பதாக உள்ளது. இது அரசியலமைப்புச் சட்டத்தின் மெய்க் கருத்திற்கு இசைந்ததாக இல்லை என்பதே நமது கருத்து. பொருள் விற்பனை அல்லது கொள்முதல் மீது வரிகள் விதிக்கும் உரிமையை அரசியலமைப்புச் சட்டம், மாநிலங்களுக்கு அளிக்கிறது. சேவை விற்பனை என்பது, பொருள் விற்பனையின் ஒரு திரிபே ஆகும். ஆகவே, சேவைகள் குறித்து வரி விதித்து வசூலிக்கும் அதிகாரம், மாநிலங்களுக்கே இருக்க வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகும். இது மத்திய அரசுப் பட்டியலில் உள்ள எஞ்சிய பதிவுகளின் கீழ் வருகிறது எனக் கூற வாய்ப்புள்ளது. ஆனால், சேவை விற்பனையின் தன்மையைக் கொண்டு பார்க்கையில், இது வாதப் பொருத்தமுடைய கருத்தாக இருக்காது. தேசிய பொது நிதிக் கொள்கை நிறுவனம்(National Institute of Public Finance and Policy) நடத்திய ஆய்வில் சேவைகள் மீது வரி விதிப்பது குறித்த பிரச்சினை மிகவும் ஆழ்ந்து ஆய்வு செய்யப்பட்டது. சேவைகள் மீதான வரி, மத்திய விற்பனை வரியைப் போன்று மாநிலங்கள் விதித்து, வசூலித்துத் தாமே வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்தை மாநிலங்கள் வலியுறுத்தியுள்ளன. என்று நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இப்பொருளை, 1993 டிசம்பரில், மத்திய நிதியமைச்சரிடம் எடுத்துக் கூறி இருக்கிறார். அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், சரக்கு ஒப்படைவரி விதிப்பது குறித்து எடுக்கப்பட்ட முடிவை மீண்டும், மறு பரிசீலனை செய்வது பொருத்தமானதாக இராது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். சரக்கு ஒப்படை வரி விதிப்பை மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் குறித்த பிற பிரச்சினைகளுடன் இணைப்பது பொருத்தமாக இராது. சரக்கு ஒப்படை வரி விதிப்பு குறித்து ஏற்கெனவே ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். சரக்கு ஒப்படை வரி விதிப்பதற்கு வகை செய்து நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரில் தேவையான சட்டம் இயற்றப்பட வேண்டுமென மீண்டும்நாங்கள் மத்திய அரசை வற்புறுத்துவோம்.

11. விரைந்து வளரும் பொருளாதாரத்தில், சேவைத் துறை(Services Sector)யின் பங்கு அதிகரிக்கும் என்பதும், வழக்கமாகவே சேவைத் துறையில் வளர்ச்சி வீதம் மிக அதிகமாக இருக்கும் என்பதும் யாவரும் அறிந்த ஒன்றே. இந்தியப் பொருளாதாரமும் இதற்கு விதிவிலக்கல்ல. திட்டங்கள், திட்டப்பணிகள், அரசின் முக்கியமான நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்க ஆதாரங்களைத் திரட்டுகையில், சேவைத் துறைகளிடமிருந்தும் வரி வசூலிக்க வேண்டியுள்ளது. காலப்போக்கில், நிதி சார்ந்த சேவைகள், முதலியன போன்ற ஒரே மாதிரியான வரி விதிப்பு அவசியமாகவுள்ள சேவைகளைப் பொறுத்த மட்டில், அவற்றுக்கு மட்டும் ஒரு மத்திய சட்டத்தின் கீழ் வரி விதிக்கலாம். ஆனால், மாநிலங்களே இவ்வரியை வசூலித்து தாமே வைத்துக் கொள்ளலாம். ஏனைய சேவைகள் குறித்த வரிகள், மாநிலங்களிடம் விட்டு விடப்படவேண்டும். இம்மாற்றங்களைக் கொண்டுவர, அரசியலமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியமாகும். இவ்வாறு, இது குறித்து பரிசீலிக்கப்பட்டு வரும்போதே, மத்திய அரசு, சில சேவைகள் குறித்து வரி விதித்து அதனால் கிடைக்கும் வருவாய் முழுவதையும் தானே வைத்துக் கொள்ள முயலுவது நமக்குக் கவலை தருவதாக உள்ளது. இப்பிரச்சினை முழுவதும் சரியான கண்ணோட்டத்தில் விவாதிக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். மத்திய அரசு, தன் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்வதான முயற்சியில், மாறாத, நிலையான நிதி ஆதார அடிப்படையினைக் கொண்ட மாநிலங்களின் நிலைமையைப் பற்றிக் கருத்தில் கொள்ளாதிருப்பது நமக்குக் கவலை அளிக்கிறது. தேசிய மொத்த வருமானத்திற்கு, 40 சதவீதத்திற்கும் அதிகமாக பங்கு அளிக்கும் சேவைத் துறை மீது விதிக்கப்படும் வரியில், மாநிலங்களுக்குப் பங்கு அளிக்க மறுக்க இயலாது.

## பத்தாம் நிதிக்குழு

12. பத்தாம் நிதிக் குழு, 1994 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்கு முன்னதாகத் தனது அறிக்கையை அளிக்க விருக்கிறது என்பதை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். பத்தாம் நிதிக் குழு விரும்பியவாறு, விரிவான அறிக்கைகள், மதிப்பீடுகள் மற்றும் பிற தகவல்களை நாம் அளித்துள்ளோம். பத்தாம் நிதிக் குழு,

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சென்னையில் அதன் கூட்டத்தை நடத்தக் கூடும். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள நிதி ஆதாரங்களிலும், மத்திய, மாநில அரசுகள் ஆற்ற வேண்டிய பணிகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், பத்தாம் நிதிக் குழு முக்கிய பங்கு ஆற்ற வேண்டியுள்ளது. வரி விதிப்பு நிலைமைகளில், இரண்டு தெளிவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதைக் காண்கிறோம். முதலாவதாக, மாநிலங்களுக்குத் தொடர்புடைய மத்திய வரிகள் மூலம் கிடைக்கக் கூடிய வருவாயின் வளர்ச்சியில், அதாவது அடிப்படை ஆயத் தீர்வைகளின் வளர்ச்சியில், போதிய வேகம் இல்லாமை மற்றும் வருமான வரியின் கீழ் கிடைக்கவேண்டிய வருவாய் முழுவதும் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமை ஆகியவை நமக்குப் பெரிதும் கவலையளிக்கின்றன. இரண்டாவதாக, மாநிலங்களால் நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் பொறுப்புகளில் குறிப்பிடத் தக்க, தீர்மானமானதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. சமூகத் துறைகளில் மாநில அரசுக்குள்ள கூடுதல் பங்கு, மற்றும் முன்னர் பொதுத் துறைக்கென்றே ஒதுக்கப்பட்ட துறைகளில் தனியார் துறையினருக்கு அதிகரித்துவரும் பங்கு ஆகியவற்றை இந்த வகையில் குறிப்பிட்டுச் சொல்லலாம். இப்போக்குகள், மாநிலங்கள் எதிர் நோக்கியுள்ள இடர்ப்பாடான நிதி நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளன. நமது முன் மதிப்பீடுகளை நாம் ஏற்கெனவே பத்தாம் நிதிக் குழுவிற்கு அனுப்பியுள்ள போதிலும், நிதிக் குழு நமது மாநிலத்திற்கு வருகை தரும்போது மாநிலங்கள் எதிர் நோக்கி வரும் சிக்கலான நிதி நிலைமை பற்றி அக்குழுவுக்கு அழுத்தமான முறையில் எடுத்துரைப்பது பொருத்தமாக இருக்கும். ஒரு புறம், பல்வேறு இன்றியமையாப் பொருள்களின் நிர்ணய விலை வீதங்களை மத்திய அரசு விரைவாக உயர்த்தியதும் தேசியப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட பொதுவான பண வீக்கமும், செலவின வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில், மாநில அரசின் திறமைக்கு சவால் விடுவதாக அமைந்துள்ளன. மற்றொரு புறத்தில், மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழக்கமான நிதி ஆதாரங்களிலிருந்து கூடுதலாக நிதி திரட்டுவது மிகவும் கடினமாக இருக்கிறது. இதன் நிகர விளைவாக, மாநிலங்களுக்கு மிகக் கடுமையான நிதி இடர்ப்பாடு உருவாகியுள்ளது. செலவைக் கட்டுப்படுத்தும் எந்த ஒரு திட்டத்தையும் மத்திய காலக் கட்டத்தில் (Medium term) செயற்படுத்த இயலும். திருத்த நிதி ஏற்பாட்டில், மத்திய-மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பங்கீட்டைப் பொறுத்தவரை நிதி நெருக்கடியிலிருந்து மாநிலங்களை மீட்பதற்கான முன்னேற்றமான நோக்குத் திட்டமொன்றை பத்தாம் நிதிக் குழு வகுக்க வேண்டியது அவசியமாகும்.

13. குறிப்பாக, ஏற்பளிக்கப்பட்டு வருகின்ற ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள் நமக்குப் பெரிதும் வேதனையளிப்பனவாக உள்ளன. ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகள், தமிழ் நாட்டிற்கு மிகவும் ஏமாற்றம் அளிப்பனவாக அமைந்து விட்டன. திட்டத்தில் சேராத வருவாய்க் கணக்கில் தமிழ் நாட்டில் உபரி நிலைமை நிலவுவதாக ஒன்பதாம் நிதிக் குழு மதிப்பீடு செய்தது. ஆனால், பெரிய அளவில் பற்றாக்குறை ஏற்பட்டது என்பது தான் நிகழ்ந்த உண்மை. அடிப்படை ஆயத் தீர்வைகளில் அனைத்து மாநிலங்களுக்கும் கிடைக்கும் பங்கை இக்குழு தொடர்ந்து 45 சதவீதமாகவே வைத்தது. பற்றாக்குறை மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட பங்கு நீங்கலாக, அனைத்து மாநிலங்களுக்குமான உண்மையான பங்கு 40 சதவீதத்திலிருந்து 37.53 சதவீதமாகக் குறைந்ததால் நிலைமை மிகவும் மோசமாயிற்று. மூன்றாவதாக, நிதிக் குழு தன்னுடைய மதிப்பீடுகளில், பண வீக்க நிலையை மிகவும் குறைத்துக் கணக்கிட்டுள்ளது. ஆனால், அனுபவநிலை அதற்கு முற்றிலும் மாறாக உள்ளது. மேலும், உபரி குறித்த தவறான மதிப்பீடு காரணமாகவும் அதனடிப்படையில், திட்ட வருவாய் மானியமாக கணிசமான தொகை மறுக்கப்பட்டதாலும் தமிழ்நாடு பாதிக்கப்பட்டுள்ளது. பத்தாம் நிதிக் குழு, அதன் ஆய்வு வரம்புகளைக் கொண்டு மாநிலங்களுக்கு நியாயம் வழங்குமென்று ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறோம். ஒன்பதாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து அனைத்து மாநிலங்களும் எதிர் நோக்கிவரும் நிலைமை, மிகவும் சிக்கலானதாக உள்ளது. மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான திட்டம் பற்றிய புதிய ஒட்டுமொத்தமான கணிப்பேதான் மோசமான இந்நிலையிலிருந்து மாநிலங்களை மீட்க இயலும். மாநிலங்களைத் தன்னம்பிக்கையோடு 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்லக்கூடிய நிதி ஆதார மாற்றுத் திட்டமொன்றை வகுப்பதில் பத்தாவது நிதிக் குழு புதிய வழிமுறைகளைக் கண்டறியுமென்று நம்புகிறோம்.

## ஆண்டுத் திட்டம்

14. ஆண்டுக்காண்டு, ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத்திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் அதிக ஒதுக்கீடு பெற்றுத் திட்ட இலக்கிற்கும் மேலாகச் சாதனை புரியும் தனது ஆற்றலை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு நிலைநாட்டியுள்ளது என்பதை இம்மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். எங்கள் சாதனை அளவு, உண்மையில் பாராட்டத்தக்க சிறப்பு வாய்ந்ததாகும். 1992–93 ஆம் ஆண்டில், சிறப்பு வகையின்கீழ் வராத 15 மாநிலங்களில், 8 மாநிலங்கள் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை முடிக்க இயலவில்லை. ஏற்பளிக்கப்பட்ட ரூ.1766 கோடி திட்ட

ஒதுக்கீட்டை முடித்ததோடல்லாமல், ரூ.1935 கோடி திட்ட ஒதுக்கீட்டுக்கு அதாவது ரூ.169 கோடி கூடுதல் ஒதுக்கீட்டளவிற்கு வகை செய்து தமிழ்நாடு தனிச் சிறப்புடன் திகழ்கிறது. மக்கள் உயரளவிற்குப் பயனடையும் வகையில், திட்டப் பணிகளையும் திட்டங்களையும் செயற்படுத்தும் நமது திறமைக்கு இந்த ஓர் உண்மை, எடுத்துக்காட்டாகும்.

15. 1993–94 ஆம் ஆண்டிற்கான ஏற்பளிக்கப்பட்ட ரூ.2101 கோடி திட்ட ஒதுக்கீடு, எய்தப்பெறுமென்று நாம் உறுதியுடன் நம்புகிறோம். உள்ளபடியே 1993–94 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு, தற்போது மொத்தம் ரூ.2140.30 கோடி நிதியொதுக்கீட்டிற்கு வகைசெய்கிறது. இத்திட்ட இலக்குச் சாதனையே மத்தியத் திட்டக் குழு, தமிழ்நாட்டிற்கு 1994–95 ஆம் ஆண்டிற்கு, மிகவும் அதிக அளவிற்கு அதாவது, ரூ.2750 கோடி திட்ட ஒதுக்கீடு செய்ய வகை செய்துள்ளது. இது, 1993–94 ஆம் ஆண்டு நிதியொதுக்கீட்டைவிட 30.89 சதவீதம் அதிகமாகும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இம் மாநிலத்திற்குப் பெற்றுத் தந்த இந்த மிக அதிகமான திட்ட ஒதுக்கீடானது பொது மக்களுக்குப் பலனளிக்கத்தக்க திட்டங்களையும் திட்டப் பணிகளையும் செயற்படுத்துவதில் தன்னம்பிக்கையுடன் நாம் முன்னேற இயலச் செய்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசின் கீழ், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.492.30 என்ற நபர் வாரித் திட்ட ஒதுக்கீடு, தேசிய நபர் வாரித் திட்ட ஒதுக்கீடான ரூ.433.20 யை விடக் கணிசமான அளவிற்கு அதிகரிக்கும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கடுமையான நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், இவ்வரசு, தேசிய சராசரி அளவிற்கு மிகவும் குறைவாக இருந்த நிலையிலிருந்து, தேசிய சராசரி அளவைவிட குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமாக திட்டத்தின் மூலம் முதலீடு செய்யுமளவிற்கு உயர்ந்துள்ளது மிகவும் சிறந்ததொரு சாதனையாகும். திட்டமிட்ட வளர்ச்சிக்கு உரியவகையில் முறையாக கவனஞ் செலுத்தியதன் மூலம் தமிழ்நாடு உயரிய வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடுகிறது என்றால் அது மிகையாகாது. இதற்கென சில தியாகங்கள் செய்திருப்பினும் இச் சாதனையை நாம் மிக்க கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் பாதுகாக்க வேண்டும். இம்மாநிலத்தின் எதிர்காலம் பாதுகாக்கப்படுகிறது என்பதை நாம் உறுதி செய்வது நமது கடமையாகும். திட்ட ஒதுக்கீட்டிற்கு நிதியொதுக்குவதற்கான நிதி ஆதாரங்களைக் கண்டறியும்போது, முன்னுரிமை குறைவான செலவினத்தை நாம் அவசியம் நீக்க வேண்டியுள்ளபோது, இம் மையக் கருத்தை இம் மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்திற் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

## காவல் துறை

16. மாநிலக் காவல் படை, பொதுமக்களுக்கு மனிதாபிமானத்துடனும், செயல் திறத்துடனும் பணிபுரியச் செய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மேற்கொண்ட சிறப்பான முயற்சி குறித்து இம் மன்றத்தின் உறுப்பினர்கள் ஒரே குரலில் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பர். மாநிலக் காவல்படை, புதிய கண்ணோட்டத்துடன், மாறுபட்ட புதிய வழியில் செயல்படுகிறது என்பது மிகவும் மனநிறைவளிக்கத்தக்க ஒன்றாகும். இது, அவ்வப்போது எழுந்த சிறுசிறு நிலைமைகளைத் திறம்படக் கையாண்டது. மாநிலத்தின் விரைவான வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழும் அமைதியும் நல்லிணக்கமும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

17. காவல்படைக்கு, 1993–94 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.320.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க, 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.387.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், காவல் படையை நவீன மயமாக்குவதற்கியலும் வகையில், உயரளவு நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூ.80.45 கோடி செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்ட நவீனமயமாக்குவதற்கான திட்டம் ஒன்றை நாம் மத்திய அரசிடம் அளித்துள்ளதை இம் மன்ற உறுப்பினர்கள் நினைவு கூரலாம். ஆயின், 1991–92 ஆம் ஆண்டில் நாம், ரூ.10 கோடி மட்டுமே பெற்றுள்ளோம். ஏனைய மாநிலங்களில் பெற்ற அனுபவம், தடுப்பு நடவடிக்கைகளை முன்னதாகவே எடுக்க வேண்டியதன் அவசியத்தை போதிய அளவிற்கு விளக்குகிறது. இக்காரணத்திற்காகவே, நாம், மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதியுதவி கேட்டுள்ளோம். ஒரு நிலையில் மத்திய உள்துறை அமைச்சரும், கூடுதலாக ரூ.30 கோடி அனுமதிக்கப்படுமென்று உறுதியளித்தார். இத் தொகை இதுவரை அளிக்கப்படவில்லை. இத் தொகையை, 1994–95 ஆம் ஆண்டிலாவது வழங்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். ரூ.12 கோடி செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்ட கடலோரப் பாதுகாப்புப் படை ஒன்றை ஏற்படுத்துவதற்கான தனித் திட்டமொன்றையும் நாம் அளித்துள்ளோம். இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதலளித்து, தேவையான உதவியை வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

18. நிதி இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகின்ற போதிலும், மாநிலக் காவல் படையை நவீனமயமாக்குவதற்கு நாம் அதி முன்னுரிமை அளித்துள்ளோம். காவல் படையை நவீனமயமாக்கும் மாநிலத் திட்டத்தின்கீழ் 1993–94 ஆம் ஆண்டில், ரூ.10

கோடி செலவிடப்பட்டுள்ளது. 237 காவல் நிலையங்களுக்கு ஜீப்புகள் வழங்குவதற்கும், புதிதாக இரு காவல் படைப் பிரிவுகள் ஏற்படுத்துவதற்கும், நவீன ஆயுதங்கள், படைக்கலங்கள், இன்றியமையா அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்வதற்கும் இத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, மாநிலக் காவல் படையின் செயல்திறனை உயர்த்துவதற்குப் பெரிதும் உதவியாக இருந்துள்ளது. காவல் படையை நவீனமயமாக்கும் மாநிலத் திட்டத்தை 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர நாம் கருதியுள்ளோம். வாகன வசதிகள், தகவல்களை விரைந்தனுப்பும் திறமை, சாதன இருப்பு, சரியாகச் செயல்படும் ஆயுதங்கள்–படைக்கலங்கள் ஆகியவற்றின் நிலைகளை முழுமையாக உயர்த்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். நாட்டிலேயே தமிழ்நாடு காவல் படைதான் மிகச் சிறந்த காவல் படை என்பதை உறுதி செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

19. இவ்வரசு, வகுத்த பல்வேறு நலத்திட்டங்களின் பயனாய், மாநிலக் காவல் படையின் கட்டுப்பாட்டுணர்வு கணிசமான அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. காவல் துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுப்பதற்கான புதிய பெருந்திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. 1000 காவலர் குடியிருப்புகள் 1993–94 ஆம் ஆண்டில் ரூ.12.5 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஒரே ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கையில் இதுவே அதிகமாகும். குடியிருப்புகள் கட்டும் இத்திட்டம், 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இதற்கென, வரவு–செலவுத் திட்டத்திலும் ரூ.5 கோடி சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், திட்டமிட்டவாறு, புதிதாக 10,000 காவலர்களைத் தேர்வு செய்து பணியில் அமர்த்தும் பணியை நிறைவு செய்துள்ளது. புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட காவலர்கள், பயிற்சியளிக்கப்பட்டு, தற்போது, பணியில் அமர்த்தப்பட்டு வருகின்றனர். இது, மாநிலக் காவல் படையைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு வலுப்படுத்தியதாகும். எந்தவொரு சூழ்நிலையையும் சமாளிக்கும் வகையில் காவல் படையின் திறன் கணிசமான அளவிற்கு உயர்த்தப்படும். சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தற்போது 500 சப்–இன்ஸ்பெக்டர்களைத் தேர்வு செய்து பணியில் அமர்த்துவதில் ஈடுபட்டுள்ளது. இது, மாநிலக் காவல் படையின் திறனை மேலும் வலுப்படுத்தும். காவல் படையை முழுவதுமாக நிலை உயர்த்தி, மாநிலத்தில் அமைதியும், நல்லிணக்கமும் நிலவச் செய்யும் வகையில் , அக்காவல்படையை, மனிதாபிமானத்துடனும், செயல் திறத்துடனும் கூடிய கருவியாக மாற்றுவதற்கு இவ்வளவு குறுகிய கால அளவில் இத்தகைய முயற்சிகள் இதற்கு முன்னர் எப்போதுமே மேற்கொள்ளப்பட்டதில்லை.

## புயல்–வெள்ள நிவாரணம்

20. கடுமையான சூறாவளிப் புயல், வெள்ளங்கள் தமிழ்நாட்டை மீண்டும் மீண்டும் தாக்கிச் சேதம் விளைவித்துள்ளன. தொடர்ந்து 1991–ஆம் ஆண்டிலிருந்தே நமது நிதி ஆதாரங்களுக்குமேல், பெருமளவில் நிவாரண நடவடிக்கைகளையும் மீட்பு நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வோராண்டும் நாம் விரிவான அறிக்கை அளித்திருந்தும், இடர் நிவாரண நிதி ஏற்பாட்டின்கீழ் மட்டுமே நிதியுதவி பெறப்பட்டது. இந்நிதியுதவி போதுமானதாக இல்லை. இதனால் கிடைத்த நிதியுதவியைக் காட்டிலும் அதிகமாக கணிசமான அளவு தொகையை செலவிட வேண்டியதாயிற்று. இதற்காகவே உலக வங்கிக்கு அனுப்புவதற்காக ரூ.2560 கோடி நிதியொதுக்கீடு தேவைப்படும் விரிவான திட்ட அறிக்கை ஒன்றை நாம் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளோம். உலக வங்கி இத்தகைய புயல் உடனடி மறுசீரமைப்புத் திட்டமொன்றிற்காக ஆந்திரப் பிரதேசத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. மகாராட்டிர மாநிலத்தில் நில நடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து மறுசீரமைப்பதற்காக, மகாராட்டிர அரசுக்கு நிதியுதவி வழங்க, உலகவங்கி அண்மையில் ஒப்புக் கொண்டுள்ளது என்றும் தெரிய வருகிறது. மீண்டும் மீண்டும் ஏற்பட்ட புயல்களினால் சேதமுற்றதைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் நிலையும் மகாராட்டிர மாநிலத்தைப் போலவே கடுமையானதாக உள்ளது. தமிழ் நாட்டின் மறு சீரமைப்புத் திட்டத்திற்கு ஏன் ஒப்புதல் அளிக்க முடியவில்லை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. சரியான மறு சீரமைப்புத் திட்டத்தை நம்மால் மேற்கொள்ளவியலும் வகையில், மத்திய அரசு உலக வங்கியிடம் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஆவன செய்யும் என்று நம்புகிறோம்.

21. அண்மையில், 1993 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்களில் ஏற்பட்ட கடும் புயல்களும் வெள்ளங்களும் பல பகுதிகளைத் தாக்கி, பெருமளவிற்குச் சேதம் விளைவித்துள்ளன. பல்வேறு நிவாரண நடவடிக்கைகளுக்காக ரூ. 75.37 கோடி செலவுத் தொகையை ஏற்கெனவே நாம் அனுமதித்துள்ளோம். 1994–95 ஆம் ஆண்டிற்கான இடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 14.63 கோடி முன்பணமாகப் பெற்றது உட்பட இதுவரை பெறப்பட்ட நிதியுதவி ரூ. 29.25 கோடியாகும். வெள்ளச் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக, வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.31 கோடி அனுமதிக்க உலக வங்கி அண்மையில் ஒப்புக்கொண்டுள்ளது. தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்ட இடர் நிவாரண நிதி ஏற்பாடு முற்றிலுமாக போதிய அளவிற்கு இல்லை என்பதையும், 1995–96 ஆம்

ஆண்டிலிருந்தாவது கணிசமான அளவிற்கு நிதியொதுக்கீட்டை அதிகரித்து வழங்க வேண்டும் என்பதையும் பத்தாம் நிதிக் குழு கவனத்தில் கொள்ள வேண்டும். இது தொடர்பாக, நாம் விரிவான அறிக்கையை ஏற்கெனவே பத்தாம் நிதிக் குழுவிற்கு அளித்துள்ளோம். பத்தாம் நிதிக் குழு, 1994 ஏப்ரல் திங்களில் சென்னையில் கூடும் போது, நமது கோரிக்கையை நாம் எடுத்துக் கூறுவோம்.

## வளர்ச்சிப் பணித் திட்டங்கள்

22. புதிய 1994–95 ஆம் நிதியாண்டில் நாம் அடியெடுத்து வைக்கின்ற இவ்வேளையில், நம்மைக் கவலை கொள்ளச் செய்கிற பல கொள்கைப் பிரச்சினைகள் பற்றி நான் சுருக்கமாகத் தெரிவித்தேன். நேரமின்மை கருதி, நான், வேளாண்மை, உணவு பதப்படுத்தல், பாசனம், ஊரக வளர்ச்சி, கால்நடை வளர்ப்பு, மீனளம், வனவளம், தொழில்கள், எரிசக்தி, சாலைகளும் சாலைப் போக்குவரத்தும், சுற்றுச் சூழல், நகர்ப்பகுதி மேம்பாடு, சென்னை மாநகர் மேம்பாடு, வீட்டுவசதி, கல்வி, தமிழ் வளர்ச்சி-பண்பாடு, சுகாதாரம்–குடும்ப நலன், குடிநீர் வழங்கல், மகளிர் மேம்பாடு, குழந்தைகள் நலன்–சத்துணவு, ஆதி திராவிடர்–பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் நலன், நெசவாளர் நலன், தொழிலாளர் நலன், கடன் திட்டம், வேலைவாய்ப்பு, அரசு ஊழியர் நலன் ஆகிய தலைப்பின் கீழ் வரும் முக்கியத் திட்டப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றை பற்றி என்னுடைய இவ்வுரையின் ' ஆ ' பகுதியில் நான் விவரித்துள்ளேன். இவற்றை நான் இங்கே படித்ததாக எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துறைகளில் வருகின்ற வளர்ச்சித் திட்டங்களில் பல புதிய திட்டங்களும், ஆதரவு தேவைப்படுகின்ற வெவ்வேறு தொகுதியினருக்கான சிறப்புத் திட்டங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல புதிய முயற்சிகளை இம்மாமன்ற உறுப்பினர் பாராட்டுவர்.

23. இத்திட்டங்கள் பற்றிய விவரங்கள், என்னுடைய உரையின் 'ஆ' பகுதியில் இடம்பெற்றுள்ளன. இருப்பினும், சில பெரிய திட்டங்கள், திட்டப்பணிகள் பற்றிய விவரங்களை இங்கே சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

* உணவு தானிய உற்பத்தி, 100 இலட்சம் டன் என்ற சாதனை அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண்மையில் மூலதன முதலீட்டைப் பெருக்குதல், அதிக மதிப்புள்ள பயிர்களின் சாகுபடி, வேளாண்மை விளைபொருட்களின் ஏற்றுமதி, நீர்வரத்துப் பகுதி மேம்பாடு, புன்செய் நில மேம்பாடு, மனித வள மேம்பாடு ஆகியவை புதிய உத்வேகத்துடன் செயற்படுத்தப்படும் திட்டங்களாகும். 1994–95 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.76 கோடி செலவில் புதிய மனித வள மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

* ரூ.952 கோடி மொத்த திட்ட ஒதுக்கீட்டைக் கொண்ட நீர் ஆதாரத் தொகுப்பு திட்டம், ரூ.40 கோடி வரவு–செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டுடன் 1994–95 ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது. தீபகற்ப நதி நீர் மைய ஏற்பாட்டுத் திட்டம் மற்றும் குறிப்பாக பம்பா–அச்சன் கோயில்–வைகை இணைப்புத் திட்டத்தை கூடிய விரைவில் செயற்படுத்த வேண்டுமென இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. 4270 முன்னாள் ஜமீன் ஏரிகளை மேம்ப்டுத்தும் பெரும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

* இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 73 ஆவது மற்றும் 74 ஆவது திருத்தங்களை உள்ளடக்கிய, புதிய சட்டங்கள், இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். அதிகாரப் பரவல் முறையிலமைந்த மாவட்டத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, ரூ.20 கோடியிலிருந்து, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.40 கோடியாக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

* வன வளர்ப்புத் திட்டத்தைப் பொறுத்தவரை, 1994–95 ஆம் ஆண்டில், 1.5 இலட்சம் ஏக்கர் இத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். ரூ.300 கோடி செலவாகக் கூடிய பல்வகையின பாதுகாப்புக்கான தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் வெளிநாட்டு உதவியுடன் செயற்படுத்தப்படும்.

* 1 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுடன் சென்னைத் தொழில் பூங்கா அமைக்கப்படும். தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை, விரைவில் செயற்படுத்த வேண்டுமென நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம். சென்னைக்கு அருகே, 1000 ஏக்கர் பரப்பில் புதிய வளர்ச்சி மையம் ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், அடிப்படை வசதிக் கட்டமைப்புக் கடன்–நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் ஆதரவுடன், ரூ.550 கோடி மதிப்பீட்டுச் செலவில் திருப்பூர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தும். தமிழ்நாடு செய்தித் தாள்–காகித நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம், ரூ.220 கோடி திட்ட ஒதுக்கீட்டில், 1994–95 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும். சென்னைக்கு அருகில், தோல் தொழிற்பேட்டை ஒன்று புதிதாக ஏற்படுத்தப்படும்.

* தமிழ்நாட்டில் மின் தேவையளவிலும் மின் வழங்கல் அளவிலும்

வெட்டு எதுவும் இல்லாதிருப்பது தமிழ்நாட்டின் மின்சார நிலைமையின் சிறப்பு அம்சம் ஆகும். இத்துறைக்கு, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.625 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இது, 1993–94 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டை விட 16 சதவீதம் அதிகமாகும். 3 X 210 மெகாவாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் நிலையத்தின் முதல் நிலை, 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். ஒரு பிரிவு மின் மைய ஏற்பாட்டுடன் இணைக்கப்படும். 4 X 30 மெகாவாட் திறன் கொண்ட பேசின் பாலம் எரிவாயு அடிப்படையிலான மின் நிலையப் பணி தொடங்கி விட்டது. 1500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ரூ.7500 கோடி முதலீட்டுடன் கூடிய ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் வெட்டுதல்–மின் உற்பத்தித் திட்டம், இணைத்துறையில் செயற்படுத்தப்படும். ரூ.800 கோடி செலவில் 100 மெகாவாட் திறன் கொண்ட கடல் நீர் மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைப்பதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பது, வற்றாத புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரத்தைப் பயன்படுத்தும் மிகப் பெரியதொரு திட்டமாகும்.

* சாலை பராமரிப்புக்கான நிதியொதுக்கீடு, 1993–94 ஆம் ஆண்டை விட 1994–95 ஆம் ஆண்டில் கணிசமாக, அதாவது 26 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள சாலை அமைப்பின் தரத்தை முழுமையாக மேம்படுத்துவதற்காக, ரூ.880 கோடி செலவாகக் கூடிய, சாலை மேம்பாட்டுத் திட்டம் ஒன்று வரையப்பட்டு, நிதியுதவி வேண்டி உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 1000–க்கும் அதிகமான மக்கட் தொகை கொண்ட எல்லா கிராமங்களுக்கும் 1994–95 ஆம் ஆண்டில் அனைத்துப் பருவங்களுக்கும் ஏற்ற சாலை வசதி செய்து தரப்படும்.

* ஒருங்கிணைந்த கடலோரப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்று, வெளிநாட்டு உதவியுடன் மேற் கொள்ளப்படும். ரூ.112.50 கோடி செலவில் சென்னை மாநகர நீர் வழிகளை சுத்திகரிக்கவும், சுற்றுப்புறத் துப்புரவுக்கும் வகை செய்யும் திட்டமும் வெளிநாட்டு உதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.150 கோடியாக இருக்கும். நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கான மாநில ஒருங்கிணைந்த திட்டம் என்னும் புதியதொரு திட்டம், 1994–95 ஆம் ஆண்டில், தொடங்கப்படும். இத் திட்டத்தின் கீழ் நகர்ப் பகுதியைச் சேர்ந்த 1 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும்.

* 'எழில்மிகு சென்னை 2000' என்னும் திட்டம், நம் நாட்டிலேயே அனைவரும் விரும்பி வருகை புரிகின்ற ஒரு நகரமாக சென்னையை உருவாக்கும் திட்டமாகும். இத் திட்டத்திற்கு, 6 ஆண்டுகளில் ரூ.4,000 கோடி முதலீடு தேவைப்படுகிறது. சென்னை மாநகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தத் தேவையான நிதியுதவி அளிக்க, பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு நிறுவனம் அமைக்கப்படும். இக் கழகத்தின் மொத்த மூலதன ஆதாரத்தை ரூ.60 கோடியாக ஆக்க வரவு–செலவுத் திட்டத்தில், இந்நிறுவனத்திற்கான பங்கு மூலதன உதவியாக ரூ.15 கோடி ஒதுக்கப்படுகிறது.

* "அனைவருக்கும் குடியிருப்பு" வசதி என்பதே இவ்வரசின் கொள்கையாகும். 1994–95 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின் மூலமாக, 1 . 25 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படும்.

* தருமபுரி, திருவண்ணாமலை–சம்புவராயர், விழுப்புரம்–இராமசாமிப் படையாட்சியார் மற்றும் தென்னார்க்காடு–வள்ளலார் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் ரூ.120 கோடி திட்டச் செலவில் 5 ஆண்டு கால அளவில் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் தொடங்கப்படும்.

* ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு உலகத் தமிழ் மாநாடு,1995 ஜனவரித் திங்களில் தஞ்சாவூரில் மிகச் சிறப்பான முறையில் நடத்தப்படவிருக்கிறது. தஞ்சாவூர் அரண்மனையும், மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மஹாலும் முழுமையாகப் புதுப்பிக்கப்பட விருக்கின்றன.

* பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்து, தொடர்ந்து படிக்க வைப்பதைக் கட்டாயமாக்கும் சட்டம் ஒன்று, சட்டப்பேரவையின் இக் கூட்டத் தொடரில் அறிமுகப் படுத்தப்படும். இச் சட்டத்தில் தண்டனை விதித்தல் இடம் பெறாது. இராமநாதபுரத்தில், 1994–95 ஆம் ஆண்டில் மகளிர் கல்லூரி ஒன்று தொடங்கப்படும்.

* 1994–95 ஆம் ஆண்டில், ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும், 32 படுக்கை வசதிகளாவது இருக்குமாறு வசதிகள் மேம்படுத்தப்படும். ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும், புதிய குழந்தை மருத்துவப் பிரிவும், பிறந்த குழந்தை (neonatal) மருத்துவப் பிரிவும் ஏற்படுத்தப்படும். உலக வங்கியின் உதவி பெறும், பார்வைக் குறைவைக் கட்டுப்படுத்தும் திட்டமும் எய்ட்ஸ் நோய்க் கட்டுப்பாடுத் திட்டமும் தொடங்கப்படும்.

* குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு, 1994–95 ஆம் ஆண்டில்

ரூ.387.72 கோடியாக உயர்த்தப்படும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில், புதிய வீராணம் திட்டத்திற்கு ரூ.110 கோடியும், கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டத்திற்கு ரூ.100 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், சேலம், மதுரை ஆகிய நகரங்களுக்கான குடிநீர் வழங்கல் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகள் எதுவுமே இம்மாநிலத்தில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் இல்லாத 1239 குடியிருப்புகள் அனைத்திற்கும், 1994–95 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இராமநாதபுரம் மாவட்டம், நரிப்பையூரில் ரூ.10.75 கோடி செலவில், நாளொன்றுக்கு 1 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக மாற்றும் திறன்கொண்ட நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

* ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகளிடையே கல்வியறிவைப் பெருக்கும் இரு புதிய சிறப்பு ஊக்கத் தொகைத் திட்டங்கள் வரும் ஆண்டில் தொடங்கப்படும். தருமபுரி, திருவண்ணாமலை–சம்புவராயர், விழுப்புரம்–இராமசாமிப் படையாட்சியார் மற்றும் தென்னார்க்காடு–வள்ளலார் மாவட்டங்களில் இரண்டாம் வகுப்புக்குப் பிறகு பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திவிடக் கூடிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகளுக்கு, மூன்றாம், நான்காம், ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சியடைவதன்பேரில், ஒவ்வொருவருக்கும் ரூ.500 சிறப்பு ஊக்க உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.1.50 கோடி செலவாகும். வரும் ஆண்டில் ஆறாம் வகுப்பிற்குச் செல்லும் கிராமப்புற ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் அனைவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ.100 வழங்கப்படும். இத்திட்டத்தினால், மாநிலம் முழுவதிலுமுள்ள 30,000 ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் பயன் பெறுவர். இத் திட்டத்திற்கு ரூ.3 கோடி செலவாகும்.

* தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, ரூ.13 கோடியாக உயர்த்தப்படும். இதனால், 1994–95 ஆம் ஆண்டில், 10,000 பேர் பயனடைவர். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு, இலவச வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கு, 1994–95 ஆம் ஆண்டில், ரூ.1 கோடி சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்படும்.

* கடல்வாழ் உயிரின வளர்ப்புத் துறையில், பாக் வளைகுடாவில் ரூ.13.88 கோடி செலவில் 150 ஹெக்டேர் பரப்பளவில் ஒன்றும், வ.உ.சிதம்பரனார் மாவட்டம் தருவைக்குளத்தில் ரூ.2.20 கோடி செலவில் 50 ஹெக்டேர் பரப்பளவில், ஒன்றுமாக இரண்டு திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

* 1994–95 ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் மகளிருக்கு, அவர்கள் பல்வேறு சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலமாக தங்களுடைய வருமானத்தைப்பெருக்கிக் கொள்ள உதவி அளிக்கப்படும். புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா குழந்தை நலனுக்கான 15 அம்சத் திட்டத்திற்கு மேலும் வலுச் சேர்க்கும் குழந்தைநல துணைத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.697.65 கோடி மொத்தச்செலவில் செயற்படுத்தப்படும். புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டத்திற்கு 1993–94 ஆம் ஆண்டில் ரூ.312 . 42கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக,1994–95 ஆம் ஆண்டில் ரூ.345. 36 கோடி ஒதுக்கப்படும்.

* இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்திற்காக, 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு உதவித் தொகையாக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

* அமைப்பு ரீதியல்லாத தொழிலாளர்களுக்கு சுகாதார வசதி அளிக்கும் புதிய திட்டமொன்று, தொடக்க சுகாதார மையங்கள் மூலமாகவும் வட்ட மருத்துவமனைகள் மூலமாகவும் செயற்படுத்தப்படும். வரவு–செலவுத் திட்டத்தில் இத்திட்டப் பணிக்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்ப இடருதவித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, 50,000 பேர் பயன்பெறும் விதத்தில், ரூ.25 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

* 1994–95 ஆம் ஆண்டில், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு, மொத்தம் ரூ.220.59 கோடி நிதி ஒதுக்கப்படும். அனைத்து வேலை வாய்ப்புத் திட்டங்களும் சேர்ந்து, 1994–95 ஆம் ஆண்டில் உருவாக்கும் மொத்த வேலை வாய்ப்பு சாதனை அளவாக 10 கோடி உழைப்பு நாட்களாக இருக்கும்.

## ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

24. என்னுடைய கடந்த வரவு–செலவுத் திட்ட உரையில், ஏழை எளியோர், வசதிவாய்ப்பற்ற மக்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாத்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, ஏழைமக்களுக்கான விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற கருத்தினை உங்கள் முன் வைத்தேன். புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக, மத்திய அரசு கொண்டுவந்த

நிலைப்படுத்தல்–பொருளாதாரக் கட்டமைப்புச் சரிக்கட்டல் கொள்கையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான இக் குறிப்பான திட்டத்தை, இம்மாநில மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். ஏழை எளியோர், வசதி வாய்ப்பற்றோர் ஆகியோரின் வாழ்க்கைத்தரத்தின் மேம்பாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு, செலுத்தி வரும் உண்மையான கவனம், அக்கறை, சிறப்பு முயற்சிகள் ஆகியவற்றையே இது காட்டுகிறது. தேசிய அளவிலான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதைத் தொடர்ந்து, உருவான மிக இடர்ப்பாடான நிதிநிலைமையில், பெரும்பாலான மாநிலங்கள், ஏழை எளிய மக்களின் நலப்பணித் திட்டங்களுக்கான தங்களுடைய நிதி ஒதுக்கீடுகளை குறைக்க வேண்டியதாயிற்று. ஏழை மக்களைப் பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான நிதியொதுக்கீடு உயர்த்தப்பட வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட நிதியொதுக்கத்தில் ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு முன்எப்போதும் இருந்திராத அளவிற்கு ரூ.1599 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து இம்மாமன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர்.

25. நாம் வகுத்துள்ள ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கிய விரிவானதொரு திட்டமாகும்:-

உணவுப் பொருள் வழங்கலில் உத்திரவாதம்.

முதியோர், கருவுற்ற தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோருக்குச் சத்துணவு.

ஏழை மக்களுக்கு தொடக்கச் சுகாதார வசதி மற்றும் மருத்துவப்பணிகள்.

அனைவருக்கும் தொடக்கக் கல்வி.

ஏழை மக்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டங்கள்.

இன்றியமையாக் குடிநீர் வசதி.

வீடில்லாதவர்களுக்குப் புகலிடமளித்தல்.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்.

நலிவடைந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள்.

26. 1994–95 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ள மொத்த ஒதுக்கீடு, 1993–94 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டைவிடப் பெருமளவு உயர்ந்துள்ளது. ஏழை மக்களின் பாதுகாப்பும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலுமே இவ்வரசின் நோக்கமாகும். சமூக நலத்துறைகளுக்கு அதிக அளவு நிதியொதுக்கீடு செய்வதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என்பதை இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் மேற்கொண்ட ஓர் ஆய்வு காட்டுகிறது. 1993–94 ஆம் ஆண்டில், தமிழ் நாட்டில் சமூகப் பணிகளுக்கான செலவு, மொத்தச் செலவுத் தொகையில் 41 சதவீதமாகும். சிறப்பு வகை சாரா மாநிலங்களுக்கிடையே மிக அதிகமானவற்றுள், இது ஒன்றாகும். புதிய பொருளாதாரக் கொள்கையையொட்டிப், பெருமளவிலான பொருளாதார வளர்ச்சியை எட்ட நாம் முயற்சித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், ஏழை மக்களின் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிடுவதில் மிகவும் பெருமைப் படுகிறோம். நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வகுத்தளித்த இத் தொலைநோக்குத் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திட்டங்களும் தமிழ்நாட்டின் இணக்கமான சமூக உறவுநிலையை மேலும் வலுப்படுத்தப் பெரிதும் உதவியுள்ளன.

## நிதி நிலைமை

27. நான் கோடிட்டு காட்டியுள்ள திட்டப்பணிகளையும், திட்டங்களையும் மேற்கொள்ளத் தேவைப்படும் நிதி ஆதாரங்களைக் கண்டறிகின்ற கடுமையான பொறுப்பு குறித்து இப்போது எடுத்துக்கூறி, வரவு செலவுத் திட்டத்தை சமநிலைப் படுத்த விழைகிறேன். இந்த அரசு பதவி ஏற்றபோது நிலவிய மிகச்சோதனையான நிதி இடர்ப்பாடு மிகுந்த சூழ்நிலையை இம்மாமன்ற உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இம் மாநிலத்தின் நிதிநிலைமை கிட்டத்தட்ட சீர்குலையக்கூடிய நிலையில் இருந்தது. திட்ட ஒதுக்கீட்டைக் குறைப்பது தவிர்க்கமுடியாதெனக் கருதப்பட்டது. இந்த நிலையைக் கடந்து உறுதியான நிலையை எய்துவதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். அதைவிடவும் முக்கியமாக, 1991–92, 1992–93 ஆகிய இரு ஆண்டுகளிலுமே ஒப்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டையும் மிஞ்சி நாம் சாதனை

படைத்துள்ளோம். 1993-94 ஆம் ஆண்டில் மீண்டும் அதே சாதனையை படைக்கவிருக்கிறோம். 1994-95 ஆம் ஆண்டுக்கு ரூ.2750 கோடி என்ற உயரிய ஒதுக்கீடு நிர்ணயித்துள்ளோம். இந்தச் சாதனை அளவை எய்த நாம் மிகுந்த திறமையுடனும் உறுதியுடனும் செயலாற்ற வேண்டியிருக்கும்.

## வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

28. 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.6989 . 89 கோடி ஆகவும், வருவாய்க் கணக்கில் மொத்தச் செலவு ரூ.8300.87 கோடி ஆகவும் , வருவாய்ப் பற்றாக்குறை (-)ரூ.1310.98 கோடி ஆகவும் இருந்தது. தொடக்க மதிப்பீட்டுப் பற்றாக்குறை (-)ரூ.275 . 94 கோடி, எல்லாக் கணக்குகளிலும் உள்ள பற்று வரவுகளின் நிகர விளைவு (-) ரூ.359.95 கோடி. புதிய வரிகள், மற்றும் சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நிகர மிச்சம் ரூ. 80 கோடி ஆகியவை அனைத்தையும் சேர்த்து மொத்தப் பற்றாக்குறை (-)ரூ.555.89 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

29. சரிக்கட்டப்படவேண்டிய பற்றாக்குறை மிக அதிகமாக இருந்ததால், திட்டஒதுக்கீட்டை எவ்விதத்திலும் குறைக்காமல், நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நாம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதாயிற்று. 1993-94 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ.7215 . 13 கோடி எனவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ8407.41 கோடி எனவும், வருவாய்க்கணக்கில் இறுதி பற்றாக்குறை (-) ரூ. 1192 .28 கோடி எனவும் காட்டுகிறது. தொடர்ந்து அதிகரித்துக்கொண்டேயிருக்கும் வருவாய்ப் பற்றாக்குறைப் போக்கினைக்.கட்டுப்படுத்த நாம் முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். 1992-93 ஆம் ஆண்டின் இறுதியில் இறுதி இருப்பான ரூ.32 கோடியுடன் எல்லாக் கணக்குகளிலும் நடைபெற்ற பற்று வரவுகளின் நிகர விளைவான (-) ரூ.228.82 கோடியையும் சேர்த்து, 1993-94 ஆம் ஆண்டின் முடிவில், இறுதி பற்றாக்குறை (-)ரூ.196.82 கோடியாக் இருக்குமென மதிப்பிடப்படுகிறது. ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கு நிதியொதுக்குகின்ற அதே வேளையில் 1993-94 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கும் கீழாக ஒட்டுமொத்தப் பற்றாக் குறையைக் குறைப்பதில் நாம் வெற்றி கண்டுள்ளோம் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

30. 1994-95 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்க்கணக்கில் வரவு ரூ.7844.37 கோடியாகவும், வருவாய்க்கணக்கில் செலவு ரூ.9083 .53 கோடியாகவும், இதனால் நிகர வருவாய்ப் பற்றாக்குறை (-) ரூ1239.16 கோடியாகவும் இருக்குமென மதிப்பிடப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைத்துக் கணக்குகளின்கீழ் வரும் பற்று-வரவுகளின் நிகர விளைவு, (-) ரூ201.23 கோடி பற்றாக்குறையாக இருக்கும். 1993-94 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இறுதி பற்றாக்குறை (-)ரூ.196.82 கோடியுடன், இதனையும் சேர்த்தால் 1994-95 ஆம் ஆண்டு இறுதியில் ஒட்டு மொத்தப் பற்றாக்குறை (-)ரூ.398.05 கோடியாக இருக்கும்.

31. அகண்டு விரிந்து வரும் வருவாய்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கக் கூடுதலாகக் கடன் பெறுவதே நம்முடைய கடந்தகால உத்தியாக இருந்தது. இது மிகவும் இன்றியமையாத நடவடிக்கையாகும். இல்லை எனில், ஏழை மக்களின் நலப்பணித்திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை அல்லது திட்ட ஒதுக்கீட்டை நாம் குறைக்க வேண்டியதிருந்திருக்கும். திட்ட ஒதுக்கீட்டில் எவ்விதக் குறைவுக்கும் இடந்தரலாகாது என்றும் எந்த ஒரு சூழ்நிலையிலும் ஏழை எளியோருக்கான நலப்பணித்திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டளவைக் குறைக்க நாம் அனுமதிக்கக்கூடாது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய கருத்தில் மிகத் தெளிவாக இருந்ததால் நாம் கடன் வாங்கும் உத்தியையே மீண்டும் பின்பற்றவேண்டியதாயிற்று. இக்கடன்கள், நம்முடைய கடன் பணிச்சுமையை மேலும் அதிகரித்துள்ளன. நமது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு அனுமதிக்கப்படும் நீக்கு போக்கற்ற பற்றாக்குறையான நிதி ஆதாரங்களைக் கருத்திற்கொண்டு செலவு வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நீண்டகால உத்திகள் பற்றி நான் சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையை தாக்கல் செய்து ஆற்றிய உரையில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்.

## செலவுக் கொள்கை

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

ஒருவரது பொருள் போகும் செலவின வழி விரிவடையாது இருந்தால், அவரது பொருள் வரும் வருவாய் வழி சிறியதாக அமைந்து இருந்தாலும், அதனால் அவருக்குக் கேடு ஒன்றும் ஏற்பட்டுவிடாது, என்பது வள்ளுவப் பெருநந்தகையாரின் வாக்கு.

32. இந்த வாக்கை மனதிற் கொண்டு வகுக்கப்பட்டுள்ள செலவுக் கொள்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் முழு மனதோடு ஆதரிப்பர் என்பதில் எனக்கு ஐயமில்லை.

33. கடந்த ஆண்டில் நான் குறிப்பிட்ட செலவுக் கொள்கை அறிவிப்பை நாங்கள் நடைமுறைப் படுத்தியுள்ளோம். இத்தருணத்தில் இம் மாமன்றத்தின் முன் சில விவரங்களைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன். தமிழ் நாட்டில், இத்திட்டத்தில் சேராத வருவாய்க்கணக்கிலான செலவு, 1992–93 ஆம் ஆண்டு இறுதி வரையிலான கடந்த ஐந்தாண்டுகளில், ஆண்டு ஒன்றிற்கு சராசரியாக 22.6 சதவீதம் என்ற வீதத்தில் உயர்ந்துள்ளது. அதே சமயத்தில், மாநிலத்தின் சொந்த வருவாய் 19.2 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை அதிகரிப்புக்கு இதுவே முக்கியக் காரணமாகும். இது கட்டுப்படுத்தப்படவேண்டும். செலவு வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இப்பணியில் இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் முழு ஆதரவையும் அரசுக்கு நல்க வேண்டும். நடைமுறையில், பயனுள்ள செலவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவது கடினம் என்பதை நான் அறிவேன். பல்வேறு திட்டங்களுக்கு அதிக நிதி வேண்டி கோரிக்கைகள் வந்துகொண்டே இருக்கின்றன. ஏழை மக்களின் நலத்திட்டங்களுக்காக மட்டுமே நிதிபெறப்படுகிறது என்பதையும், அவர்களோடு ஒப்பிடுகையில் தேவை குறைவாக உள்ளவர்களுக்கு நிதி ஒதுக்கப்படாமலும் பார்த்துக் கொள்வதிலும் நாம் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். செலவுக் கட்டுப்பாடு தொடர்பாக முன்னுரிமை அளிகக வேண்டிய சில துறைகளைப் பற்றி இங்கே குறிப்பிட விழைகிறேன்.

34. மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் குறித்த புதிய கருத்து, அரசுப் பணிகளில் புகுத்தப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும். இந்நோக்கத்துடன்தான் பல்வேறு துறைகளில் வீணான நடவடிக்கைகளைக் களைந்து அவற்றின் செயல் திறனை மேலும் உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு "விரைந்த வளர்ச்சிக்காக தொடக்கநிலையிலிருந்து வரவு–செலவுத் திட்டமிடும் முறையை" (ze-Bag) நாங்கள் கொண்டுவந்துள்ளோம். செலவைக் குறைத்து சீரமைக்கும் பொருட்டு, ஆட்சேர்ப்பு நிலையிலேயே புதிய நியமனங்களை நிறுத்தி வைக்கும் நடைமுறையை அறிமுகம் செய்தோம். இது வேலை வாய்ப்பு மறுப்பு எனத் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டதால், இந்தத் தடை திரும்பப் பெறப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக தேவையான இடங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட மாற்றங்களைச் செய்யவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். சம்பளங்கள், ஊதியங்கள், ஓய்வூதியங்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் வெகுவாக அதிகரித்துள்ளது என்பதும், இந்த வகையில் நாம் சில திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதும் நாம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான பிரச்சினையாகும்.

35. இரண்டாவதாக, விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளதால், நாம் அளித்துவருகின்ற பல்வேறு சலுகைகளுக்கு அதிக செலவாவதுடன் இச்சலுகைகள், வளர்ச்சிப்பணிகளுக்குப் பயன்படுத்தப் போதிய நிதி கிடைக்காமல் செய்து விடுகின்றன. இச்சலுகைகளை எந்த வகையிலும் திரும்பப் பெறாமல் உண்மையில் தேவைப்படுகின்ற, ஏழை எளிய மக்களுக்கு இச்சலுகைகள் கிடைக்கச் செய்ய நாம் முயற்சிக்க வேண்டும். நிதி ஆதாரப் பற்றாக்குறை நிலவும் இத் தருணத்தில் இச்சலுகைகள் உண்மையிலேயே தேவைப்படும் ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேருவதை உறுதிப் படுத்த வேண்டியது மிக முக்கியமாகிறது. இத்தகைய திட்டங்கள் அனைத்தையும் பற்றி விரிவாக ஆய்வு செய்து, பயன்கள் உரியவர்களைச் சென்று சேருவதை உறுதிப்படுத்த உத்தேசித்துள்ளோம்.

36. மூன்றாவதாக, செலவுத்தொகை போதிய அளவில் திரும்ப வசூலாகாத அரசுப் பணிகள் பல உள்ளன. பொருத்தமான கட்டணங்களை விதிப்பதன் மூலம் அரசுக்கு ஏற்படும் நிகரச் செலவைக் குறைக்க முடியும். இதனை உயர் கல்வித்துறையிலும், மருத்துவப் பணிகளிலும், பாசனம் போன்ற சில பொருளாதாரப் பணிகளிலும் செய்ய இயலும். ஏழை எளிய மக்களுக்கு அளிக்கப்படும் நலப்பணிகளுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் கட்டணம் செலுத்த இயலக்கூடியவர்களிடமிருந்து பொருத்தமான கட்டணங்கள் வசூலிக்கப்படும். அரசு ஆற்றும் மற்ற பணிகளுக்கும் இவ்வாறு கட்டணம் விதிக்கப்படும். இதன் மூலம் அரசின் நிகரச் செலவுச் சுமை குறையும். கட்டணங்கள், அபராதங்கள் மூலம் கிடைக்கும் வருவாயை நாம் அதிகரிக்க வேண்டும். அனுமதியற்ற நில அனுபோகத்திற்கு உயர் வீதங்களில் கட்டணம் விதிக்கப்படவேண்டும். ஏழைகளல்லாதோருக்கு அரசு ஆற்றும் அனைத்துப் பணிகளிலிருந்தும் கிடைக்கும் வருவாயை அதிகரிப்பதில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

37. நான்காவதாக, பொதுத்துறை நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்வதற்காக அளிக்கப்படும் நிதி ஆதரவை 1994–95 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்திவிட நாங்கள் முடிவு செய்துள்ளோம். கடந்த காலத்தில் அரசுக்கு ஏற்படும் நிதி பளுவையும் பொருட்படுத்தாது, நட்டத்தில் இயங்கி வந்த நிறுவனங்களுக்கு இத்தகைய நிதியுதவியை அளித்துவந்தோம். அதிகரித்து வரும் அரசின் கடன் பணிச்சுமையை கருத்திற்கொண்டு இனிமேலும் இவ்வாறு நிதியுதவி அளிக்க இயலாது. பொதுத்துறை நிறுவனங்களுக்கு ரொக்க இழப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதற்காக இந்நிறுவனங்களை நட்டத்திலிருந்து மீட்கும் திட்டத்தை (Turn around plan) ஏற்கெனவே செயற்படுத்தியுள்ளோம். சில பொதுத்துறை நிறுவனங்கள் தொடர்ந்து இழப்பில் இயங்கி வந்தால், அவற்றைத் தனியார் வசம் ஒப்படைக்க நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். இந்த அனைத்து

அம்சங்களையும் கருத்திற் கொண்டு அவற்றை ஒவ்வொன்றையும் தனித் தனியாக எடுத்துப் பரிசீலிக்கவிருக்கிறோம்.

38. ஐந்தாவதாக, அரசுச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கான பல விரிவான நடவடிக்கைகளை நாங்கள் அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்நடவடிக்கைகள் முனைப்பான மெய்யார்வத்துடன் செயற்படுத்தப்படும்.

39. நான் மேலே குறிப்பிட்ட பல நடவடிக்கைகள் மூலமாக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ. 95 கோடி அளவுக்கு சேமிப்பை ஏற்படுத்துவதே நமது நோக்கமாகும். இந்த இலக்கை எய்துவதற்குத் தேவையான அனைத்து ஆதரவும் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## வரிகள்

## விற்பனை வரி

40. கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நாம் நீண்ட கால நோக்குடன் விற்பனை வரி விதிப்பு முறைகளில் மேற்கொண்ட மாபெரும் சீரமைப்புத் திட்டங்களை இம்மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இச்சீரமைப்புகள் வரி வீதமுறையை எளிமைப்படுத்துவதில் ஒரு மிகப் பெரிய நடவடிக்கை என்று அனைவரும் பாராட்டியுள்ளார்கள். வரி வீதங்களை சீரமைத்தல், மேலும் சில மூலப் பொருட்கள், பயன்படு பொருட்கள் (Consumables) மற்றும் செறிவுப் பொருட்கள் (packing materials) இவற்றுக்கு சலுகை வரிவீதம் விதிக்கப்படுதல், மொத்த விற்பனை அளவு ரூபாய் ஒரு இலட்சம் வரை வரி விலக்கு வரம்பை உயர்த்தியது, இவையெல்லாம் ஒரு மிகப் பெரிய சீர்திருத்தம் என்று பாராட்டப்பட்டுள்ளது.

41. வரி வீதத்தைச் சீர்திருத்தி அமைத்தல், மற்றும் எளிதாக்குதல் ஆகியவற்றை தொடர்வதே நமது நோக்கமாகும். அடுக்கு வரி முறையைக் (Cascading of Taxes) குறைக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். இதனடிப்படையில் பிரிவு 3 (3)ன் கீழான சலுகை வரி வீதத்தை மூலப் பொருட்களாக உபயோகிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்பட்ட சில கனிம எண்ணெய்கள் மற்றும் பலதரப்பட்ட வாயுக்கள் இவைகளுக்கு நீட்டிக்க முடிவு செய்துள்ளோம். அதேசமயம் எரி பொருளாகப் பயன்படுத்தப்படும் டீசல் எண்ணெய் பிரிவு 3(3)ன் கீழான சலுகை வரி வீதத்தில் வராது. மேற்கொண்டவற்றை அமல்படுத்த, தேவையான சட்டத் திருத்தங்கள் கொணரப்படும்.

42. கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கையின்போது, விற்பனை வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டு அதற்காக வரி ஏய்ப்பு அதிகமாக ஏற்படக் கூடிய சில இனங்களை அட்டவணை VI -ல் கொணர முற்பட்டோம் என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இந்நடவடிக்கை நல்ல பலனைத் தந்துள்ளது. எனவே கீழ் கண்ட இனங்களையும் அட்டவணை VI ல் இப்போது சேர்க்க முற்படுகிறோம்.

| வரிசை எண் | பொருட்கள் | வரிவீதம் |
|---|---|---|
| 1 | முன்னதாகப் பதிவு செய்யப்பட்ட (ஆடியோ மற்றும் வீடியோ) கேசட்டுகள் மற்றும் காம்பேக்ட் டிஸ்க்கள் | 3% |
| 2 | உடனடிக் காப்பித்தூள் | 5% |
| 3 | வாசனையூட்டப்பட்ட பாக்கு, வறுக்கப்பட்ட அல்லது வாசனையூட்டப்பட்ட சீவல் | 8% |
| 4 | எஃகு அலமாரிகள், அலுவலகச் சாதனங்கள் முதலியன | 8% |
| 5 | பிஸ்கட், டாபிஸ்(Toffees) மற்றும் இதர பெயரிடப்பட்ட இனங்கள் | 12% |
| 6 | சோப்புகள் | 12% |
| 7 | பற்பசை, பற்பொடி | 12% |
| 8 | வாசனைத் திரவியங்கள், நறுமணத்–திரவியங்கள் (Perfumes) கூந்தல் எண்ணெய் முதலானவை | 16% |
| 9 | பெட்டிகள் (Suitcases) முதலானவை | 8% |
| 10 | காய்கறி எண்ணெய் (Vegetable oil) | 3% |
| 11 | வெட்டப்பட்ட மரம் (Timber) | 8% |
| 12 | ஏலக்காய் | 3% |

மேற்கண்ட பொருட்களின் மீதான வரி வீதத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். வரி ஏய்ப்பைத் தடுக்கும் முகத்தான்

இப்பொருட்களை' அட்டவணை VI ல் சேர்ப்பது ஒன்றே செய்யப்படும் மாற்றம் ஆகும்.

43. தளவாடச்சாமான்கள்(furniture) மீதான வரிவீதம் 8% ல் இருந்து 12% ஆக உயர்த்தப்படுவதோடு, அட்டவணை VI ல் தனியானதோர் இனமாக தளவாடச் சாமான்கள் சேர்க்கப்படும்.

44. கடந்த ஆண்டில், வரிவீதத்தை எளிதாக்கும் வழிமுறைகளில் ஒன்றாக கட்டிட வேலை ஒப்பந்தப் பணிகளைப் பொறுத்த வரை அவர்கள் விரும்பினால் கூட்டமைப்பு வரி விதிப்பு முறைக்குள் (compounding) வரலாம் என்ற முறையைக் கொண்டு வந்தோம். கட்டிட வேலை ஒப்பந்தப் பணிகளுக்கு 2% கூட்டமைப்பு வரிவீதம் ஒன்றும் கொண்டு வந்தோம். 1993–94ம் ஆண்டுக்கு 30.6.93 வரை இப்புதிய திட்டத்தின் கீழ் சேரலாம் என்றும் காலவரை கொடுத்திருந்தோம். இக்கால வரையை நீட்டிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வந்துள்ளன. இக்கோரிக்கைகளை கருத்திற்கொண்டு 1993–94 மற்றும் 1994–95 ஆண்டுகளில் மேற்கண்ட திட்டத்தில் சேர்வதற்கான காலவரையை 30.6.94 வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளோம்.

45. கடந்த வருட வரவு செலவுத் திட்டத்தின் போது வரி விலக்கு பெறுகின்ற பெருட்கள் அனைத்தையும் பரிசீலித்து, வரிவிலக்குத் தகுதியில்லாத பொருட்களை அடையாளம் கண்டு அவற்றை வரி விதிப்பின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று நான் குறிப்பிட்டிருந்தேன் என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். வரி வீதச் சீரமைப்பின் போது, வரி விதிப்புக்குட்பட்ட பொருட்களின் எண்ணிக்கையை அதிகரித்து, வரி விகிதங்களை முடிந்த அளவு குறைவாக வைக்க வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதிகமான பொருட்களுக்கு வரி விலக்கு அளிப்பதால் மேற்கண்ட நோக்கம் முறியடிக்கப்படுகிறது. எனவே நான் கடந்த வருடத்தில் இருந்து நாம் அமுலாக்கி வரும் எளிதாக்கப்பட்ட வரிவீதத் திட்டத்தின் ஒரு அங்கமாக, தேவையற்ற வரி விலக்கு நீக்க வேண்டும் என்பது மிகவும் அவசியமான ஒன்றாகிறது. திரு பி.விஜயராகவன், இ.ஆ.ப. அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர் மட்ட விற்பனை வரிச் சீரமைப்புக் குழு தனது அறிக்கையில் பெரும்பாலான பொருட்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட வரிவிலக்கு நீக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. சாதாரண உபயோகத்தில் உள்ள நெல், அரிசி, கோதுமை, உப்பு முதலானவற்றுக்கும் வரி விதிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இப்பரிந்துரைகளை நாங்கள் மிகவும் கவனத்துடனும் தீவிரமாகவும் பரிசீலித்தோம்.



ஏழை மக்களை விலைவாசி உயர்வில் இருந்து பாதுகாக்க வேண்டுமென்று முடிவு செய்து, ஏழை எளியோர் முக்கியமாக உபயோகிக்கும் பல பொருட்களுக்கு வரி விலக்கைத் தொடர்ந்து நீடிப்பதென தீர்மானித்துள்ளோம். அட்டவணை III ல் சேர்க்கப்பட்டு கீழ்கண்ட பொருட்களுக்கு வரி விலக்கம் தொடரும்.

* அரிசி, கோதுமை, பால், உணவு உப்பு, மாமிசம், காய்கறிகள், பழங்கள் முதலான பக்குவப் படுத்தலுக்குள்ளாகாத முதன்மை உணவுப் பொருட்கள்.
* சில விவசாய மற்றும் தோட்டக்கலை பொருட்கள்
* சில விவசாய இடுபொருட்கள்
* சில விவசாயச் சாதனங்கள்
* பந்தயக் குதிரை தவிர, பிற விலங்கினங்கள்
* மட்பாண்டங்கள் மற்றும் சில பனைப் பொருட்கள்
* குடும்ப நலப் பொருட்கள்
* இரத்தம் மற்றும் பிளாஸ்மா (Plasma) சில உயிர் காக்கும் மருந்துகள், சில நாட்டு மருந்துகள், உடல் ஊனமுற்றோருக்கான அனைத்து சாதனங்கள் மற்றும் செயற்கை உறுப்புகள்
* மரபு சாரா எரிசக்தி சாதனங்கள் (Non Conventional Energy Devices) மற்றும் நகரக் கழிவுகளைப் பயன்படுத்தும் கொதிகலன்கள்.
* சிலேட், சிலேட் பென்சில், மரத்தினாலான பென்சில்கள், சாக் கட்டிகள்
* துணிக் கழிவுகள்
* யூனிசெப் (UNICEF) வாழ்த்து அட்டைகள், காலண்டர்கள்

* சைக்கிள் ரிக்ஷா (மோட்டார் இல்லாதது)

* மின்சாரச் சக்தி

* பிளாட்டினம், தங்கம் மற்றும் வெள்ளி தவிர பிற பொருட்களால் செய்யப்பட்ட வளையல்கள்

* குங்குமம், கண் மை

* ரெடிமேட் தாலி

46. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களோடு செயற்கை வைரம், ஏற்கெனவே வரி செலுத்தப்பட்ட பேப்பரில் எடுக்கப்படும் ஜெராக்ஸ் நகல்கள், லேசர் நகல்கள், கனிமப் பொறியின் பிரிண்ட் அவுட்கள், மற்றும் மாநிலங்களுக்கிடையே விற்பனையாகும் தேங்காய் இவற்றுக்கும் வரி விலக்கு அளிக்கப்படும்.

47. வரவு செலவுத் திட்ட விவரங்களுடன் இணைந்த ஒரு தனி அறிவிக்கையில் வரி விலக்கத்தில் தொடர்ந்து இருக்கின்ற பொருட்களின் முழு விவரங்களும் தரப்பட்டுள்ளன.

48. வரி விலக்கம் நீக்கப்பட்ட பொருட்களின் விவரம் அட்டவணை ல் கொண்டு வரப்பட்டு, அவற்றின் முழு விவரமும் அடங்கிய ஒரு தனி அறிவிக்கை மாமன்றத்தின் முன்னிலையில் வைக்கப்பட்டுள்ளது.

49. நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்குகள் மிகவும் சிக்கலான மற்றும் பல்வேறு வகைப்பட்டதாக இருப்பதால் இவை பின்னர் பரிசீலிக்கப்படும்.

50. கடந்த மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூடுதல் மதிப்பு அடிப்படையில் (Value Added Tax) விதிக்கப்படும் வரி விதிப்பது குறித்து தேசீய பொது நிதிக் கொள்கை நிறுவனத்திடம் ஆலோசனை கேட்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். இம்முறைகளை அமலாக்குவதற்கு முன்னர் பல கருத்துகளை மிகவும் விரிவாக விவாதிக்க வேண்டியுள்ளது. எனவே, மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி, இவற்றை அடிப்படை வரியுடன் ஒன்று சேர்த்தல், கூடுதல் விற்பனை வரியை நுகர்வோர்களிடம் இருந்து வசூலித்தல் போன்ற அடிப்படை மாற்றங்களைச் செய்வதற்கு இது சரியான நேரம் இல்லை. உரிய நேரத்தில் மேற்கொண்டவை அனைத்தையும் ஒரு சேரப் பரிசீலிக்கலாம்.

## ஆடம்பர வரி

51. சிகரெட் பிடித்தல் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் ஒன்றாகும். இது ஒரு ஆடம்பரம் மட்டுமல்ல, அபாயகரமான ஆடம்பரம். எனவே, பீடி தவிர்த்த புகையிலைப் பொருட்களின் மீது ஆடம்பர வரி விதிக்கத் தீர்மானித்துள்ளேன். புகையிலை சம்பந்தப்பட்ட வரவு ஒரு நிதியாண்டில் ரூபாய் ஒரு இலட்சத்துக்கும் அதிகமாக இருக்கும் விநியோகஸ்தர்கள் மீது 5 சதவீத ஆடம்பர வரி விதிக்கப்படும். தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தில் தேவையான சட்டத் திருத்தங்கள் சட்டமன்றத்தின் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

## கேளிக்கை வரி

52. கேபிள் டெலிவிஷன் முறை மிக விரைவாகப் பரவி வருவதால் கேபிள் டெலிவிஷன் முறையை கேளிக்கை வரி விதிப்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று விற்பனை வரிச் சீர்திருத்த உயர் மட்டக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதனை அரசு ஏற்றுக் கொண்டு, கேபிள் டெலிவிஷன் உரிமையாளர்களின் மொத்த வரவில் 40 சதவீதம் கேளிக்கை வரியாக விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

53. நமது மாநிலத்தில் புதிய திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்குப்பதற்காகவும், பிற மொழிகளில் தயாரிக்கப்பட்டு தமிழில் மொழி மாற்றம் செய்யப்படும் (dubbed) திரைப்படங்களோடு இங்கு தயாரிக்கப்படும் குறைந்த செலவிலான திரைப்படங்கள் போட்டியிட வழிவகை செய்யவும், நம் மாநிலத்தில் திரையிடப்படும் மொழி மாற்றத் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி விகிதத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ளோம். ஒவ்வொரு வரிப்படி முறை வீதத்திலும் 10 சதவிகிதம் கூட்டப்படும்.

54. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் இந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

## ஆயத்தீர்வை

55. இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகள் சிலவற்றின்

மீதான ஆயத் தீர்வையைச் சீரமைக்க உத்தேசித்துள்ளோம். மத்திய ரகம் (Medium brand) மற்றும் உயர் ரகம் (Premuim brand) இவை இரண்டுக்கும் ஒரே வீதத்தில் ஒரு புரூப் லிட்டருக்கு ( Per proof litre) ரூபாய் 75/- என்ற வீதத்தில் ஆயத்தீர்வை விதிக்கப்படும். தற்போது ஆயத்தீர்வை மத்திய ரகத்துக்கு ஒரு புரூப் லிட்டருக்கு ரூ.70/- என்ற வீதமும், உயர் ரகத்துக்கு ஒரு புரூப் லிட்டருக்கு ரூபாய் 85/- என்ற வீதமும் நடைமுறையில் உள்ளது. மாற்றியமைக்கப்பட்ட ஆயத்தீர்வை ஏப்ரல் 1, 1994 முதல் அமலுக்கு வரும்.

## மோட்டார் வாகன வரி

56. எடைக் குறைவான (Light) மோட்டார் வாகன வரி அமைப்பில் சில மாறுதல்களைச் செய்ய உத்தேசித்துள்ளோம். தற்போது நடைமுறையில் உள்ள வரி வீதங்கள் பின்வருமாறு:-

| சுமையில்லாத எடை | இறக்குமதி செய்யப்பட்டது | இந்தியாவில் செய்யப்பட்டது | |
|---|---|---|---|
| | | நிறுவனத்துக்கு சொந்தமானவை | மற்றவை |
| | (ஆண்டொன்றுக்கு ரூபாய்) | | |
| 700 கிலோ வரை | 1200 | 800 | 400 |
| 700 கிலோவுக்கு மேல் ஆனால் 1500 கிலோ வரை | 1500 | 1000 | 500 |
| 1500 கிலோவுக்கு மேல் ஆனால் 2000 கிலோ வரை | 1800 | 1200 | 600 |
| 2000 கிலோவுக்கு மேல் ஆனால் 3000 கிலோ வரை | 1950 | 1300 | 650 |
| 3000 கிலோவிற்கு மேல் | 2250 | 1500 | 750 |

57. இந்த வரி வீதங்களைப் பின்வருமாறு மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| சுமையில்லாத எடை | இறக்குமதி செய்யப்பட்டது | இந்தியாவில் செய்யப்பட்டது | |
|---|---|---|---|
| | | நிறுவனத்துக்கு சொந்தமானவை | மற்றவை |
| | (ஆண்டொன்றுக்கு ரூபாய்) | | |
| 700 கிலோ வரை | 1500 | 1000 | 500 |
| 700 கிலோவுக்கு மேல் ஆனால் 1500 கிலோ வரை | 1950 | 1300 | 650 |
| 1500 கிலோவுக்கு மேல் ஆனால் 2000 கிலோ வரை | 2250 | 1500 | 750 |
| 2000 கிலோவுக்கு மேல் ஆனால் 3000 கிலோ வரை | 2400 | 1600 | 800 |
| 3000 கிலோவிற்கு மேல் | 2700 | 1800 | 900 |

58. சாதாரண வாடகை சீருந்து (மீட்டர் பொருத்தப்பட்டது) ஒன்றுக்கு காலாண்டுக்கு ரூபாய் 120 என்ற வீதத்தில் தற்போது வரி வசூலிக்கப்படுகிறது. இதனைக் காலாண்டுக்கு ரூபாய் 150 ஆக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

59. சுற்றுலா வாடகைச் சீருந்து மீது தற்போது காலாண்டுக்கு ரூபாய் 150 ஆக உள்ள வரி வீதத்தை காலாண்டுக்கு ரூபாய் 200 ஆக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

60. பெரிய வாடகை சீருந்தைப் (Maxi cab) பொறுத்த வரை காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 125 என்ற தற்போதுள்ள வரி காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 150 என்ற வீதத்தில் மாற்றியமைக்கப்படும்.

61. அகில இந்திய அளவிலான சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகளுக்கு (Omni Bus) தற்போது காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 500 என்ற வீதத்தில் வரி வசூலிக்கப்படுகிறது. மற்ற சாதாரண ஒப்பந்தப் பேருந்துகளுக்கு விதிக்கப்படுவது போல அகில இந்திய சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகளுக்கும் இனி காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூபாய் 1000 வீதம் வரி வசூலிக்கப்படும்.

62. சரக்கு வண்டிகள் மீதான வரி வீதங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

| சுமையுடன் கூடிய எடை | தற்போதைய காலாண்டு வரி | புதிய காலாண்டு வரி |
|---|---|---|
| | (ரூபாயில்) | |
| 3000 கிலோவிற்குள் | 520 | 545 |
| 3000 கிலோவிற்கு மேல் 5500 கிலோ வரை | 845 | 885 |
| 5500 கிலோவிற்கு மேல் 9000 கிலோ வரை | 1290 | 1355 |
| 9000 கிலோவிற்கு மேல் 12000 கிலோ வரை | 1690 | 1775 |
| 12000 கிலோவிற்கு மேல் 13000 கிலோ வரை | 1840 | 1930 |
| 13000 கிலோவிற்கு மேல் 15000 கிலோ வரை | 2190 | 2300 |
| 15000 கிலோவிற்கு மேல் | 2190 உடன் 15000 கிலோவுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 250 கிலோ விற்கும் அதன் பகுதிக்கும் ரூபாய் 50 கூடுதலாக | 2300 உடன் 15000 கிலோவுக்கு மேற் பட்ட ஒவ்வொரு 250 கிலோவிற்கும் அதன் பகுதிக்கும் ரூபாய் 50 கூடுதலாக |

63. பேருந்துகள் மீதான வரி வீதம் கீழ் கண்டவாறு மாற்றியமைக்கப் படுகிறது.

| | இருக்கை ஒன்றுக்கு தற்போதைய காலாண்டு வரி | இருக்கை ஒன்றுக்கு புதிய காலாண்டு வரி |
|---|---|---|
| | (ரூபாயில்) | |
| விரைவுப் பேருந்துகள் | 300 | 360 |
| கிராமப்புறங்களில் இயங்குபவை | 325 | 360 |
| நகர்ப் பகுதிகளில் இயங்குபவை | 260 | 275 |
| மாநகரப்பகுதிக்குள் இயங்குபவை | 50 | 60 |

தற்போதுள்ள மேல் வரி வீதங்களில் மாற்றம் ஏதுமில்லை.

64. அங்கீகாரம் பெற்றுள்ள கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு, தற்போது ஆண்டுக்கு ரூபாய் 1500 என்றுள்ள வரிவீதம் ஆண்டுக்கு ரூபாய் 2000 ஆக மாற்றியமைக்கப்படும். மேலும் அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு தற்போது காலாண்டுக்கு ரூபாய் 110 என்றுள்ள வரிவீதம் காலாண்டுக்கு ரூபாய் 500 ஆக மாற்றியமைக்கப்படும். இதன் மூலம் அங்கீகாரம் பெற்றுள்ள கல்வி நிறுவனங்கள், அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்கள் இரண்டுமே ஒரே வரி வீதத்தில் கொண்டுவரப்படும்.

65. முன்னர், ரிக் வைத்த வாகனங்கள் (Rig mounted vehicles) சரக்கு வாகனங்களாக கருதப்பட்டிருந்தன. ஆனால் மத்திய அரசு சமீபத்திய அறிவிக்கை ஒன்றின் மூலம் ரிக் வைத்த வாகனங்களைப் போக்குவரத்துக்கல்லாத வாகனங்கள் (Non-Transport Vehicles) என வகை மாற்றம் செய்துள்ளது. எனவே, நாமும் தமிழ்நாடு மோட்டர் வாகன வரிச் சட்டம் 1974ன் முதலாவது அட்டவணையில், ரிக் வைத்த வாகனங்களை ஒரு தனி வகையாகக் கொண்டு வர உத்தேசித்துள்ளோம்.

அவற்றுக்கு வாகன சுமையுடன் எடை எதுவாக இருந்தாலும் வாகனம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூபாய் 2500 ஒட்டு மொத்த வரியாக விதிக்கப்படும்.

66. நான் மேலே அறிவித்துள்ள புதிய வரி வீதங்கள் ஏப்ரல் 1, 1994 முதல் அமலுக்கு வரும்.

## மின் வரி

67. 1962 ஆண்டு தமிழ்நாடு மின்சாரம் (பயன்படுத்துதல் மீது வரி விதித்தல்) சட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படும் மின்சாரம் மீது வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மின் கட்டணத்தில் 4 சதவீதம் தற்போது வரியாக வசூலிக்கப்படுகிறது. இதற்கிடையில் கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்போது 1958ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பொதுவான விற்பனை வரி வீதங்களைச் சீரமைத்து 1, 3, 5, 8, 12, 16, 20, 25, 50 சதவீதம் என மாற்றியமைத்தோம். அனைத்து வரி வீதங்களும் புதிய திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இம்மாற்றத்தோடு இணைந்து இருக்குமாறு மின்சார விற்பனை மீதான வரியும் 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக ஏப்ரல் 1, 1994 முதல் சீரமைக்கப்படும். குடிசை இணைப்புகள் உள்ளிட்ட அனைத்து வீடுகளுக்கான இணைப்புகளுக்கும், விவசாய இணைப்புகளுக்கும், சுய மின்சார உற்பத்திக்கும் தொடர்ந்து இவ்வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். புதிய வரி வீதத்தை அமலுக்குக் கொண்டு வரத் தேவையான புதிய சட்டத்திருத்தம் இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

## விவசாய வருமான வரி

68. பலவிதமான தோட்டப்பயிர்களின் பயன் தரு ஆயுட்காலத்தில் (Economic life) அடிப்படையில் அப்பயிர்களைத் திரும்பவும் நடுவதற்காகும் செலவினங்களுக்கான வருமானக் கழிவின் வீதங்கள் விவசாய வருமான வரிச் சட்டம் பிரிவு 5 (எ)யின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. சமீபகாலத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில் நுட்ப மாறுதல்களினாலும், அதிக விளைச்சல் தரும் பயிர் வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாலும், பல தோட்டப் பயிர்கள் தற்போது குறைவான பயன்தரு ஆயுட்காலம் உடையனவாகியுள்ளன. எனவே, பயிர்களைத் திரும்பவும் நடுவதற்காகும் செலவினங்களுக்காக அனுமதிக்கப்படும் வருமானக் கழிவினை பிரிவு 5 (எ)ன் கீழ் அடியிற் கண்டவாறு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேயிலையைப் பொறுத்தவரை மொத்த பரப்பளவில் 2.5 சதவீதம் ஆகவும், இரப்பருக்கு 3.33 சதவீதமாகவும் ஏலக்காய்க்கு 10 சதவீதமாகவும் இது அமையும்.

69. விவசாய வருமான வரிச் சட்டம் பிரிவு 5 (ஒ) ன் கீழ் தற்போது கடனாகப் பெறப்பட்ட நடைமுறை முதலீட்டிற்கான (Working capital) வட்டிச் செலவினத்திற்காக அனுமதிக்கப்படும் அளவானது, விவசாய வருமானத்தின் 25 சதவீதத்தில் 9 சதவீதம் மட்டுமே. இதனை எளிமையாக்கும் பொருட்டு நடைமுறை முதலீட்டின் வட்டிச் செலவினத்தை முழுவதுமாக வருமானக் கழிவிற்கு அனுமதிக்குமாறு இப்பிரிவை மாற்றி அமைக்க முடிவு செய்துள்ளோம்.

70. தற்போது போனஸ், சேமநல நிதி, பணிக் கொடை மற்றும் தொழிலாளர்களுக்குத் தரப்படும் இதரச் சலுகைகளுக்கான செலவினத்தை அனுமதிப்பதில் சில கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன, இவ்வினங்களைப் பொறுத்த வரை, விவசாய வருமான வரிச் சட்டத்தின் அம்சங்கள், 1961ம் ஆண்டு வருமானவரிச் சட்டத்தில் உள்ளது போன்று இருக்குமாறு விவசாய வருமான வரிச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய உத்தேசித்துள்ளோம்.

71. இம்மாறுதல்கள், 1994–95 வரிவிதிப்பு ஆண்டிலிருந்து அமலுக்கு வரும்.

## முடிவுரை

72. 1994–95 ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை (–)ரூ. 398.05 கோடியாக இருக்குமென நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன். செலவினங்களில் சிக்கனம், அரசு ஆற்றுகின்ற பணிகளிலிருந்து நல்ல வருவாய், ஏழை எளிய மக்களுக்கு நன்மை தரக்கூடிய திட்டங்களைச் சிறந்த முறையில் நிறைவேற்றி முடித்தல், ஆகியவை தொடர்பான நடவடிக்கைகள் மூலமாக நமக்கு ரூ.95 கோடி நிகர சேமிப்பாகக் கிடைக்கும். இங்கு நான் குறிப்பிட்ட பல்வேறு வரி விதிப்பு நடவடிக்கைகளின் பயனாக ரூ. 48 கோடி கிடைக்கும். இதனால், 1994–95 ஆம் ஆண்டுக்கான நிகர இறுதிப் பற்றாக்குறை (–)ரூ. 255.05 கோடியாக இருக்கும். 1993–94 ஆம் ஆண்டுக்கான இறுதிப் பற்றாக் குறையைக் கட்டுப்படுத்தி, அதன் மூலம், 1994–95 ஆம் ஆண்டுக்கான ஒட்டு மொத்த பற்றாக் குறையைச் சமாளிக்க முடியும் என்று நம்புகிறோம்.

73. விரிந்து கொண்டே செல்லும் வருவாய்ப் பற்றாக்குறை, திட்டத்தில் சேராத வருவாய்க் கணக்கின் கீழ் தொடர்ந்து நிலவி வரும் பற்றாக்குறையை ஈடு

செய்வதற்காக மானியங்கள் வழங்குகையில், பத்தாம் நிதிக் குழு தமிழ் நாட்டின் நிலைமையையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. தமிழ் நாட்டுக்கு நிதி வகையில் நீதி கிடைப்பதற்காக பத்தாம் நிதிக் குழுவுக்கு நம்முடைய நிலையை எடுத்துக் கூறுவதில் அனைத்து முயற்சிகளையும் நாம் மேற் கொள்வோம்.

74. மாநிலங்களுக்கு அதிகப் பங்கு கிடைக்கும் வகையில் அடிப்படை ஆயத் தீர்வையின் கீழ் வருவாய் வசூலை மேம்படுத்த மத்திய அரசு வரும் ஆண்டுகளில் நடவடிக்கைகள் எடுக்குமென்று நம்புகிறோம். 1994–95 ஆம் ஆண்டில், சில நிவாரணங்கள் அளிப்பதற்காக இவ்வரியின் கீழ் கிடைக்கும் பங்கு அதிகரிக்கும் என்றும் நம்புகிறோம். நகர்ப் பகுதி அடிப்படை வசதி, குடி நீர் வழங்கல், மின் சக்தி ஏனைய பணிகள் ஆகியவற்றிற்குத் தேவையான நிதி திரட்டுவதற்காகப் பத்திரங்கள் வெளியிடுவது பற்றிய எங்கள் விருப்பத்தை மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவரிடம் ஏற்கெனவே உணர்த்தியுள்ளோம். இந் நடவடிக்கைகளின் பயனாக நம்மால் கணிசமான அளவுக்கு நிதி திரட்ட முடியும் என்று நம்புகிறோம். இந்நடவடிக்கைகளின் வாயிலாகவும் புதிய திட்டம் சாரா பணிகளுக்கான செலவுகள் குறித்து மும்முரமான கட்டுப்பாடு நடவடிக்கைகள் வாயிலாகவும், 1994–95 ஆம் ஆண்டில் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அதே நேரத்தில் ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.2750 கோடியையும் எய்த முடியும் என்றும் உறுதியாக நம்புகிறோம்.

75. தமிழ் நாட்டை வளமிக்க வளர்ச்சிப் பாதையில் மேலும் இட்டுச் செல்ல புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழ் நாட்டு மக்கள் பெரும் வெற்றியை வழங்கினார்கள். தமிழக மக்கள், இவ்வரசு மீது வைத்துள்ள அளவற்ற நம்பிக்கை பொய்க்காத வகையில் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் அமைதியும் நல்லிணக்கமும் மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டுப் போராளிகளினாலும் தீவிரவாதிகளினாலும் ஏற்பட்ட அச்சுறுத்தல் வேருடன் களையப் பட்டுவிட்டது. வரும் ஆண்டுகளிலும் இவ்வரசு இந்த உன்னதமான சாதனையைத் தொடர்ந்து எய்த இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்று தமிழக மக்கள் பெரிதும் நம்புகின்றனர். விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டம், ஏழை எளிய மக்களின் நிலையைப் பெரிதும் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதை உறுதிப்படுத்தியுள்ளது. நமது திட்டமிட்ட, வளர்ச்சி தமிழகத்தை உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் செல்ல உதவியிருக்கிறது. இது, திட்ட நிதி யொதுக்கீட்டை உயர்த்தி, அதை நிறைவேற்றுவதில் பெரும் சாதனை படைத்ததிலிருந்து தெரிய வரும். இந்த உன்னதமான சாதனையைத் தொடர்ந்து ஆர்வத்துடன் கட்டிக் காக்க வேண்டும்.

76. தமிழக மக்களுக்கு சிறந்த நல்ல வாழ்க்கைத் தரம் அமைத்துத் தருவோம் என்று சூளுரைத்துள்ளோம். நமது பயணத்தில் பல சோதனைகளையும் வேதனைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்களின் நலனுக்காக ஒவ்வொரு மன்றத்திலும் குரல் எழுப்பியுள்ளார்கள். அவருடைய தன்னலமற்ற விருப்பார்வச் செயல்பாடு, தொலைநோக்குப் பார்வை ஆகியவையே இவ்வரசு, ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது நிலவிய மிகுந்த இடர்ப்பாடான நிலைமையிலிருந்து மீண்டும் தமிழகம் வளர்ச்சிப் பாதையில் நடைபோட துணை புரிந்தன. தமிழகம் இன்று அமைதிப் பூங்காவாகத் திகழ்வதுடன் அதன் மக்களுக்கு சிறந்த வாழ்க்கையைப் பெற்றுத் தருவதற்கான உறுதியுடன் முன்னேற்றப் பாதையில் நடைபோடுகிறது. இவ்வரசு உறுதியாகப் பின்பற்றி வரும் நேர்மறை செயல் கொள்கையினால், ஏழை எளிய, வசதியற்ற மக்களின் வாழ்க்கையைப் பாதுகாத்து மேம்படுத்த முடிந்துள்ளது. இவ் வரவு–செலவுத் திட்டத்தில் நாம் தொடங்கியுள்ள மிகப் பல திட்டங்கள் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்தும் அதே வேளையில், தமிழ் நாட்டின் உயர் வளர்ச்சிச் சாதனையையும் தொடர்ந்து நிலை நிறுத்தும் என நான் உறுதியாக நம்புகிறேன். முன்னெப்போதும் இருந்திராத அளவிலான திட்ட ஒதுக்கீட்டைக் கொண்ட இவ் வரவு–செலவுத் திட்டம் நிலையான உறுதியுடன் கூடிய விரைவான வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. நாம் நிர்ணயித்துள்ள உயரிய குறி இலக்குகளை எய்தி முடிக்க அயராது பாடுபடுவோம்.

77. இந்த வரவு–செலவுத் திட்டம் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ளும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அனைவரும், நீதி–நேர்மை–நாணயம்–உண்மை ஆகிய நெறிகளின் அடிப்படையில் ஆக்க நிறைவான பரிந்துரைகளைத் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். விவாதத்தின்போது கடுஞ்சூட்டினைத் தவிர்த்துப், பேரொளியைப் பெருக்கிக் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

78. இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாகவும், செம்மையாகவும்

உருவாக்க, அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்டு, சீரிய உதவியையும், சிறந்த ஒத்துழைப்பையும் அளித்த நிதித்துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து அரும் பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித்துறை மற்றும் ஏனைய அரசுத் துறைகள் ஆகியவற்றைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோருக்கும் என் உளங்கனிந்த நன்றியைப் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

79. 1994–95 ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்
நிதி அமைச்சர்.

சென்னை
1994 ஆம் ஆண்டு
மார்ச்சுத் திங்கள் 23 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2025
பங்குனித் திங்கள் 9 ஆம் நாள்

# என் வாழ்நாள் கடமை!



செல்லுகின்ற திசைகளில் எல்லாம், நாட்டு மக்கள் என் மீது, காட்டி வருகின்ற அன்பும், பாசமும், பரிவும், ஆதரவும், நாளுக்கு நாள் பெருகி வருவதைப் பார்த்து, நான் நெகிழ்ந்து போகிறேன். அதே நேரத்தில், மகத்தான இந்த மக்கள் சக்தியின் உணர்வுகளுக்கு, நான் எப்படி கைம்மாறு செலுத்தப் போகின்றேன் என்பதை எண்ணி மலைத்து நிற்கிறேன். நான், உங்களைச் சந்திக்க வருகின்ற இதுபோன்ற வேளைகளில், கை நிறையத் திட்டங்களுடனும், உதவிகளுடனும் வந்தாலும், அவை, நான் எண்ணும் அளவிற்கு, உங்களுக்குச் செய்த கைம்மாறாகக் கருத முடியாது என்பதை நன்கு அறிவேன். எனவே தான், உங்கள் வளர்ச்சிக்கும், உயர்விற்கும், இனிய வாழ்விற்கும், அயராது பாடுபடுகின்ற பழக்கத்தினை, எனது அன்றாடப் பணியாக ஏற்றுக்கொண்டு, பாடுபட்டு வருகின்றேன். மேலும், இதனை என் வாழ்நாள் கடமையாகக் கருதி, தொடர்ந்து பணியாற்றி வருகின்றேன். இந்த எண்ணங்களுக்கு உருக்கொடுக்கிற வகையில்தான், இன்னும் புதிய புதிய திட்டங்களைத் தீட்டவேண்டும். மேலும் மேலும் நலப் பணிகள் தொடங்கப் பட வேண்டும், புதுப்புது உதவிகள் வழங்கப்பட வேண்டும், என்று என் உள்ளம் சிந்தித்துக் கொண்டே இருக்கின்றது.

உங்கள் அன்புச் சகோதரியான என்னிடத்தில், நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைக் கண்கூடாகக் காணும்போதெல்லாம் நான் கடந்து வருகின்ற தடைகளும், இடர்ப்பாடுகளும், தூள்தூளாக மறைந்து போய்விடுகின்றன. அவைகளைத் தூசாக, துச்சமாக மதிக்கும் மனத்தெம்பும், தைரியமும், எனக்கு தானே வருகிறது.

நாட்டு மக்கள், என் மீது இந்த அளவுக்கு ஆழமான, அழுத்தமான நம்பிக்கை கொண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம், மக்களோடு மக்களாய், மக்களின் பிரதிநிதிகளாய், மக்கள் சக்தியை அறிந்து, மக்களின் நன்மைக்கு என்றே, மக்களின் நம்பிக்கைக்கு உரியோராய், மக்கள் நலப் பணியாற்றி வந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஆகிய மக்கள் சக்தியின் மகோன்னதத் தலைவர்களின் அடிச்சுவட்டில் இருந்து துளியும் பிறழாது, என் பொது வாழ்வுப் பாதையை அமைத்துக்கொண்டு, மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன், என்ற மக்களின் மாபெரும் நம்பிக்கையே, என்னை இந்த அளவு உயர்த்தி உள்ளது.

இவ்வாறு அரசின் ஒவ்வொரு துறையிலும், புதுமைகளைப் படைக்கும் புரட்சிகரமான அரசாக, உங்கள் சகோதரியின் அரசு செயல்பட்டு வருவதை, நீங்கள் கண்கூடாகக் காண்கின்றீர்கள். சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும், உரிய உதவிகளைச் செய்ய, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அவர்களைப் பாதுகாக்க, எங்கள் அரசு என்றுமே தயங்கியதில்லை.

நாட்டுக்கு உழைக்கும் நல்லவர்களையும், ஏழை, எளியோரின் பாது காவலர்களையும், எவராலும், என்றைக்கும், அசைக்க முடியாது என்ற திடமான நம்பிக்கை, எனக்கு இருக்கிறது.

***'புரட்சித்தலைவியின் முழக்கம் - தொகுதி-2-லிருந்து.***

# நிதிநிலை அறிக்கை: 1994-95

## பகுதி: ஆ

## வேளாண்மை

1993 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் திங்கள்களில், கடுமையான சூறாவளிப் புயல்களாலும் அதன்காரணமான வெள்ளங்களாலும், தமிழ்நாடு தாக்குண்ட போதிலும், இம்மாநிலம், **மொத்த உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் டன் என்ற சாதனை அளவை எய்தும் நிலையில் உள்ளது. நமது உழவர்களின் இந்த உயர்ந்த சாதனையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.**

2. இரசாயன உரங்கள், மின்சாரம், தண்ணீர் ஆகியவற்றுக்கு உதவித் தொகை வழங்குவதைக் குறைத்துக் கொண்டு, வேளாண்மைப் பணிகள் சார்ந்த பொதுத் துறை நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் மேலும் அதிக அளவில் முதலீடுகள் செய்யவேண்டுமென்று தேசிய அளவில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இடுபொருள்கள் வகையிலான உதவித் தொகைக்காக, பெருமளவில் தொகைகளை ஒதுக்குவதால், ஊரகப் பகுதிகளிலுள்ள உழவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நம்மால் முதலீடு செய்ய முடியாமற் போய்விடுகிறது என்பதாக ஒரு வாதம் எடுத்து வைக்கப்படுகிறது. அண்மைக்காலமாக, வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு அளிக்கப்படும் விலைகளை அதிகரிக்கின்ற போக்கு காணப்படுகிறது. தமிழ் நாட்டில், நெல்லுக்கான கொள்முதல் விலை, மோட்டா ரகத்திற்கு, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.270 லிருந்து ரூ.310 ஆகவும், நடுத்தர ரகத்திற்கு ரூ.280 லிருந்து ரூ.330 ஆகவும், மிக நேர்த்தி ரகத்திற்கு ரூ.290 லிருந்து ரூ.350 ஆகவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, **1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு, கொள்முதல் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. கரும்பைப் பொறுத்தவரையில், அரசின் பரிந்துரை விலை, மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.345 லிருந்து ரூ.450 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.** நமது மாநிலத்தைச் சேர்ந்த உழவர்கள், தம்முடைய உற்பத்திப் பொருள்களுக்குரிய விலைகள் உயர்த்தப்படுவதை, தம்முடைய கடும் உழைப்புக்குக் கிடைத்த சிறந்த பரிசாகக் கருதிப் பெரிதும் வரவேற்றுள்ளனர். இதனால், உழவர்கள், இடுபொருள்களுக்கான உதவித் தொகையை நம்பியிருப்பது குறைக்கப்பட்டுள்ளது. **வேளாண்மை மற்றும் தயாரிப்புத் துறைகளுக்கிடையேயான வர்த்தக நிலை சீரடைந்துள்ளது.**

3. மாநிலத்தில், வேளாண்மையின் வளர்ச்சி வேகத்தை விரைவுபடுத்துவதற்காகக் கீழ்க்காணும் முக்கியமான அம்சங்களில் நாம் கவனம் செலுத்த வேண்டும். தரிசு நிலங்களைச் சாகுபடியின் கீழ்க் கொண்டுவருவதற்குரிய முயற்சி வலுப்படுத்தப்படும். அரிதாக உள்ள தண்ணீர் ஆதாரங்களைச் சேமித்து, அவற்றைத் திறமையாகப் பயன்படுத்தப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டை உயர்த்துவதன் மூலம், புன்செய் நிலச் சாகுபடி மேம்படுத்தப்படும். ஏற்றுமதி வாய்ப்புகளை மனதிற்கொண்டு, அதிக வருமானம் தரக்கூடிய பயிர் ரகங்களின் சாகுபடிக்கு ஊக்கம் அளிக்கப்படும். செலவுகளைக் குறைப்பதற்காகச், சுற்றுச்சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள் உட்பட, புதிய அறிவியல் தொழில்நுட்ப உத்திகள் மேம்படுத்தப்படும். வேளாண்மையில், மூலதன முதலீட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். மனிதவள மேம்பாட்டுக்கு உயரளவு முன்னுரிமை அளிக்கப்படும். வெவ்வேறு பயிர்களின் சாகுபடியையும், அதன் வாயிலாக உற்பத்தியையும் பெருக்குவதற்கான சிறப்பு முனைப்புத் திட்டங்கள் தீவிரப் படுத்தப்படும். **இந்தக் கொள்கையையே நாம் 1994–95 ஆம் ஆண்டில் மேலும் உற்சாகத்துடன் செயற்படுத்தவுள்ளோம்.**

4. அடுத்தபடியாக, 1994–95 ஆம் ஆண்டில், நாம் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்களின் சில முக்கியமான அம்சங்களைப் பற்றிக் குறிப்பிட விழைகிறேன். உழுது பயிரிடப்படாத தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், இதுவரை, 40,000 ஏக்கர் தரிசு நிலங்கள் சாகுபடியின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளன. **1994–95 ஆம் ஆண்டில், மேலும் 25,000 ஏக்கர் நிலங்கள் சாகுபடியின் கீழ்க் கொண்டு வரப்படும்.**

5. நீர்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டு வந்துள்ளது. **1994–95 ஆம் ஆண்டில், பல்வேறு நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், 2,14,250 ஏக்கர் நிலங்களைக் கொண்டு வரவிருக்கிறோம்.** காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், இராமநாதபுரம் மாவட்டங்களில், ரூ.13.51 கோடி செலவில், 25,700 ஏக்கர்நிலங்கள் பயன்பெறும் வகையில் விரிவான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், வரும் ஆண்டில் தொடங்கப்படும். **இரண்டாம் கட்டத்தில், திருநெல்வேலி–கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில், ரூ.41 . 72 கோடி செலவில், 1,06,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டம், மேலும் வலுப்படுத்தப்படும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ், 10,000 ஏக்கர் நிலங்கள் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், 1994–95 ஆம் ஆண்டிலிருந்து கரும்பிற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.6.7 கோடியாக இருக்கும்.**

**6. வேளாண்மை சார்ந்த ஏற்றுமதியைப் பெருக்க, நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளோம்.** தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியைப் பெருக்கி,

விளைபொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக, தமிழ்நாடு தோட்டக்கலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு முயற்சி இணையம் (TANHOPE) என்ற பெயரில், புதியதொரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முந்திரி, காளாண், வெங்காயம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சியில் மேலான கவனம் செலுத்தப்படும். விதைகளைப் பக்குவப்படுத்தல், மலர்ச்செடி வளர்ப்பு ஆகியன, தொழில்களாகக் கருதப்பட்டு, அவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியுதவி கிடைப்பது உறுதிப் படுத்தப்படும்.

7. 'டங்கல் செயற்குறிப்பு' ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து எழுந்துள்ள புதிய சூழ்நிலையில், எதிர்காலத்தில் நமது உழவர்களுக்குப், புதிய, மேம்படுத்தப்பட்ட விதைகள் கிடைப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். நமது உழவர்களுக்கு நல்ல, மேம்படுத்தப்பட்ட விதைகளும், தொழில்நுட்பங்களும் தொடர்ந்து கிடைக்கின்ற வகையில், ஓர் உயர்நிலைக் குழு, தற்போது நடைபெற்றுவரும் ஆராய்ச்சிப் பணிகள் குறித்து மதிப்பீடு செய்து, குறிக்கோள் நோக்கிலான அணுகுமுறையுடன், நல்ல பயனளிக்கக்கூடியவற்றைப் பரிந்துரைக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். நம் நாட்டிலேயே முதல்முறையாக, 'எம்.ஜி.ஆர்.' என்ற கலப்பின அரிசி ரகத்தினை உருவாக்கி, சாதனை படைத்த பெருமையைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பெற்றுள்ளது.

8. உயிரினக் கழிவு உரங்களையும் ஒருங்கிணைந்த பூச்சிப் பரவல் தடுப்பு முறைகளையும் உழவர்களிடையே பிரபலப்படுத்தி, நம் மாநிலத்தில், சுற்றுச்சூழலுக்குகந்த, நீடித்த வேளாண்மை வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கச் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒருங்கிணைந்த பூச்சிப் பரவல் தடுப்புத் திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 இலட்சம் நிதியொதுக்கப்பட்டுள்ளது. உயிரினக் கழிவு உர உற்பத்திப் பிரிவுகளை வலுப்படுத்தவும் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.25 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

9. ரூ.28.74 கோடி மொத்தச் செலவில், 'டேனிடா' உதவியுடன், மகளிருக்கு வேளாண்மையில் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றை (TANWA-II) நாம் இவ்வாண்டில் தொடங்கியுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.1 . 80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவடையும்போது, 7.44 இலட்சம் மகளிர் வேளாண்மைப் பயிற்சி பெற்றிருப்பர். உலக வங்கியின் ஆதரவுடன், மொத்தம் ரூ.76 கோடி செலவு ஆகக்கூடிய மனிதவள மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் விரைவிலேயே முடிவு செய்ய உள்ளோம். இத்திட்டமானது, வேளாண்மைப் பல்கலைக் கழகம், கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகம், வனத் துறை, வேளாண்மைப் பொறியியல் மற்றும் மீனளத் துறையைச் சேர்ந்த பணியாளர்களின் அறிவுப் பரப்பெல்லையை விரிவுபடுத்துவதோடு, திறமையை வளர்க்கவும் பெரிதும் உதவும்.

10. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், உலக வங்கியின் உதவியுடன், ரூ.310 கோடி செலவில், வேளாண்மைத் துறை மற்றும் ஊரகப் பகுதிகளுக்குப் பலனளிக்கக் கூடிய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. குறைந்த உற்பத்தித் திறனுள்ள பகுதிகளைக் கண்டறிந்து, இத்தகைய பகுதிகளில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான நேரடி விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதற்காக, 1994–95 ஆம் ஆண்டில், ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 1994–95 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.41 . 81 கோடியாக இருக்கும்.

11. ரூ.11 கோடி செலவில், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டம் செயற்படுத்தப்படும். எண்ணெய்ப் பனை வளர்ப்பு, இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டங்களில், 2500 ஏக்கர் நிலத்தில், எண்ணெய்ப் பனைகள் நடப்பட்டுள்ளன. 1994–95 ஆம் ஆண்டில், மேலும் 5000 ஏக்கர் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்படும்.

## உணவு பதப்படுத்தல்

12. உணவு பதப்படுத்தலை முக்கியமானதொரு துறையாக நாங்கள் தெரிந்தெடுத்துள்ளோம். 5 முக்கிய உற்பத்திப் பொருள் தொகுதிகளைத் தெரிந்தெடுத்து, இத்துறையில் பெருமளவில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதே நமதுநோக்கமாகும். நம்முடைய உழவர்களுக்கு நல்ல விலைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, நாங்கள், விற்பனை வசதித் தொடர்புகளைப் பெற்றுத் தருவோம். இப்பெரிய, புதிய முயற்சியில் விரைவில் முன்னேற்றம் ஏற்படுவதை உறுதி செய்ய, மையக்குழு ஒன்று அமைக்கப்படும்.

13. உணவு பதப்படுத்தல் பணிகளை மேற்கொள்வதற்காகத் தருமபுரியில், சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு ( Agri Business Consortium) ஒன்று ஏற்படுத்தப்படும்.

14. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான போளூர் அரிசி ஆலையில் நெல் அவிப்பு முறையை மேம்படுத்தும் திட்டம் ஒன்றை

ரூ.51 . 63 இலட்சம் செலவில் செயல்படுத்தவிருக்கிறோம். மற்றொரு முக்கிய நடவடிக்கையாகத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான அம்மன் பேட்டை அரிசி ஆலையின் திறனளவை நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்னிலிருந்து 200 மெட்ரிக் டன் ஆக விரிவு படுத்தவிருக்கிறோம். இத்திட்டத்திற்கு ரூ. 3.19 கோடி செலவாகும். நெல் அவிப்பு முறையை மேம்படுத்தவும் இத்திட்டம் வகை செய்யும். இந்நடவடிக்கைகளினால் அரிசியின் தரம் உயருவதோடு நெல்லில் இருந்து கிடைக்கும் அரிசியின் அளவும் அதிகரிக்கும்.

## பாசனம்

15. தமிழ்நாடு, அதன் மேற்பரப்பு நீர் வளத்தினை ஏறத்தாழ முழுமையாக ஏற்கெனவே பயன்படுத்தி விட்டது. நம்மிடம் மிகக் குறைந்த நிலத்தடி நீர்வளமே எஞ்சியுள்ளது. நாம் நமது நீர் ஆதாரங்களைப் பெருக்கியாக வேண்டியுள்ளது. காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயற்படுத்துமாறு கருநாடக அரசுக்கு உத்தரவிட மத்திய அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக, 1993 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்வர். அந்த நெருக்கடியான நேரத்தில், தமிழக மக்கள் தம்முடைய உணர்ச்சிப் பூர்வமான பேராதரவை முதலமைச்சருக்கு நல்கினர். மத்திய நீர்வளத் துறை அமைச்சர், முதலமைச்சரைச் சந்தித்து, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயற்படுத்த, மத்திய அரசு இரண்டு குழுக்களை அமைக்குமென அறிவித்தார். வரும் பருவத்தில் கருநாடக அரசு, இடைக்கால ஆணையை நிறைவேற்றும் என நம்புகிறோம்.

16. தீபகற்ப ஆற்றுநீர் மைய ஏற்பாட்டுத் திட்டத்தின் செயற்பாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்படவில்லை. குறைந்தது, மேற்காகப் பாயும் ஆறுகளைத் திருப்பிவிடும் பணியையாவது மேலும் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். பம்பா–அச்சன் கோயில்–வைகை இணைப்புத் திட்டம் உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும். தீபகற்ப ஆற்று நீர் மைய ஏற்பாட்டுத் திட்டத்தை ஒரு தேசியத் திட்டமாகக் கருதி, மத்திய அரசு, அதற்கு முன்னுரிமை அளித்து முதற்கட்டமாகப் பம்பா–அச்சன் கோயில்–வைகை இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றும் என்று நம்புகிறோம்.

17. 1994–95 ஆம் ஆண்டில், சிறு பாசனம் உட்பட, பாசனத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.125.56 கோடியாக இருக்கும். நம்மிடமுள்ள மேற்பரப்பு நீரைத் திறமையாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி நாம் பரிசீலிக்க வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டுதான், உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தை நாம் வகுத்துள்ளோம். 1994–95க்கான நிதி நிலை அறிக்கையில், இத்திட்டத்திற்காக ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றப்படவிருக்கும் இத்திட்டத்திற்கு, மொத்தம் ரூ.952 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளைப் பழுதுபார்த்துச் சீரமைத்தல், இந்த ஏற்பாடுகளின் செயல்திறனை மேம்படுத்தல், பாசனத் திட்டங்களைப் பராமரிப்பதில், உழவர்களின் பங்கேற்பை அதிகரித்தல், நீர் வளத்தினைப் பாதுகாத்தல், உறுதிப்படுத்தப்பட்ட பாசன வசதிகளை நிலைப்படுத்துதல் ஆகிய பணிகளில் அதிக கவனம் செலுத்தப்படும். இத்திட்டத்தின் பயனாக, பொதுப் பணித்துறையின் பாசனப் பிரிவின் செயல்திறன் முழு அளவில் உயர்ந்து, உழவர்களுக்கு மேலும் சிறந்த முறையில் பணியாற்றக்கூடிய நிபுணத்துவம் பெற்ற ஓர் அமைப்பாக உருப்பெறும். இத்திட்டம், பின்வரும் பாசன ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்கும்:–

* பாலாறு அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* செய்யாறு அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* பொய்னி அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* கீழ்பவானி அணைக்கட்டுப் பாசன ஏற்பாடு
* வைகைப் பாசன ஏற்பாடு
* பரம்பிக்குளம் – ஆளியாறு பாசன ஏற்பாடு

18. உலக வங்கி, இத்திட்டத்திற்கு விரைவிலேயே அனுமதி அளிக்கும் என நம்புகிறோம்.

19. பாசன ஏற்பாடுகள் சரிவரப் பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய, நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. பெரிய பாசன ஏற்பாடுகளின் பராமரிப்புக்காக 1993–94 ஆம் ஆண்டில், ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.200 ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1994–95 ஆம் ஆண்டில், நாம் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.265 ஒதுக்கியுள்ளோம். பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பில் உழவர்களை முழு அளவில் ஈடுபடுத்தும் தொன்மையான நடைமுறையை மீண்டும் முனைப்புடன் பின்பற்ற முடிவு செய்துள்ளோம். நாம், நீர்ப் பயன்பாட்டுத் திறனை உயர்த்த விழைவதால், இது முக்கியத்துவம் பெறுகிறது. `பி', `சி', `டி' வகை வாய்க்கால்களையும் அவற்றுக்குத் தொடர்புடைய கிளை வாய்க்கால்களையும் பராமரிப்பதற்காக

உழவர்கள் சங்கங்கள் ஏற்படுத்தப்படுவதை நாம் ஊக்குவிப்போம்.

20. 1,75,000 ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி அளிக்கும் வகையில், பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தின்கீழ் வரும் நான்காவது மண்டலத்திற்குப் பாசன வசதிகளை விரிவுபடுத்த வகை செய்யும் சட்டம் ஒன்றை இயற்றியுள்ளோம்.

21. 8,342 ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி அளிப்பதற்காக, 1994–95 ஆம் ஆண்டில், ரூ.27 கோடி மொத்தச் செலவில், வடக்குப் பச்சையாறு திட்டத்தைச் செயற்படுத்த விருக்கிறோம். 1994–95 ஆம் ஆண்டில், ரூ.37. 69 கோடி செலவில் அடவி நைனார் கோயில் பாசன திட்டப் பணிகளைத் தொடங்கவிருக்கிறோம். இத்திட்டத்தின் மூலம் 5,625 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். பெரியாறு வைகைத் திட்ட இணைப்புக் கால்வாய்ப் பணி, 1994–95 ஆம் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்படும். இத்திட்டத்தின் மூலம், 5,400 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

22. உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டுவரும் தேசிய நீர் நிர்வாகத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில் முழுமைபெறும். இத்திட்டத்தின்கீழ், 1993–94 ஆம் ஆண்டில், ரூ.7. 51 கோடி செலவில், தொழுதூர் பாசன ஏற்பாட்டிலும், ரூ.4.88 கோடி செலவில் சித்தாறு பாசன ஏற்பாட்டிலும் பணிகளை மேற்கொண்டுள்ளோம். ரூ.1. 23 கோடி செலவில் மஞ்சளாறு நீர்த் தேக்கத் திட்டப் பணிகள் விரைவிலேயே தொடங்கப்படவிருக்கின்றன. இத்திட்டத்தின்கீழ், திருக்கோயிலூர் நீர்த் தேக்கத் திட்டம், பிளவுக்கல் நீர்த் தேக்கத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத் திட்டம் ஆகிய மேலும் மூன்று துணைத் திட்டங்களையும் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்திற்கு, 1994–95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.20 கோடி ஒதுக்கப்படும்.

23. பாசன ஏரிகள், மிக முக்கியமானதொரு பாசன ஏற்பாடாக விளங்குகின்றன. ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் நிதியுதவியுடன், ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்தவிருக்கிறோம். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு ரூ.22 கோடி ஒதுக்கப்படும். இதுவரை, 20,700 ஏக்கர் ஆயக்கட்டைக் கொண்ட 157 ஏரிகளில் நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1994–95 ஆம் ஆண்டில், 11,315 ஏக்கர் ஆயக்கட்டைக் கொண்ட 130 ஏரிகளில் நவீனமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

24. நான் சென்ற ஆண்டு, வரவு–செலவுத் திட்ட உரையில், முன்னாள் ஜமீன் ஏரிகளை, அவற்றின் ஆயக்கட்டு பரப்பளவின் அடிப்படையில், பொதுப்பணித் துறை அல்லது ஊராட்சி ஒன்றியங்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கான செயற்குறிப்புப் பற்றிக் குறிப்பிட்டேன். இதற்கான பணிகள் நடந்தேறிவருகின்றன. மொத்தத்தில், 4720 முன்னாள் ஜமீன் ஏரிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டினை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இந்த முன்னாள் ஜமீன் ஏரிகளைத் தரப்படுத்தி அவற்றின் நிர்வாக அமைப்பை மாற்றியமைக்கும் திட்டம் 2 ஆண்டு கால அளவில் முடிவடைந்துவிடும் என்று நம்புகிறோம். இத்திட்டத்தின் மூலம் 1 . 96 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

## ஊரக வளர்ச்சி

25. விரைவு படுத்தப்பட்ட ஊரகப் பகுதி வளர்ச்சிக்கு, இவ்வரசு தலையாய முன்னுரிமை அளித்துவருகிறது. ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 1993–94 ஆம் ஆண்டில், ரூ.126.30 கோடியாக இருந்தது. 1994–95 ஆம் ஆண்டில் ரூ.160.53 கோடியாகக் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. மொத்தம் ரூ.390 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை, வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்துள்ளோம். இத்திட்டத்தின் மூலம் ,அனைத்து கிராமங்களிலும் குடியிருப்புப் பகுதிகளிலும் அடிப்படை வசதிப் பணிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாக, உருவாக்கப்பட்ட அனைத்து அடிப்படை சொத்துக்களும் நன்கு செயல்படும் நிலையில் வைத்து வரப்படுவதை உறுதி செய்வதற்காக, 1994–95 ஆம் ஆண்டில், தொடர் நடவடிக்கைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும்.

26. மாநிலத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள ஜனநாயக அமைப்புகளின் செயல்பாட்டுக்கான ஆதாரம் மற்றும் கட்டமைப்புகளுக்கு வகை செய்யும் 73 மற்றும் 74 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களின் முக்கியக் கூறுகளை உள்ளடக்கிய புதிய சட்டம் ஒன்று, பேரவையின் இக்கூட்டத் தொடரில் அறிமுகம் செய்யப்படும். உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் பற்றி ஆய்வு செய்து, அவற்றுக்குப் போதுமான நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்க, இப்புதிய சட்டம் வகை செய்யும். உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமைகளை வலுப்படுத்த, ஏற்கெனவே நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதனுடன், நிதிவகையில் நலிந்த நிலையிலுள்ள உள்ளாட்சி மன்றங்கள் பயனடையும் வகையிலும், உரிய பராமரிப்பு சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள இயலும் வகையிலும் உள்ளூர் செஸ் வரி இணை மானியத்தை ஒதுக்குவதற்கு, புதிய நெறிமுறை ஒன்றை வகுக்க, நாங்கள் முடிவு செய்துள்ளோம். அதிகாரப் பரவல் முறையில் அமைந்த மாவட்டத் திட்டத்திற்கு வரும் ஆண்டில் கூடுதலாக ரூ.20 கோடி ஒதுக்கப்படும். இதனால், மொத்த ஒதுக்கீடு, ரூ.40 கோடியாக உயரும். அடிமட்ட நிலையில் திட்டம் வகுத்து

செயற்படுத்துவதற்காக, நிபந்தனையற்ற நிதி வழங்குவதில், இது மற்றுமொரு முக்கிய நடவடிக்கையாக அமையும்.

27. 1993 அக்டோபர் 1 ஆம் நாளிலிருந்து, மத்திய அரசின் உதவி பெறும் வேலைவாய்ப்புறுதித் திட்டம், 12 மாவட்டங்களைச் சேர்ந்த 57 ஊராட்சி ஒன்றியங்களில் தொடங்கப் பட்டுள்ளது. 1993–94 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கு, ரூ.3 . 50 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டது. இந்நிதி ஒதுக்கீடு ,1994–95 ஆம் ஆண்டில் உயர்த்தப்படும். **வேலை வாய்ப்புறுதித் திட்டம் கொண்டுவரப்பட்டதைக் கருத்திற் கொண்டு, மாநில வேலை வாய்ப்புறுதித் திட்டம், ரூ.10 கோடி நிதி ஒதுக்கத்துடன், 1994–95 ஆம் ஆண்டில் 9 மாவட்டங்களைச் சேர்ந்த வேறு 50 வளர்ச்சி வட்டாரங்களில் செயற்படுத்தப்படும் வகையில் பொருத்தமான முறையில் மாற்றியமைக்கப்படும்.**

28. சொத்துக்களைப் பராமரிப்பதிலும், அம் முயற்சியில் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆதரவு அளிப்பதிலும் நாங்கள் தனிக் கவனம் செலுத்த விருக்கிறோம். நம் மாநிலத்தில் 98,475 ஆழ் துளைப் பம்புகள், 36,325 வடிமுனைப் பம்புகள் மற்றும் 26,462 மின்விசைப் பம்புகள் உள்ளன. **இச்சொத்துக்களைப் பராமரிப்பதற்காக, நலிந்த ஊராட்சிகளுக்கு உதவ வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5.64 கோடி ஒதுக்கப்படுகிறது.** இத்தோடு, ஊராட்சிகளின் பொறுப்பிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரிப்பதிலும் தனிக் கவனம் செலுத்தப்படும். தெரு விளக்குகள், ஒழுங்காக எரிவதை உறுதி செய்வதற்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்து வருகிறோம்.

**29. ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின் கீழுள்ள பாசன ஏரிகள், உரியவாறு பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய, ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு ஊராட்சி ஒன்றிய நிலையில், தனி உள்ளாட்சி நிதிக் கணக்கு தொடங்க, நாங்கள் அனுமதி அளிக்கவிருக்கிறோம்.** இதன்மூலம், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பின் கீழுள்ள 23,761 பாசன ஏரிகள் அனைத்திலும் பராமரிப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளமுடியும்.

## கால் நடை வளர்ப்பு

30. வளர்ச்சிக்கு முக்கியமானதொரு துறையாக, நாங்கள், கால்நடை வளர்ப்பைத் தேர்ந்தெடுத்துள்ளோம். **தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கால் நடை வளர்ப்புப் பணிகளுக்காக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.6 . 05 கோடி ஒதுக்கப்படும்.** செயற்கை முறைக் கருத்தரிப்பு வசதிகளை மேலும் பெருக்கிட, முயற்சிகள் மேற்கொள்ளப்படும். **ரூ.74 இலட்சம் செலவில், சிவகங்கை, கடலூர், சைதாப்பேட்டை, ஆகிய இடங்களில், மூன்று உறை விந்து வங்கிகள் நிறுவப்படும். உறை விந்துத் தொழில்நுட்பம், மாநிலத்தில் உள்ள 2,770 செயற்கை முறைக் கருத்தரிப்பு மையங்கள் அனைத்துக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது** என்பதை அறிவதில் இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள். ஈச்சங்கோட்டை, ஓரத்தநாடு, ஒசூர் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், நவீன மயமாக்கப்பட்டு வருகின்றன. செயற்கை முறைக் கருத்தரிப்புப் பணிகளில், பயனும் திறனும் மேலும் செம்மைப்படுத்தப்படும்.

31. கால்நடை இனப்பெருக்கம், முதிர்வுறாக்கரு மாற்ற உத்தி, தீவன மற்றும் தீவன விதை உற்பத்தி, நோய் அறிதல் மற்றும் தொற்று நோயியல் ஆகிய துறைகளில் வல்லுநர்களை ஈடுபடுத்தியுள்ளோம். இம்முயற்சிகளின் பயனாக, மேற்சொன்ன முக்கியமான பிரிவுகளின் பணியின் தரம் உயரும்.

32. கால்நடை நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. **400 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும். புதிதாக 10 கால்நடை மருத்துவமனைகள் தொடங்கப்படும். கால்நடை மருத்துவத்துக்குத் தேவையான மருந்துப் பொருட்களையும் மருந்துகளையும் வழங்குவதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 5.10 கோடி ஒதுக்கப்படுகிறது.**

33. பால் பண்ணை வளர்ச்சியில், நாம் மிக விரைந்த முன்னேற்றம் கண்டுள்ளோம். **பால் கொள்முதல் அளவு 1992–93 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 11 . 83 இலட்சம் லிட்டராக இருந்து, 1993–94 ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 14.11 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.** நாம் அடைந்துள்ள வெண்மைப் புரட்சி தொடர்ந்து நீடித்திட ஏதுவாகக் கூடுதல் மதிப்புடைய பொருட்களின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். சென்னைக்கு அருகே சோழிங்கநல்லூரில் ரூ.25 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வரப்படுவதும், நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்டதுமான பெரிய, புதிய பால் பண்ணை 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கட்டி முடிக்கப்படும். **வரும் ஆண்டில், 2 புதிய பால் குளிரூட்டு நிலையங்கள் தொடங்கி வைக்கப்படும். இதன் மூலம், பால் குளிரூட்டும் ஒட்டுமொத்தத் திறன் நாளொன்றுக்கு 3 . 72 இலட்சம் லிட்டர் பெருகுவது உறுதிப்படுத்தப்படும்.**

## மீனளம்

**34. இவ்வரசு, தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன், ரூ.15 . 88 கோடி மொத்தச் செலவில், ஒருங்கிணைந்த ஆழ்கடல் மீனள வளர்ச்சித்**

திட்டம் ஒன்றைப் பெருமளவில் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், 6050 மீனவர்கள் பயனடைவர். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.3 . 12 கோடி ஒதுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தஞ்சாவூர், இராமநாதபுரம், வ.உ.சிதம்பரனார், செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர்., கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் பயனடைவர்.

35. 1994–95 ஆம் ஆண்டில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவியோடு உள்நாட்டு மீனள வளர்ச்சித் திட்டம் ஒன்று தொடங்கப்படும். ரூ.6 . 60 கோடி மொத்தச் செலவில் செயற்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்தின் கீழ்ச் செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர்., விழுப்புரம்–இராமசாமி படையாட்சியார், வட ஆர்க்காடு–அம்பேத்கார், திருவண்ணாமலை–சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஏரிகளில் மீன் வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஆண்டொன்றுக்கு மொத்தம் 17 கோடி மீன் குஞ்சுகள் தேவைப்படுகின்றன. இத்தேவையை நிறைவு செய்யும் வகையில் மீன் குஞ்சு வழங்கல் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

36. தனியார் துறையில் செயற்படுத்தப்பட்டு வரும் கடல் வாழ் உயிரின நீடித்த வளர்ச்சிப்பணிகளுக்கு நாங்கள் ஆதரவு அளித்துள்ளோம். பாக் விரிகுடா பகுதியைச் சேர்ந்த 600 கடல் மீனவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கும் நடவடிக்கையாக, இராமநாதபுரம் மாவட்டத்தில், ரூ.13 . 88 கோடி செலவில் 150 ஹெக்டேர் பரப்பில், கடல் வாழ் உயிரின வளர்ச்சித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இது, தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் MPEDA நிறுவனங்களின் நிதியுதவியோடு செயற்படுத்தப்பட்டு வருகின்ற பெரியதொரு திட்டமாகும். வ.உ. சிதம்பரனார் மாவட்டம், தருவைக்குளத்தில் 50 ஹெக்டேர் பரப்பில், ரூ.2 . 20 கோடி செலவில் கடல் வாழ் உயிரின வளர்ப்பு தொழிற்பேட்டை ஒன்று தமிழ்நாடு மீனள வளர்ச்சிக் கழகத்தால் தொடங்கப்படும்.

37. இவ்வரசு, எப்போதுமே, மீனவர் நலனுக்கு தலையாய முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. 1993–94 ஆம் ஆண்டில், ரூ.5 கோடி செலவில், மீனவர்களுக்கு 2000 நிரந்தர வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். 1994–95 ஆம் ஆண்டில், மேலும் 2000 வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். 1993–94 ஆண்டில், மீன்பிடித் தொழிலில் வருமானம் இல்லாத காலங்களில் மீனவர்களுக்கு ஏற்படும் ஊதிய இழப்பை ஈடுசெய்ய மாதம் ஒன்றுக்கு ரூ.270 வீதம் 4 மாதங்களுக்கு 1,11,000 மீனவர்களுக்கு ரூ.13.20 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது, மீனவர்களுக்கு பயனளிக்கின்ற ஒரு பெரும் பாதுகாப்புத் திட்டமாக விளங்கி வருகிறது.

## வனவளம்

38. நாம் நமது தற்போதைய வனவளங்களைப் பாதுகாப்பதுடன், நமது வனப் பரப்பை மேலும் விரிவுபடுத்தவும் வேண்டும். நடப்பாண்டில், 1.36 இலட்சம் ஏக்கர் பரப்பில் காடு வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில், 1. 5 இலட்சம் ஏக்கர் பரப்பை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவர நாங்கள் கருதியுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், வனவளத்திற்கான மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.46 . 05 கோடியாக இருக்கும்.

39. சுவீடன் நாட்டின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (SIDA) நிதியுதவி பெறும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாவது கட்டப்பணிகள், 1994–95 ஆம் ஆண்டில் முடிவுறும். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.25 . 35 கோடி நிதியொதுக்கப் பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், 7. 5 இலட்சம் ஏக்கர் பரப்பு, சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டங்களின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. இடை முகப்புக் (Interface) காடு வளர்ப்புத் திட்டம் என்னும் புதிய திட்டமொன்றை, நாங்கள் தீட்டியுள்ளோம். இத் திட்டத்திற்கு சுவீடன் நாட்டின் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி கிட்டுமென நம்புகிறோம். இத்திட்டத்திற்கு, ரூ.265 கோடி செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

40. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்ற புதியதொரு திட்டத்தையும் நாங்கள் உருவாக்கியுள்ளோம். இத் திட்டத்திற்கு, ரூ.300 கோடி செலவாகும். உலக வங்கியின் உதவிக்காக இத் திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. தாவர வகைகளும், உயிரினங்களும் அழிக்கப்படாமலும், காடுகள் அழிக்கப்படாமலும் தடுத்து உயிரினப் பல்வகையினப் பாதுகாப்பதற்கு இத் திட்டம், வகை செய்யும். இத்திட்டம், சுமார் 1. 83 இலட்சம் ஹெக்டேர் வனப் பகுதியிலும், 800 இடை முகப்புக் கிராமங்களிலும் செயல்படுத்தப்படும்.

41. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், காடு வளர்ப்புத் திட்டப் பணிகளுக்காக, 1994–95 ஆண்டில் ரூ.9 கோடி ஒதுக்கியுள்ளோம்.

42. நீலகிரி மாவட்டத்தில், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்ச் சிறப்புக் காடு வளர்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். 1994–95 ஆம் ஆண்டில், ரூ.3 கோடி செலவில், 1,375 ஏக்கர் பரப்பு இத் திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படும். 1994–95 ஆம் ஆண்டில், மேற்கு மலைத் தொடர் சரிவுகளில் 6,250 ஏக்கர் பரப்பில் ரூ.2.48 கோடி செலவில், காடு வளர்ப்பு மற்றும் மண் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

43. ரூ.60 கோடி செலவில், 7,500 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடுவதற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் சிறப்புத் திட்டத்தைப் பற்றி இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத் திட்டத்தின் கீழ், ரூ.6 . 00 கோடி செலவில், புதிதாக இரண்டு தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில், ரூ.1 . 20 கோடி திட்டச் செலவில் 1,500 ஏக்கர் பரப்பு இத் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படும். இத் திட்டத்திற்குத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் உதவி நமக்கு கிடைத்துள்ளது.

44. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம், காகிதக் கூழ் மரங்கள் நடும் பரப்பை அதிகரிக்கச் செய்யும் திட்டமொன்றைத் தொடங்கியுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் 12,500 ஏக்கர் பரப்பில், மரக் கூழ் மரங்கள் நடக் கருதப்பட்டுள்ளது. இதனோடு சேர்ந்து, 1994–95 ஆம் ஆண்டில் 15,000 ஏக்கர் பரப்பில், முந்திரி சாகுபடி மேம்பாட்டுப் பணியும் மேற்கொள்ளப்படும்.

45. நமது வன வளத்தைப் பாதுகாத்திட சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். பல்வேறு வனப் பாதுகாப்புப் பணிகளுக்காக, 1993–94 ஆம் ஆண்டில், ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் இதை ஒத்த தொகை ஒதுக்கப்படும். வண்டலூரில் உள்ள மாநில வன ஆராய்ச்சி நிறுவனத்தை மேம்படுத்தவிருக்கிறோம். இந்நிறுவனத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## தொழில்கள்

46. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1992 ஆம் ஆண்டில் நமது மாநிலத்திற்குரிய தனியானதோர் புதிய தொழில் கொள்கையை உருவாக்கியதைப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இக்கொள்கை, இம்மாநிலத்தின் விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. தொழில் கொள்கையைத் தளர்த்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாநில அளவில், மேலும் சீர்திருத்தங்களை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு தற்போது சுட்டிக் காட்டியுள்ளது. நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கையின் முக்கியப் பகுதிகளைக் கண்டறிந்துள்ளோம். இம்மாநிலத்தில், நல்ல தொழிலுறவு நிலவச் செய்வதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். இந்நாட்டிலேயே சிறந்த அடிப்படை வசதிகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என இந்தியப் பொருளாதார ஆய்வு மையம்(CMIE) மதிப்பிட்டுள்ளது. மின் வெட்டு என்பதே இல்லாத மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. இதே நிலையைத் தொடர்ந்து பராமரிப்பதே நமது உறுதியான முயற்சியாகும். மாநில அளவில் இசைவு தேவைப்படுகிற அனைத்து இனங்களுக்கும் "ஒரு வழி இசைவு" (Single Window Clearance) ஏற்பாட்டைக் கொண்டுவரத் தேவையான சட்டங்களை நாங்கள் கொண்டுவந்துள்ளோம்.

47. சிங்கப்பூருடன் வர்த்தக ஏற்பாடு என்ற கோட்பாட்டின் வாயிலாக அமையவிருக்கும், "சென்னைத் தொழில் பூங்கா", விரைவில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். இத்தொழில் பூங்கா, முழுமையடையும்போது 800 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இதனால், இம்மாநிலத்திற்கு ஆயிரம் கோடி அமெரிக்க டாலர், புதிய முதலீடு கிடைக்கவிருக்கிறது. இத்திட்டத்திற்கான தொழில் முனைவோர்களின் சிறு பட்டியலை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம். இத்தொழில் பிரிவு, விரைவில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்குத் துரிதமான ஒப்புதல் தருமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

48. தொழில் வளர்ச்சியை, தேசிய நோக்கில் கருதிப் பார்க்க வேண்டியுள்ளது. தொழில் வளர்ச்சியைத் தூண்ட, அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் முதலீடுகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. 1994–95 ஆம் ஆண்டில், இந்திய தொழில் துறை, போட்டி மனப்பாங்கில் அறைகூவலை ஏற்று விரைவான வளர்ச்சியடையும் என்று நாம் நம்பிக்கை தெரிவிக்கிறோம்.

49. தென்னக எரிவாயு கட்டமைப்பு ஒரு முக்கியமான திட்டமாகும். இது தென்பகுதியில் அதிலும் குறிப்பாக தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். கொங்கன் ரயில்வே திட்டத்தைப் போன்று, இத்திட்டத்திற்கு, ஏற்ற வகையில், நிதி முதலீடு செய்ய தென்மாநிலங்கள் தயாராக இருக்கும் என்று கருத்து தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தொடக்க முயற்சி மேற்கொண்டுள்ளார். இத்திட்டத்திற்கு ஓமானிலிருந்து எரிவாயு கொணர்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஓமானிலிருந்து எரிவாயு கிடைப்பது ஐயத்திற்கு இடமாகவுள்ளது. "பம்பாய் ஹை" பகுதியில் வீணாக எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எரிவாயுவின் அடிப்படையில் தென்னக எரிவாயு கட்டமைப்புத்திட்டம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துவோம். ஓமானிலிருந்து கிடைக்கும் எரிவாயுவுடன் பின்னர் இதனை இணைக்கலாம். இத்திட்டம் உடனடியாக நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படுவதை உறுதிசெய்ய மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

50. தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக்கழகத்தின் (TACID)

மூலதனப்பங்கிற்கு, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கை கொண்டான், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள பனங்குடி ஆகிய இடங்களில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்துவதில் விரைந்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காகும். இத்துடன், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திலுள்ள நிலக்கோட்டையிலும் தருமபுரி மாவட்டத்திலுள்ள பர்கூரிலும், சிறப்பு வளர்ச்சி மையங்களையும் எடுத்துக்கொண்டுள்ளது. **தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் சிறப்பு முயற்சியாகச், சென்னைக்கு அருகே, 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய அளவிலான ஒரு புதிய வளர்ச்சி மையத்தை மேற்கொள்ள நாங்கள் கருதியுள்ளோம்.** அடிப்படை வசதி கட்டமைப்பு கடன் – நிதியுதவிப் பணிகள் நிறுவனத்தின் (ILFS) ஆதரவுடன், திருப்பூரில் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ் நாடு அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் செயல் படுத்தும். **இந்த வளர்ச்சித் திட்டத்தின் மதிப்பீடு ரூ.550 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

51. தமிழ்நாடு செய்தித்தாள் – காகித நிறுவனம், தன்னுடைய உற்பத்தித் திறனளவான, ஆண்டுக்கு 90,000 டன்னை இருமடங்காக அதாவது ஆண்டுக்கு 1.80 இலட்சம் டன் ஆக அதிகரிக்க, ரூ. 525 கோடி செலவில், பெரிய விரிவாக்கத் திட்டம் ஒன்றைத் தீட்டியுள்ளது. **இத்திட்டம், 75 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கியின் நிதிஉதவி பெற்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 1994–95 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 200 கோடியாக இருக்கும். இம்மாபெரும் திட்டம் சுற்றுச்சூழலுக்கு எவ்வித கேடுமின்றி, வேளாண் கழிவுப்பொருட்களைக் கொண்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வரும் கோட்பாட்டுக்கு உதாரணமாகத் திகழ்வதாக உலக அளவில் ஏற்கப்பட்டுள்ளது.** நடப்பு மத்திய வரவு செலவுத் திட்டத்தில் ஆயத்தீர்வை விலக்கு இத்தொழிற்பிரிவிற்கு திரும்பப் பெறப்பட்டுள்ளது துரதிருஷ்டமானதாகும். **இத்தொழிற்சாலையின் பெரிய அளவிலான விரிவாக்கத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருவதால், ஆயத்தீர்வை விலக்கை தொடர்ந்து அனுமதிக்க வேண்டுமென, மத்திய அரசை நாம் வலியுறுத்திக் கேட்டுள்ளோம்.** இத் திட்டத்தின் அற்புதமான முயற்சியைக் கருத்திற் கொண்டு, மத்திய அரசு ஆயத்தீர்வை விலக்கைத் தொடர்ந்து அனுமதிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

52. சிறு தொழில்களின் விரைவான வளர்ச்சிக்கு, ஏற்ற சூழ்நிலையை உருவாக்க நாம் இடையறாத முயற்சி மேற்கொண்டு வந்துள்ளோம். புதிய பொருளாதார கொள்கையின்படி, சிறு தொழில்கள் விரைவாக வளர்ந்து, அதனால் புதிய வேலை வாய்ப்புகள் பெருகும். உரிய நேரத்தில் பணம் கிடைப்பதை உறுதி செய்வதற்கான திட்டம், குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து உரிய நேரத்தில் பணம் கிடைப்பதை உறுதி செய்வது, நல்ல பலனை அளித்துள்ளது. கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட 115 புகார் கோரிக்கைகளில், 111 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குறைவழுத்த மின்வழங்கலின் கீழ் அனுமதிக்கப்பட்ட மின் அளவு 130 HP யில் இருந்து 150 HP ஆக அதிகரிக்கப்பட்டது, தொழிற் துறையால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், 1000 மகளிர் தொழில் முனைவோர்களைக் கண்டறிய, தொழில் முனைவோர் முன்னேற்றத் திட்டம் மேற்கொள்ளப்படும். **'சிட்கோ' 1994–95 ஆம் ஆண்டில், 200 தொழிற் கொட்டகைகள் கட்டும். 50 மேம்படுத்தப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்யும்.** திருப்பூருக்கு அருகில், முதலிபாளையத்தில், 156 தொழிற் கொட்டகைகள் கட்டி முடிக்கப்பட்டது பெரும் சாதனையாகும். பின்னலாடை உற்பத்தித் துறையில் மதுரைக்கு அருகில், 120 தொழிற் கொட்டகைகள் கட்டும் பணியையும் சிட்கோ முடித்து வருகிறது. இதே போன்றதொரு தொழிற்பேட்டை, கோவை மாவட்டத்தில் பல்லடம் வட்டத்தில், நிறுவப்பட்டு வருகிறது. **கிண்டியில், டாக்டர் புரட்சித் தலைவி மின்னணுவியல் தொகுதியை நிறுவும் பணியையும் சிட்கோ மேற்கொண்டுள்ளது.** இத் தொழிற் **திட்டம் சுமார் 8000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வகையில் வேலை வாய்ப்பை நல்கும். சென்னைக்கு அருகில், தோல் தொழிற்பேட்டை ஒன்று புதிதாக நிறுவப்படும். இப்புதிய திட்டத்திற்கு, UNDP யிடமிருந்து தொழில் நுட்ப உதவி பெறப்படும்.**

53. இம்மாநிலத்தில், தொழிற்சாலைகளை நிறுவுவதற்குத் தமிழக அரசு, தொழில் முனைவோரைக் கவரும் ஊக்கத் திட்டங்களை வகுத்துள்ளது. இந்நாட்டில், தொழிற்சாலைகள் அமைப்பதற்கு தமிழ்நாடு சிறந்ததோர் இடமாக அமைய, இவ்வரசு தொடர்ந்து முயன்று வந்துள்ளது. தள்ளி வைக்கப்பட்ட விற்பனை வரியை, வருமான வரிச் சட்டத்தின் 43–B பிரிவின் நோக்கத்திற்காகச் செலுத்தப்பட்டதாகக் கருத, சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர நாங்கள் முடிவு செய்துள்ளோம் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததை, இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். **இது குறித்து மத்திய அரசுடன் விவாதித்து, பெற்ற விளக்கங்களின் அடிப்படையில், திருத்தத் திட்டம் தொடர்பாக நாம் தற்போது ஆணை பிறப்பித்துள்ளோம். இது, தொழிற்சாலைகள் பெறத்தக்க தேவையான நலன்களைப் பெற இயலச் செய்யும். இம்மாநில அரசின் இந்த நடவடிக்கையைத் தொழிற்சாலைகள் வரவேற்கும் என்பதில் எனக்கு எவ்வித ஐயப்பாடுமில்லை.** விற்பனை வரி தள்ளி வைக்கப்பட்ட முறை, தொழில் நிதியுதவி–சீரமைப்புக் கழகத்தால் (BIFR) பரிசீலிக்கப்பட்டு வரக்கூடிய, நலிவுற்ற தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும். தொடக்க நிலையில் தொழிற்சாலைகளில்

ஏற்படும் நலிவைச் சரிப்படுத்த இது ஏற்றதாக அமையும். நலிவுற்ற தொழிற்சாலைகள் சட்டத்திற் (SICA) கிணங்க நலிவுற்றவையாகக் கருதப்பட்ட அத்தகைய தொழில் பிரிவுகள் அனைத்திற்கும் இச்சலுகையை நீட்டிக்க வேண்டுமென்பதே எங்களது நோக்கமாகும். ஏற்றுமதியைப் பெருக்கும் நோக்கத்துடன், சென்னை ஏற்றுமதி வர்த்தக நடவடிக்கை மண்டலத்திலிருந்தும் முற்றிலும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட ஏனைய தொழிற் பிரிவுகளிலிருந்தும் உள்ளூர்ப் பகுதியில் செய்யப்பட்ட கொள்முதல்களுக்குச் செலுத்தப்பட்ட விற்பனை வரியை மூன்றாண்டுக் கால அளவிற்கு திருப்பிக் கொடுக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம். சென்னை ஏற்றுமதி வர்த்தக நடவடிக்கை மண்டலத்திற்குள் தொழிற் பிரிவுகளுக்கிடையே செய்யப்படும் விற்பனைக்கு, இறுதி விற்னை உள்நாட்டில் இல்லாத பட்சத்தில் , விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

## எரிசக்தி

54. தமிழ்நாட்டில் மின் தேவை அளவிலும் மின் வழங்கல் அளவிலும், வெட்டே இல்லை என்ற மகிழ்ச்சிகரமான நிலை தொடர்ந்து நீடிக்கிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையம் தொடர்ந்து 6 முறை தேசிய உற்பத்தித் திறன் பரிசை வென்று, மீண்டும் பரிசைப் பெறும் நிலையில் உள்ளது. 1992–93 ஆம் ஆண்டில், 76 சதவீத மின் நிலையச் செயல்திறனை எய்தியுள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையமும், 1992–93 ஆம் ஆண்டில், 64.2 சதவீத மின் நிலைய செயல்திறனை எய்திஉற்பத்திப் பரிசைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளது. நிலக்கரி வழங்கலைத் தொடர்ந்து கண்காணித்ததால், அனல் மின் நிலையங்கள், போதுமான நிலக்கரி இருப்பு வைத்து தொடர்ந்து செயல்படவும் முடிந்துள்ளது.

55. 1993–94 ஆம் ஆண்டில் எரி சக்தித் துறைக்கு ரூ.538.50 கோடி திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க 1994–95 ஆம் ஆண்டில், திட்ட ஒதுக்கீடு ரூ.625 கோடியாக இருக்கும். மின்மைய ஏற்பாட்டின் திறனை அதிகரிப்பதில், உயரிய கவனமும் செலுத்தப்பட்டுள்ளது. 210 மெகாவாட் திறன்கொண்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட (மொத்தம் 630 மெகாவாட்) வடசென்னை அனல் மின்திட்டத்தின் முதல் கட்டப் பணி, 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 1994 ஆம் ஆண்டில், ஒரு பிரிவு மின்மைய ஏற்பாட்டுடன் இணைக்கப்படுமென நம்புகிறோம். . சென்னையின் உயரளவு மின்தேவையை நிறைவு செய்யும் துணை ஏற்பாடாக பேசின்பாலத்தில், ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட 4 பிரிவுகளை (மொத்த திறன் 120 மெகாவாட்) நிறுவும் பெரும் பணியை நாங்கள் தொடங்கியுள்ளோம். வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்தின் (ஜப்பான்) உதவிபெறும் இத்திட்டம், ரூ. 367 கோடி செலவில் நிறைவேற்றப்படும். இத்திட்டம், 1995 ஆம் ஆண்டில் முடிக்கப்படுமென நாம் எதிர்பார்க்கிறோம். மொத்தம் 20 மெகாவாட் திறன் கொண்ட புதிய காற்றாலைகள் 1994–95 ஆம் ஆண்டில் நிறுவப்படும்.

56. நாட்டிலேயே முதல் முறையாக இரு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அதாவது, சேத்தியாத் தோப்பு மற்றும் செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.10.68 கோடி செலவில் கூட்டு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு அவை வெற்றிகரமாக இயங்கி வருகின்றன. மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, மற்றும் அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.18 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேலும் 3 கூட்டு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும். முடிவாக, மொத்தம் 250 மெகா வாட் திறன் கொண்ட கூட்டு மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும் என எதிர்பார்க்கலாம்.

57. மாநிலத்தின் மின்சக்தி தேவைகள் குறித்துத் திட்டமிடுகையில், நாம் நீண்டகால நோக்கில் தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். இம்மாநிலத்தில், மின்சக்தியின் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பலபெருமுயற்சிகள் எடுத்து நாம் முன்னேற்றம் அடைவதில் வெற்றியடைந்து வந்துள்ளோம். ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி வெட்டியெடுத்தல்–மின் உற்பத்தித் திட்டம், ரூ.7500கோடி செலவில் இணைத் துறையில் (Associate Sector) மேற்கொள்ளப்படும் ஒரு மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டத்தினால், மின்மைய ஏற்பாட்டின் திறன் 1500 மெகாவாட் அதிகரிக்கும். இத்திட்டத்திற்கான நிதி மதிப்பிடுதல் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டம் விரைவில் தொடங்கப்படுமென எதிர்பார்க்கிறோம். நெய்வேலியில் தனியார் துறையில் மின்நிலையம் ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசு ஏற்பளித்துள்ளது. பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 250 மெகாவாட் திறன்கொண்ட இத்திட்டம், 1997ல் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. வடசென்னையிலும், தூத்துக்குடியிலும் 500 மெகாவாட் திறன்கொண்ட கூடுதல் பிரிவுகளை தனியார் துறையில் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆய்வு செய்து வருகிறோம். கடலூரில் 1000 மெகாவாட் ஆரம்பத் திறனும், 2000 மெகாவாட் முடிவான திறனும் கொண்ட அனல் மின்நிலையம் ஒன்று அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். . கடலூரில் அமைக்கக் கருதப்பட்டுள்ள இந்த மின் திட்டத்திற்கு, நிலக்கரி கடல் வழியாக கொண்டு வரவேண்டியிருக்குமாதலால், கடலூர் துறைமுக வளர்ச்சிப் பணியுடன் சேர்த்து இத்திட்டம் நிறைவேற்றப்படும். ஜப்பானிய பொருளாதார உயர்மட்டக் குழு அண்மையில் வருகை புரிந்தபோது, இறக்குமதி நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு, கடலோர அனல் மின் நிலையம் ஒன்றை நிறுவும் திட்டத்தில், முதலீடு

செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யுமாறு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்குழுவிடம் கேட்டுக்கொண்டார். இறக்குமதி நிலக்கரி மீதான சுங்கத் தீர்வையினை 85 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக மத்திய அரசு குறைத்ததையடுத்து இது பரிசீலிக்கப்படுகிறது. வருங்காலத்திலும், இம்மாநிலத்தில் மின்வெட்டு வராமலிருப்பதை உறுதி செய்வதற்காக, இந்த அரசு மேற்கொண்டுள்ள பல முயற்சிகளை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர் என நம்புகிறேன்.

58. தமிழ்நாட்டில் பல்வேறு மத்திய மின் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதம் மிகவும் கவலை அளிப்பதாய் உள்ளது. நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டும் பணியும், அதனோடு இணைந்த மின் உற்பத்தித் திட்டமும் செயல்படுத்தப்படுவது பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தப்படுமேயானால், அதை வரவேற்போம். கூடங்குளம் அணு மின் திட்டத்தில் நிதி முதலீடு செய்து பங்கேற்பதற்கான விருப்பத்தை நாங்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளோம். இத்திட்டத்தை, நிறைவேற்றுவது குறித்து, மத்திய அரசு விரைவில் முடிவெடுக்கும் என்று நம்புகிறோம். கருநாடக மாநிலத்தில், கய்கா அணுமின் நிலைய திட்டத்திற்கு, நிதி முதலீடு செய்து பங்கேற்பது குறித்த எங்களது விருப்பத்தையும் நாங்கள் தெரிவித்துள்ளோம். இம்மாநிலத்தில், மின் உற்பத்தித் துறையில் மீண்டும் முதலீடு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும் என நம்புகிறோம்.

59. மின்சக்தி அனுப்புகை மற்றும் வழங்குதல் ஆகியவற்றில் ஏற்படும் இழப்பைக் குறைக்க, உறுதியான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இழப்பு தற்போது 17.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய சராசரி அளவு 22 சதவீதமாகும். மின்கம்பித் தொடர்களில் ஏற்படும் இழப்பை 15 சதவீதத்திற்கும் கீழாகக் குறைக்க, தமிழ்நாடு மின்வாரியம், திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது. 1994–95 ஆம் ஆண்டிற்கு, மின் அனுப்புகை–வழங்கல் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.198.60 கோடியாக இருக்கும்.

60. இம்மாநிலத்தில், மரபு–சாரா எரிசக்தி ஆதாரங்கள் முனைப்புடன் பெருக்கப்படுவதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த வகையிலான முக்கிய நடவடிக்கையாக, கடல் நீர் வெப்பத்திலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்வதற்கு அமெரிக்க நிறுவனமான திருவாளர்கள் சீ சோலார் பவர் நிறுவனத்துடன் பரஸ்பர உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. ரூ.800 கோடி மதிப்பீட்டுச் செலவாகக் கூடிய இத்திட்டத்தின் உற்பத்தித் திறன் 100 மெகா வாட் ஆக இருக்கும். நாம் இந்த முயற்சியில் வெற்றியடைந்தால், கடலின் பரந்த ஆதாரத்திலிருந்து குறைந்த செலவில் புதுப்பிக்கத் தக்க மின்சக்தி ஆதாரம் பெறுவதில் ஒரு சாதனையாக அமையும். ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில், ரூ.30 இலட்சம் செலவில், 17 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும். சூரிய வெப்பத்தால் நீரைச் சூடாக்கும் ஏற்பாடுகளை நிறுவுவதற்கும் ஊக்கமளிக்கப்படும்.

61. தமிழ்நாடு மின்வாரியம் எதிர்நோக்குகின்ற கடுமையான நிதி இடர்ப்பாட்டை இம் மன்றத்தி ன் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். 1–3–1994 லிருந்து மின் கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட பின்னருங்கூட, மின்வாரியத்தின் ஈடு செய்யப்படாத நிதிப் பற்றாக்குறை ரூ.300 கோடியாக உள்ளது. இது, மிகவும் கடுமையான நிதி நிலைமையாகும். அரசு ரூ.350 கோடி நிதியுதவி அளித்த போதிலும்கூட இந்நிலை தொடர்ந்து நீடிக்கிறது. இது தவிர, அரசு ரூ.100 கோடி அளவிற்கு வட்டி தள்ளுபடி செய்கிறது. . விவசாய பம்பு செட்டுகளுக்கு வழங்கப்படும் மின்சக்திக்கு, யூனிட் ஒன்றுக்கு 50 காசு வசூலிக்க வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது. விவசாய பம்பு செட்டுகள் பயன்படுத்தும் மின்சக்தியின் அளவு ஆண்டுக்கு 16 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது நமது ஆய்விலிருந்து தெரியவருகிறது. இந்த அளவானது, தொழில் துறையில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு வீதத்தைக் காட்டிலும் மிகவும் அதிகமானதாகும். இது, மின் சக்தி கணிசமான அளவிற்கு வீணாகுவதற்கும், தவறாகப் பயன்படுவதற்கும் ஏதுவாகும் என்பதை வெளிப்படுத்துகிறது. மாநில அரசு தனது நிதி நிலையின் காரணமாக தமிழ்நாடு மின் வாரியத்திற்குத் தற்போது அளித்துவரும் ரொக்க ஆதரவுத் தொகையை ரூ.350 கோடிக்கும் மேல் அதிகரிக்க இயலாதுள்ளது. இது, அரசை எதிர்நோக்கியுள்ள இக்கட்டானதொரு நிலையாகும்.

## சாலைகளும் சாலைப் போக்குவரத்தும்

62. சாலைகள் குறித்த நிதியொதுக்கீடு 1993–94 ஆம் ஆண்டில் ரூ.110.16 கோடியாக இருந்தது. 1994–95 ஆம் ஆண்டில் ரூ.120.94 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

63. முதல் தடவையாக, 1992–93 ஆம் ஆண்டில், சாலைகள் பராமரிப்பிற்காக ஒன்பதாம் நிதிக் குழு வரையறை செய்த நெறிமுறை அளவுக்கும் அதிகமாகவே நிதியொதுக்கீடு செய்திருந்தோம் என்பதைஇம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு நினைவு கூரலாம். இந்த நெறிமுறைகளை நடப்பு விலை அளவுக்கு உயர்த்தியுள்ளோம். உயர்த்தப்பட்ட இந்நெறிமுறைகளின்படி பராமரிப்புக்காக வரவு–செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது

என்பதை நான் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். 1993–94 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சாலைகள் பராமரிப்பிற்காக ரூ.145 கோடி ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1994–95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.183 கோடி ஒதுக்கப்படுகிறது.

64. 1991–92 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.150 கோடி ஒதுக்கீட்டில், 5 ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டிய "சிறப்புப் பழுது பார்ப்புத் திட்டம்" ஒன்றைத் தொடங்கியிருந்தோம். நடப்பாண்டு உட்பட இதுவரை இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.95 கோடி ஒதுக்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் இது வரை 6430 கி.மீ. நீளமுள்ள சாலைகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில், இத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.41.46 கோடியாக இருக்கும். வரும் ஆண்டில் 3500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் சிறப்புப் பழுது பார்ப்புப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில், தொழிற்சாலை பகுதிகளுக்கு அருகே அமைந்துள்ள சாலைகளில் 430 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் ரூ.5 கோடி செலவில் சிறப்புப் பழுதுப் பார்ப்புப் பணியை மேற்கொள்ளும் பணியும் அடங்கும். அண்மையில் ஏற்பட்ட வெள்ளங்களையடுத்து, இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளை மனத்திற்கொண்டு, சாலைகளைப் பழுதுபார்த்துச் சீரமைக்கும் பணிக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் உயரிய முன்னுரிமை அளித்துள்ளோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையைக் கொண்டு, தீவிரப் பராமரிப்புப் பணிகளையும் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளையும் மேற்கொள்ள முடியும்.

65. கடந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 'மக்களுக்குப் பாலங்கள்' திட்டத்தைத் தொடங்குவதாக அறிவித்திருந்தோம். இத்திட்டத்தின் கீழ் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு பாலம் கட்டப்படும். 1993–94 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.10.42 கோடி செலவில் 208 பாலங்கள் கட்டுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள எஞ்சிய 26 பாலங்கள் 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1. 30 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்படும். 234 பாலங்களும் 1994–95 இல் கட்டி முடிக்கப்படும்.

66. உலக வங்கியின் உதவியோடு செயற்படுத்துவதற்காக ரூ.880 கோடி நிதி ஒதுக்கீட்டில், புதிய திட்டமொன்றை வகுத்துள்ளோம். இத்திட்டத்தின்கீழ், 528 கிலோமீட்டர் தொலைவுக்கு இரு வரிசைப் போக்குவரத்து வசதியும் ஏற்படுத்தி 1293 கி.மீ. தொலைவுக்கு இரு வரிசைச் சாலைகளை வலுப்படுத்துவதோடு மிகவும் பழுதடைந்து மோசமான நிலையிலுள்ள பாலங்கள் மீண்டும் கட்டப்படும். இத்திட்டத்தின் பயனாக, மாநிலத்திலுள்ள சாலைஅமைப்பின் தரம் முற்றிலுமாக உயரும். இத்திட்டத்திற்கு நிதியுதவியளிக்க உலகவங்கி ஆர்வம் காட்டியுள்ளது. இத்திட்டத்திற்கு விரைவிலேயே உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்குமென நாம் நம்புகிறோம்.

67. நாகப்பட்டினம் – கூடலூர் சாலை, கோயம்புத்தூர் – திண்டுக்கல் சாலை, பெரம்பலூர் – மானாமதுரை சாலை போன்ற போக்குவரத்து நெரிசல் மிகுந்த சில பெரிய சாலைகளில் பம்பாயில் உள்ள அடிப்படை வசதிக் கட்டமைப்புக் கடன்– நிதியுதவிப்பணிகள் நிறுவனத்தின் (ILFS)ஆதரவுடன் நான்கு வரிசைப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுளோம். இது, சாலை அமைப்பின் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு புதிய முயற்சியாக இருக்கும்.

68. ஊரகச் சாலைகளின் தரத்தை உயர்த்தவும் மிக உயர்ந்த முக்கியத்துவம் அளித்துள்ளோம். 1981 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, ஆயிரத்திற்கும் அதிகமாக மக்கட்தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும், 1994–95 ஆம் ஆண்டில் அனைத்துப் பருவங்களுக்கும் ஏற்ற ஊரகச் சாலை வசதிகள் ஏற்படுத்திக்கொடுப்பது உறுதிப்படுத்தப்படும். 1994–95 ஆம் ஆண்டில் ஊரகச்சாலைத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.18.50 கோடியாக இருக்கும். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, அங்காடிச் சாலைகள் திட்டத்தின்கீழ், 19 அங்காடி மையப் பகுதிகளில் ரூ. 45.28 கோடி மொத்தச்செலவில் நல்ல சாலைவசதிகள் ஏற்படுத்தப்படும். இது, ஊரகப் பகுதிகளில், 800 கிலோ மீட்டர் நீளமுள்ள நல்ல சாலை அமைய வழி வகுக்கும். 1994–95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 10 கோடி ஒதுக்கப்படும். பேருந்து வழித்தடச் சீரமைப்புத் திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 13 கோடியாக இருக்கும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 500 கிலோமீட்டர் சாலை சீரமைத்து மேம்படுத்தப்படும். கரும்பு செஸ் நிதித்திட்டத்தின்கீழ் 1994–95 ஆம் ஆண்டில் ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

69. நகர்ப்பகுதிகளில் காணப்படும் போக்குவரத்து நெரிசல்களைக் குறைக்கவேண்டும். இதற்குப் பெரிய அளவில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், TRAMP பிரிவின் ஒரு பகுதியாக, 10 முக்கியமான நகரங்களில், ரூ. 144.89 கோடி செலவில் 37 பணிகளை மேற்கொண்டுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.27.72 கோடியாக இருக்கும்.

70. சென்னைக்கும் கடலூருக்குமிடையே அமைந்துள்ள கிழக்குக் கடற்கரைச்சாலை, சில தொழில் நுட்ப, சுற்றுச்சூழல் மற்றும் ஒப்பந்தச் சிக்கல்களில் சிக்கியுள்ளது. இச்சிக்கல்கள் தீர்க்கப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் இச்சாலைப் பணியில் நல்ல முன்னேற்றம் இருக்குமென எதிர்பார்க்கிறோம். இச்சாலை மேம்பாட்டு பணிக்காக 1994–95 ஆம் ஆண்டில் ரூ.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

71. 1994 பிப்ரவரித் திங்கள் முதல்நாள் முதற்கொண்டு டீசல் விலை திருத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அரசு பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைதனை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதனால், 1994–95 ஆம் ஆண்டில் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கங்களுக்கு ரூ.60 கோடி இழப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. உடனடியாகப் பேருந்து கட்டணங்களைத் திருத்த இயலாது என்பதால், காலப்போக்கில் இந்த நிலைமையைச் சரிசெய்தாக வேண்டும். திரும்பத் திரும்ப டீசல் விலை உயர்த்தப்படுவதால் ஏற்படுகின்ற நிலைமையைச் சமாளிப்பது மிகவும் கடினமாக உள்ளது. மக்களுக்குப் பேருந்து போக்குவரத்துக் கழகங்கள் திறமையான போக்குவரத்துப் பணியை அளிக்க கடுமையாக முயற்சிகள் செய்து வருகின்ற வேளையில், இவ்விலை உயர்வுகளால் அவற்றின் செயல் திறன் பாதிக்கப்பட்டுள்ளது. விலைகள் திரும்பத் திரும்ப உயர்த்தப்படுவதால் இக்கழகங்களால் பழைய பேருந்துகளுக்குப் பதிலாகப் போதுமான அளவில் புதிய பேருந்துகள் வாங்கவோ, புதிய பணிகளைத் தொடங்கவோ முடிவதில்லை. டீசல் விலைகள் உயர்த்தப்படும்போது, அதன் உடன் நிகழ்வாக, பேருந்துக் கட்டணங்களையும் உயர்த்துவதற்கு வகை செய்ய வேண்டிய ஒரு நிலையைச் சென்றடைய வேண்டும்.

## சுற்றுச் சூழல்

72. பொருள் நிரல் 21 ன் வரம்பினை மனத்திற் கொண்டு, மாநில செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தைச் செயல்படுத்த, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியைக் கோரவிருக்கிறோம்.

73. மிக அதிக அளவில் மாசு ஏற்படுத்தி வருகின்ற, 17 தொழில் தொகுதிகளைப் பொறுத்தவரை, சுற்றுச் சூழல் நிலைமையைக் கண்காணிக்கும் பொறுப்பு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பெருமளவில் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டிய 119 தொழில் பிரிவுகள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலான தொழில்பிரிவுகள் மாசு ஏற்படுத்தாதவை என அறிவிக்கப்படும் வகையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் செய்யப்பட்டுள்ளது. மணலூரில், சுகாதாரக் கேட்டினை உருவாக்கும் கழிவுப் பொருட்களை அகற்றும் முதலாவது பொது வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மணலியில், அவசரகால இடர் உதவி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

74. தோல் பதனிடு தொழிற்சாலைகளினால் மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்காக, முனைப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ.47.74 கோடி மொத்தச் செலவில், 23 பொதுவான கழிவுப் பொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 1994 ஆம் ஆண்டில் 6 நிலையங்கள் அமைக்கும் பணி முடிவுறும்.

75. துணித் துறையில், சாயத் தொழில் பிரிவுகளால் மாசு ஏற்படுவதைத் தடுக்க, 16 பொதுவான கழிவுப் பொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

76. அரசு மேற்கொள்ளவிருக்கின்ற தொழில் சார்ந்த மற்றும் சுகாதாரக் கேட்டினை உண்டாக்கும் கழிவுப் பொருள் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி, ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் விரிவான ஆய்வு ஒன்றை நடத்தி வருகிறோம். 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அளிக்கப்படவிருக்கின்ற இந்த ஆய்வு பற்றிய அறிக்கையின் அடிப்படையில் விரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

77. காவிரி ஆற்றில், மாசு கலப்பதைத் தடுப்பதற்கான திட்டமொன்றைத் தொடங்க நாம் நடவடிக்கை எடுத்து வருவதை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ரூ.332 கோடி செலவாகக்கூடிய விரிவான திட்டம் ஒன்று, நிதியுதவிக்காக ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையில், தேசிய நதி செயல் திட்டத்தின் கீழ், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.2 கோடி செலவில் துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். MINARS திட்டத்தின் கீழ்ப் பெரிய ஆறுகளிலும், ஏரிகளிலும் தண்ணீரின் தரத்தைக் கண்காணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

78. ஒருங்கிணைந்த கடலோரப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை வகுக்குமாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். இத்திட்டத்தை வகுப்பது தொடர்பாக, புகழ் பெற்ற வல்லுநர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களின் உதவியை நாங்கள் நாடியுள்ளோம். இத்திட்டத்திற்குத் தேவையான வெளிநாட்டு உதவி பெறுவதற்காக, இதை விரைவிலேயே அனுப்பிவைக்கவிருக்கிறோம்.

79. மாநகர நீர்வழிகளைச் சுத்தம் செய்யவும், இவற்றில் மாசு கலப்பதைத் தடுக்கவும் சென்னை மாநகரில் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளவும் ரூ. 112.50 கோடி செலவில் திட்டமொன்றை வகுத்துள்ளோம். ஜெர்மனி நாடு இத்திட்டத்திற்கு, நிதி உதவி செய்வது குறித்துப் பரிசீலித்து வருகிறது. இத்திட்டம் குறித்து பல நிறுவனங்கள் விரிவான ஆய்வுகள் நடத்தியுள்ளன. இவற்றில் சேறு அகற்றல் ஆய்வும் அடங்கும். இந்த நீர்வழிகளைச் சீரமைத்து அவற்றைப் பழைய நிலைக்கு மாற்ற பெரும் முயற்சி எடுக்கப்படுவதற்கு உரிய தருணம் இதுவே ஆகும்.

80. நமது கடலோரப் பகுதிகள் கடலரிப்புக்குள்ளாவதைத் தடுப்பதற்கான திட்டமொன்றை உலக சுற்றுச்சூழல் நிதியின் உதவியோடு மேற்கொள்ளவிருக்கிறோம். ரூ. 50 கோடி மதிப்பீட்டுச் செலவாகக்கூடிய இத்திட்டம், சென்னை, கன்னியாகுமரி மாநிலத்தின் ஏனைய கடற்கரைப் பகுதிகள் ஆகிய இடங்களில் நிரந்தர மற்றும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வகை செய்யும்.

## நகர்ப்பகுதி மேம்பாடு

81. தமிழ்நாட்டின் நகர்ப்பகுதி மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 34.15 சதவீதமாகும். நகர்ப்புறத்தில் வாழும் மக்கள் தொகை விகிதத்தை வைத்துப் பார்ப்போமேயானால் தமிழ்நாடு, நாட்டில் மூன்றாவது இடத்தில் உள்ளது. நகர்ப்பகுதி நெருக்கடிப் பிரச்சினையைத் தீர்த்து, நகர்ப்பகுதி வாழ் ஏழைஎளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால், அதற்குப் பெருமளவில் முதலீடு தேவை. பெருமளவிலான முதலீட்டுத் திட்டத்தை மேற்கொள்ள, தனியார் மூலதனம் உட்பட, அனைத்து மூலதனத்தையும் நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது.

82. உலக வங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், இதுவரை செயற்படுத்தப்பட்ட மிகப்பெரிய திட்டங்களுள் ஒன்றாகும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு, ரூ.150 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மனைகளும் பணிகளும், குடிசைப்பகுதி மேம்பாடு, போக்குவரத்து மேம்பாடு, நகர்ப்பகுதிப் பேருந்துப் போக்குவரத்துமேம்பாடு, நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளுக்கு நிதியுதவி ஆகியவை இத்திட்டத்தின் முக்கியப் பிரிவுகளாகும். 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எழக்கூடிய தேவைகளை நிறைவு செய்யும் வகையில், ரூ.1000 கோடி ஒதுக்கீட்டுடன்கூடிய இரண்டாவது தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக்கொள்ள நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

83. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினால் கிடைக்கக் கூடிய முக்கியமான ஆதாயங்களில் ஒன்று, நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்காகப், புதிய நிதியுதவி ஏற்பாடுகள் உருவாக்கப்படுவதுதான். நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதியுதவி செய்வதற்காக, இத்திட்டத்தின்கீழ், நகராட்சி நகர்ப்பகுதி மேம்பாட்டு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில், நகர்ப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கத் தேவையான நிதியுதவி செய்வதற்காகவும், தமிழ்நாடு நகர்ப்பகுதி நிதி–அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடனை, நகராட்சிகள் திருப்பிச் செலுத்துவதில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளன. அரசு, தன் பொறுப்புகளைத் தீர்ப்பதற்காக, இக்கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. நாம், இந்த அம்சங்கள் அனைத்தையும் கருத்தில்கொண்டு, நகர்ப்பகுதி அடிப்படை வசதிகளுக்குத் தேவையான நிதியுதவிகளைச் செய்வதற்காகப், பொதுவான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தலாமா என பரிசீலிக்க வேண்டியுள்ளது. இப்பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரைப்பதற்காகக் குழு ஒன்றை அமைக்கவிருக்கிறோம்.

84. நகர்ப்பகுதி ஏழை, எளிய மக்களின் நலனுக்காக ஒருங்கிணைந்த புதிய திட்டம் ஒன்றைத் தொடங்க நாங்கள் கருதியுள்ளோம். நகர்ப்பகுதி ஏழை மக்களுக்கான இம்மாநில ஒருங்கிணைந்த திட்டம், நகர்ப்பகுதி ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்தவும், அவர்களின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முயற்சிகளை மேற்கொள்ளும். வெவ்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல்வேறு பணிகளை ஒன்றாகச் சேர்த்து ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்ற இத்திட்டம் உதவும். 1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின்கீழ் நகர்ப்பகுதியிலுள்ள ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயனடையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

## சென்னை மாநகர் மேம்பாடு

85. சென்னை மாநகரை, இந்நாட்டின் முதன்மையான பெருநகரமாக உருவாக்கிடும் நோக்கத்துடன், 'எழில்மிகு சென்னை–2000' திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை, இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இக்கண்ணோட்டத்துடன், விரிவான முதலீட்டுத் திட்டம் ஒன்றை வகுக்கக் கருதியுள்ளோம். 'எழில்மிகு சென்னை–2000' திட்டத்தில், இம்முதலீட்டுத் திட்டம் அடங்கும்.

86. 'எழில்மிகு சென்னை–2000' திட்டத்தின் பிரிவுகளும் 2000 ஆம் ஆண்டுக்கு முன் முடிப்பதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள முதலீடுகளும் வருமாறு –

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| *நீர் வழங்கல்–கழிவு நீரகற்றல் | 1600 |
| *மின் அனுப்புகை, வழங்கல் ஏற்பாட்டை வலுப்படுத்தலும், மின்சுமை அதிகமாக உள்ள சமயங்களில் கூடுதல் மின் திறனுக்கு வகை செய்தலும் | 650 |
| *சாலை வடிவமைப்பு மேம்பாடு, போக்குவரத்து நெரிசல் ஏற்படுத்தும் தடைகளை அகற்றுதல், புதிய போக்குவரத்து, நிர்வாக ஏற்பாடு | 300 |
| *மாநகர நீர் வழிகள் மேம்பாடு உட்பட சுற்றுப்புறத் துப்புரவு | 400 |
| *மழை நீர் வடிகால் | 75 |
| *வீட்டு வசதி மேம்பாடு | 525 |
| *மாநகரப் போக்குவரத்துத் திட்டம் | 300 |
| *ஏனைய மாநகர மேம்பாட்டுத் திட்டங்கள் | 150 |
| **மொத்தம்** | **4000** |

87. சென்னையை, 21 ஆம் நூற்றாண்டில், எழில்மிகு சென்னையாக மாற்றுவதற்காக, ரூ.4000 கோடி நிதிஒதுக்கீட்டுடன் 'எழில்மிகு சென்னை–2000 திட்டம்' செயற்படுத்தப்படும். இது, இந்நாட்டில் அனைவராலும் விரும்பப்படுகின்ற இடமாக, சென்னை மாநகரை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட விரிவான திட்டமாகும். புதிய வணிக மையங்கள், நிறுவன அலுவலகங்கள் அமைப்பதற்கு உகந்த இடம் சென்னை மாநகரம் என்ற முடிவுக்கு அனைவரும் வரக்கூடிய வகையில், இம்மாநகரத்தின் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்துவதை உறுதிப்படுத்த நாங்கள் விழைகிறோம். இந்நாட்டின் மாற்று நிதித் தலைநகரமாக, சென்னை விளங்கும் வகையில் இம்மாநகருக்கு வலிவும் பொலிவும் சேர்க்க வேண்டும் என்பதும் எங்களின் நோக்கமாகும்.

88. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் பெரும் முதலீடுகளுக்கு நிதி பெறும் வழியாக, பெருநகர் அடிப்படை வசதிக் கழகம் ஒன்றை நிறுவ நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இக்கழகத்திற்கான, மூலதனப்பங்கிற்கு, ஏற்பாடு செய்வது எங்கள் நோக்கமாகும். 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.15 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது, மாநில அரசின் பங்காகும். மத்திய அரசின் பங்கையும் சேர்த்து, ரூ.60 கோடி மொத்த மூலதனம் கிடைக்கும். இம்மாநகரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு நிதியுதவி அளிப்பதில் , இது ஒரு பெரிய அளவாகும்.

89. நகராட்சி திடக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டமொன்றை நாம் தொடங்கியுள்ளோம். 5 மெகா வாட் திறன் கொண்ட இந்த மின் உற்பத்தி நிலையம், ரூ.16 கோடி செலவில் சென்னைக்கருகிலுள்ள பெருங்குடியில் அமைக்கப்படும். இந்நிலையத்தில் உருண்டைகளாக்கப்பட்ட திடக் கழிவுகள் பயன்படுத்தப்படும். இத் திட்டத்தை, கூட்டுத் துறையில் டிட்கோ நிறுவனம் செயற்படுத்தும். கழிவுப் பொருட்களையும் மின் உற்பத்தியையும் தொடர்படுத்தும் இத் திட்டம், ஒரு பெரிய புதிய முயற்சியாகும்.

## வீட்டு வசதி

90. அனைவர்க்கும் வீடு என்பது இவ்வரசின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கையாகும். வீட்டுவசதி, கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புக்கு வகை செய்வதால், மெக்ஸிகோ போன்ற பல நாடுகளில் அங்கீகரித்தவாறு, வீட்டு வசதி ஒரு முக்கியமான பொருளாதாரப் பணியாகும். எனவே, இம்மாநிலத்தில் வீட்டுவசதி மேம்பாட்டுக்கு நாங்கள் அதிக முன்னுரிமை அளித்துள்ளோம்.

91. உண்மையில் தேவைப்படும் வீடுகளின் எண்ணிக்கையும், இதுவரை வழங்கப்பட்ட மொத்த வீட்டுவசதி நிலைமையையும் அறிந்து கொள்ள, நாங்கள் புதிய ஆய்வு ஒன்றைத் தொடங்கியுள்ளோம். இந்த ஆய்வின் அடிப்படையில், வீடுகள், மேம்படுத்தப்பட்ட மனைகள் கிடைப்பதை அதிகரிக்க நீண்டகாலத் திட்டம் ஒன்றை மேற்கொள்ள நாங்கள் கருதியுள்ளோம். இப்புதிய திட்டச் செயல்முறையின் கீழ், வீட்டுவசதி வாரியம், குடிசைப் பகுதி வாரியம் போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் மூலம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் வழங்குவதையும் மேம்படுத்தப்பட்ட மனைகள் வழங்குவதையும் நாங்கள் ஊக்குவிக்கவும் ஊரக, நகர்ப் பகுதி

வீட்டுவசதியை விரைவுபடுத்துவதற்காகக் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தி, வீட்டு வசதி நிதியுதவி நிறுவனங்கள், தங்கள் பணிகளை இம் மாநிலத்தில் விரிவுபடுத்துவதற்காக அவற்றுக்கு முழு ஆதரவு அளிக்கவும் நாங்கள் கருதியுள்ளோம். வீட்டுவசதி நிதியுதவி தொடர்பான நிலைமை குறிப்பாக, தேசிய வீட்டுவசதி வங்கியிடமிருந்து மறு நிதியுதவி பெறுவது தொடர்பான நிலைமை திருப்திகரமாக இல்லை என்று நான் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கடன் வழங்கு நிலை *சீரமைக்கப்படுவதையும்*, வீட்டு வசதிப் பிரிவுகளுக்காக வணிக வங்கி முறை மூலமும், ஏனையோருக்கும் போதுமான கடன் கிடைப்பதையும் மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். 1 . 25 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிக்கு வகை செய்வதே 1994–95ல் நாம் மேற்கொள்ளும் முயற்சியாகும்.

92. 1994–95 ஆம் ஆண்டில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ரூ.200 கோடி செலவில், 20,700 குடியிருப்புகளைக் கட்டும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1994–95 ஆம் ஆண்டில், 750 புதிய குடியிருப்புகள் கட்டும். இதனுடன், வரும் ஆண்டில், 10,000 குடும்பங்களுக்காக குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றையும் மேற்கொள்ளும். ரூ.1 . 5 கோடிசெலவில் "வீடற்றோருக்கு வீடு" திட்டத்தின் கீழ் 900 வீட்டுத் தொகுதிகள் கட்டப்படும். நடைபாதை வசிப்போர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 2,275 குடும்பங்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்படும். 1994–95 ஆம் ஆண்டில், குடிசைப் பகுதி மாற்று வாரியம் 4 நகர்ப்பகுதி புதுப்பித்தல் திட்டங்களையும் மேற்கொள்ளும். 1994–95 ஆம் ஆண்டில், 10,000 குடியிருப்புகள் கட்டுவதற்காக, நகர்ப் பகுதி வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி ஆதரவு அளிக்கும்.

93. வரும் ஆண்டில் பெரிய வீட்டு வசதித் திட்டங்களை எடுத்துக் கொள்ள இயலும் வகையில் கிராம வீட்டு வசதித் திட்டம் வலுவான அடிப்படையில் *சீரமைக்கப்படும்* என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காகக் கடன் தொகைகள் உரிய நேரத்தில் வசூலிக்கப்படவேண்டியுள்ளது. ஒவ்வோராண்டும் அதிக எண்ணிக்கையில் வீடுகளைக் கட்ட இயலும் வகையில், 165 வட்ட வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராம வீட்டு வசதித் திட்டத்தின் செயல்பாட்டினை நாங்கள் மேம்படுத்துவோம். 1994–95 ஆம் ஆண்டில் 30,000 குடியிருப்புகள் கட்ட வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டில் 10,000 குடியிருப்புகள் கட்டுவதற்காகக் "கிராமப்பகுதிகளில் வீட்டுவசதி நிலையை உயர்த்தல் (கப்ரா)" என்னும் புதுமையான திட்டத்தைத் தொடர்ந்து நாங்கள் செயற்படுத்துவோம். இத்திட்டத்தின் கீழ் கிராமங்களில் வீடுகளின் நிலை உயர்த்தப்படும்.

94. வரும் ஆண்டில், பெரிய அளவில் வீட்டு வசதிப் பணிக்கு கடன் வழங்குவதற்காகத் தொடக்க நில வள வங்கியின் பணிகளைத் தீவிரப்படுத்த நாங்கள் கருதியுள்ளோம். இதற்குத் தேவையான இசைவையும் நாங்கள் பெற்றுள்ளோம். 1994–95 ஆம் ஆண்டில், கூட்டுறவு நில வள வங்கிப் பணி மூலம் வீட்டு வசதிக்கு நிதி ஆதரவு அளிக்கும் பெரும் திட்டத்தைத் தொடங்க உள்ளோம்.

95.புயல் வெள்ளத்தைத் தொடர்ந்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டித் தருவதற்காக மேற் கொள்ளப்பட்ட சிறப்புத் திட்டம் பற்றி இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டத்தின் கீழ் 18,000 வீடுகள் கட்டித் தரப்படும். இத்திட்டத்திற்காக இவ்வரசு ரூ.8 . 10 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடுகள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்திட்டத்தின் கீழ் கூடுதல் வீடுகளுக்கு நிதியுதவி அளிப்பது பற்றியும் நாங்கள் பரிசீலித்துள்ளோம். மத்திய அரசிடமிருந்து இசைவு வரப் பெற்ற பின்னர் இத்திட்டத்தைச் செயற்படுத்துவோம்.

## கல்வி

96. இந்த வரவு–செலவுத் திட்டத்தில், கல்விக்காக மொத்தம் ரூ.2002 .46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கணக்கிலான செலவினத்தில், 22 . 04 சதவீதம் செலவு ஆகக் கூடிய ஒரே பெரிய துறை , கல்வித் துறையாகும்.

97. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அண்மையில், 1994 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உணர்ச்சிகிளறும் உரையில், மாநிலம் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவரித்துள்ளார். 1998 ஆம் ஆண்டிற்குள் "அனைவருக்கும் கல்வி" என்ற இலக்கை எய்துவதற்குத் தமிழ்நாடு முயற்சி செய்யும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதனையொட்டிக் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனரா என்பதையும், மிக முக்கியமாக, 14 வயதுவரை அவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடருகிறார்களா என்பதையும் உறுதி செய்வதற்குப் பெரும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இந்த இலக்கை எய்துவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களுக்கு வகைசெய்யும் விதத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

98. தொடக்கக் கல்வி முறையின் தரத்தை உயர்த்துவதற்குப் பின்வரும் முக்கியப் பணிகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

* 1994–95 ஆம் ஆண்டிலிருந்து இம் மாநிலம் முழுவதும், குழந்தை முன்

பருவப் பாதுகாப்பு – கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

*1994 ஆம் ஆண்டு கோடை விடுமுறையில் சிறப்பு முயற்சி மேற்கொள்வதன் மூலம் 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் அனைவரும் பள்ளிகளில் சேர்வதை உறுதி செய்தல்.

* கோடை விடுமுறையின் போதும், பள்ளி திறந்த பிறகும் அதிக அளவில் குழந்தைகள் பள்ளிப் படிப்பைத் தொடருகிறார்களா என்பதை உறுதி செய்ய சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

*பள்ளியில் பயிலாத 6–14 வயதுத் தொகுதியினருக்கு, பள்ளிசாராக் கல்வி நீட்டிக்கப்படுவதை உறுதி செய்ய, படித்த தன்னார்வத் தொண்டர் பணித் திட்டத்தை வலுப்படுத்துதல்.

* பாடப்புலத்தின் தரத்தை உயர்த்துதல், ஆசிரியர் பயிற்சி, ஆசிரியர் செயலூக்கம், குறைந்தபட்சக் கல்வி, பள்ளித் திட்டத்தில் பெற்றோர்களின் பங்கு ஆகியவற்றுக்கு வகை செய்தல்.

* அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், அடிப்படை வசதியை மேம்படுத்துதல்.

மேற்சொன்ன முக்கியமான செயல் திட்டங்களில் முழுக் கவனம் செலுத்தப்படும். அதனால், தொடக்கக் கல்வி முறை முழுவதும் வருமாண்டில் நிலை உயர்த்தப்படும்.

99. இம் மாநிலத்தில், தொடக்கப்பள்ளித் திட்டத்தை நிலை உயர்த்துவதற்கு ரூ.1200 கோடி நிதியொதுக்கீட்டுடன்கூடிய விரிவான திட்ட அறிக்கை ஒன்றினை, உலக வங்கியிடம் நாம் அளித்துள்ளோம் என்பதை இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத் திட்ட அறிக்கை தற்போது மத்திய அரசிடம் உள்ளது. இத் திட்டத்தை உலக வங்கிக்கு அனுப்புமாறு நாம் மத்திய அரசை வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளோம். இதற்கிடையில், பெண் கல்வியின் அளவு தேசிய அளவைவிடக் குறைவாக உள்ள மாவட்டங்களில், பெண் கல்வியை மேம்படுத்த பன் மாநிலத் திட்டமொன்றை உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம், தருமபுரி, திருவண்ணாமலை–சம்புவராயர், விழுப்புரம் –இராமசாமிப் படையாட்சியார், தென் ஆர்க்காடு–வள்ளலார் ஆகிய 4 மாவட்டங்களில், செயற்படுத்தப்படும். 5 ஆண்டுக் கால அளவிற்கு, இத்திட்டத்திற்கான நிதியொதுக்கீடு ரூ.120 கோடியாக இருக்கும். இது, தொடக்கப் பள்ளிகளில் பெண் குழந்தைகள் அதிக அளவில் சேர்க்கப்படுவதையும், தொடர்ந்து கல்வி பயிலுவதையும் மேம்படுத்தும் குறிப்பான நோக்கத்துடன் செயற்படுத்தப் படுகிறது. இது இந்த 4 மாவட்டங்களில், தொடக்கப் பள்ளித் திட்டத்தை நிலை உயர்த்துவதற்கான பெரிய புதிய முயற்சியாக இருக்கும்.

100. வரும் ஆண்டில், புதிதாக 766 தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படுவது உறுதி செய்யப்படும் என்பதை அறிந்து இப்பேரவையின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இதன் பின்னர், ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்தது ஒரு நிரந்தரக் கட்டிடமாவது கட்டிக் கொடுக்கப்படும். அதே நேரத்தில், வருமாண்டில், கூடுதலாக 750 பள்ளிக் கட்டிடம் கட்டும் பணியையும் நாம், மேற்கொள்ளவிருக்கிறோம். தொடக்கப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதை இது உறுதிசெய்யும். கல்வித் துறையில், சொத்துக்கள் சரிவரப் பராமரிக்கப்படுவதை உறுதி செய்கிற, உள்ளாட்சி நிதிக் கணக்கு III ன் கீழ், நிலைமையைச் சரிசெய்யுமாறு ஊராட்சி ஒன்றியங்களை நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். இக்கணக்கின்கீழ் வருமாண்டில், தொடக்கப் பள்ளிக் கட்டிடங்களின் சரிவரப் பராமரிப்புக்கானதிட்டமொன்றுசெயற்படுத்துமாறு பார்த்துக் கொள்ளப்படும்.

101. என்னுடைய சென்ற ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில், தொடக்கப் பள்ளிகளில், குழந்தைகள் கட்டாயமாகச் சேரவேண்டுமென்பதற்கும் தொடர்ந்து கல்வி பயில வேண்டுமென்பதற்கும் வகைசெய்யும் புதிய சட்டத்தைக் கொண்டு வருவோமென்று நான் அறிவித்தேன். இந்த அறிவிப்பு பெரிய அளவில் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. இச்சட்டத்திலுள்ள விதித் துறைகளின் தன்மை குறித்து நாங்கள் விரிவாக விவாதித்துள்ளோம். இப்புதுமையான சட்டம், மாநிலம் முழுவதும் செயற்படுத்தப்படும். தங்கள் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைப்பது, தங்களுடைய உன்னதக் கடமை என்பதைப் பெற்றோர்கள் உணரச் செய்வதே நம்முடைய முயற்சியாக இருக்கும். தண்டனை விதித் துறைகளைப் பயன்படுத்துவதை விட, பேசி இணங்க வைப்பதன் மூலமும் சமுதாய வற்புறுத்தலின் மூலமுமே, இந்தச் சட்டத்தின் விதித் துறைகள் செயற்படுத்தப்படும். மாநிலம் முழுவதிலும் தொடக்கக் கல்வி பெறும் வாய்ப்பை உருவாக்கி மாணவர்கள் சேருவதையும் தொடர்ந்து படிப்பதையும் உறுதி செய்வதற்குத் தேவையான நிலைமைகளையும் நாம் ஏற்படுத்தியுள்ளதால், இந்த நிலையில், இச் சட்டத்தை நம்மால் வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதற்கு வகைசெய்யும் சட்டம் ஒன்றை நடப்புக் கூட்டத் தொடரில் நாங்கள் கொண்டுவர இருக்கிறோம். கட்டாயக் கல்விக்கு வகைசெய்யும் புதிய சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு எடுக்கப்பட்ட இந்த அற்புத முயற்சியை, இம்மாமன்றத்தின்

மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர். இது வரும் சந்ததியினருக்கு, நாம் அளிக்கும் ஒரு பெரும் பரிசாகும்.

102. எல்லோருக்கும் எழுத்தறிவிக்கும் இயக்கமான "அறிவொளி இயக்கம்" சென்னை மாநகர் நீங்கலாகத், தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்திற்கு, ரூ.58 . 26 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், மொத்தம் 83 . 08இலட்சம் பேர் பயனடைவர். இந்த இயக்கத்தின் முடிவான கட்டத்தை நாம் நெருங்கிக் கொண்டிருந்தாலும், எழுத்தறிவு இயக்கம் ஒரே நேர முயற்சியில் முடிவடைவதல்ல என்பதை நாம் உணர வேண்டும். உரிய தொடர் எழுத்தறிவு இயக்கத்தின் மூலம் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்படவேண்டும். அப்போது தான், அந்தஇயக்கத்தின் பலன்களைத் தக்கவைத்துக் கொள்ள இயலும். புதிதாக எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டவர்களின் ஆர்வத்தில் தொய்வு ஏற்படாமல் தொடரவும் அவர்கள் தங்கள் புதிய திறனைபயன்படுத்திக் கொள்ளவும் இயலும் வகையில் தொடர் எழுத்தறிவு இயக்கம் செயற்படுத்தப் படுவதை உறுதிப்படுத்தியுள்ளோம்.

103. உயர்நிலைப் பள்ளி; மேனிலைப் பள்ளி முறைகளின் நிலை உயர்த்தப்படுவதை உறுதி செய்யவும் நாங்கள் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். வருமாண்டில், 25 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 12 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். கடந்த ஆண்டு நாங்கள் தொடங்கிய பள்ளி மேம்பாட்டுத் திட்டம், இதற்கு முன்னர் எப்போதும் இருந்திராத அளவிற்குப் பொது மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பதை அறிந்து இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். ரூ.76 கோடி அளவிற்குப் பொருளாக உதவி கிடைத்துள்ளது. இதேபோன்று, புதிதாகக் கொண்டுவரப்பட்ட பள்ளிப் புரவலர் திட்டத்தின் கீழ், ரூ.4.10 கோடிஅளவிற்கு உதவித் தொகை பெறப்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து கிடைத்துவரும் பேராதரவு, இடைநிலைப் பள்ளி முறையின் தரத்தை உயர்த்துவதற்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

104. பொதுமக்களிடமிருந்து பெறும் உதவித் தொகையை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்த நாம் முடிவு செய்துள்ளோம். உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களையும் மேனிலைப் பள்ளிக் கட்டிடங்களையும் கூடுதலாகக் கட்டுவதற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், உள்ளூர் உதவித் தொகைகள்மூலம்கிடைக்கும் தொகையையும் இந்நோக்கத்திற்கு பயன்படுத்தப்படும். பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுவதன் மூலமும், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற ஏனைய திட்டங்களிலிருந்து பங்குத் தொகைபெறுவதன் மூலமும் 1994 ஆம் ஆண்டில் ரூ.4 கோடி செலவில் கூடுதலாகக் கட்டிடம் கட்டும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த இயலுமென்று எதிர்பார்க்கிறோம். இடைநிலைப் பள்ளி முறைக்கு உள்ள அடிப்படை வசதிகள் இதனால் கணிசமான அளவிற்குப் பெருகும். பள்ளிகளில் கணினி அறிவியல் மற்றும் படிப்புத்(CLASS) திட்டத்தின்கீழ், நாம் இதுவரை 14 பள்ளிகளைக் கொண்டு வந்துள்ளோம். 1994 ஆம் ஆண்டில், மேலும் 50 பள்ளிகள் இத்திட்டத்தின் கீழ்கொண்டுவரப்படும்.

105. நடப்பாண்டில் தொடங்கப்பட்டுள்ள படித்த தன்னார்வத் தொண்டர் பணித்திட்டம் குறித்து, இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டத்திற்குப் பேராதரவு உள்ளது என்பதையும், இத்திட்டத்தில் பணியாற்ற 1.5 இலட்சம் இளைஞர்கள் திரட்டப்பட்டுள்ளனர் என்பதையும் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல் குடியின் தீமைகளைப்பற்றிப் பிரச்சாரம் செய்தல், பள்ளிசாராக் கல்வியினை அமுலாக்குதல் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்ட மிகப்பெரிய சமூகச் சீர்திருத்த முயற்சியாகும். இத்திட்டத்திற்கு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.13 . 80 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

106. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இம்மாநிலத்தில், விளையாட்டுகளின் மேம்பாட்டிற்கு அதிக முன்னுரிமை அளித்துள்ளார்கள். மிகக்குறுகிய கால அளவில், அதாவது, ஏழரை மாத கால அளவில் கட்டிமுடிக்கப்பட்ட ஒளிர்கிற ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில், பன்னாட்டு அழைப்பு தடகளப்போட்டிகளும், 33 ஆம் தேசிய தடகளப் போட்டி விளையாட்டுக்களும் நடைபெற்றன. இம்மாநிலத்திலுள்ள விளையாட்டு ஆர்வலர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த ஆர்வமிக்க இப்புதிய முயற்சிகள் குறித்து மகிழ்ச்சியடைகின்றனர். 1995 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள அடுத்த தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெறும். இப்போட்டிகளை மிகச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஏற்ற வகையில் ரூ.20 கோடி செலவில் போட்டி விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளிலுள்ள இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க, சீன நாட்டவர் மேற்கொள்ளும் முறையைப் பின்பற்றி, வரும் ஆண்டில் மேன்மை மிக்க திட்டமொன்றைத் தொடங்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். இத்திட்டத்தின்கீழ், மொத்தம் ரூ.4 கோடி செலவில் 388 ஊரக விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்படும். ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் போட்டி விளையாட்டு மையம் ஒன்று இருக்கும். இவ் விளையாட்டு மையத்தில், பொருத்தமான விளையாட்டுச் சாதன அறையும் 400 மீட்டர் தடகளப்பாதையும் இருக்கும். மேலும், உரியவாறு பயிற்சியளிப்பதற்காகப்

பயிற்சியாளர் ஒருவரும் அம்மையத்தில் இருப்பார். தடகளப் போட்டி விளையாட்டுகளில் பங்கேற்க ஊரக இளைஞர்கள் ஊக்குவிக்கப்படுவர். இது, ஊரகப் பகுதிகளில், விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காகத் துணிவுடன் எடுக்கப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும். தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான புதிய விளையாட்டு விடுதியொன்றும் வருமாண்டில் தொடங்கப்படும். விளையாட்டு வீரர்கள் தம் திறமையை வளர்த்துக் கொள்ள உயர்வகை வசதிகளுடன் கூடிய இவ்விடுதி உதவும். **1994–95 ஆம் ஆண்டில், இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில், மாவட்ட அளவிலான விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும்.**

107. உயர் கல்விக்கான மாநிலக் குழு ,1993 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு, இக்குழு திட்டங்களைத் தீட்டும். பல்கலைக் கழகங்கள் தங்கள் வசதிகளை, நிலை உயர்த்திக் கொள்ளவும் இது ஆதரவு அளிக்கும். **1994–95 ஆம் ஆண்டில், இராமநாதபுரத்தில் புதிதாக மகளிர் கல்லூரி ஒன்று தொடங்கப்படும். இதற்கென, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.35 . 57இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதியுதவியுடன் தொழில்நுட்ப வல்லுநர் கல்வித் திட்டம் மொத்தம் ரூ.76 கோடி செலவில் செயற்படுத்தப்பட்டுவருகிறது. வரும் ஆண்டில் இத்திட்டதிற்கான நிதியொதுக்கீடு ரூ.9 கோடியாகும். இது, 55 பல்தொழில் நுட்பப் பயிலகங்களை மேம்படுத்த வகை செய்யும்.**

108. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநிலத் திட்டக்குழுக் கூட்டம் ஒன்றில், தரமணிப் பகுதியில் தற்போதுள்ள பல அறிவியல் நிறுவனங்களை ஒன்றாகச் சேர்த்து சென்னையில் அறிவியல் நகரம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. பல்வேறு துறைகளுக்கிடையேயும் பல்வேறு நிறுவனங்களுக்கிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்துதல், அறிவியல் பரிமாற்றங்களுக்கு ஊக்கமளித்தல், உலக அமைப்புகளோடு அறிவியல் தொடர்புகள் ஏற்படுத்துதல், பெரிய அளவில் அறிவியல் கருத்தரங்குகள் நடத்துவதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதே இந்த அறிவியல் நகரம் உருவாக்குவதன் முக்கிய நோக்கமாகும். **அறிவியல் நகரம் அமைப்பதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

## தமிழ் வளர்ச்சி—பண்பாடு

**109. எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூரில் 1995 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளன்று தொடங்கி மிகப் பெரிய அளவில் நடத்தப்படவிருக்கிறது என்பதை அறிவதில் இம்மான்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பெருமகிழ்சி அடைவர்.** இம் மாநாடு, 5 நாட்களுக்கு நடத்தப்படும். உலகமெங்கிலும் இருந்து தமிழ் அறிஞர்களும் வல்லுநர்களும் வந்து இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கிறார்கள். **தமிழ் மொழியின் கீர்த்தி மிகு பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையில், மிகப் பிரம்மாண்டமான முறையில் இம் மாநாட்டை நடத்துவதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இம்மாநாட்டை நடத்துவதற்கு, வரவு–செலவுத் திட்டத்தில், தொடக்க நிதியொதுக்கீடாக ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

110. நம்முடைய பாரம்பரியத்தைக் கட்டி காக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, **ரூ.61 . 90 இலட்சம் செலவில், தஞ்சாவூர் அரண்மனையைப் பழுது பார்த்துச் சீரமைக்கும் பணி, மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில், ரூ.79 . 80 இலட்சம் செலவில், மதுரை, திருமலை நாயக்கர் மகாலைச் சீரமைக்கும் பணியும் தொடங்கப்படும்.** இவ்விரு சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காகக் குறிப்பிடத் தக்க அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பெரிதும் பாராட்டுவார்கள்.

111. சென்னை அரும்பொருள் காட்சியகத்தில், விலை மதிக்க முடியாத அமராவதி கால அரும் கலைப்பொருட்களைத் தொகுத்து, புதிய பௌத்த கலைக்கூடம் ஏற்படுத்துவது பற்றி விரிவான ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொள்ளவிருக்கிறோம். இந்த விரிவான ஆய்வின் அடிப்படையில், இப் புதிய கலைக்கூடத்தை நிறுவுவதற்கான பணி மேற்கொள்ளப்படும்.

112. நாடகக் குழுவினருக்கு ஊக்கமளிக்கும் ஓர் ஏற்பாடாக நாடகக் குழுவினர் நாடகங்களை நடத்துவதற்காகப் பேருந்துப் பயணம் மேற்கொள்ளும்போது, அவர்களுக்கு 50 சதவீத பேருந்துக் கட்டணச் சலுகை அளித்துள்ளோம்.

113. நமது குழந்தைகள் அனைவரும், தமிழ் மொழியை ஆர்வமுடன் கற்கச் செய்யும் ஓர் முயற்சியாக, பாலர் பள்ளிகள் அனைத்திலும், நாங்கள், தமிழ்மொழி கற்பதைக் கட்டாயமாக்கியுள்ளோம்.

114. தமிழர்களின் கடல்கடந்த வாணிப வரலாற்றை ஆதாரபூர்வமாக மெய்ப்பிப்பதற்கான முன்னோடித் திட்டம் ஒன்று, கடலாய்வு தேசிய நிறுவனத்துடன்

இணைந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் ரூ. 15 இலட்சம் செலவில் முடிக்கப்படும். பின்னர் ஆய்வுகளின் முழுமையான மதிப்பீடு ஒன்று தயாரித்து அளிக்கப்படும்.

## சுகாதாரம் – குடும்ப நலம்

115. **1994–95 ஆம் ஆண்டில் சுகாதாரம்–** குடும்ப நலன் குறித்த **மொத்த நிதி ஒதுக்கீடு, மிக அதிகமாக, ரூ.643 . 14 கோடியாக இருக்கும். மருந்துகள், மருந்துப் பொருள்களுக்கான நிதியொதுக்கம் நடப்பாண்டில் ரூ.75 கோடியிலிருந்து, வரும் ஆண்டில் ரூ.88 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தொடக்க சுகாதாரம், குடும்ப நலன் குறித்த திட்ட ஒதுக்கீடு, 1993–94இல் ரூ.174 . 21 கோடியிலிருந்து, 1994–95இல் ரூ.198 . 95 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.** புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா தாய்–சேய் நல முகாம்கள் மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. **இதுவரை, 1315** முகாம்கள் **நடத்தப்பட்டுள்ளன. 2 . 11 இலட்சம் மகளிருக்கும், 2 .19 இலட்சம் குழந்தைகளுக்கும் சுகாதர வசதி அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 5 – 15 வயதுத் தொகுதியைச் சேர்ந்த பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் மருத்துவச் சோதனை செய்வதற்கு வகை செய்யும் "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பள்ளிச்** சுகாதார முகாம்கள்" **திட்டத்தை, 1994 ஜுன் திங்களிலிருந்து தொடங்க விருக்கிறோம்.** உலக வங்கி, யூனிசெப் ஆகியவற்றிடமிருந்து கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டு, "குழந்தையின் உயிர் காத்தல் மற்றும் பாதுகாப்பான தாய்மைப்பேறு" (CSSM) திட்டத்தை நாங்கள் செயற்படுத்துகிறோம். இதுவரை, எட்டு மாவட்டங்களில், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், **1994–95 ஆம் ஆண்டில் சென்னை, செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர்.,** கோயம்புத்தூர், **பெரியார், நீலகிரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம்–**காயிதே மில்லத் **ஆகிய 7 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.** மகளிர்–குழந்தைகளுக்குப் போதுமான சுகாதாரப் பாதுகாப்பு அளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக **இந்திய மக்கள் தொகை திட்டம்-V, ரூ.10 . 26** கோடி முதலீட்டுடன் **15 நகராட்சிகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.** இத்திட்டம், நகர்ப்பகுதி ஏழை, எளிய மக்களுக்கு ஒருங்கிணைந்த மகப்பேறு, குழந்தை சுகாதாரப் பாதுகாப்பு, குடும்ப நலப் பணிகள் ஆகியவற்றிற்கு வகை செய்கிறது.

116. இம்மாநிலத்தில் 1417 தொடக்கச் சுகாதார மையங்கள் உள்ளன. இவை, கிராமங்களின் மூலைமுடுக்குகளில் மருத்துவப்பணி ஆற்றி வருகின்றன. **120 தொடக்கச் சுகாதார மையங்களுக்கான கட்டிடங்கள் 1994–95 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்பதை அறிந்து இம்மான்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வடைவர்.** இதற்காக, **வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.7. 21 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.1. 45 கோடி மொத்தச் செலவில், 12 தொடக்கச் சுகாதார மையங்களுக்கு மருந்தகக் கட்டிடங்கள் கட்டும்பணியும் மேற்கொள்ளப்படும்.**

117. மகப்பேறு, குழந்தை சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு, அதிகமுன்னுரிமை அளிப்பதை உறுதி செய்வது, **இவ்வரசின் முக்கிய முயற்சியாகும். மாநிலத்தில் , ஒவ்வொரு வட்ட மருத்துவமனையிலும் புதிதாகப் பிறந்த குழந்தைநல மருத்துவ நிலையம் ஏற்படுத்துவதை உறுதி செய்வதற்காக வரும் ஆண்டில் சிறப்பு திட்டம் ஒன்றைத் தொடங்க, நாங்கள் முடிவு செய்துள்ளோம்.** முதல் நடவடிக்கையாக, இந்நோக்கத்திற்காக மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளை ஒதுக்கித் தேவையான சாதனங்களையும், மருத்துவர்களையும் வழங்குவோம். **தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் மற்றும் டேனிடா நிதியுதவி பெறும் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு, ரூ.2 . 70 கோடியாக இருக்கும்.**

118. தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டத்திலும், குறைந்தது 32 படுக்கைகளுடன் ஒரு அரசு மருத்துவமனையாவது இருக்கவேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக ,அரசு, திட்டம் ஒன்றைத் தொடங்கியதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். **இத்திட்டத்தின்கீழ் 11** வட்ட மருத்துவனைகளில் வார்டுகள் கட்டும் பணியை, நாங்கள் ஏற்கெனவே எடுத்துக் கொண்டுள்ளோம். **1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டம் முடிக்கப்பட்டுவிடும் என்று அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இனி, ஒவ்வொரு வட்டத்திலும் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளாவது கிடைக்கும் என்று நான் உறுதியளிக்கிறேன்.**

119. விழுப்புரம், அண்மையில் மாவட்டத் தலைமையிடமாகியுள்ளது. **இம்மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில், 48 படுக்கைகளுடன் புதிய வார்டு ஒன்றைக் கட்டும் பணியை ,வரும் ஆண்டில், நாங்கள் எடுத்துக் கொள்ள உள்ளோம்.** இது ஒவ்வொரு மாவட்டத் தலைமையிட மருத்துவனையிலும் குறைந்தது 200 படுக்கை வசதிகள் அளிக்கும் தொடர் திட்டத்தின் ஒரு பகுதியாகும். **ரூ.83 . 85 இலட்சம் செலவில், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில், பல்வேறு ஏனைய வசதிகளை வரவு–செலவுத் திட்டத்தில் அளிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.**

120. **தருமபுரி, நாகப்பட்டினம்–காயிதே மில்லத், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் டேனிடா நிதி உதவியுடன், ரூ.89 . 11 கோடி செலவில், சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம், வரும் ஆண்டில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.** இத்திட்டம், இம்மூன்று மாவட்டங்களில் தொடக்க சுகாதார

பாதுகாப்பு முறையின் நிலை உயர்த்துவதற்கு வகை செய்வதுடன் தொடக்க சுகாதாரப் பாதுகாப்பு முறைக்கு ஆதரவளிப்பதுடன், மாநிலம் முழுவதும் இது தொடர்பான சுகாதாரப் பணிகளுக்கு உதவி புரியும்.

**121. உலக வங்கியின் நிதியுதவியுடன், மொத்தம் ரூ.64 கோடி ஒதுக்கீட்டுடன் பார்வையின்மைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை விரைவில் தொடங்க உள்ளோம். இத்திட்டம், கி.பி. 2000 ஆவது ஆண்டிற்குள் கண்புரை நோய் இனங்களை 1.65 சதவீதத்திலிருந்து 0.3 சதவீதமாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நோக்கத்தை எய்த, வட்ட, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில், 1696 கூடுதல் படுக்கைகளுக்கும், 48 அறுவை சிகிச்சைக் கூடங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் வகை செய்யப்படும்.**

122. கொடிய 'எய்ட்ஸ்' நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தப் போதுமான தடுப்பு நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியுள்ளது. இம்மாநிலத்தில் "எய்ட்ஸ்" கட்டுப்பாடு திட்டத்தைச் செயற்படுத்த, தேவையான வசதிகளை ஏற்படுத்தியுள்ளோம். **இம் மாநிலத்தில் செயல்பட்டு வரக்கூடிய 88 இரத்த சேமிப்பு வங்கிகளில், பாதுகாப்பான இரத்தம் பெறும் வகையில், 44 இரத்த சேமிப்பு வங்கிகளில், நாங்கள் சாதனங்களை வழங்கியுள்ளோம். வரும் ஆண்டில், மத்திய அரசின் ஆதரவுடன், எஞ்சியுள்ள இரத்த சேமிப்பு வங்கிகள் அனைத்திலும், இச்சாதனங்களை வழங்க நாங்கள், திட்டமிட்டுள்ளோம்.** அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் 'எய்ட்ஸ்' கட்டுப்பாட்டுத் திட்டத்தை புகழ் பெற்ற அரசு சாரா அமைப்பான தொண்டு சுகாதாரப் பணி நிறுவனம் (VHS) மேற்கொள்ளும். இத்திட்டம், மக்கள் தொடர்பு சாதனம் மூலம், பிரச்சாரம் செய்து, இந்நோய் எளிதில் பரவ வாய்ப்புள்ள பிரிவினர்களின் நடத்தையில் மாறுதல் ஏற்படுத்துவதையும், பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

123. உயரளவு பயன்தரக்கூடிய துறைகளில், நம்முடைய அரிதான நிதி ஆதாரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்பது தற்போது தெளிவாகிறது. சமுதாயத்தில் நோயினால் ஏற்படக்கூடிய சுமையைப் பெருமளவு குறைக்கும் திட்டவட்டமான நடவடிக்கைகளில் அரிய நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் அவசியம் பற்றி உலக வங்கி அதன் முந்தைய ஆண்டின் உலக வளர்ச்சி அறிக்கையில், சுட்டிக் காட்டியுள்ளது. கிடைக்கக்கூடியநிதி ஆதாரங்களுக்குள், இறப்பு வீதத்தைப் பெருமளவிற்குக் குறைக்க, தாய்–சேய் நலன், தொழுநோய், மலேரியா, காச நோய் சிகிச்சை மற்றும் 'எய்ட்ஸ்' நோய் தடுப்பு போன்ற துறைகளில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதை நாம் உணர்ந்துள்ளோம். இப்பணிகளில் நாம் உயரளவு கவனஞ் செலுத்த வேண்டும். பெரிய அளவிலான மருத்துவ மனைகளில், புதிய சாதனங்கள் கணிசமான அளவிற்குத் தேவைப்படுகின்றன. அவற்றிற்குக் கட்டிடங்களும் கட்ட வேண்டியுள்ளது. நிதி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, அத்தகைய புதிய வசதிகளுக்குக் கட்டணம் வசூலிக்க வேண்டியுள்ளது. அப்போதுதான் அவை, சுய நிதி ஆதாரத்துடன் செயல்பட இயலும்.

## குடிநீர் வழங்கல்

124. மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு இவ்வரசு மிக அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. **1993–94 ஆம் ஆண்டில், குடிநீர் வழங்கல் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 276.21 கோடியாக இருந்தது. 1994–95 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 387.72 கோடியாக இருக்கும்.**

125. 1992 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததையடுத்துச் சென்னை மக்களை வாட்டிய கடுமையான குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க இவ்வரசு மேற்கொண்ட மிகச் சிறப்பான நடவடிக்கையை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சென்னை மாநகருக்கு தண்ணீர் வழங்குவதை அதிகரிக்கவும் அதனை முறையாகப் பகிர்ந்தளிக்கவும் உறுதி செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்ததோடு அந்நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒவ்வொரு வாரமும் நேரடியாகக் கண்காணித்து வந்தார். **கடுமையான குடிநீர்ப் பற்றாக் குறையிலிருந்து சென்னை வாழ் மக்களை மீட்பதற்காக செய்த மிகச் சிறந்த பணியை சென்னை மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் பாராட்டினர்.**

126. சென்னை மீண்டும் இத்தகையதோர் இடர்ப்பாட்டை எதிர்நோக்கக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளார். இம்மாநகருக்கு குடிநீர் வழங்குவதை அதிகரிக்கும் மிகப் பெரிய முதலீட்டிலான திட்டத்தைச் செயற்படுத்த வேண்டிய அவசரத் தேவை குறித்து, அவர் உலக வங்கியின் நிருவாக இயக்குநருக்கும், துணைத் தலைவருக்கும் விளக்கி, இதனை அவர்கள் ஏற்குமாறு செய்துள்ளார். **வீராணம் ஏரியிலிருந்து வழங்கப்படும் நீரின் அடிப்படையில் அமையவிருக்கும் சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல்–துப்புரவு இரண்டாவது திட்டத்தை உலக**

வங்கி, 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மதிப்பீடு செய்யவுள்ளது. **சென்னை மாநகருக்கு, நாளொன்றுக்கு 40 மில்லியன் கேலன் நீர் கொண்டுவரும் ரூ.720 கோடி செலவிலான திட்டத்தை, விரைவில் நாங்கள் தொடங்கவுள்ளோம்.** வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக, 1994–95 ஆம் ஆண்டில் ரூ.110 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் சென்னை மாநகருக்குக் கிருஷ்ணா நீர் வழங்குவதை விரைவு படுத்துவதற்கான நடவடிக்கையையும் நாங்கள் எடுத்து வருகிறோம். **வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்காக 1994–95 ஆம் ஆண்டில் ஒதுக்கப்படும் ரூ.100 கோடியில், ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெறும் பணிக்காக ஆந்திரப் பிரதேச அரசுக்கு ரூ.70 கோடியும், தமிழ்நாட்டில் நடைபெறும் பணிக்காக ரூ.30 கோடியும் அடங்கும்.** சென்னை குடிநீர் வழங்கல்–துப்புரவு மூன்றாம் திட்டத்தை, உலக வங்கி 1994 ஏப்ரலில் மதிப்பிட உள்ளது. **ரூ.751 கோடி செலவு பிடிக்கக்கூடிய இத்திட்டம், சென்னை மாநகரில், கிருஷ்ணா நீரைத் தூய்மைப்படுத்தி வழங்குவதையும், இதனுடன் இணைந்த கழிவு நீரகற்றல் பணியைச் செயற்படுத்துவதையும் உறுதி செய்யும்.** சென்னை மாநகரின் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர் என்று நம்பிக்கை தெரிவிக்கிறேன்.

127. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் திட்டம், உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.322 கோடி செலவில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், 1994 டிசம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 44 நகரங்களுக்கு குடிநீர் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 14 நகரங்களுக்குக் குறைந்த செலவிலான துப்புரவு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. **1994–95 ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** 1987–88 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட குடிநீர் வழங்கலைப் பெருக்குவதற்கான திட்டங்களை நிறைவு செய்வதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டுள்ளதை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். **இவ்வரசு மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளினால் இத்திட்டங்கள், தற்போது நிறைவுறும் நிலையில் உள்ளன என்பதை இம் மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.** கோயம்புத்தூருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம், 1994 டிசம்பருக்குள் முடிக்கப்பட்டுவிடும். கோயம்புத்தூர் மாநகராட்சி, மற்றும் 20 நகரங்கள், 523 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 131.25 மில்லியன் லிட்டர் நீர் வழங்கப்படும். இதன் மூலம் 22.35 இலட்சம் மக்கள் பயனடைவர். **மதுரை நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நாளொன்றுக்குக் கூடுதலாக 71 . 6 மில்லியன் லிட்டர் நீர் வழங்க வகை செய்யும். இதன் மூலம் 12 . 8 இலட்சம் மக்கள் பயனடைவர்.** சேலத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம், முடிவுறும் நிலையிலுள்ளது. **இத்திட்டத்தின் மூலம் சேலம் நகராட்சி, மற்றும் 11 நகரங்கள், 264 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு நாளொன்றுக்குக் கூடுதலாக 88 மில்லியன் நீர் வழங்கப்படும். இதனால் 12.93 இலட்சம் மக்கள் பயனடைவர்.** காஞ்சிபுரம், சங்கரன் கோயில் ஆகியவற்றுக்கான குடிநீர் வழங்கல் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை, திருவண்ணாமலை, மணப்பாறை, பொள்ளாச்சி ஆகிய நகராட்சிகளில் நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்கள், 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுவிடும்.

128. இம்மாநிலத்திலுள்ள 101 நகராட்சிகளில், 99 நகராட்சிகளுக்கு அடிப்படை குடிநீர் வழங்கல் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. பத்மனாபபுரம் நகராட்சியைப் பொறுத்தமட்டில், பணிகள் 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். திருத்துறைப்பூண்டி நகராட்சியைப் பொறுத்தமட்டில், திருத்தத் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது. 23 நகர்ப்பகுதி பேரூராட்சிகளிலும் 64 கிராமப்பகுதி பேரூராட்சிகளிலும் நடைபெற்றுவரும் திட்டங்கள் 1994–95 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

129. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்பட்ட ஊரகக் குடியிருப்புகளின் சரியான எண்ணிக்கை தொடர்பாக வேறுபடும் கருத்துக்களும், புள்ளிவிவரங்களும் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சரியான நிலையை உறுதி செய்வதற்காக 1–4–92 ஆம் நாள் நிலவரப்படி ஊரகக் குடிநீர் வழங்கல் நிலை குறித்து விரிவாகப் புதிய ஆய்வு ஒன்றை நாங்கள் மேற்கொண்டோம். இந்த ஆய்வின்படி, 1–1–1994 ஆம் நாளன்று உள்ளவாறு 1239 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்படவில்லை. **1994–95 ஆம் ஆண்டில் இந்த 1239 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதியளிக்க நாங்கள் கருதியுள்ளோம். இதனால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமின்றி இம்மாநிலத்தில் ஒரு குடியிருப்புகூட இருக்காது.** இதனுடன், ஓரளவு குடிநீர் வசதி செய்யப்பட்ட 1761 குடியிருப்புகளுக்கும் முழுமையான குடிநீர் வசதிகள் 1994–95 ஆம் ஆண்டில் அளிக்கப்படும்.

130. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குறைந்தது ரூ.75 கோடியாவது ஒதுக்குமாறு, 1993–94 ஆம் ஆண்டில் நாங்கள் மத்திய அரசை வலியுறுத்தினோம். எனினும், உண்மையில் ரூ.32 . 68 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு, 1994–95 ஆம் ஆண்டு ஒதுக்கீடு சுமார் ரூ.39 கோடி மட்டுமே இருக்கும் என்பது தெரியவருகிறது. 1993–94 ஆம் ஆண்டில் குடிநீர் வசதி ஓரளவு அளிக்கப்பட்டுள்ள பெரும்பான்மையான குடியிருப்புகளுக்கு முழுமையான அளவில் குடிநீர் வசதி செய்து கொடுக்க இயலும் வகையில், **இந்த ஒதுக்கீட்டை கணிசமான**

**அளவுக்கு உயர்த்திக் குறைந்தது ரூ.50 கோடியாவது ஒதுக்குமாறு நாங்கள் மீண்டும் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம்.**

131. கோயம்புத்தூர் நகரத்தில் ஒரு பெரிய கழிவுநீர்த் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1995 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். உதகமண்டலம் நகரத்தில் கழிவு நீரகற்றும் திட்டம் ரூ.7 . 61 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் விரைவு படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் 1995 செப்டம்பரில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுத் துறை நிறுவனங்களின் நிதியைப் பயன்படுத்தி, கூடுதல் நகரங்களுக்கு இவ் வசதிகளைச் செய்து கொடுக்க இயலுமா என்பது குறித்து நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.

132. இராமநாதபுரம் மாவட்டத்தில் நீர் வழங்கலை மேம்படுத்துவதற்காக இவ்வரசு எடுத்த முயற்சிகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தொழில்நுட்ப, நிதி வசதி வாய்ப்புகளை விரிவாக்கப் பரிசீலித்த பிறகு, ரூ.10.75 கோடி செலவில் நரிப்பையூரில் நாளொன்றுக்கு ஒரு மில்லியன் லிட்டர் கடல் நீரைக் குடிநீராக மாற்றும் நிலையம் ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இது, மத்திய அரசின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும்.

## மகளிர் மேம்பாடு, குழந்தைநலன், சத்துணவு

133. 1994 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9 ஆம் நாளன்று நடைபெற்ற மகளிர் மாநாட்டை தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், **மகளிர் குறித்த இவ்வரசின் கொள்கையை அறிவித்துள்ளார். இது, அரசின் கொள்கை நோக்கங்களை விளக்கும் விரிவான ஆவணமாகும். நீதிபதி செங்கோட்டு வேலன் அவர்களின்தலைமையில், மாநில மகளிர் ஆணைக்குழு ஒன்றையும் நாங்கள் அமைத்துள்ளோம்.**

134. பயிற்சி மேம்பாடு, நல்ல வேலைவாய்ப்புகள் ஆகிய வழிகளின் மூலமாக, மகளிர் தங்களுடைய வருமானத்தைப்பெருக்கிக்கொள்ள உதவி செய்யப்படுமென இவ்வரசின் மகளிர் கொள்கை பற்றிய விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிரிடையே சுய வேலைவாய்ப்பு வசதிகளை மேம்படுத்தவும் நாங்கள்பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளோம். மகளிர் குழுக்கள் மூலமாக சுய வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கு ஆதரவு அளிப்பதே நம்முடைய செயல்திட்ட உத்தியாகும். வேளாண்மை வளர்ச்சி–அனைத்து நாடுகள்நிதி ஆதரவுடன் தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களில் இந்த உத்தி நன்கு செயல்பட்டுள்ளது. இத்திட்டம், அண்மையில் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஊரகப் பகுதிகளை, மகளிர் குழந்தைநல மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில், இத்தோடு தொடர்புடைய திட்டம் என்று செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டமும் அதே குழு அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோன்ற மற்றொரு திட்டத்திற்கு நிதியுதவி வேண்டி ஐரோப்பிய பொருளாதாரக் குழுவை அணுகியுள்ளோம். மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதற்காகப் பல்வேறு முகவரமைப்புகளிடமிருந்து உதவி கிடைக்கும் என நம்புகிறோம். **இம்முயற்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, 1994–95 ஆம் ஆண்டில், சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் மூலமாக ஒரு இலட்சம் மகளிர் தங்கள் வருமானங்களைப் பெருக்கிக் கொள்ள உதவி பெறுவது உறுதிப்படுத்தப்படும்.**

**135. கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில், ரூ. 6 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.**

136. 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத்திட்டம், உலகளாவிய பாராட்டுதல்களைப் பெற்றிருப்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத்தகைய திட்டவட்டமான, பயனுள்ள செயல் திட்டத்தைக் கொண்டுவந்த தமிழ்நாடுதான் முதல் இந்திய மாநிலம் என்ற வகையில் இவ்வரசுக்கு யுனிசெஃப் தனது உளமார்ந்த பாராட்டைத் தெரிவித்துள்ளது. இச்செயல் திட்டத்திற்கு வலிவும் பொலிவும் ஊட்டி நாம் 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒரு துணைத்திட்டமாகச் சேர்த்துள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். **1994–95 ஆம் ஆண்டில், குழந்தை நலத் துணைத்திட்டமொன்று ரூ.697. 65 கோடி நிதியொதுக்கீட்டுடன் செயற்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.** இத் துணைத் திட்டத்தின் கூறுகள் வருமாறு:

| | நிதியொதுக்கீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| பாதுகாப்பான மகப்பேற்றிற்கும் பிறந்த குழந்தையின் எடையை 3 கிலோவாக அதிகரிப்பதற்கும் வகை செய்தல் | 65 . 86 |

| | |
|---|---|
| தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்களை முற்றிலுமாக ஒழித்தல் | 4 . 57 |
| சிசு மரண விதத்தை 1000 க்கு 30 என்ற அளவுக்குக் கீழாகக் குறைத்தல் | 6 . 00 |
| குழந்தைகளிடையே காணப்படுகிற கடுமையாகவும், ஓரளவு சத்துக் குறைவைக் குறைத்தல் | 305 . 21 |
| நுண் ஊட்டச் சத்துக் குறைபாடுகளை முற்றிலுமாக ஒழித்தல் | 8 . 08 |
| அனைத்து மருத்துவ மனைகளையும் மகப்பேறு மையங்களையும் மழலை சீராட்டும் மையங்களாக்குதல் | 2 . 70 |
| மகளிர், இளம் வயதிலும் அடிக்கடியும் தாய்மையடைவதைத் தடுத்தல் | 80 . 03 |
| கட்டாயத் தொடக்கக் கல்வியை பரவலாக்குதல் | 81 . 32 |
| மகளிரின் எழுத்தறிவையும் நிலையையும் உயர்த்துதல் | 42 . 71 |
| குழந்தை நல மையங்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குதலும் சிறந்த சுகாதார வசதிகள் செய்து கொடுத்தலும் | 91 . 70 |
| குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக நீக்குதல். | 0 . 13 |
| பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைச் செயற் படுத்தல் | 4 . 00 |
| பெண் சிசுக் கொலை என்ற சமூகக் கொடுமையை ஒழித்தல் | 0 . 22 |
| குழந்தைப் பருவத்தில் ஏலாமையுறுவதைத் தடுத்தலும் மறுவாழ்வளிக்கும் பொருட்டு தொடக்க நிலையில் கண்டறிதலும் | 4 . 87 |
| பிறவி இதய நோய்களைத் தொடக்க நிலையில் கண்டறிதல் | 0 . 25 |
| **மொத்தம் – குழந்தை நலத்துறைத் திட்டம்** | **697 . 65** |

137. குழந்தை உய்விற்கு மட்டுமின்றி ஒவ்வொரு குழந்தையும் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் வளரவேண்டுமென்பதே தமிழ் நாட்டின் உன்னத முயற்சி என்பதை உறுதி செய்வதற்காக, இவ்வரசு மேற்கொண்டுள்ள மாபெரும் முயற்சியை இம் மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

138. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத்திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. **இத்திட்டத்திற்கென வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 4 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ், அளிக்கப்படும் பலன்களாவன:–**

| | |
|---|---|
| *பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளன்று | ரூ.800 மதிப்புள்ள 2 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்று |
| * பள்ளியில் சேர்ந்தவுடன் | ரூ.250/– |
| * ஆறாம் வகுப்பில் சேர்ந்தவுடன் | ரூ.500/– |
| * 9 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்பு வரை ஒவ்வோராண்டும் 10 திங்களுக்கு, திங்களொன்றுக்கு ரூ. 50 என்ற வீதத்தில் 4 ஆண்டு களுக்குத் தொகை வழங்கல் | ரூ.2,000/– (4 ஆண்டுகளில் வழங்கத் தக்கது) |
| * 20 வயது நிறைவடைந்தவுடன் | ரூ.20,000/– |

139. இப்புதிய மேம்படுத்தப் பட்ட திட்டம், பெண் குழந்தைக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே நேரத்தில் குடும்ப நல நடவடிக்கைகளையும் மேம்படுத்தும்.

140. புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர் மதிய சத்துணவுத் திட்டத்திற்கும், அத்துடன் இணைந்து உலக வங்கி நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்திற்கும் 1993–94 ஆம் ஆண்டில் ரூ. 312 . 42 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்க, இவ்வாண்டு ரூ.345 . 36 கோடியாக நிதியொதுக்கீடு உயர்த்தப்பட்டுள்ளது. நமது சத்துணவுத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதையேஇது காட்டுகிறது. 1994–95 ஆம் ஆண்டில், 6 மாதம் முதல் 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான விரிவான சத்துணவுத்

திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும். நம் நாட்டில், 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்கான விரிவான சத்துணவுத் திட்டம் செயற்படுகின்ற ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். சோயா மாவும், மக்காச் சோள ரவையும் சேர்ப்பதின் மூலம் சத்துணவு மேம்படுத்தப் பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள குழந்தைகளுக்கு உரிய சத்துணவு வழங்கப்படுவதை உறுதி செய்ய எடுக்கப்படுகின்ற அநேக நடவடிக்கைகளை இம் மாமன்றத்தின் உறுப்பினர்கள் உளமாரப் பாராட்டுவர்.

## ஆதி திராவிடர் – பழங்குடியினர் நலன்

141. ஆதி திராவிடர்களின் சமூகப்–பொருளாதார மேம்பாட்டிற்கான 10 அம்சத் திட்டத்தை இவ்வரசு தொடங்கியுள்ளது. நடப்பாண்டில், இந்த 10 அம்சத் திட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ், நாம் கணிசமான அளவு முன்னேற்றம் எய்தியுள்ளோம் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாம், இத்திட்டத்தை 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்துவோம். இத்திட்டத்தின் சிறப்புப் பிரிவுகளும் 1994–95 ஆம் ஆண்டிற்கான இலக்குகளும் கீழே விவரிக்கப்பட்டுள்ளனன:–

| இனம் | 1994–95 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|
| பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் | 65,000 குடும்பங்கள் |
| பாசனக் கிணறுகள் தோண்டும் திட்டம் | 1,000 கிணறுகள் |
| தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் | 1,500 |
| தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்று தகுதி பெற்ற வேலைவாய்ப்பற்ற தொழில் நுட்பாளர்களை வேலையில் அமர்த்தல் | 500 |
| இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கல் | 75,000 |
| ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள் | 25,000 |
| குடிநீர் வழங்குதல் | 1,500 குடியிருப்புகள் |
| இணைப்புச் சாலைகள் அமைத்தல் | 200 குடியிருப்புகள் |
| குடியிருப்புகளுக்குத் தெருவிளக்குகள் | ஏற்கனவே அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்பு களிலும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டன. |
| வீட்டிற்கு ஒரு விளக்கு அமைத்தல் | 35,000 |

142. 10 அம்சத் திட்டத்தின் முனைப்பான செயற்பாடு, ஆதி திராவிடர்–பழங்குடியினரை அனைத்து வகையிலும் மேம்படுத்துவதை உறுதி செய்யும்.

143. கடந்த வரவு–செலவுத் திட்டத்தில், **ஆதி திராவிடர் தொழில் முனைவோர்களுக்கு ஊக்கமளிக்க புதிய முதலீட்டுத் திட்டம் ஒன்றை நான் அறிவித்ததை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். தற்சார்புள்ள ஆதி திராவிடத் தொழில் முனைவோர்களை உருவாக்கும் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொன்றிலும் 100 தொழிற் பிரிவுகளுடன் கூடிய இரு தொழிற்பேட்டைகள் கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன.** இவ்விரு தொழிற்பேட்டைகளுக்கும் தேவைப்படுகிற நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. நில மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.80 கோடியாகும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்கிறது.** பட்டுப் புழு மேம்பாட்டிற்கான திட்டத்தின் கீழ் மொத்தம் 1097 ஆதி திராவிடர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தி முடிவாக 10000 பேருக்கு நிதியுதவி அளிக்கவும் உத்தேசித்துள்ளோம்.

144. ஆதி திராவிடர் பயனுறுவதற்கான கல்வித் திட்டங்களுக்கு இவ்வரசு முக்கியத்துவம் அளித்துள்ளது அனைவரும் நன்கு அறிந்ததே. சிறப்புப் பயிற்சி முகாம்களும், சிறப்புக் கையேடுகள் திட்டமும், மாணவர்களின் செயல் திறனில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. **பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆதி திராவிட மாணவர்களின் சதவீதம் 1991–92 ஆம் ஆண்டில் 57 ஆக இருந்தது, 1992–93 ஆம் ஆண்டில் 70 ஆக உயர்ந்துள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். வரும் ஆண்டில், மொத்தம் ரூ.47.51 இலட்சம் செலவில், ஆதி திராவிட மாணவர்களுக்குப் புதிதாக 20 மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.** தற்போதுள்ள மாணவர் இல்லங்களில் 500 கூடுதல் இடங்கள் 1994–95–ல் உருவாக்கப்படும். ஆதி திராவிடர் நல இடை நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.28.31 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

145. மகளிர் படிப்பறிவு வீதம் மிகவும் குறைவாக உள்ள 4 மாவட்டங்களில், மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தை உலக வங்கியின் நிதியுதவியுடன் தொடங்க உள்ளோம். **இந்நான்கு மாவட்டங்களிலும் உள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த பெண் குழந்தைகளிடையே கல்வியை மேம்படுத்துவதற்காகப் புதிய சிறப்பு ஊக்கத் திட்டத்தைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.**

இத்திட்டத்தின் கீழ், கிராமப் பகுதியில் ஏழ்மை நிலையிலுள்ள ஆதி திராவிடர் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாம் வகுப்பின் முடிவில் படிப்பை இடையில் நிறுத்திவிடும் நிலையில் உள்ள பெண் குழந்தைக்கு, மூன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ச்சி பெறும்போது ரூ.500 சிறப்பு ஊக்க உதவி அளிக்கப்படும். இத்திட்டம் கட்டாயக் கல்வி குறித்து இயற்றப்படவிருக்கும் புதிய சட்டத்துடன் சேர்ந்து ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த ஆதி திராவிடப் பெண் குழந்தைகள் தொடக்கப் பள்ளிகளில் தொடர்ந்து படிக்க பெருமளவில் வகைசெய்யும். இத்திட்டத்திற்கு 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1 . 5 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பெண் குழந்தைகள் குடும்பத்திற்கு வருமானம் ஈட்டித் தருவதால், 5 ஆம் வகுப்பிற்குப்பின்னர் தொடர்ந்து படிக்க அவர்கள் அனுமதிக்கப் படுவதில்லை. அதனால், வரும் கல்வி ஆண்டில் ஆறாம் வகுப்புக்குச் செல்லக்கூடிய, ஆனால் உதவி எதுவும் கிடைக்காவிடில் ஐந்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி விடக் கூடிய நிலையிலுள்ள ஊரக ஆதி திராவிட ஏழைப் பெண் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.100 வழங்கும் புதிய திட்டம் ஒன்றை மாநிலம் முழுவதும் தொடங்க உள்ளோம். இத்திட்டம், இக்குழந்தைகளின் வருமானம் ஈட்டும் திறனுக்கு ஒரு மாற்றாகவும் அக்குழந்தைகள் பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்காக அவர்கள் குடும்பத்திற்கு அளிக்கப்படும் ஓர் ஊக்கத் தொகையாகவும் அமையும். ரூ.3 கோடி செலவாகக் கூடிய இத்திட்டத்தின் மூலம், மாநிலம் முழுவதிலுமுள்ள 30,000 ஆதி திராவிடர் பெண் குழந்தைகள் பயனடைவர். ஆதி திராவிடர் பெண் குழந்தைகளுக்குக் கல்வியளிக்கும் பிரச்சினையை நேரடியாகச் சமாளிப்பதற்காகத், துணிவுடன் எடுக்கப்பட்ட இப்புதிய நடவடிக்கையை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

146. நிலமற்ற ஆதி திராவிடர்கள், விவசாயம் செய்து தங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு, நிலம் வழங்குவதற்காக 1994–95 ஆம் ஆண்டில் புதிய திட்டம் ஒன்றை நாங்கள் தொடங்கவிருக்கிறோம். நிலத்தை மேம்படுத்தி, பயிரிடும் பணியில் சிறந்த தொடர் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்வதற்காக தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இப்புதிய திட்டத்திற்கு ரூ.1 கோடி செலவு ஆகும். இத்திட்டம் 1,000 ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பயன் அளிக்கும்.

## பிற்படுத்தப்பட்டோர் நலன்

147. பிற்படுத்தப்பட்டோர் நலனில் கொண்டுள்ள தீவிர அக்கறைதான், கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகத் தற்போது அளிக்கப்பட்டு வருகின்ற இட ஒதுக்கீட்டைப் பாதுகாப்பதற்காக, இவ்வரசு, இம் மாமன்றத்தில் புதியதொரு சட்டம் கொண்டுவர வழிகோலியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இச் சட்டம் குடியரசுத் தலைவரின் இசைவை எதிர் நோக்கியுள்ளது.

148. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்வி வாய்ப்புகளை மேம்படுத்த நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக மொத்தம் 804 மாணவரில்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் 16 புதிய மாணவரில்லங்கள் தொடங்கப்படவுள்ளன. ரூ.3 . 41 கோடி செலவில், 30 மாணவரில்லக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1 . 72 கோடி செலவில், மேலும் 12 மாணவரில்லங்கள் கட்டப்படும்.

149. வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், 1994–95 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி சிறப்பு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ்ப் பயன் பெறுபவர்க்கான வருமானத் தகுதியளவு, ஆண்டொன்றுக்கு ரூ.6,400/-இலிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

150. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு புதிய ஊக்கம் அளிக்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. 1994–95 ஆம் ஆண்டுக்கான திட்டத்திற்கு, இந்நிதியுதவி ரூ.13 கோடியாக உயர்த்தப்படும். 10,000 பேருக்கு உதவியளிக்கப்படும்.

## நெசவாளர் நலன்

151. பருத்தி விலையும் அதன் விளைவாக நூலின் விலையும் வெகுவாக அதிகரித்துள்ளதால் நெசவாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியுள்ளது. எடுக்கப்பட வேண்டிய பல்வேறு நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு, இவ்வரசு மத்திய அரசிடம் இது குறித்து எடுத்துரைத்துள்ளது. நம்முடைய தரப்பில், சிட்டம், உருளை நூலைச் சலுகை விலையில் விற்பனை செய்வதற்காக, நான்கு நூல் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஆலைத் துறையைத் தென்னிந்திய நூற்பாலைச் சங்கத்தின் (SIMA) மூலம் அணுகி கைத்தறி நெசவாளர்களுக்குச் சலுகை வீதங்களில் நூல் வழங்க ஆவன செய்திருக்கிறோம். விலையை நிலைப்படுத்துவதற்காகத் தீர்வையில்லா அடிப்படையில் 50,000 டன் விஸ்கோஸ் இழைப் பருத்தியை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு நாங்கள் மத்திய அரசை வற்புறுத்தியுள்ளோம். பிரச்சினைகளைத் தீர்த்து, நெசவாளர்களைப் பாதுகாக்க அவசர நடவடிக்கை

எடுக்குமாறு மீண்டும் நாங்கள் மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

152. கிராமப்பகுதி வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், நகர்ப்பகுதி ஏழை எளிய மக்களுக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காரணகர்த்தாவாக இருந்துள்ளார். **வேட்டி, சேலை வழங்குவதற்காக 1994–95 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், ரூ.46 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.** இம்மாநிலத்திற்குள்ளிருந்து வேட்டி, சேலைகளைப் பெற்று, வழங்குவதற்கு கோ–ஆப் டெக்ஸ் மூலம் செய்யக் கருதியுள்ளதால், இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பணி அளிக்க இத்திட்டம் வகைசெய்யும். இது, ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய அம்சமாகவும் விளங்கும்.

153. நெசவாளர்களின் நலனை மேம்படுத்த, நாம் முக்கிய நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ள கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை அனைவரும் வரவேற்றுள்ளனர். இத்திட்டத்தில், 22,790 நெசவாளர்கள் சேர்ந்துள்ளனர். மேலும் அதிக நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப் படுவர். **நெசவாளர்கள் வீடுகள்–பணியிடத் திட்டம் 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்தகைய வீடுகள் 1,000 கட்டப்படும்.** நெசவாளர்களின் குடியிருப்புப் பகுதியை மேம்படுத்துவதற்கு, மற்றுமொரு திட்டமும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளில், ரூ.22 .40 இலட்சம் செலவில் 64 துளைக் கிணறுகள் இறக்கப்பட்டுள்ளன.

**154. இம்மாநிலத்தில் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குப் புத்துயிர் அளிக்க, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

## தொழிலாளர் நலன்

155. புதிய பொருளாதாரக் கொள்கைகள், தொழிற் கட்டமைப்பிற்கும், சீரமைப்பிற்கும் வழிவகுத்திருக்கிறது என்பது தவிர்க்க முடியாத உண்மையாகும், எந்த சூழ்நிலையிலும் தொழிலாளர்களின் நலம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளோம். **அரசுத் துறை நிறுவனங்களிலுள்ள 3,497 தொழிலாளர்களின் நலனுக்காக ரூ.28 . 97 கோடி செலவிலான செயற்குறிப்புகளை நாங்கள் அனுப்பியுள்ளோம். விருப்ப ஓய்வு திட்டங்களின்கீழ் ஆகும் செலவை ஈடுசெய்ய, தேசிய புதுப்பிப்பு நிதியிலிருந்து உதவி பெறவும் செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.** இச் செயற்குறிப்புகளுக்கு விரைவில் அனுமதி வழங்கும்படி நாங்கள்வலியுறுத்துவோம். மூடப்பட்ட 12 தொழிற்சாலைகளில் பணியாற்றும் 8,163 தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.32 . 65 இலட்சம் அள்விற்கு தீபாவளியின்போது வழங்கப்பட்டுள்ளது.

156. 1993 ஆம் ஆண்டில், தொழில் உறவுநிலை இணக்கமாகவே இருந்தது. வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் காரணமாக மனித உழைப்பு நாட்களின் இழப்பு சென்ற ஆண்டைவிட 15 . 56 சதவீதம் குறைந்துள்ளது.

**157. அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களின் நலனுக்கான, சுகாதாரத் திட்டம் ஒன்றைத் தொடங்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.** இத்திட்டம், தொடக்கச் சுகாதார மையங்கள் மற்றும் வட்ட மருத்துவமனைகள் மூலம் செயல்படுத்தப்படும். **அவசியமான மருந்துப் பொருட்களையும், மருந்துகளையும் வழங்கும் இச்செயல் நோக்கத்திற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** இது, அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களுக்கு ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு வகைசெய்ய, எடுக்கப்பட்ட ஒட்டுமொத்த முயற்சியின் ஒரு பகுதியே ஆகும். **குடும்பக்காப்புப் பொருளீட்டுபவரை இழந்த 50,000 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ.5000 வீதம் வழங்க இடர் நிவாரணத் திட்டத்தின் கீழ், வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.** அமைப்பு ரீதியிலல்லாத தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத்தொகை வழங்க, கைவிடப்பட்ட வேளாண்மைத் தொழிலாளர் திட்டத்தை விரிவு படுத்தக் கருதியுள்ளோம். **அமைப்பு ரீதியிலல்லாத ஊரகத் தொழிலாளர்களுக்கு நாம் அளித்துவரும் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவர்.**

158. பல்வேறு வகைத் தொழில்களுக்குக் குறைந்தளவு ஊதியம் நிர்ணயிக்கும் திட்டத்தின்கீழ் க் குறைந்தளவு ஊதியம் நிர்ணயிக்கும் நடவடிக்கை தொடரப்படும். இதுவரை 67 விதமான பணிகள் குறைந்தளவு ஊதியச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. எந்த ஒரு தொழிலிலும் நாள் ஒன்றுக்கு ரூ. 20 க்குக் குறையாது இருக்கும்படி , குறைந்த அளவு ஊதியத்தை அரசு நிர்ணயித்துள்ளது. தேங்காய் உரித்தல், பாலிதின் செய்முறை நுரை மெத்தை (foam) மற்றும் பிளாஸ்டிக் பொருள் தயாரிப்பு, தச்சுத்தொழில், கருமார் தொழில், உணவுப்பொருள் பக்குவப்படுத்தல் துறை ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு முதன் முதலாக, 1993 ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. பீடி சுற்றுதல், முந்திரித் தொழில், கட்டிடம் கட்டுதல், சாலைகள் பராமரிப்பு, செயற்கைக் கல் பட்டை தீட்டும் தொழில், மரவேலைத் தொழில் ஆகியவற்றிற்கு 1993 ஆம் ஆண்டில், குறைந்த அளவு ஊதியத்தை நாங்கள் திருத்தியுள்ளோம். **வேளாண்மைத் தொழில்களுக்கான குறைந்த அளவு ஊதியம், 1993 இல் திருத்தப்பட்டது.** கடல் உணவுத் தொழில்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

**159. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையை நீக்குவதில் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளோம். குழந்தைத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின்கீழ் 1993 ஆம்**

ஆண்டில் 44 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் முறையைக் கட்டுப்படுத்துவதற்கு இது நல்ல பலனை அளித்துள்ளது.

## கடன் திட்டம்

160. பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காக, சுமுகமான கடன் ஏற்பாட்டிற்கு இவ்வரசு எப்போதும் அதிமுக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. பொருளாதாரத்தின் நிதித் துறையில் ஏற்பட்டு வரும் குறிப்பிடத்தக்க மாறுதல்களை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தங்களுடைய பணியைச் செவ்வனே ஆற்றவியலும் வகையில், அவற்றின் மூலதன ஆதார அமைப்பை வலுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம்.

161. வேளாண்மை–ஊரக வளர்ச்சி தேசிய வங்கி (NABARD) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வகுத்த வளவாய்ப்புள்ள இணைப்புத் திட்டங்களின் அடிப்படையில் நாங்கள் மாவட்டக் கடன் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். கடன் திட்டத்திற்காக மாவட்ட அளவில் நிதிகள் கிடைக்க வகை செய்யும், அதிகாரப் பரவல் முறையில் அமைக்கப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின் ஆதரவு கிடைப்பதை உறுதிப் படுத்த முயற்சிகள் மேற் கொண்டுள்ளோம். உள்ளூர்ப் பகுதி திட்டமிடலைக் கடன் வழங்கு ஏற்பாட்டுடன் இணைத்து, அதன் மூலம், இந்த ஏற்பாட்டை மேலும் சிறந்த முறையில் ஒருமுகப் படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

162. 1994–95 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுக்கான கடன் திட்டம் குறைந்தது ரூ.3000 கோடியாக இருக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியுள்ளோம். குறிப்பாகத் தோட்டக்கலை, சிறு பாசனம் மற்றும் பிற வளர்ச்சித் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டுமென நாங்கள் கேட்டுக் கொண்டுள்ளோம். வேளாண்மைத் துறைக்குஅதிக அளவில் மூலதன முதலீட்டைப் பெறுவதே இவ்வரசின் நோக்கமாகும்.

163. கடந்த ஆண்டில், நாங்கள் வேளாண்மைக்கான நீண்ட காலக் கடன் வழங்கு அமைப்பு முறையை உயிர்ப்பித்துள்ளோம். வேளாண்மை–ஊரக வளர்ச்சி தேசிய வங்கி (NABARD) யின் மறு நிதியுதவியைப் பெறுவதற்கு 1991–92 ஆம் ஆண்டில் 42 தொடக்க நில வள வங்கிகள் தகுதி பெற்றிருந்தன. தற்போது 142 வங்கிகள் தகுதி பெற்றுள்ளன. இந்நிறுவனங்களின் மொத்த கடன்வழங்கு நிலையும், 1991–92 ஆம் ஆண்டில் ரூ.41 . 32 கோடியிலிருந்து 1994–95 ஆம் ஆண்டில் ரூ.122.57 கோடியளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கிறோம். தொடக்க நில வள வங்கியின் மூலதன அமைப்பை மேம்படுத்துவதற்கு மேற்கொண்டும் எடுக்கப்பட்ட முயற்சியில், பங்கு மூலதன நிதியுதவிக்காக வேளாண்மை–ஊரக வளர்ச்சி தேசிய வங்கியின் நீண்ட செயல் திட்ட நிதியைப் பெறுவதற்கு நாங்கள் முயற்சி செய்வோம். நடுத்தர–நீண்ட கால வேளாண்மைத் தேவைக்கான கடன் தொகை மேலும் அதிகரிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வேலை வாய்ப்பு

164. என்னுடைய கடந்த ஆண்டு வரவு–செலவுத் திட்ட உரையில், வேலைவாய்ப்பு வளர்ச்சியைப் பெருக்குவதற்கான திட்டச் செயல்முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். முதன்மைத் துறையில், அதிக வளர்ச்சியை ஏற்படுத்துவதில் நாம் வெற்றியடைந்துள்ளோம். உயர் மதிப்புள்ள பயிர்களின் சாகுபடிக்குத் தீவிர ஆதரவளித்து வேளாண்மை அல்லாத பிற துறைகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஊரகப் பகுதிகளில், வேளாண்மை அல்லாத பிற துறைகளின் மேம்பாட்டுக்காக, தேசிய வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து நிதியுதவி பெற்று, ஊரகக் கடன் வழங்குவதற்கான நிதியைத் திரட்டியுள்ளோம். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டில், ரூ.220 . 59 கோடி மொத்த நிதியொதுக்கீட்டுடன் செயற்படுத்தப்படும். ஜவஹர் வேலை வாய்ப்பு முனைப்புத் திட்டத்துடன் சேர்ந்து, வருமாண்டில், உருவாக்கப்படவுள்ள மொத்த வேலைவாய்ப்பு 850 இலட்சம் மனித உழைப்பு நாட்களாகும். வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 1994–95 ஆம் ஆண்டில் மொத்தத்தில் 150 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும். இவ்வாறாக, 1994–95 ஆம் ஆண்டில் சாதனையளவாக மொத்தம் 10 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்படும்.

165. ஊரகப் பகுதிகளில் சுய வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காக நாம் தொடங்கிய ஊரகத் தொழில் துணைத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1993–94 ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது. ஊரகத் தொழில் துணைத் திட்டம், 1994–95 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு 1.25 இலட்சம் தொழிலாளர்களுக்கு உதவியளிக்கப்படும்.

166. 1992 ஜூன் திங்கள் நிலவரத்துடன் ஒப்பிடுகையில், 1993 ஜூன் திங்கள் இறுதி நிலவரப்படி, வேலை வாய்ப்பகங்களின் நடைமுறைப் பதிவேடுகளில் இடம்பெற்றுள்ள வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகள் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், பள்ளி இறுதித் தேர்வு தேறியவர்கள் அல்லது அதற்குச் சமமான கல்வித் தகுதி பெற்றவர்கள், பட்டப் படிப்பை முடித்தவர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில், 1992–93 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்த கூடுதல் நபர்களின் எண்ணிக்கையில் காணப்படும் உயர்வு வீதம் குறைந்துள்ளது. இவ்வாறாக, நமது வேலை வாய்ப்பு கொள்கைகள் நல்ல பலனளிக்கத் தொடங்கியுள்ளன என்பது உறுதியாகிறது.

பாரதப் பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 15,000 நபர்களுக்குச் சுய வேலை வாய்ப்புக்கான உதவி அளிக்கப்படும்.

167. வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குச், சமுதாயத்திற்குப் பயன் விளைவிக்கக் கூடிய வேலைகள் வழங்கும் ஒரு நடவடிக்கையாகப், படித்தவர்களுக்கானதன்னார்வப் பணித் திட்டத்தைத் (Educated Volunteer Service Scheme) தொடங்கியுள்ளோம். இத்திட்டத்தின் கீழ், 1 . 5 இலட்சம் இளைஞர்கள் திரட்டப் பட்டுள்ளனர். அவர்கள், பள்ளி சாராக் கல்விப் பணியிலும், குடியின் தீமைகள் குறித்துப் பிரச்சாரம் செய்வதிலும் பயனுள்ள வகையில் ஈடுபடுத்தப்படுவர்.

## அரசு அலுவலர் நலன்

168. அரசு அலுவலர்களின் பணி நிலைமைகளைப் பொறுத்தவரை இந்த அரசு எப்போதும் ஒரு நியாயமான கொள்கையைப் பின்பற்றி வருகிறது. கடந்த ஆண்டு, டிசம்பர் மாதத்தில், அலுவலர்களின் பல கோரிக்கைகள், விரிவாக ஆராயப்பட்டன. கடுமையான நிதி நிலைமை இருந்த போதிலும், அலுவலர்களுக்கு, 1994, ஜனவரி ஒன்றாம் தேதி முதல், இடைக்கால நிவாரணமாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/- அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய அலுவலர் பிரிவுகளுக்கும், உரிய விகிதத்தில் இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த முக்கியமான சலுகைக்கு ஆகும் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.120 கோடியாகும். அரசு அலுவலர்கள், தொழில் வரி செலுத்துவதில் இருந்த இடர்பாடுகள், ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் களையப்பட்டுள்ளன. மாநிலத்தின் வெளியே 400 கி.மீ. வரை செல்வதற்கு, விடுப்புக் காலப் பயணச் சலுகைத் திட்டம் விரிவாக்கப் பட்டுள்ளது.

169. 1993 டிசம்பர் மாதம், அரசு அலுவலர்கள் நடத்திய பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் அரசு அலுவலர்களுக்கான மருத்துவப்படி தற்போதுள்ள மாதம் ஒன்றுக்கு ரூ.15/-லிருந்து ரூ.30/- ஆக உயர்த்தப் படுகிறது. இதனால் ஏற்படும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.10 கோடியாகும்.

170. 1993ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி முதல், வீட்டு வாடகைப்படி உயர்த்தப் பட்டது. இந்த பெரிய அளவிலான மாற்றத்திற்கு ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு ரூ.33 கோடியாகும். நிலை I (ஏ), I (பி) மற்றும் நிலை II ஆகிய நகரங்களிலிருந்து 32, 16 மற்றும் 8 கி.மீ. சுற்றுவட்டாரத்தில், அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைக்குள் இருக்கும் நிலை III நகரங்களுக்கும், முறையே நிலை I (ஏ), I (பி) மற்றும் II ற்கான வீட்டுவாடகைப்படி நீட்டிக்கப்படும். இதன் மூலம் ஒரு நெடு நாளைய கோரிக்கை தீர்வடையும்.

171. வெப்ப ஆடைகள் வாங்குவதற்கான முன் பணம் ரூ.500 லிருந்து ரூ.1000 அல்லது இரண்டு மாத சம்பளம் – இதில் எது குறைவோ, அந்த அளவிற்கு உயர்த்தப்படுகிறது.

172. சம்பள விகிதங்களில், ஊதியம் பெறும், அலுவலர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்படும் எல்லா நேரங்களிலும், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்களுக்கும், குறிப்பிட்ட அளவில் ஊதிய உயர்வுகள் அளிக்கப்படும் என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம். இதனால் சத்துணவுத் திட்ட ஊழியர்கள் அடங்கிய சுமார் 3 இலட்சம் ஊழியர்கள் பயன் பெறுவர்.

173. ஓய்வூதியம் பெறுபவர்களின் குறைகள் மற்றும் பணி ஓய்வு சம்பந்தப்பட்ட ஒரு புதிய துறை ஆரம்பிக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்நடவடிக்கையின் மூலம் ஓய்வு பெறும் ஊழியர்கள் உரிய நேரத்தில் ஓய்வூதியம் பெற வழி வகை செய்யப்படும்.

174. மாநிலக் கணக்குத் துறை தலைவர் அலுவலகத்துடன் இத்துறை, இணைந்து செயல்படும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மருத்துவ படியை மாதம் ஒன்றுக்கு ரூ.15 லிருந்து ரூ.30 ஆக உயர்த்த முடிவு செய்துள்ளோம். இது 1.4.1994 முதல் அமலுக்கு வரும். இதனால் ஆகும் கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.3.5 கோடியாகும்.

இரா. நெடுஞ்செழியன்
**நிதி அமைச்சர்.**

சென்னை
1994 ஆம் ஆண்டு
மார்ச்சுத் திங்கள் 23 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2025
பங்குனித் திங்கள் 9 ஆம் நாள்.

# மாணவர் பக்கம்

## அறிவுச்சுடர்

வாஸ்கோடகாமா இந்தியாவில் வந்து இறங்கிய இடம் எது?

கள்ளிக்கோட்டை அல்லது கோழிக்கோடு.

முதன் முதலில் கடல் மூலம் உலகைச் சுற்றி வந்தவர் யார்?

மெகல்லன்.

உலகில் இரண்டாவது பெரிய கண்டம் எது? அதன் பரப்பளவு என்ன?

ஆப்பிரிக்கா. இதன் பரப்பளவு 3,03,23,000 ச.கிமீ.

இந்தியாவின் தேசிய மலர் எது?

தாமரை.

பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி வைசிராய் யார்?

மவுண்ட்பேட்டன்.

குதிரையின் வாழ்க்கை எத்தனை ஆண்டுகள்?

இருபத்தேழு ஆண்டுகள்.

நாயின் வாழ்க்கை எத்தனை ஆண்டுகள்?

பதினேழு ஆண்டுகள்.

இந்தியாவின் பெரிய மிருககாட்சிச் சாலை எங்குள்ளது?

அலிப்பூர்.

உலகில் திராட்சை அதிகம் விளையும் இடம்?

பிரான்ஸ்.

உலகில் நிலக்கடலை அதிகம் விளையும் இடம்?

இந்தியா.

உலகில் சணல் அதிகம் விளையுமிடம்?

இந்தியா.

ஏலச்செடி எத்தனை ஆண்டுகள் பலன் தரும்?

40 ஆண்டுகள்.

மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முறையை முதலில் கண்டுபிடித்தவர்?

மைக்கேல்பாரடே.

வெள்ளி-செம்பு இதில் அதிகமாக மின் சாரம் பாய்வது எதில்?

வெள்ளி.

நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட சண்டையின் பெயர்

வாட்டர்லூ போர்.

பூட்டுகளுக்குப் பெயர் பெற்று விளங்கும் இடம்?

அலிகார்.

இந்தியாவில் கம்பளி உற்பத்தியில் சிறந்து விளங்குமிடம்?

தாரிவால்.

முதலில் ஒலிம்பிக் பந்தயம் எங்கு ஆரம்பிக்கப்பட்டது?

கிரேக்க நாட்டிலுள்ள ஒலிம்பஸ் என்ற இடத்தில்.

உலகில் காப்பி அதிகம் விளையும் நாடு?

பிரேசில்.

உலகில் பருத்தி அதிகம் உற்பத்தியாகும் இடம்?

சீனா.

உலகில் அதிகமாக மீன் பிடிபடும் இடம்?

ஜப்பான்.

உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம்?

வடஆப்பிரிக்காவைச் சார்ந்த சகாராப் பாலைவனமாகும். இதன் மொத்தப் பரப்பு 84 இலட்சம் ச.கி.மீ.

உலக அதிசயமான சீனப் பெருஞ்சுவர் எந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது?

கி.மு. 214-இல்.

இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட முதல் செயற்கைக்கோள்?

ரோகிணி.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எந்த ஊர்?

தஞ்சாவூர்.

தமிழகத்தில் கோவில் நகரமென்பது?

காஞ்சிபுரம்.

காகிதத்தைக் கண்டு பிடித்தவர்கள் சீனர்கள்.

உலகில் பெரிய கோயில் வாட் டிகனில் உள்ள செயின்ட் பீட்டர் சர்ச்.

உலகில் பெரிய மசூதி - ஜும்மா மசூதி-டில்லி.

உலகில் அதிகத் திரைப்படம் தயாரிக்கும் நாடு - இந்தியா.




நல்ல நல்ல பாடம்
நாளும் பயிலும் நேரம்
சொல்லின் வேறு பாட்டைச்
சொல்லிச் சொல்லிப் பழகு.

அறம், ஒழுக்கம் காக்கும்
அரம் இரும்பைத் தேய்க்கும்
மறம் கொடுக்கும் வெற்றி
மரம் கொடுக்கும் மழையை.

இலைகள் அசையும் கொடியில்
இழைகள் பொலியும் உடையில்
கலைகள் வளரும் தமிழில்
களைகள் வளரும் வயலில்.

நீலம் மின்னும் வானம்
நீளம் உள்ள தாரும்
காலை நேரம் விடியும்
காளை வண்டி இழுக்கும்.

இறையென் றாலே கடவுள்
இரையென் றாலோ தீனி
கறைகள் என்ப தழுக்கு
கரைகள் நதிக்கு வரம்பு

கறிகள் விற்கும் கடையில்
கரிகள் மிஞ்சும் விறகில்
பறக்கும் சிறகு அலகு
பறவை யாவும் அழகு.

வழியைப் பாதை என்போம்
வளியைக் காற்று என்போம்
மொழியின் வேறு பாட்டில்
பொருளும் மாற்றம் ஆகும்.

தலையும் தளையும் வேறு
தழையும் கூட வேறு
ஒலியின் வேறு பாட்டை
உச்சரித்துப் பழகு.





# மன நோயை ஆரம்பத்திலே கண்டுகொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை நாம் மக்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும்!

## அரசு மன நலக் காப்பகம் 200-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை (14.3.1994)

**ம**ன நல மருத்துவத் துறையில், இரண்டு நூற்றாண்டுகளாக, ஈடு இணையற்ற சமுதாயத் தொண்டை ஆற்றி வருகின்ற, சென்னை அரசு மன நலக் காப்பகத்தின், 200-வது ஆண்டு விழாவில் பங்கேற்று, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இன்று 1800 நோயாளிகள், மருத்துவமனையிலே தங்கி, சிகிச்சை பெறுகின்ற அளவிற்கும்; நாளொன்றுக்கு 500-க்கும் மேற்பட்டவர்களுக்கு, புற நோயாளியாகச் சிகிச்சை தருகின்ற அளவிற்கும்; வளர்ந்துள்ள இந்த மருத்துவமனை, தெற்காசிய நாடுகளில் அமைந்துள்ள, மிகப் பெரிய மன நல மருத்துவமனைகளில், ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

ஆலமரம் போல், ஆயிரம் விழுதுகளைத் தாங்கி வளர்ந்துள்ள, இந்த மருத்துவமனையின் தொடக்கத்தை அறியும்போது, நமக்கு எல்லாம் ஆச்சரியம் ஏற்படும். அது ஒரு மிக எளிமையான துவக்கம். Dr. Vallentine Caunoly என்ற ஆங்கிலேயர், 20 நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெறக் கூடிய அளவில், 1794-ஆம் ஆண்டு துவக்கி வைத்த, மிகச் சிறிய மருத்துவமனை தான், இன்று தெற்காசிய நாடுகளிலேயே, மிகப் பெரிய மன நல மருத்துவமனையாக, விளங்கிக் கொண்டிருக்கிறது என்பது, நமக்கு மிகவும் பெருமை தரக் கூடிய, ஒரு வரலாற்றுச் செய்தியாகும். மன நல மருத்துவச் சேவையில், இது ஒரு மாபெரும் சாதனைச் சரித்திரம் என்பதில் ஐயம் இல்லை!

200 ஆண்டுகள் சேவை என்பது, அதுவும் உலகம் வேகமாக மாறி வருகின்ற இந்தக் கால கட்டத்தில், ஒரு குறிப்பிடத்தக்க முக்கியமான வரலாறு ஆகும். இந்த மாபெரும் விருட்சத்தை வளர்ப்பதற்கு, தங்கள் உடலையும், உயிரையும் காணிக்கையாக்கிய, நல்லவர்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட மனநோய் பிடித்தவர்களுக்கு, சேவை மனப்பான்மையுடன் தொண்டு செய்த, மருத்துவர்களும், செவிலியர்களும், எத்தகைய தியாக மனப்பான்மை உடையவர்களாக இருந்திருக்க வேண்டும், என்பதை நினைத்துப் பார்க்கும்போது, உண்மையில் என் நெஞ்சம் நெகிழ்ச்சி அடைகின்றது. பல தியாக வரலாறுகள், இந்த மருத்துவமனையின் சரித்திரத்தின் பின்னால் மறைந்திருப்பதை, என்னால் நன்கு உணர முடிகிறது. அந்த நல்ல நெஞ்சங்களின் தியாகங்களை, இந்த நேரத்தில் நினைவுகூர்வது, நமது கடமை என்று நான் கருதுகிறேன். அதே தியாக மனப்பான்மையுடன் தான், இந்த மருத்துவமனையின் இன்றைய மருத்துவர்களும், செவிலியர்களும் பணி புரிந்து வருகின்றனர்.

மருத்துவத் துறையிலேயே, மிகுந்த மனித நேயத்துடன், நோயாளிகளைக் கையாள வேண்டிய கட்டாயம், மற்ற மருத்துவப் பிரிவுகளைவிட, இந்த மருத்துவத் துறைக்கு உண்டு. ஏனென்றால்,



இந்த மருத்துவமனையில் சிகிச்சைக்காக வருபவர்கள், ஏற்கெனவே மன நிலை பாதிக்கப்பட்டவர்களாகவும், எந்த ஒரு சாதாரண நிகழ்ச்சியும், அவர்களுடைய மனதை, மேலும் பாதித்து விடுகின்ற சூழ் நிலையில் இருப்பவர்கள் என்பதோடு; என்ன செய்கிறோம் என்கிற சுய உணர்வின்றிச் செயல்படுபவர்களாக வும் இருப்பதால்; அவர்களால் ஏற்படு கின்ற இன்னல்களை எல்லாம், தாய்மைக் குணத்துடன் பொறுத்துக் கொண்டு, செயல்பட வேண்டிய கட்டாயம், இந்தத் துறையில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு உண்டு, என்பதை அறிவேன். எனவே தான், இந்த மருத்துவப் பிரிவில் பணி புரிய வருபவர்கள், நெஞ்சுரம் மிக்க வர்களாக மட்டுமின்றி, மனித நேயம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும்.

"If wealth is lost, nothing is lost
If health is lost, something is lost
If character is lost, everything is lost"

என்று ஒரு அறிஞன் குறிப்பிட்டது, என் நினைவிற்கு வருகின்றது. உடல் நலம் குன்றும் போது, ஏதோ சிலவற்றை இழந்து விட்டதாக எடுத்துக் கொண் டாலும்; மன நலம் குன்றியிருக்கும் போது, நமது அருமையான நற்பண்பு களையும், குணநலன்களையும் இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, "If mental health is lost, everything is lost" என்று தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மன நோயினால் பாதிக்கப்பட்டவர் களுக்கு, ஒரு சேவை மனப்பான்மை யுடன், மருத்துவத் தொண்டாற்றி வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், இதரப் பணியாளர்கள் அனைவரும், எனது தனிப்பட்ட பாராட்டுக்குரியவர்கள் என் பதைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடை கின்றேன். உங்கள் பணி கடினமானது; ஆனால், புனிதமானது; உங்கள் சேவை விளம்பரம் இல்லாதது; ஆனால், அனை வராலும் விரும்பத்தக்கது. நீங்கள் ஆற்றி வருகின்ற பணி, குடத்தில் இட்ட விளக்காக இருப்பது போல, உங்களுக்குச் சில நேரங்களில் தோன்றலாம். ஆனால், மனித நேயத்துடன் நீங்கள் செயல்படு கின்ற விதத்தால், மற்றவர்கள் பாராட் டைப் பெற்று, குன்றிலிட்ட விளக்காக, பிரகாசித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்பதை, சுட்டிக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன். எனவே, தொடர்ந்து, தொய்வின்றிப் பணியாற்றுங்கள் என்பதே,. எனது வேண்டுகோள்.

நமது மூதாதையர்கள் வாழ்ந்த காலங் களிலே, சமூக வாழ்க்கையிலும்; தனி மனித வாழ்க்கையிலும்; பிரச்சினைகள், பிணக்குகள், கவலைகள், மிகவும் குறைவு. அமைதியான சூழ்நிலையில், சமு தாய வாழ்க்கை நடைபெற்றுக் கொண் டிருந்தது. மனிதனுடைய தேவைகளும்; சமுதாயத்தினுடைய அமைப்பும்; மக்க ளின் நற்சிந்தனைகளும்; உடல் நலத்தை மட்டுமின்றி, மன நலத்தையும் காப்பாற்றி வந்தது. அறிவியல்; தொழில் நுட்ப வளர்ச்சி; குடும்ப அமைப்புகளில் மாறு தல்; மாறி வரும் பொருளாதாரச் சித் தாந்தங்கள்; தொலைதொடர்புச் சாதனங் களின் ஆதிக்கம்; ஆகியவை, நமது சமூக வாழ்க்கையை, வெகுவாகப் பாதித் துள்ளன. எனவே, மன நலம் காப் பாற்றப்பட வேண்டிய ஒரு கால கட்டத் தில், நாம் வாழ்ந்து வருகிறோம் என் பதை, யாரும் மறுக்க முடியாது.

மன நல நோய் என்றாலே, மக்கள் மத்தியிலே நிலவி வருகின்ற, தவறான கருத்து மாற வேண்டும். மன நோயால் பாதிப்பு உண்டாவதற்கு, பல நேரங் களில், சுற்றுப்புறச் சூழல்களும்; உற்றா ரும் உறவினரும்; ஏன்? நண்பர்களும் காரணமாக இருக்கிறார்கள் என்பதை யும், நாம் புரிந்து கொள்ளவேண்டும். மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், தங் களைச் சுற்றியுள்ள சமுதாயத்தை, தனது மன நல பாதிப்பின் காரணமாக, புரிந்து கொள்ளவில்லை என்பது, எந்த அளவுக்கு உண்மையோ; அந்த அளவுக்கு, சமுதாயமும் அவர்களைப் புரிந்து கொள்ளவில்லை, என்பதும் உண்மை யாகும். மன நோய் கொண்டவர்களை, கேலிக்குரியவர்களாக ஆக்குவதும்; வெறுத்து ஒதுக்குவதும்; அவர்களின் பிரச்சினைகளை, அதிகப்படுத்தத் தான் உதவுமே தவிர, அவர்களின் நோயைக் குணப்படுத்த உதவாது. மன நோயினால் பீடிக்கப்பட்டவர்களை, ஒரு குழந்தை யைப் போன்று, அனுசரணையாக நடத்தி; அவர்களின் பாதிப்புகளில் இருந்து, தங்களை விடுவித்துக்கொள்ள, உதவ வேண்டுமே தவிர; அவர்களை ஒதுக்கி வைப்பதும்; ஏளனம் செய்வதும்; அறிவு சார்ந்த செயலாக எனக்குத் தோன்றவில்லை. மற்ற நோய்களைப் போல, இதுவும் ஒரு நோய் என்ற அளவிலே தான், மன நோயால் பாதிக் கப்பட்டவர்களைப், பார்க்க வேண்டுமே தவிர; சாதாரண மனிதர்களிடம் இருந்து, மிக வித்தியாசமானவர்கள் என்ற முறை யில், நாம் பார்க்கின்ற பார்வை; அவர்களது நோயின் தன்மையை, அதிகப்

படுத்தி விடுகிறது, என்று நான் அஞ்சு கின்றேன்.

கல்வி நிலையில் பெரிய முன்னேற்றம் ஏற்படும்போது, மன நலம் நன்கு பேணப்படுகின்ற சூழ்நிலைகள், உண்டாகும் என்று நம்புகிறேன். எனவே தான், தமிழகத்து மக்கள் அனைவரும், குறைந்த பட்சக் கல்வி அறிவைப் பெற வேண்டும் என்பதற்காகவும், எழுத்தறிவு கல்வியையாவது பெற வேண்டும், என்கின்ற நோக்கத்திலும்; பல திட்டங்களைத் தீட்டி, முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றோம். மகளிர் எழுத்தறிவு வளர்ச்சிக்கும்; பெண் கல்வி வளர்ச்சிக்கும்; பெண்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கும்; பல திட்டங்களை எங்கள் அரசு, தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றது.

எந்த ஒரு மருந்துவப் பிரச்சினையானாலும், எங்கள் அரசு, மேலெழுந்த வாரியாக இல்லாமல், நுணுகி ஆராய்ந்து, நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளைக் காணும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. தொழு நோய்; காச நோய்; கண்பார்வை குறைவைக் கட்டுப்படுத்துதல்; AIDS போன்ற அபாயம் விளைவிக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த, பல திட்டங்களை, முனைப்புடன் தீட்டி, முழுமையாகச் செயல்படுத்தி வருகிறோம்.

பார்வைக் குறைவு நோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, உலக வங்கியின் உதவியுடன், 64 கோடி ரூபாய் செலவில், திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. அதே போன்று, AIDS நோயைக் கட்டுப்படுத்தும் திட்டத்திற்கு, ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில், திட்டம் தீட்டப்பட்டுள்ளது. தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத், தர்மபுரி ஆகிய மூன்று மாவட்டங்களில், 70 கோடி ரூபாய் செலவில், DANIDA உதவியுடன் நல்வாழ்வுத் திட்டமும்; 45 கோடி ரூபாய் செலவில், ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கும் மேற்பட்ட, 21 நகராட்சிகளிலும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளிலும் செயல்படுத்தப்பட உள்ள, India Population Project-V- திட்டமும்; தமிழ்நாட்டை மருத்துவத் துறையில், ஒரு வளர்ச்சி அடைந்த, முன்னணி மாநிலமாக உருவாக்கும் என்பதில், எனக்குச் சிறிதளவும் ஐயம் இல்லை.

இந்த இனிய விழாவில், சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில், 2½ கோடி ரூபாய் செலவில், 250 படுக்கைகளுடனும், நவீன வசதிகளுடனும், புதிதாக அமைக்கப்பட்ட, 'குழந்தைகள் மருத்துவப் பிரிவை' திறந்து வைத்ததிலும்; இந்த மன நலக் காப்பக வளாகத்தில், ஒரு கோடி ரூபாய் மதிப்பில் அமைய உள்ள, 'இல்லம் புகு முன் இருப்பு மையம்' அதாவது Halfway Home; மற்றும் 'மறுவாழ்வு மற்றும் ஆராய்ச்சி மையம்', அதாவது Rehabilitation and Research Centre; ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டியதிலும், நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மையங்களை அமைக்க முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து 25 இலட்சம் ரூபாயை வழங்கி, ஆணையிட்டுள்ளேன் என்பதையும் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய சமுதாயத்தில் நிலவுகின்ற சூழ்நிலை, குழந்தைகளின் வளர்ச்சியைப் பல விதங்களில் பாதிக்கக் கூடியதாக அமைந்துள்ளது என்பதையும், நான் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் உள்ளேன். வன்முறை கலாச்சாரம்; கற்பனையின்பால் எழுந்த ஆடம்பரம்; பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குழந்தைகளின் மனதைப் பாதிக்கக் கூடிய நிகழ்ச்சிகள்; திரைப்படங்கள்; செய்தித் தாள்கள்; பருவ இதழ்கள்; தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் போன்றவை; அதிகமாகி வருவதையும், நாம் மறுக்க முடியாது.

நமது எதிர்காலத் தலைமுறையினர், மிகுந்த ஆற்றல் மிக்கவர்களாகவும்; திடமான மன நலமும், உடல் நலமும் கொண்டவர்களாகவும்; விளங்க வேண்டும் என்றால், இன்றைய மழலைச் செல்வங்கள், நெஞ்சில் உரம் மிக்க, கொள்கை வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும், வளர்க்கப்பட வேண்டும். நற்கருத்துக்கள் அமையப் பெற்ற இலக்கியங்களையும்; அழகிய நுண் கலைகளையும்; நல்ல பழக்க வழக்கங்களையும்; அவர்களுக்குப் போதிப்பது, மிகமிக அவசியம் ஆகும்.

இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது என் கடமை எனக் கருதுகிறேன். எந்த நோயாக இருந்தாலும் அதை ஆரம்பத்திலே கண்டுபிடிக்கப்பட்டால் எளிதில் குணப்படுத்த முடியும். அதைப் போலத் தான் மன நோய்; ஆனால், பெரும்பாலும் இந்த மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்ற நோயாளிகள், அவர்கள் நோய் மிகவும் முற்றி விட்ட நிலையில் தான் இங்கே அழைத்து வரப்படுகிறார்கள்; அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆகவே, "Mental illness" மன நோயை ஆரம்பத்திலே கண்டுகொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை நாம் மக்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். ஆரம்ப Stage-ல், Early Symptoms - அறிகுறிகள் எப்படிப்பட்டவையாக இருக்கும் என்பதைப் பற்றி நாம் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். தொலைக்காட்சியிலும், செய்தித்தாள்களிலும், புத்தகங்களின் வாயிலாகவும் நாம் இவற்றை - இந்த அறிவை மக்களுக்குப் புகட்டினால் பெருமளவில் மன நோயை நாம் கட்டுப்படுத்தலாம்.

கடந்த 2 நூற்றாண்டுகளாக, சீரிய முறையில், மன நல மருத்துவத்தில் மாபெரும் தொண்டாற்றி வரும், சென்னை 'அரசினர் மன நல காப்பகம்', மென்மேலும் பல சிறப்புக்களைப் பெற்று; பிணி அகற்றும் பணியில், பல சாதனைகளைப் புரிய வேண்டும் என்ற, எனது பேரவாவினையும், இங்கு பணி புரிந்து வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் அனைத்துப் பிரிவுப் பணியாளர்களுக்கும், மீண்டும் எனது பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.



TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

## Rate of Interest on Deposits (Effective from 2.9.1993

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568937

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!




கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23
தமிழரசு